# கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்

வடிவேல் இன்பமோகன்
சின்னத்தம்பி சந்திரசேகரம்
இரத்தினசபாபதி பிரேம்குமார்



குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 16474 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்

ஆசிரியர்கள்

வடிவேல் இன்பமோகன்

சின்னத்தம்பி சந்திரசேகரம்

இரத்தினசபாபதி பிரேம்குமார்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்

எழுதியது வடிவேல் இன்பமோகன், சின்னத்தம்பி சந்திரசேகரம்,

இரத்தினசபாபதி பிரேம்குமார்

பதிப்புரிமை ஆசிரியர்களுக்கு©

முதற்பதிப்பு : 2020

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது

39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk@gmail.com

3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Kalai Ilakkiya Meiyiyal Kolkaikal

by Vadivel Inpamohan, Sinathambi Santhirasegaram &

Ratnasabapathy Premkumar

First edition : 2020

Published by Kumaran Book House

39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com

3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.

39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: #856

ISBN 978-955-659-668-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

பேராசிரியர் செ.யோகராசா
அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அண்மைக் காலத்தில் தமிழ் ஆய்வுலகில் மேற்கத்தியச் சிந்தனைகளுக்கு மாற்றாக அதிகாரமற்ற மக்களின் சார்பாகப் பல சிந்தனைகள் பேசப்பெற்று வருகின்றன. இவற்றுள் பெரும்பான்மையானவை மேற்குலகத்திலிருந்து பிறந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்நவீனத்துவத்தின் வருகை பல்வேறு மாற்றுச் சிந்தனைகள் தோன்றுவதற்கு அல்லது ஏற்கனவே இருந்த கொள்கைகளை மறு பரிசீலனை செய்ய உதவியது. விளிம்புநிலை ஆய்வு, பெண்ணியம், தலித்தியம், பின்காலனியம், நான்காம் உலகம் போன்ற சிந்தனைகள் இந்த வரிசையில் அடங்கும். இவை அனைத்தும் ஒடுக்கபட்ட மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்டவை. அரசு. அதிகாரம், உலகமயம், கார்ப்பரேட் அரசியல் போன்றவை வளர்ச்சி, நாகரீகம், அதீததிறன், சீர்படுத்தல் ஆகிய போர்வைகளில் உலகச் சமுதாயத்தின் பெரும் பகுதியை வளரச்சியடையாதவர்கள், நாகரீகமற்றவர்கள், தாழ்வானவர்கள் என அடையாளப்படுத்தின. தேசம், அரசு ஆகிய கட்டமைப்புகள் அரசியலமைப்புச் சட்டம், பொது நிருவாக அமைப்புகளை உருவாக்கிக் கொண்டதால் தேசிய இனங்களும். ஏண்ணற்ற இனக் குழுக்களும் தங்களது பாரம்பரிய உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழந்தனர். தேசிய நீரோட்டம் என்ற பெயரில் அவர்கள் தங்களது தனித்துவமான வாழ்வியல் மரபுகளை விட்டுவிட வேண்டியக் கட்டாயத்திற்குள்ளாகப்பட்டனர். உலகத்தின் எல்லா நாடுகளிலும் நாகரீக வளர்ச்சியடைந்தவர்கள், வளர்ச்சியடையாதவர்கள் என்ற எதிர்மறை தவிர்க்க முடியாததாக உள்ளது. அரசு இயந்திரம் அனைத்து மக்களையும் கட்டுக்குள் வைத்துக் கொள்ள சட்டத்தைப் பயன்படுத்துகின்றது. ஆனால் அனைத்து மக்களும் சீரான வளர்ச்சியடைவதற்கு இந்தச் சட்டங்கள் பயன்படுவதில்லை. நாட்டின் வளரச்சி என்ற பெயரில் பெரும் பணக்காரர்களையும் கார்ப்பரேட்டுகளையும் அரசு ஊக்குவிக்கின்றது. இதன் காரணமாக அடித்தட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எப்போதும் சுரண்டப்படுபவர்களாகவே இருக்கின்றனர். இந்த உண்மைகளைத் தோலுரித்துக் காட்டியவைதான் மாற்றுச் சிந்தனைகள்.

வடிவேல் இன்பமோகன், சின்னத்தம்பி சந்திரசேகரம், இரத்தின சபாபதி பிறேம்குமார் ஆகிய மூவரும் இணைந்து உருவாக்கிய கலை, இலக்கிய, மெய்யியல் கொள்கைகள் என்ற இந்நூல் மாற்றுச் சிந்தனைக் கொள்கைகளை அறிமுகம் செய்வதாகவும் பண்பாட்டு ஆய்வுகளுக்குத் தேவையான சில அடிப்படைகளை அறிமுகம் செய்வதாகவும் அமைந்துள்ளது. வடிவேல் இன்பமோகனின் நான்காம் உலகக் கலைகள், சின்னத்தம்பி சந்திரசேகரத்தின் ஆபிரிக்க ஒறேச்சர் (Orature): அறிமுகமும் அதன் அளிக்கை மரபுகளும், இரத்தினசபாபதி பிறேம்குமாரின் ஒழுக்கவியல் கொள்கைகளும் பிரயோக ஒழுக்கவியலும் ஆகிய மூன்று கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நான்காம் உலகம் என்னும் முதல் கட்டுரை மாற்றுச் சிந்தனை மரபோடு தொடர்புடையது. நான்காம் உலகு பற்றிய அறிமுகம், கலைச் செயற்பாடுகள் மாறிவரும் சமகாலச் சமூகப் பண்பாட்டு உள்ளடக்கத்தில் நான்காம் உலகக் கலை வடிவம், அதன் தொழிற்பாடு, அதன் அர்த்தம் ஆகியவற்றைக் குறித்து இக்கட்டுரை பேசுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் வாழும் பழங்குடி மக்கள் அந்நாட்டில் வாழும் மக்களில் இருந்து வேறுபட்டவர்களாக விளங்குகின்றனர். அதேநேரம் உலகம் முழுவதிலும் வாழும் பழங்குடி மக்களின் பொது அடையாளங்களைத் தாங்கியவர்களாக விளங்குகின்றனர். நாட்டின் சட்டம், பொதுநடைமுறைகள், பொதுவாழ்வியல் முறைமைகள் போன்றவற்றை இவர்களால் பின்பற்றவும் இயலாது. இவ்வாறான காரணங்களினால் இவர்கள் நான்காம் உலகமாகக் கருதப்பட்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனர்.

நான்காம் உலகத்தினர் என்ற கருத்தியல் பழங்குடிமக்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. உலகின் பெரும்பான்மையான நாடுகளில் இவர்களது வாழிடங்கள் பறிக்கப்பட்டன. நகரங்களின் உருவாக்கமும் விரிவும், தொழிற்சாலைகள் அமைத்தல், பணப்பயிர்கள் பயிரிடல், சுற்றுலாத்தலங்கள் அமைத்தல், அணைக் கட்டுகள் கட்டுதல் போன்ற காரணங்களுக்காக இவர்களது வாழிடங்கள் அழிக்கப்பட்டன. வனவிலங்கு பாதுகாப்பு, வனங்களைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக வனப்பாதுகாப்புச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரப்பட்டது. பெரும்பான்மையானப் பழங்குடிமக்கள் காடுகளிலும் மலைகளிலுமே வாழ்கின்றனர். நாகரிக வளர்ச்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் பழங்குடிமக்களின் வாழிடங்களும் அவர்களது மரபுகளும் பறிக்கப்பட்டன. அரசுகளின் இந்தச் செயற்பாடு வன்முறையானது. அவர்களது உரிமைகளோ மரபுகளோ அரசுகளின் சட்டங்களால் மதிக்கப்படவில்லை. புதிய வாழ்க்கைமுறையைப் பின்பற்ற அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். வனங்களும் வன விலங்குகளும் பழங்குடியினராலேயே அழிக்கப்படுகின்றன எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அவர்களை வனங்களைவிட்டு வெளியேற்றக் கட்டாயப்படுத்தினர்.

ஆனால் அவர்களது கலைகளும் கைவினைப் பொருட்களும் சந்தைப்படுத்தப்பட்டன. உலகச் சந்தையில் அவர்களது கலைகளுக்கும் கலைப்பொருட்களுக்கும் பெரும் மதிப்பு உருவாக்கப்பட்டது. அவற்றின் சந்தை மதிப்பை உணர்ந்த நிறுவனங்களும் வணிகர்களும் கலைப்பொருட்களை எளிதில் உருவாக்க நவின முறைகளைக் கற்றுக்கொடுத்து அவர்களது பாரம்பரியங்களைச் சிதைத்தனர். பழங்குடி மக்கள் காட்சிப் பொருளாக்கபட்டனர். இவ்வாறாக நவீன உலகம் பழங்குடி மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் எவ்வாறு அழித்தது என்பதையும் அவர்கள் இன்று எவ்வாறு வணிகப்பொருட்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதையும் வெளிச்சமிட்டுக் காட்வதாக நான்காம் உலகம் என்ற கட்டுரை அமைந்துள்ளது.

ஆபிரிக்காவின் முதன்மையான இலக்கிய மரபான ஒறேச்சர் (Orature) குறித்து சின்னத்தம்பி சந்திரசேகரம் இரண்டாவது கட்டுரையில் விரிவாகப் பேசுகின்றார். காலனியம் அறிமுகம் செய்த எழுத்து மரபிற்கு மாற்றாக மூலத்திற்குத் திரும்புதல் என்னும் கொள்கையின் அடிப்படையில் தோன்றியதே ஒறேச்சர் வடிவமாகும். வாய்மொழிப் பண்புகளையும் எழுத்துமரபின் பண்புகளையும் ஒண்றிணைத்து மக்களின் கருத்துப்புலப்படுத்த வடிவமாக ஒறேச்சர் ஆப்பிரிக்கப் பண்பாட்டில் நிலைத்தது. இது பல்வேறு நிகழ்த்துக் கலைகளின் கலப்பால் உருவாக்கப்பட்டது. கவிதை, பாட்டு, இசை, நாடகம், நிகழ்த்துதல்கள் எனப் பல வடிவங்கள் ஒரே நிகழ்த்துதலில் இடம் பெறும் வகையிலான நெகிழ்வுத் தன்மை கொண்ட ஒரு வடிவமாக இது அமைந்துள்ளது. வாய்மொழி மரபிற்கும் எழுத்து மரபிற்கும் இடைப்பட்ட நிலையே அதன் தனித்தன்மை. இந்த நிகழ்த்துதல் திறந்த வெளியில் நிகழ்த்தப்படுகின்றது. குடிசை அல்லது கட்டடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி முன் உள்ள தட்டையான பரப்பைக் கொண்ட வட்ட வடிவிலான களமே இதன் நிகழ்த்து வெளியாகும். வட்ட வடிவ வெளி என்பது ஆப்பிரிக்கப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகும். இதன் பார்வையாளர்கள் விமர்சகர்களாகவும் நிகழ்துவோராகவும் பங்கேற்கின்றனர். இந்த உறவு நிலை ஒறேச்சரின் தனித்தன்மையானப் பண்பாகக் கருதப்படுகின்றது. இப்பண்பே இதனை இலக்கியத்திலிருந்து வேறுபடுத்துகின்றது. ஒறேச்சரின் கலைப் பண்புக் கூறுகளாக அழைத்தலும் பதிலிறுத்தலும், கிமோயா, முகமூடி நடனம், பேசும் பறை, உடல் அசைவுடன் கூடிய வாய்மொழி ஆகியவை அமைந்திருப்பதை இக்கட்டுரை விரிவாகப் பேசியுள்ளது. முகமூடிகள் ஆப்பிரிக்கப் பண்பாட்டில் மாந்திரத் தன்மையுடையனவாக நம்பப்படுகின்றன. ஒறேச்சரிலும் முகமூடிகள் ஆற்றல் மிக்கவையாகக் கருதப்படுகின்றன.

ஒறேச்சர் பொழுதுபோக்குக் கலையாகவும் சமுதாய நெறிப்படுத்தலையும் அறிவூட்டலையும் இணைத்துத் தரும் கலையாகவும் உள்ளது. பண்பாட்டு நடத்தைகள், மனிதருக்கான முன்மாதிரிகள் ஆகியவை அதன் உள்ளடக்கத்தில் முதன்மையிடம் பெறுகின்றன. ஆப்பிரிக்க சமூகங்களின் அரசியல், சமதாயச் சிக்கல்கள் அவற்றிற்கானத் தீர்வுகள் போன்றவையும் பேசப்படுகின்றன. பண்பாட்டுவயமாக்கம், சமுதாயவயமாக்கம் ஆகிய செயல்பாடுகளில் ஒறேச்சருக்குத் தவிர்க்கமுடியாத இடம் உள்ளது. ஒறேச்சர் ஆப்பிரிக்கப் பண்பாட்டையும் அடையாளங்களையும் வெளிப்படுத்தும் தேசியக் கலை வடிவமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆப்பிர்க்க ஒறேச்சர் மரபை விரிவாகப் பேசும் இக்கட்டுரை ஒறேச்சருக்கு இணையான ஈழத்து மரபு ஒன்றையும் அடையாளங்காட்டியுள்ளது.

ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் புலவர்கள் பாரம்பரிய வாய்மொழி மரபைப் பின்பற்றிப் பாடல்களைக் கட்டி மக்கள் மத்தியில் அளிக்கை செய்து வருவது ஒரு மரபாக இருந்து வருகின்றது. இந்தப் பாடல்களைக் கிராமிய மக்கள் ‘கட்டுப் பாடல்கள்’ என்று கூறுகின்றனர். தனிப்பட்ட கிராமியப் புலவர்களால் உருவாக்கப் படுகின்ற இப்பாடல்கள் பெரும்பாலும் கையெழுத்துப் பிரதிகளாகவும், சிறு அச்சுப் பிரதிகளாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் நிலவுகின்றன. எழுத்திலே உருவாக்கப்பட்ட போதும் இவை வாய்மொழி மரபில் காலூன்றியவையாக உள்ளன. அனர்த்தங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் முக்கிய நிகழ்வுகள், சொந்தப் பிரச்சினைகள், கோயில் வரலாறுகள் முதலியவற்றைப் பொருளாகக் கொண்டிருக்கும் இப்பாடல்கள் காவியம், அம்மானை, கும்மி, காவடிச் சிந்து, வழி நடைச் சிந்து, கவி எனப் பல வடிவங்களிலே பாடப்பட்டு வருகின்றன. இந்த மரபு ஒறேச்சருக்கு ஒத்ததாக அமைந்துள்ளது என இக்கட்டுரை விவாதித்துள்ளது. வகைப்பாட்டு ரீதியில் ஆபிரிக்க ஒறேச்சர் புதிர்கள், பாடல்கள், கதைகள், கவிதைகள், காவியம் எனப் பல வகைப்பாடுகளைக் கொண்ட பரந்த இலக்கிய அமைப்பாகக் காணப்பட, தமிழ் மரபு 'பாடல் மரபு' என்ற வகையிலேயே நிலவு கின்றது. குறிப்பாக பாடல்கள், கதைப்பாடல்கள் என்பனவே இதில் அடங்குகின்றன. வாய்மொழிக் கதைகளையோ, பழமொழிகளையோ எழுத்தில் உருவாக்கி அளிக்கை செய்யும் போக்கு தமிழ் எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப் பாடல் மரபில் இல்லை. ஒறேச்சரின் பண்புகளுக்கும் தமிழ் எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப்பாடல்களின் பண்புகளுக்குமிடையே பொதுமை காணப்படுகின்றது. ஆகவே ஆபிரிக்க ஒறேச்சர் மரபு பற்றிய புரிதல் தமிழ் எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப்பாடல் மரபு பற்றிய ஆய்வுக்கு வலுச்சேர்க்கும் எனக் கட்டுரையாளர் கருதுகின்றார்.

காலனியப்படுத்தும் நாடுகள் தங்களது மரபுகளையும் மொழியையும் காலனியத்திற்குட்படும் நாடுகள் மீது திணிப்பதுதான் வரலாறு. காலனியத்திற்குள்ளாகும் நாடுகள் நீண்ட கால காலனியத்தால் தங்களது சொந்த மரபுகளிலிருந்தும் மொழியிலிருந்தும் அன்னியப்படுத்தப்படுவர். மேற்கத்திய அறிவைக் கொண்டாடுதல் ஆங்கிலத்தை உலக மொழியாக அங்கிகரித்தல் போன்ற மனப் போக்குகள் உருவாக்கப்படும். காலனியத்திற்குப் பின்னும் இந்த மனோபாவம் விடுபடுவதில்லை. ஆனால் சில நாடுகள் காலனியத் திற்குப் பின் தங்களது சொந்த மரபுகளுக்கு நேராகத் திரும்பினர். சான்றாக பின்லாந்தைச் சொல்லலாம். காலனியத்திற்குப்பின் அவர்கள் தங்களது சொந்த மரபின் காவியமான கலவேலாவை மீட்டுருவாக்கம் செய்து தேசியக் காவியமாக அறிவித்தனர். பல்வேறு பாடகர்களின் நினைவில் இருந்த சிறு சிறு பகுதிகளைத் தொகுத்து மீட்டுருவாக்கம் செய்து இந்தக் காப்பியத்தை அவர்கள் முழுமைப் படுத்தினர். ஆப்பிரிக்கப் பண்பாட்டில் தோன்றிய ஒறேச்சர் காலனிய எதிர்ப்பால் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக காலனியம் அறிமுகம் செய்த எழுத்து மரபு தங்களது சொந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டை அழித்துவிடும் என்ற உணர்வே ஒறேச்சரின் உருவாக்கத் திற்குக் காரணமாக அமைந்தது. ஆனால் ஈழத்தில் இவ்வாறானச் சூழல் இல்லை. ஈழத்து எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப்பாடல் அளிக்கை என்பது கதைப்பாடல் மரபின் தொடர்ச்சியாக உள்ளது. கதைப்பாடல் பல்வேறு வடிவங்களில் நிகழ்தப்படுவதுண்டு. இருப்பினும் இந்த அளிக்கையில் காணப்படும் சமகாலச் சிக்கல்கள் பற்றிய அலசல் கவனத்திற்குரியது. காலனியத்திற்குப் பின் இலங்கையில் தோன்றிய புதிய சமூகச் சூழல்கள் இந்த அளிக்கையின் தோற்றத்தில் பெரும் பங்காற்றியிருக்க வாய்ப்பிருக்கிறது. தமிழகத்தில் காணப்படும் பெரிய எழுத்து மரபு. கொலைச் சிந்து ஆகியவை இதனோடு ஒப்பு நோக்கத் தக்கவை.

மூன்றாவது கட்டுரையாக இடம் பெற்றுள்ள இரத்தினசபாபதி பிரேம்குமாரின் ஒழுக்கவியல் கொள்கைகளும் பிரயோக ஒழுக்க வியலும், ஒழுக்கவியல் கொள்கைகளை மிக விரிவாக அறிமுகம் செய்கின்றது. ஒழுக்கவியல் என்பது விழுமியங்களைப் பின்பற்றுவது தொடர்பாகப் பல்வேறு தளங்களில் எழும் சிக்கல்களை ஆராயும் ஒரு பிரிவாக உள்ளது. ஒழுக்கவியல் சிந்தனையில் பல்வேறு சிந்தனைப் பள்ளியினர் உள்ளனர். இவற்றையெல்லாம் தொகுத்து அவற்றின் அடிப்படைகளை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தக்கச் சான்றுகளுடனும் இக்கட்டுரை விளக்குகின்றது. ஒழுக்கக் கொள்கை தொடர்பானத் தத்துவ அடிப்படையிலான மாற்றுக் கருத்துக்களையும் கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலைத்தேய ஒழுக்கவியல் என்பது அதிகளவு தனிநபர் தன்மை கொண்ட ஒன்றாக காணப்படுகின்றது. உரிமைகள் மற்றும் கடமைகள் என்பதன் அடிப்படையில் அதிகம் ஒழுக்கவியல் சமுதாயம் சார்ந்த ஓர் தோற்றப்பாடாக பார்க்கப்பட்டாலும், ஒரு தனிமனிதனின் சுயாதீனத் தன்மை மற்றும் பகுத்தறிவு என்ற அத்திவாரத்தின்மீது கட்டப்பட்ட கட்டிடமாக ஒழுக்கவியல் விளங்குவதை நாம் காணலாம். ஏத்தகைய சமூகச் சூழ்நிலைகளும் அழுத்தங்களும் ஒரு தனிமனிதன் மீது பிரயோகிக்கப்பட்டாலும் அவனது மனசாட்சியின்படி அவனது பகுத்தறிவிற்கு ஏற்ப அவனுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான தீர்ப்புக்களை அவன் எடுப்பதையே ஒழுக்கவியல் விரும்புகின்றது என்று மேலைத்தேய ஒழுக்கவியில் எவ்வாறு பார்கப்படுகின்றது என்பதைப் பதிவு செய்துள்ளார். ஒழுக்கம் தொடர்பானத் தீர்ப்புகளில் மனசாட்சியும் பகுத்தறிவுமே முதன்மையானவை என்பதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டுகின்றார். விபரிப்பு ஒழுக்கிவியல், உரையாடல் ஒழுக்க வியல், அரசிலி ஒழுக்கவியல் ஆகிய ஒழுக்கிவியல் பிரிவுகளை விளக்கிவிட்டு ஒழுக்கவியல் கொள்கைகளைத் தொகுத்துத் தருகின்றது இக்கட்டுரை.

ஒழுக்கவியல் கொள்கைகளில் அண்மைக்காலங்களில் தோன்றிய புதிய சிந்தனைகளையும் இக்கட்டுரை தொட்டுக்காட்டியுள்ளது. பெண்ணிய ஒழுக்கவியல், சுற்றுச் சூழல் ஒழுக்கவியல், வணிக ஒழுக்கவியல், ஊடக ஒழுக்கவியல் என அண்மைக்காலத்திய ஒழுக்கவியல் கொள்கைகளையும் இக்கட்டுரை பேசுகின்றது. ஒழுக்கவியல் கொள்கைகள் காலந்தோறும் எவ்வாறு மாறிவந்துள்ளன என்பதை பருந்துப் பார்வையாக இக்கட்டுரையில் காணமுடிகின்றது. ஒழுக்கக் கொள்கைளை விளக்கும் போது அன்றாட உரையாடல்க ளையும் நன்கு அறிந்த நிகழ்வுகளையும் சான்று காட்டி விளக்குவது இக்கட்டுரையின் சிறப்பு எனலாம். சான்றாகப் பொதுவிதி நோக்க மில்லா கொள்கையை விளக்கும் போது இப்படி ஒரு சான்றைத் தருகின்றார். இக்கொள்கை அளவுக்கதிகமான விதிகளை முன் வைக்கும் அதேவேளை விதிவிலக்குகளையும் முரண்பாடுகளையும் ஏற்றுக்கொள்கின்றது. எடுத்துக்காட்டாக : "ஒரு சிறந்த வீரன் போரில் எதிரியை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும்." என்பது போருடன் தொடர்புபட்ட ஒரு ஒழுக்க விதியாகும். ஆனால் இராமாயண கதாநாயகனான இராமன் சிறந்த வீரனாக புகழப்படுகின்றான். இத்தகைய இராமன் வாலியினை மறைந்து நின்று கொல்கின்றான். ஏனெனில் வாலியினை வேறுவகையில் கொல்ல முடியாது என்ப துடன் வாலியின் தம்பியான சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்குறுதி யினை –'வாலியினைக் கொன்று உனக்கு அரச அதிகாரத்தைப் பெற்றுத் தருவேன்.' என்பதை மீறியவனாக இராமன் இருப்பான். மேலும் சூரிய குலத்தில் உதித்தவர்கள் தனது வாக்குறுதியினை நிறைவேற்றாவிட்டால் உயிரை விட்டுவிடுவது வழக்கம். இத்தகைய பின்புலத்தில் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒழுக்க விதி 'ஒரு சிறந்த வீரன் தனது எதிரியினை நேரடியாக எதிர் கொள்வான்?' என்ற ஒழுக்க விதிக்கு முரணாக இருப்பதைக் காணலாம். மேலும் நிராயுதபாணியான இராவணனை 'இன்று போய் நாளை வா!' என்று போர் ஒழுக்கத்தைப் பின்பற்றிய இராமன் வாலி விடயத்தில் ஒரு சிறந்த வீரன் தனது எதிரியினை நேரடியாக எதிர்கொள்வான் என்ற போர் ஒழுக்க விதியினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்ற முடியாமல் போய் விட்டது. இத்தகைய சூழ்நிலை ஒழுக்க விதிகளைப் பின்பற்றும் போது விதிவிலக்குகளை உருவாக்குகின்றது. இவ்வகையில் நிறைய ஒழுக்க விதிகளை நாம் பின்பற்றும் போது விதி விலக்குகளையும் முரண்பாடுகளையும் எமது நாளாந்த வாழ்வில் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். விதிகளும் விதிவிலக்குகளும் இணைந்தவையாகவே ஒழுக்க தீர்ப்புக்களை மேற்கொள்ளும் சூழ்நிலை காணப்படுகின்றன என்ற கருத்தினை ஏற்றுக்கொள்பவர்களாக பொதுவிதி நோக்கமிலாக் கொள்கையினர் இருக்கின்றனர் என்ற விளக்கம் தருகின்றார். இதனைப் போன்றே பிற கொள்கைகளும் உரிய சான்றுகளுடன் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கப் பெற்றுள்ளன. ஒழுக்கக் கொள்கைகளை அறிமுகம் செய்கின்ற இக்கட்டுரை தொடக்க வாசிப்பாளர்களுக்கு நல்லதொரு தொடக்க மாகும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் இடம்பெற்றள்ள மூன்று கட்டுரைகளும் இன்றியமை யாதப் பொருண்மைகள் தொடர்பானவை. முதல் இரண்டு கட்டுரை களும் நாட்டார்வழக்காறியல் தொடர்பானதாகவும் இறுதிக் கட்டுரை தத்துவம் தொடர்பானதாகவும் அமைந்துள்ளன. பழங்குடிகள் பற்றிய ஆய்வில் தவிர்க்க முடியாத கொள்கையாக நான்காம் உலகம் அமைந்துள்ளது. வாய்மொழி மரபுக்கும் எழுத்து மரபுக்கும் இடைப் பட்ட நிலையில் அமைந்துள்ள ஒறேச்சர் புதியச் சமூகச் சூழலை வாய்மொழி மரபு எவ்வாறு தன்வயப்படுத்திக் கொள்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள துணைசெய்கின்றது. ஒழுக்கக் கொள்கை களை அறிந்து கொள்ளும் வகையில் மூன்றாவது கட்டுரை அமைந்துள்ளது. இம் மூன்று கட்டுரைகளும் வெவ்வேறு புதிய செய்திகளைத் திறம்பட அறிமுகம் செய்துள்ளன. புதியத் தளங்களில் காத்திரமான ஆய்வுகள் நிகழ்த்த இந்நூல் அடிக்கல்லாக அமையும் என நம்பலாம். ஆய்வுக்கானப் புதியத் தளங்களையும் புதிய பார்வைகளையும் இந்நூலை வாசிப்பவர்களுக்குக் காட்டும் என்று உறுதிபட சொல்ல இயலும்.

**பேரா.ஞா.ஸ்டிபன்**
தமிழியல் துறைத் தலைவர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"கலை, இலக்கிய, மெய்யியல் கொள்கைகள்" என்னும் தலைப்பிலமைந்த இந்நூல் கலாநிதி வடிவேல் இன்பமோகன், கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம், கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார் ஆகிய மூவரின் இணைவில் குமரன் புத்த இல்லத்தின் வெளியீடாக வெளிருகின்றது. கலை, இலக்கிய, மெய்யியல் தொடர்பான மூன்று கொள்கைகள் பேசப்படுகின்றன. "நான்காம் உலகக் கலைகள்" என்னும் தலைப்பில் பேசப்படும் விடயம் உலகு தழுவியதாக வாழும் பழங்குடி சமூகத்தினருடன் தொடர்புடைய பிரச்சினைகளை உள்ளடக்கிய கொள்கை. "ஆபிரிக்க ஒறேச்சர் (Orature): அறிமுகமும் அதன் அளிக்கை மரபுகளும்" என்னும் தலைப்பிலான கட்டுரை ஆபிரிக்க மக்களின் அடையாள இருப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு இலக்கிய கொள்கையை பேசுகின்றது. "ஒழுக்கவியல் கொள்கைகளும் பிரயோக ஒழுக்கவியலும்" என்னும் தலைப்பிலான கட்டுரை மனித சமூகத்தை இயக்கும் ஒரு முக்கிய அச்சாணியாக விளங்கும் ஒழுக்க கொள்கைகள், சமகாலத்தில் அதன் பிரயோகம், அவசியம் பற்றி பேசுகின்றது.

முதலிரு கட்டுரைகளும் ஆதிக்க சமூகத்தினால் அடிமைப் படுத்தப்பட்ட சமூகங்கள் அவர்களின் அடிமைத்தளைகளைக் களைந்து அவர்கள் முன்னுள்ள வாழ்வியல் சவால்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்கின்றது.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்ததைத் தொடர்ந்து வெள்ளையரும் கறுப்பர்களும் அமெரிக்காவில் குடியேறியதுடன் காலனித்துவக் கருத்தியல் உயிர்ப்புப் பெறுகின்றது. அதனைத் தொடர்ந்து பழங்குடியினர், மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் ஆரம்பித்தன. தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் உலகின் பல நாடுகளையும் பிரித்தானியா, பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நாடுகள் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தியபோது காலனித்துவ செயற்பாடு உத்வேகத்துடன் நடைபெற்றது. காலனித்துவத்தில் இருந்து விடுதலை அடைந்த பின்னரும் காலனித்துவத்துடன் தொடர்புடைய கருத்தியல்கள் தொடரவே செய்தன. ஏனெனில் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற மூன்றாம் உலக நாடுகள் அவற்றின் கீழ் இருந்த சிறிய இனக்குழுக்களை ஒடுக்கியடக்கும் செயற்பாட்டை மேற்கொண்டன. உலகு தழுவியதாக வாழ்ந்த கறுப்பர்கள், பழங்குடியினருக்கு எதிரானதாக இந்த ஒடுக்குமுறைகள் அமைந்திருந்தன. இதனை உள்ளார்ந்த காலனித்துவம் என்று அழைப்பர்.

காலனித்துவ, பின் காலனித்துவ அரசுகள் பழங்குடியினரையும், சமூக வளர்ச்சியில் பின்னிப்பவர்கள் எனக் கருதும் மக்களையும் சில விழும்புநிலைச் சமூகங்களையும் அவர்கள் கட்டமைத்த வாழ்க்கைப் புலத்தினுள் உள்ளீர்த்தபோது அந்த சமூகப் பிரிவினரின் ஆசைகள், உணவுகள், எதிர்கால வாழ்க்கை பற்றிய எதிர்பார்க்கைகள் சிதைக்கப்பட்டமையை உணர்ந்து கொண்டனர். அப்போது சுதேச மக்களின் விருப்பத்திற்குரியதான சுதேசிகளால் காலங் காலமாக வாழ்ந்து வந்த இடங்கள், வாழ்க்கை முறை, அனுபவித்து வந்த பொருட்கள் அவர்களுக்குச் சொந்தமில்லாததாக மாற்றப்பட்டன. அவர்களை அடிமைப்படுத்துவதற்கான எந்தவித நியாயப்பாடுமற்ற நிலையில் ஆயுத மற்றும் அதிகார பலத்தால் அம்மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு அன்னிய சக்திகளுக்கு கட்டுப்பட்டு வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அன்னியர்களால் சுதேசிகளுக்காக வாழ்வதற்கு வழங்கப்பட்ட வெளி சுதேசிகள் இயல்புவாழ்வை மேற்கொள்வதற்கு ஒழுங்கமைத்திருந்த அத்தனை அம்சங்களையும் இல்லாமல் செய்வதாக அமைந்திருந்தது. இவை யாவற்றுக்கும் அடிப்படையாக இருந்தது அன்னியர்களிடம் இருந்த அதிகார வெறியும் பொருளாதார பலமுமாகும். இதனால் அன்னியர் கட்டமைத்த பாதையில் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சுதேசிகளுக்கு ஏற்பட்டது. புதிய வாழ்க்கை சூழலில் சுதேசிகள் எதிர்கொண்ட சவால்கள், அடையாளங்களைத் தக்க வைத்துக் கொண்டு புதிய வாழ்க்கைச் சூழலை வெற்றி கொள்வதற்கு கையாண்ட மார்க்கங்கள் என்பவற்றை முதலிரு கட்டுரைகளும் பேசுகின்றன. பேசுபொருள், பேசப்படும் சமூகம் வேறுபட்டதாக இருந்தாலும் பேசப்படும் கருத்தியல் ஒருமைப்படுடையதாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கட்டுரை கலையை வாழ்வதற்கான ஊடகமாக பயன்படுத்துவது பற்றிய கொள்கையாக அமைய இரண்டாம் கட்டுரை இலக்கியத்தை ஆபிரிக்க மக்கள் அவர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட அடிமைத்தனத்திற்கு எதிரான உணர்வைப் புலப் படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பது தொடர்பான ஒரு இலக்கியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இரு கொள்கைகளும் 1960, 70களில் தோற்றம் பெறுகின்றன. இரு கொள்கைக் தோற்றங்காலம் சுமார் அரை நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். சுதேசிகள் அவர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டி வாழ்வை எதிர்கொள்வதற்கான மார்க்கத்தை கலை, இலக்கியங்களின் ஊடாக கட்டமைக்க முயல்வது இவ்விரு கொள்கைகளிலும் ஆழக்கிடக்கும் கருத்தியலாகும்.

நான்காம் உலகு பற்றிய கருத்துருவாக்கம் ஜோர்ச் மனுவல் மற்றும் வென் வைட்டக்கர் ஆகிய இருவராலும் 1974இல் கனடாவில் வாழ்ந்த பழங்குடியினரின் அடக்கு முறையினைக் குறிப்பதற்காகக் கையாளப்பட்டது. இக்கருத்தாக்கம் பிற்கால அறிஞர்களால் வளர்த் தெடுக்கப்பட்டது. பழங்குடியினரின் கலைச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி நான்காம் உலகு பற்றிய கொள்கையின் அடிப்படையான எண்ணக்கருக்கள் நூலில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. பழங்குடியினருடன் தொடர்புடைய கலைச் செயற்பாடுகள் எவ்விதம் காலனித்துவ அரசால் பாதிக்கப்பட்டது என்பது பற்றியும் காலனித்துவ, பின் காலனித்துவ சூழலில் அவர்களது கலைகள் எவ்வாறான மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்தன என்பது பற்றியும் இங்கு பேசப்படுகின்றது.

பழங்குடியினர் தனித்துவமான வாழ்க்கை முறை, சமய நோக்கு, மருத்துவம், மொழி வழக்கு என்பவற்றைக் கொண்டு விளங்குவது போன்று அவர்களின் வாழ்வியல் தேவைக்காகப் படைக்கப்படும் கலைகளும் பழங்குடியினரின் அடையாளங்களைத் தாங்கிய படைப்புக்களாக அமைந்திருந்தன. அவர்களது கலை, கைப்பணிப் பொருட்கள் ஏனைய சமூகத்தினரால் படைக்கப்படும் கலை, கைப்பணிப் பொருட்கள் போன்று அல்லாது பழங்குடியினரின் அன்றாட வாழ்க்கை செயற்பாடுகளுடன் தொடர்புடையனவாக, அந்த வாழ்க்கைச் செயற்பாட்டில் இருந்து பிரிக்க முடியாதவையாக அமைந்திருந்தன. காலனித்துவத்தினால் அம்மக்களின் வாழ்க்கை ஒழுங்குகள் சிதைக்கப்பட்டபோது பழங்குடியினரின் கலைச் செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளும் உயிர்ப்பை இழந்தன. இந்தச் சந்தர்ப்பத்திலேயே பழங்குடியினர் எதிர்கொண்ட புதிய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப அவர்களின் கலைச் செயற்பாட்டை மறுசீரமைத்து முன்னெடுக்கத் தயாராகின்றனர். அது காலத்தின் தேவையாகவும் அமைந்திருந்தது. நான்காம் உலகு பற்றிய கருத்தாக்கத்தின் அறிமுகம் கட்டுரையில் பிரதானம் பெறுகின்றது. தமிழ் சூழலில் இதுவரையில் விரிவாகப் பேசப்படாத கொள்கையாக இது விளங்குகின்றது. கட்டுரையில் புதிய வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்வதற்கு பழங்குடியினர் கலைச் செயற்பாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றிய விவாதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வடிப்படையில் புதிய வாழ்வை எதிர்கொள்வதற்கான சாதனமாக கலையை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. அடுத்து பழங்குடியினரின் கலைகள் அவர்களை ஆதிக்கம் செலுத்திய சமூகத்தால் எவ்விதம் நோக்கப்பட்டன, ஆதிக்க சமூகம் அதன் தேவைக்காக எவ்விதம் பழங்குடியினரின் கலைகளைப் பயன்படுத்தியது, பழங் குடியினரின் கலை, படைப்பாக்க நுட்பங்கள் சமகாலத்தில் ஏனைய சமூகத்தால் எவ்விதம் உறிஞ்சப்பட்டு வியாபாரப் பண்டமாக மாற்றிய மைக்கப்பட்டன, அச்சூறையாடல் மூலம் பழங்குடியினரின் கலைமேல் உள்ள உரிமத்தை எவ்விதம் ஆதிக்க சமூகம் கைமாறிக் கொண்டது என்னும் விடயங்கள் விவாதிக்கப்படுகின்றன. இவை அனைத்தும் நான்காம் உலகு பற்றிய கருத்தாக்கத்தின் அடிப்படைகளாக அமைகின்றன.

வாய்மொழி பாரம்பரியத்தைக் கொண்ட ஆபிரிக்க மக்களின் வாழ்வில் காலனித்துவ ஆட்சியாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்து இலக்கிய மரபு ஏற்படுத்திய பாதிப்புக்கள் ஆபிரிக்க மக்களின் பாரம்பரிய இலக்கிய மரபைச் சிதைத்தது போன்று அவர்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகிய அனைத்து அடிப்படை அடையாளங்களையும் பாதிப்பதை ஆபிரிக்க மக்கள் உணர்வு பூர்வமாக உணர்ந்து கொண்டனர். ஆபிரிக்கப் பண்பாட்டையும் இலக்கியத்தையும் மீட்டெடுக்கும் நோக்கிலும் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமானதொரு இலக்கிய வடிவமாகவும் ஆபிரிக்க மக்களின் விருப்பத்திற்குரிய வடிவமாகவும் ஒரேச்சர் என்னும் இலக்கிய வடிவம் கட்டமைக்கப்பட்டது. புதிய வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்வதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராணியை ஆபிரிக்க மக்களுக்கு வழங்கியதே இந்த இலக்கிய வடிவத்தின் உயர்நிலையும் சிறப்புமாகும்.

ஆபிரிக்க மக்கள் வாழ்மொழி ரீதியான இலக்கியப் பாரம்பரியத்திற்குப் பயிற்றப்பட்டவர்கள். அந்த வாய்மொழி வடிவத்தின் பல்வேறு பண்புகளையும் தாங்கிக் கொண்டு காலனித்துவ ஆட்சியின் கெடுபிடிகளை எதிர்கொள்வதற்கான அம்சங்களையும் தாங்கியதொரு வடிவமாக ஒரேச்சரைக் கட்டமைக்க முற்பட்டனர். ஒரேச்சர் ஒரு இலக்கிய வடிவமாக ஆபிரிக்க மக்களால் ஆக்கப்பட்டாலும் அதனை ஏனைய இலக்கியங்களில் இருந்து வேறுபடுத்தும் பண்பாக அதன் அளிக்கைப் பண்பு சுட்டிக் காட்டப்படுகின்றது. இங்கு ஒரேச்சர் என்னும் இலக்கிய வடிவத்தின் அறிமுகம், ஆபிரிக்கப் பண்பாட்டில் அது பெற்ற முக்கியத்துவம், ஒரேச்சர் இலக்கியத்தில் அச்சாணியாக விளங்கும் அளிக்கையின் முக்கியத்துவம் அவ்வளிக்கையில் பார்ப்போர் / கேட்போர் இணைவு, ஆபிரிக்கப் பண்பாட்டின் அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய தன்மை, ஒரேச்சரின் அளிக்கை ஆக்கக் கூறுகள், சடங்கு நிலைத் தொடர்பாடலின் முக்கியத்துவம், ஒரேச்சர் பற்றிய ஆய்வுகள், ஆபிரிக்க ஒரேச்சர் ஈழத்தில் பயில்விலுள்ள கட்டுப்பாடல்களுடன் கொண்டுள்ள தொடர்புகள் என்னும் பல விடயங்களை ஆய்வுக் குட்படுத்தி செல்கின்றார் ஆசிரியர். இந்நிலையில் ஒரேச்சர் என்னும் இலக்கிய வடிவம் தொடர்பான தெளிவை வழங்கும் ஆசிரியர் ஒரேச்சரை ஈழத்தில் அதற்குச் சமாந்தரமாகப் பயிலப்படும் கட்டுப்பாடல்களுடன் தொடர்புபடுத்துவது ஈழத்திலும் ஒரேச்சருக்கு சமமான ஒரு இலக்கிய வடிவம் உள்ளது என்பதைத் ஆதாரப்படுத்தும் முயற்சியாக அமைந்துள்ளது.

மூன்றாவது கட்டுரை மெய்யியல் தளத்தில் நின்றுகொண்டு ஒழுக்கவியல் பற்றிய கொள்கைகளை விளக்குகின்றது. மெய்யியலின் ஒரு அடிப்படையான பகுதியாக ஒழுக்கம் கொள்ளப்பட்டபோதும் அது மனித வாழ்வில் அடிப்படையான நியமமாக அனைத்துப் பண்பாடுகளிலும் வற்புறுத்தப்படுகின்றது. தனிமனிதர் தொடக்கம் சமூகம் மற்றும் நாடுகள் வரை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தரக்கணிப்பீடு செய்யும் முறை சிறந்ததாக மனிதர்களிடம் வளர்ச்சியடைந்துள்ளது. இது மனித சமூகம் ஒழுக்க நியமங்களை கடைப்பிடித்து வாழ்வதில் காட்டும் ஆர்வத்தையே காட்டுகின்றது. சமூகங்கள் வரையறுக்கும் ஒழுக்க நியமங்களைப் பின்பற்றாதவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத் தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவது ஒழுக்கம் உயர் பெறுமானமுடையதாக மதிக்கப்படுவதை ஆதாரப்படுத்தும் இன்னொரு எடுத்துக் காட்டாக அமைகின்றது. ஒழுக்கம், தொடர்புடைய கருத்தொருமைப்பாடற்ற வேறுபட்ட கருத்துக்களின் இணைவாக விளங்குதல் மற்றும் நடைமுறை வாழ்வில் ஒழுக்கம் தொடர்பான பொருள்கோடலில் ஏற்படும் சிக்கல்கள் என்பன ஒழுக்கவியல் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதற்குக் காரணமாகின்றன. இதனால் ஒழுக்கவியல் தொடர்பான கருத்துக்களுக்கு வழங்கப்படும் வியாக்கியானங்கள், அவற்றை சமூகத்தில் பிரயோகிப்பதில் உள்ள இடர்பாடுகள் எனப் பல விடயங்கள் ஒழுக்கவியல் தொடர்பான இந்த ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

ஒழுக்கவியல் தொடர்பான ஆய்வு இங்கு இரு நிலைகளில் நிகழ்த்தப்படுகின்றது. ஒரு நிலையில் ஒழுக்கவியல் என்றால் என்ன? என்னும் புரிதலுடன் ஒழுங்கவியலுடன் தொடர்புடைய பல கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஒழுக்கவியல் கொள்கைகளை நோக்குக் கொள்கை, நோக்கமில்லாக் கொள்கை என இரண்டாகப் பாகுபடுத்தி விளக்கும் ஆசிரியர், காண்டின் ஒழுக்கம் தொடர்பான கருத்துக்கள், பயன்பாட்டுவாதம், உளவியல் தன்னலக் ஒழுக்கக் கொள்கை, ஒழுக்கவியல் தன்னலவாதம், அறஒழுக்கக் கொள்கை, இன்பவாதம், உள்ளுணர்வுவாதம், ஒழுக்கவியல் அகவய வாதம், இயற்கைவாதம், பெண்ணிய, இருத்தலிய ஒழுக்கவியல், பிறர் நலவாதம் என ஒழுக்கவியல் தொடர்பான பெரும்பாலான கொள்கைகளை ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்.

கட்டுரையின் இரண்டாவது பகுதி மிகவும் முதன்மையானது. அதில் பிரயோக ஒழுக்கவியல் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படு கின்றன. பிரயோக ஒழுக்கவியல் என்பது எமது நாளாந்த வாழ்வில் பிரயோகிக்கப்படும் ஒழுக்கக்கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. அவ்வடிப்படையில் பிரயோக ஒழுக்கவியல் மருத்துவம், வணிகம், ஊடகம், சுற்றுச்சூழல், இராணுவ, அரசியல், பொதுத்துறை என பல துறைகளில் பிரயோகிக்கப்படுகின்றது. இங்கு ஆசிரியர் மூன்று துறைகளைப் பற்றியே பேசுகின்றார். அவை சுற்றுச்சுழல் ஒழுக்கவியல், வணிக ஒழுக்கவியல், ஊடக ஒழுக்கவியல் என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் இத்துறைகள் மூன்றும் மக்களின் கவனத்திற்குரிய துறைகளாக மாறியுள்ளன. மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற வேறுபட்ட துறைகளாக விளங்கியபோதும் இம் மூன்று துறைகளாலும் சமூகம் எதிர்கொள்ளும் ஒழுக்க மீறல்கள், ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறிப்பிடத்தக்கன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது, சூழலுடன் இணைந்து வாழ்வது, சூழலைப் புரிந்துகொள்வது என்னும் பல விடயங்கள் இங்கு பரிசீலிக்கப்படுகின்றன. அதுபோன்று வணிகத்துறையில் நடைபெறும் பல்வேறு குளறுபடிகளும் வணிக ஒழுக்கம் தொடர்பான அறிவின்மை அல்லது வணிக ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காததினாலேயே ஏற்படுகின்றது. இவை யாவற்றுக்கும் மேலாக ஊடகம் இன்று அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வரும் துறையாக விளங்குவதுடன் அதன் ஒழுக்கப் பிறழ்வான செயற்பாடுகளால் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவை யாவற்றையும் அவற்றுக்கென பரிந்துரைக்கப்பட்ட ஒழுக்க நியமங்களைக் கடைப்பிடித்து நடப்போமானால் தீர்த்துக் கொள்ளமுடியும். ஒழுக்கம் மனித வாழ்வில் முக்கியமானதொரு விடயமாக அமைந்ததினாலேயே திருவள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.

எனவே, இந்நூலில் இடம்பெறும் மூன்று அத்தியாயங்களும் சமகாலத்தில் பேசப்பட வேண்டிய மூன்று முதன்மையான கொள்கை களைப் பேசுகின்றன. இவை தமிழ் அறிவுலகிற்குப் புதுமையான தாகவும் வளஞ்சேர்ப்பனவாகவும் அமைகின்றன. வாசகர்கள் இதன் மூலம் பெறும் திருத்தியே இம்முயற்றியின் பெறுபேறாகும்.

இந்நூலாக்கத்திற்கான கையெழுத்துப் பிரதியை கணினியில் பதிவேற்றம் செய்து தந்த திருமதி புனிதாதேவி ரவிச்சந்திரன், ஒற்றுப் பிழைகளைத் திருத்தித்தந்த கூத்துக் கலைஞரும் ஆசிரியருமான கு.பிரபாகரன் மற்றும் செல்வி இ.மிதுர்ஷா ஆகியோரின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது.

இன்று நிலவும் அசாதாரண நிலைமைகளையும் கருத்திற் கொள்ளாது இந்நூலை வெளியிடுவதற்கு முன்வந்த க.குமரன் அவர்களுக்கும் அவரின் உதவியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இந்நூல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மொழித்துறைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கு சமர்ப் பணம் செய்யப்படுகின்றது. நீண்ட காலமாக ஆக்க இலக்கியங்கள், ஆய்வுகள், விமர்சனங்கள், மதிப்பீடுகள் எனப் பல்வேறு தளங்களில் செயற்பட்டு வரும் அவர் இந்நூலாசிரியர்கள் மூவரினதும் ஆசிரியராகவும் மதிப்புக்குரியவராகவும் விளங்ககின்றார். இந்தச் சிறிய செயற்பாட்டின் மூலம் பேராசிரியரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்சியடைகின்றோம்.

*25.05.2020*

வடிவேல் இன்பமோகன்
நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அணிந்துரை

முன்னுரை

1. நான்காம் உலகக் கலைகள் 1

- வடிவேல் இன்பமோகன்

2. ஆபிரிக்க ஒறேச்சர் (Orature): அறிமுகமும் அதன் அளிக்கை மரபுகளும் 50

- சின்னத்தம்பி சந்திரசேகரம்

3. ஒழுக்கவியல் கொள்கைகளும் பிரயோக ஒழுக்கவியலும் 97

- இரத்தின சபாபதி பிரேம்குமார்

சுட்டி 210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஒன்று

# நான்காம் உலகக் கலைகள்

- வடிவேல் இன்பமோகன் -

அறிமுகம்

மேற்குலகின் கருத்துக்களும் சிந்தனைகளும் அறிவுப் புலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது போல் மக்கள் வாழ்விலும் மாற்றங் களை ஏற்படுத்தி வருகின்றன. சமூக ஒழுங்கை மேற்குநாட்டவர் கட்டமைத்த நியமங்களைக் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் நிலை அவர்களின் சிந்தனையின் ஆதிக்கப்பரப்பினை வெளிப் படுத்துகின்றது. உலக மாந்தரை முதலாம், இரண்டாம், மூன்றாம் உலகத்தினர் என தரப்படுத்தும் மேற்குலகத்தினரின் நோக்கு அவற்றுக்கு மேலதிகமாக "நான்காம் உலகு" என்னும் ஒரு புதியதொரு பகுப்பை ஏற்படுத்தியுள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம், பண்பாடு போன்ற துறைகளில் ஏற்படும் மாற்றம் மற்றும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மேற்குலகினர் நாடுகளை தரநிர்ணயப்படுத்தும் போக்காகவே முதலாம், இரண்டாம், மூன்றாகம் உலகத்தினர் என்னும் பிரிப்புக்கள் அமைந்திருந்தன. இத்தரப்படுத்தலுக்குள் குறிப்பிட்ட மக்கள் பிரிவினர் உள்ளடக்கப்பட முடியாதவர்களாக விளங்குகின்றனர். இந்தத் தரப்படுத்தலின் போதாமையே இன்னொரு பகுப்பாக நான்காம் உலகை மேலதிகமாக இணைத்துவிடுகின்றது. நான்காம் உலகத்தினராக பழங்குடியினர் அடையாளப்படுத்தப்பட்டபோது பழங்குடியினர் அவர்களுக்கு இருந்த தனித்துவம், சமூக அடையாளம் ஆகியவற்றை படிப்படியாக இழக்கத் தொடங்கினர். நான்காம் உலகம் என்னும் பகுப்பு பழங்குடியினர் அவர்களின் தனித்துவங்களை விட்டு அவர்களை ஆதிக்கம் செலுத்தும் சமூகத்தில் தங்கிவாழும் நிலையுருவாகும் போது முக்கியத்துவம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆய்வில் நான்காம் உலகு பற்றிய அறிமுகம், கலைச் செயற்பாடுகள் பற்றி பேசுவதுடன் மாறிவரும் சமகால சமூக, பண்பாட்டு உள்ளடக்கத்தில் நான்காம் உலக கலை வடிவம், அதன் தொழிற்பாடு, அதன் அர்த்தம் ஆகியவற்றை வெளிப்படுத்துவது நோக்கமாக அமைகின்றது. இக்கலைகளைப் படைக்கும் மக்கள், இவற்றை நுகர்வோர் (ரசிப்போர்) ஆகியோருக்கு இடையேயான தொடர்பை காட்டுவதும் ஒரு நோக்கமாக அமையும்.

நான்காம் உலகத்தினர் ஏனைய சமூகப் பிரிவினரிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட அல்லது தனித்துவமான சமூகப்பரிவினராக அடையாளப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் வாழ்வியல் தேவைகளுக்காகவும் மாற்றமடையாத ரசனைக்காகவும் கலைகள் உருவாக்கப்படுகின்றன. பல்வேறு காரணங்களுக்காக ஏனைய பெரும்பான்மைச் சமூகங்களில் தங்கிவாழ்வதற்கு இன்று நிர்ப்பந்திக் கப்பட்டுள்ள சமூகமான மாற்றியமைக்கப்பட்டுள்ள இவர்களின் சிந்தனைகள், பண்பாட்டு அம்சங்கள், அறிவியல் போன்றன அவர்களைச் சூழ வாழும் பெரும்பான்மைச் சமூகங்களில் இருந்து வேறுபட்ட தனித்துவம் மிக்கனவாகவே விளங்குகின்றன. சமகால வாழ்வியல் சூழலில் பழங்குடியினர் பல மாற்றங்களை எதிர் கொள்வதுடன் இம்மாற்றங்கள் பல வாழ்வியல் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. சவால்கள் நிறைந்த வாழ்வில் இன்று அவர்களால் படைக்கப்படும் கலைகள் எவ்வாறான மாற்றங் களை அடைந்துள்ளன? பழங்குடியினரின் பாரம்பரிய இனத்துவ அடையாளத்தை, பண்பாட்டை பிரதிபலிப்பதில் கலைகளின் இடம் என்ன? பழங்குடியினரின் சமகால வாழ்வில் கலைகளின் இடம் என்ன? என்பவை பற்றிய புரிதல் நான்காம் உலகத்தினராக பழங்குடியினர் அடையாளப்படுத்தப்படுவதுடன் தொடர்புடைய விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன.

*பழங்குடியினர்*

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பழங்குடியினர் என்பதற்கு பொதுவான தொரு வரைவிலக்கணத்தை வழங்காதபோதும் அது வழங்கிய கீழ்க் குறிப்பிடப்பட்ட விளக்கங்களைக் கொண்டு பழங்குடியினர் என்னும் பதம் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ளலாம். "1. பழங்குடி மக்கள் எனப்படும் சுய அடையாளமானது தனிப்பட்ட மட்டத்தில் காணப்படுவதுடன் குறிப்பிட்ட சமூகமானது அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தனிநபரை) அங்கத்தவராகக் கருத வேண்டும். 2. காலனித்துவத்திற்கு முந்திய ஒழுங்கமைக்கப்படாத சமூகம் தொடர்பில் வரலாற்றுத் தொடர்ச்சி காணப்படும் 3. இயற்கை வளங்கள் மற்றும் அதனைச் சுற்றி யுள்ள எல்லைப்பகுதி என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும் 4. தனிப்பட்ட சமூக, பொருளாதார அல்லது அரசியல் முறைமையைக் கொண்டிருப்பர் 5. தனிப்பட்ட மொழி, பண்பாடு, நம்பிக்கையைக் கொண்டிருப்பர். 6. ஆதிக்கமற்ற குழுக்களைக் கொண்ட சமூகத்தைக் கொண்டிருத்தல் 7. மூதாதையரின் சுற்றாடல் மற்றும் முறைமையினைப் பராமரிப்பதற்கும் மீள் உற்பத்தி செய்வதற்கும் தனித்துவமான மக்களாகவும் சமூகமாகவும் இணைந்து செயற்படுவர் (https://www.un.org/esa/socdev/unpfii/documents/5sessionfactsheet1.pdf). மேற்குறித்த அம்சங்களைக் கொண்டிருக்கும் மனிதக்குழுக்கள் பழங்குடியினராகக் கொள்ளப்படுகின்றனர்.

பழங்குடியினர் என்னும் பதம் சுட்டும் அர்த்தம் குறித்து பத்தவத்சல பாரதி "பழங்குடி என்போர் ஒருபடித்தான சமூகக் குழுவினராவர். இவர்கள் தொடர்ச்சியான பொதுவான இடத்தில் வசிக்கக்கூடியவர்கள் பொதுவான கிளைமொழியைப் பேசுபவர்கள், பொதுவான ஒருமுகப் பாங்குடைய சமூக முறையைப் பேணுபவர்கள், ஒரு படித்தான பண்பாட்டு முறையைக் கொண்டவர்கள், பொதுவான மூதாதையரையும் சமய நம்பிக்கை முறையையும் பின்பற்றுபவர்கள் (2017:29) எனக் குறிப்பிட்டிருந்தார். பத்தவத்சல பாரதியின் விளக்கம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பழங்குடியினர் தொடர்பாகக் கொடுத்துள்ள விளக்கங்களுடன் தொடர்புடைய விதத்தில் அமைந்திருந்தது. காலனித்துவ ஆட்சியின் பின்னரே Tribe என்னும் வகைப்பாடு அறிமுகமானது. இதற்குக் காரணம் இத்தகைய பூர்வ குடிமக்கள் தொகையின் அளவாலும், மொழியாலும், பண்பாட்டுக் கூறுகளாலும், சுற்றுச் சூழலின் தனித்துவத்தாலும், வாழ்வியல் முறையில் அவர்கள் கொண்டிருந்த பொருள்சார்ந்த கூறுகளாலும் மாறுபட்டவர்களாக இருந்தனர். இதனால் அவர்களைத் தனித்த சமூகப் பிரிவினராக அடையாளங்கண்டனர்.

பழங்குடியினர் பண்பாட்டு ரீதியாக வேறுபட்டு இருந்தாலும் உலகளாவிய ரீதியில் அவர்களுக்குக் காணப்படும் பொதுவான பிரச்சினையானது பழங்குடியினர் எனப்படும் அடையாளம் மற்றும் உரிமையினைப் பாதுகாப்பதில் சவாலாக உள்ளது. பழங் குடியினர் அவர்களின் அடையாளத்தை வெளியுலகத்திற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்படுத்துகின்றனர், அவர்களினுடய வாழ்க்கை முறைமை மற்றும் பாரம்பரிய நிலங்களுக்கான அவர்களின் உரிமை அவர் களினுடைய எல்லை மற்றும் இயற்கை வளங்கள் என்பன காலம் காலமாக மீறப்பட்டுள்ளன. பழங்குடியினர் தற்காலத்தில் உலகில் காணப்படும் துரதிஷ்டவசமுடைய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களாகவும் காணப்படுகின்றனர். சர்வதேசரீதியாகக் காணப்படும் சமூகங்கள் தற்பொழுது இதனை அடையாளங்கண்டு அவர்களினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையினை தனித்துவமானதாக வைத்துக் கொள்ள விசேட செயற்பாடுகளை மேற்கொண்டனர் (https://www.un.org/esa/socdev/ unpfii/ documents/ 5sessionfactsheet1.pdf).

பழங்குடியினரின் வாழ்க்கைமுறை, பண்பாடு, கலைச் செயற்பாடு, பொருளாதாரச் செயற்பாடு போன்ற பல விடயங்களாலும் ஏனைய சமூகங்களில் இருந்து தனித்துவமானவாகளாகக் கருதப்படும் இவர்கள் நான்காம் உலகத்தினர் என்னும் புதியதொரு பகுப்புக்குள் கொண்டுவரப்படுகின்றனர். இப்பகுப்பு பழங்குடியினரை எவ்வாறு பாதிக்கின்றது என்றும் அவர்களை வளப்படுத்திக் கொள்ள எவ்வாறு உதவுகின்றது என்றும் நோக்குவது, பழங்குடியினர் சமகாலத்தில் அவர்களின் வாழ்வினை எவ்வாறு முன்னெடுக்கத் தயாராகின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

**நான்காம் உலகு : கருத்துருவாக்கம்**

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனித்துவ ஆட்சியாளர் காலனித்துவத்திற்குட்படுத்திய நாடுகளிலிருந்து வெளியேறிய பிறகும் காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட நாடுகளின் மீதான அரசியல் கட்டுப்பாட்டை தொடர்ந்து பேணினர். நாட்டின் மீதான தேசிய செல்வாக்கு இல்லாமல் போனதால் முன்னணியில் இருந்த மக்கள் குழுவினரை அவர்களின் பாதுகாப்பிற்காக காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் ஒன்றிணைய வைத்தது. நாடுகள் அவற்றினுடைய செல்வாக்குகள் இல்லாமல் செய்யப்பட்ட போது அந்நாடுகளின் பெரியளவான உள்ளூர்ப் பண்பாட்டு மரபுகளை இணைத்து அடிப்படையான அடையாளங்களைப் பங்கீடு செய்து கொண்டனர் (Leuthold, Steven; M., (2011:58).

தேசிய அரசு பற்றிய கருத்துருவாக்கமானது உறுதிவாய்ந்ததொரு மரபுரிமைச் செல்வமாகவே காலனித்துவ காலப்பகுதியில் அமைந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. அதனைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் மேற்கொள்ள வேண்டியது அவசிய தேவையாக தேசிய அரசுகளுக்கு இருந்தது. பின்காலனித்துவ அரசியல் செயற்றொடரின் ஒரு பகுதியாக இது அமைந்திருந்தது. பல்வேறு புதிய அரசுகள் தங்களின் நாட்டைக் கட்டியெழுப்ப முனைகின்றன. அத்துடன் அவர்களின் பாரம்பரிய கலைகளை மீட்டெடுத்து தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தத் தீர்மானிக்கின்றனர்.

காலனித்துவத்தை இல்லாமல் செய்த அதே அமைப்பான தேசியவாதம் இப்போது பழைய காலனித்துவ முறைமைகளை அவர்களுக்குள்ளேயே கொண்டு வருவதற்கும் வழியேற்படுத்தியது. இதற்கமைய ஐரோப்பிய தேசிய மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட பின்காலனித்துவ தேசிய அரசுகளைக் கட்டமைப்பதாக அமைந்திருந்தது. இக்கருத்தியலால் சக்திவாய்ந்த குழுக்கள் சிறிய குழுக்களை அடக்கியதுடன் அவைகளுக்கிடையே பாரபட்சத்தையும் காட்டியது. இவ்வாறான செயற்பாடுகள் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய அரசுகளால், குறிப்பாக மூன்றாம் உல நாடுகளால் மேற்கொள்ளப்பட்டது. உள்ளார்ந்த காலனித்துவம் என்னும் பதம் பழங்குடி மக்களின் வாழ்வியல்நிலை எவ்வாறு பாதித்திருந்தது என்பதை சுட்டிக்காட்டுகின்றது. (உள்ளாந்த காலனித்துவம் என்பது காலனித்தவத்தில் இருந்து விடுதலை பெற்ற தேசிய அரசிகள் அந்நாட்டில் வாழும் பழங்குடியினர் போன்ற தேசிய இனங்களை ஒடுக்கியாளும் செயற்பாடாக அமைந்திருந்தது.) சுதேசிய மக்கள் குழுவினர் நவீன நாட்டின் எல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை இது சுட்டுகின்றது. அதிகாரம், சுய உறுதிப்பாடு என்பவற்றில் மிக உயர்ந்தளவான பாரபட்சமான நிலை பழங்குடி மக்களுக்கு புதிதாக உருவான தேசிய அரசுகள் வழங்குகின்றன. "நான்காம் உலக நாடுகள்" என்னும் பிரிப்பு இவை பழங்குடியினர் சமூகத்தினை வேறுபடுத்திப் பார்த்த நிலையிலிருந்தே உயிர்ப்புப் பெறுகின்றது (Leuthold, Steven; M., (2011:59). குறிப்பாக கறுப்பர்கள், நாட்டின் பிரதிநிதிகளாக தங்களை இணைத்துக்கொள்ள முயற்சிக்கும் ஏனைய இனத்தினர், மற்றும் சுதேச குடிகள், பழங்குடிகள், அதற்குச் சமமான ஏனைய மக்கள் குழுவினருக்கு இப்பதம் கையாளப்படுகிறது. இவர்களிடமுள்ள உள்ளூர் அறிவு, மொழி, பண்பாடு மற்றும் பெறுமானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச சந்தையின் பிரதான பெறுமானமாக மாற்றியமைக்கப்பட முடியாதவையாக விளங்குவதால் இவர்கள் நான்காம் உலகமாக பாகுபடுத்தப்படுகின்றனர் (Chilisa, Bagele., 2012:75) என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது. அதிகளவான பழங்குடி சமூகத்தினருக்கு இறைமை என்பது தெளிவற்றதொன்றாக விளங்கியது.

உலகம் முழுவதும் 350 மில்லியன் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் உலக சனத்தொகையில் 6 சதவீதத்தினராக உள்ளனர் என்பதை கணக்கெடுப்புக்கள் தெரியப்படுத்துகின்றன (Claire Smith, 2000:2). இம்மக்கள் அவர்களுக்கான நிலங்களை அவர்கள் வாழும் நாட்டில் இழந்தவர்களாகவும் அவர்களின் சகல செயற்பாடுகளும் முதலாம், இரண்டாம், மூன்றாம் உலக மக்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகவும் உள்ளன. அவர்களுக்கென ஒரு நாட்டைக் கொண்டிராதவர்களாகவும், எப்போதும் வாழும் நாட்டில் சிறுபான்மை சமூகமாகவும், அவர்களினுடைய இயல்பு வாழ்வை அல்லது கூட்டுவாழ்க்கையை நடத்துவதற்கான நேரடியான அதிகாரம் அற்றவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களை ஒடுக்கும் சமூகப் பிரிவினர் மற்றும் ஒடுக்குமுறையின் தன்மை என்பனவற்றை அடிப்ப டையாகக் கொண்டு இச்சமூகத்தினரைக் குறிப்பிடுவதற்காக “நான்காம் உலகத்தினர்” என்னும் பதம் வென் வைட்டகர் (Ben Whitaker)[1], மற்றும் ஜோர்ஜ் மனுவல் (George Manuel)[2] ஆகிய இருவராலும் முதலில் கையாளப்பட்டது.

'The fourth world: an Indian Reality' என்னும் நூலில் 1974ஆம் ஆண்டு உலகளாவியரீதியில் உள்ள நாடுகளின் மானிட எல்லைக்குள் காணப்படும் (பண்பாட்டு நிறுவனங்கள், இனக்குழுக்கள்) பழங்குடியினரைக் குறிப்பதற்கு நான்காம் உலகம் (Fourth World) என்னும் பதம் கையாளப்படுகின்றது. இந்நூல் நான்காம் உலகம் என்னும் சொல்லாடலினால் கனடாவில் காணப்படும் பழங்குடியினரினுடைய அடக்குமுறையான நிலைமையினை விளக்குகின்றது. நடைமுறை வரலாற்று நிலைமைகளுடன் பிணைக்கப்பட்ட மற்றுமொரு கருத்தியலாக நூலில் இது கட்டமைக்கப்பட்டிருந்தது.

1. Whitaker, Ben. (1972), The Fourth World: Victims of Group Oppression: Eight Reports from the Field Work of the Minority Rights Group, Sidgwick & Jackson.
2. Manuel, George, (1974),The fourth world: An Indian reality, Canada: Collier-Macmillan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபகாலத்தில் அன்ரனி ஜே. கோல் (Anthony J. Hall) அவர்கள் தனது விமர்சனத்தில் *(The American Empire and the Fourth World)* ஜோர்ஜ் மனுவலினுடைய நான்காம் உலகு பற்றிய கருத்தானது பெறுமதிமிக்கதொன்று எனக் குறிப்பிட்டிருந்தார். இவரே நான்காம் உலகு பற்றிய கருத்துக்கு கோட்பாட்டுப் பெறுமானம் வழங்கியவராவார். இவர் இது தொடர்பாகக் குறிப்பிடும் போது "நான்காம் உலகு பற்றிய கருத்தாக்கம் தற்போது உலகில் காணப்படும் வழமைகளைக் கொண்ட ஒற்றைக் கலாசாரத்தைக் கொண்ட நிறுவனங்களின் எதிர்காலத்திலிருந்து வேறுபடுவதாக அமைகின்றது. இது பின்காலனித்துவக் கருத்தியலை முதன்மை யானதாக விளங்குவதுடன் பன்முகப்படுத்தப்பட்ட பூகோளக் கிராமமாகவும் இது கொடுந்தன்மை மற்றும் ஒரே விதமான நிலையையும் கொண்டிருக்கும். இதனால் ஜோர்ஜ் மனுவலினுடைய நான்காம் உலகம் என்னும் கருத்தாக்கம் பழங்குடியினரை மட்டும் விபரிக்காமல் சமூகரீதியான உலகமயமாக்கல் பிரச்சினைகளையும் குறிப்பிடுகின்றது" எனக் குறிப்பிட்டிருந்தார் (SLOWEY, GABRIELLE A.,2005). கோல் அவர்களின் கருத்தின்படி நான்காம் உலகு பற்றிய கோட்பாடு காலனித்தவத்தினால் மட்டும் பாதிக்கப்பட்டதாக இல்லாமல் ஏனைய ஒற்றைக் பண்பாட்டு மாதிரிகளைக் கொண்ட உலகமயமாக்கலினால் ஏற்படும் இனங்களினாலும் உருவாகின்றது. உண்மையில் பழங்குடியினரின் வளர்ச்சியை உலகமயமாக்கல் மற்றும் உலகில் புதிதாக உருவாகும் சமூகங்களின் ஆதிக்கத்தினால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இக்கோட்பாடு அமைகின்றது என்பதே பொருத்தமுடையது.

அரசியல் சொல்லாடலின் குறிப்பிடும்போது நாடுகள் இன்று ஜனநாயகம் பற்றியும் தேசிய அரசுகள் பற்றியும் தேசியம் பற்றியும் பேசுகின்றன. ஒரு நாட்டில் வாழும் அனைவரும் தேசிய இனமாகக் கொள்ளப்படுகின்றனர். தேசியம் பற்றிய சொல்லாடல் மன்னராட்சியை எதிர்க்கின்றது. இங்கு மக்கள் அரசியல் அதிகாரத்தில் பங்கேற்பது முக்கியமான விடயமாக அமைகின்றது. இது ஜனநாயகத்தில் அடிப்படையான விடயமாகவுமுள்ளது. இங்கு எந்த ஒரு இனமும் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கத்தைத் திணிக்க முடியாது. குறித்த ஒரு தேசிய இனத்தின் தீர்மானம் அந்த இனத்தினால்தான் எடுக்கப்பட வேண்டுமே தவிர இன்னொரு இனத்தின் ஆதிக்கத்தினால் அல்ல (திருநாவுக்கரசு,மு.,*2018:70*). தேசிய விடுதலைக்காக, தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுக்காக தேசிய இனங்களை ஒன்று திரட்டிய தேசியத் தலைவர்கள் தேசிய அரசு உதயமானவுடன் சில இனங்களைப் புறந்தள்ளும் போக்கு காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற நாடுகளில் அடையாளங்காணப்படும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. புறந்தள்ளப்படும் இவர்களுக்கு தேசிய இனங்களுக்கு வழங்கப்படும் அடிப்படையான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. சிறுபான்மை இனங்களான பழங்குடிச் சமூகங்கள் பல நாடுகளில் அவர்களின் தேசியத் தனித்துவத்தைப் பாதுகாக்கும் பொருட்டு போராட்டங்களில் ஈடுபடுகின்றன. இப்போராட்டங்களால் சில உரிமைகளையும் வென்றெடுத்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக தென்னிந்தியாவில் வாழ்ந்துவரும் ஒரு பழங்குடி சமூகமாகச் 'சாட்டையடிக்காரர்' உள்ளனர். இவர்களுக்கு இந்தியாவில் உள்ள ஏனைய சமூகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அங்கிகாரம் கிடைக்கப்பெற வேண்டுமானால் அதற்கு அரசின் சாதிச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களின் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியும். அதனை அடிப்படையாகக் கொண்டு அலுவலகப் பணியை மேற்கொள்ள முடியும் எனக் கருதுகின்றனர். ஆனால் அரசு அவர்களுக்கு இன்னும் வழங்காமலே உள்ளது (முத்தையா,இ.,201:235). இவ்வாறு இவர்கள் மேல் ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுவதற்கு நாட்டில் வாழும் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது இவர்கள் எண்ணிக்கையில் சிறு தொகையினராக விளங்குவது அடிப்படைக் காரணமாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் அடையாளப்படுத்தப்படும் தலித்துக்கள் போன்ற விளிம்புநிலை மக்களுக்கு அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சமூக இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் உள்ளன (மேலது:236). அவர்கள் பழங்குடி சமூகத்தினர் போன்றல்லாது தொகையில் அதிகமாக இருப்பதால் அவர்களின் வாக்கு அரசியல் கட்சிகளுக்குத் தேவையாக உள்ளதால் அவர்களின் உரிமைகளை வென்று கொடுக்கின்றனர்.

தலித்துக்கள், விளிம்புநிலை மக்கள் என்போர் தேசிய அரசின் தேசிய இனங்களாகக் கொள்ளப்படுகின்றனர். இதனால் அரசால் நாட்டில் வாழும் மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் சலுகைகளையும் அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. தேசம் பற்றியும் தேசம் உள்ளடக்கும் மக்கள் தொடர்பான வரையறைகள் இதனை உறுதிப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேசம் என்பது பூகோளரீதியாக வரையறுக்கப்பட்ட பொதுவான பண்புகளைக் கொண்ட மக்களைக் கொண்டதும் மக்களினால் உருவானதுமான ஒரு பிணைக்கப்பட்ட எல்லையைக் கொண்டதாகும். ஒரு தேசமானது தனிப்பட்ட நபர்களைக் கொண்ட சமூகமாகவும் இந்த சமூகம் அவர்களைத் தனிநபர்களாகவும் கருத்திற் கொள்ளும். இந்த இனம் பொதுவான வம்சாவழி அல்லது வழித்தோன்றல், வரலாறு, சமூகம், நிறுவனம், கருத்தியல், மொழி, எல்லை, சமயம் என்பனவற்றைக் கொண்டிருக்கும்" (Demko, George J.,1994:220). பழங்குடி மக்கள் தேசத்தினுள் வாழ்ந்தாலும் தலித்துகள், மற்றும் ஏனைய தேசிய இனங்களைப் போன்று அல்லாது மொழி, சமயம், கருத்தியல், வரலாறு, வழித்தோன்றல், வரலாறு, சமூகம் என பல விடயங்களிலும் வேறுபட்டவர்களாக விளங்குகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் வாழும் பழங்குடி மக்கள் அந்நாட்டில் வாழும் மக்களில் இருந்து வேறுபட்டவர்களாக விளங்குகின்றனர். அதேநேரம் உலகம் முழுவதிலும் வாழும் பழங்குடி மக்களின் பொது அடையாளங்களை தாங்கியவாகளாக விளங்குகின்றனர். பழங்குடியினரின் இந்தப் பிரிப்பால் ஏனைய மக்கள் பின்பற்றும் வாழ்வியல் அம்சங்களை இவர்கள் பின்பற்றுவதில்லை. நாட்டின் சட்டம், சம்பிரதாயம், ஏனைய நியமங்கள் இவைகளை இவர்களால் பின்பற்றவும் முடியாதுள்ளது. இவ்வாறான காரணங்களினால் இவர்கள் நான்காம் உலகமாகக் கருதப்பட்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவே நான்காம் உலகு என்னும் பிரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைகின்றது. பழங்குடியினர் தனித்துவமான சமூகப்பிரிவினராக அடையாளங்காணப்பட்டு நான்காம் உலகத்தினர் என்னும் அடையாளத்தை தாங்கும் கட்டத்தில் பாரம்பரிய வாழ்வை வாழ்வதற்கான நிலைமைகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பரிச்சயமல்லாத உலகின் அமைப்பொழுங்கைப் பின்பற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்த மாறும் கட்டத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இக்கட்டத்தில் பழங்குடியினரின் அடையாளங்களைத் தக்க வைத்துக் கொண்டு புதிய வாழ்வொழுங்கைப் பின்பற்றுவது அவர்களின் நோக்கமாக அமைகின்றது. இதற்காகப் பழங்குடியினர் ஒன்றிணைந்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, வென்றெடுப்பதற்காகப் போராடுவதற்குத் தயாராகின்றனர். போராட்டத்தின் மூலம் அவர்களின் உரிமைகளை வென்றெடுத்துள்ளனர். பழங்குடியினர் சபை (Tribal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Council) போன்ற அமைப்புக்கள் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டனவாக அமைகின்றன. இந்த அமைப்பு First Nations government என கனடாவிலும், An Association of Native American Bands என அமெரிக்காவிலும் ஏற்படுத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இது போன்று உலகின் பல நாடுகளிலும் உள்ள பழங்குடியினர் பல அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஆதிக்க சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நான்காம் உலகக் கலைகள்**

நான்காம் உலகத்தினர் ஏனைய சமூகப் பரிவினரால் புறந்தள்ளப்படுவதால் மாறிக்கொண்டிருக்கும் நவீன உலகில் சமூக, பண்பாட்டு பின்புலத்தில் நான்காம் உலகத்தினரின் கலைப்படைப்புக்கள் "நாகரிக முதிர்ச்சியற்ற" கலை என பெரும்பான்மை சமூகங்களால் அழைக்கப்படுகின்றன. ஆதிக்க சமூகத்தின் கலை பற்றிய வரையறைகளை இவை பூர்த்தி செய்யாததே இதற்கான காரணமாக அமைந்திருந்தது. அவர்களின் வாழ்வியல் தேவையை மாத்திரம் நோக்காகக் கொண்ட கைத்தொழில் துறை சாராத சிறியளவான இவர்களின் கலையுலகம் எப்போதும் தனித்தன்மையுடையதாக அமைந்துள்ளது. இருந்தும் அவர்களின் முழுமையான பண்பாட்டு அம்சங்களும் உள்ளார்ந்த இயக்காற்றல் கொண்ட கலைகளும் பெரும்பான்மைச் சமூகத்தினரால் அங்கிகரிக்கப்படவில்லை.

பழங்குடியினர் பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்க வரையறைகளுக்கு உட்படாது சுயாதினமான எந்தவித தடையுமின்றி இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்த காலம் வரை அவர்கள் வாழ்க்கை ஒழுங்கு சரியான முறையில் திட்டமிடப்பட்டிருந்தது. கலைகள் வாழ்வின் ஒரு பகுதியாக அமைந்திருந்தன. அவர்கள் தன்னியக்க சக்தியை இழந்து இன்னொரு சமூகத்தால் வாழ்க்கை ஒழுங்குகள் திட்டமிடப்படும் நிலைமை உருவானபோது அவர்களின் வாழ்வியல் நியமங்கள் யாவும் தலைகீழாக்கப்படுகின்றன. இம்மாற்றத்திற்கான தொடக்கப்புள்ளி காலனித்துவத்தின் ஆதிக்கத்திற்கு கீழ் இவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டபோது உருவாகின்றது. மன்னராட்சி காலங்களில் மன்னர்களுக்கு நாட்டின் தேசியச் செல்வங்களைச் சூறையாடும் தேவை இருக்கவில்லை. காலனித்துவ ஆட்சியாளர்கள் காலனித்துவத்திற்குட்பட்ட நாடுகளின் செல்வங்களை சூறையாடி காலனியாதிக்க நாடுகளை வளம்படுத்த முயற்சித்தனர். அவர்களின் இந்த பொருளாதார ரீதியான ஆசையை காலனித்துவத்திற்குட்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் காணப்பட்ட சகல மக்களையும் சட்டங்களின் மூலம் கட்டுப்படுத்தி அதன் மூலம் அடைந்தனர். இதனால் காலனித்துவ ஆட்சியும் அதன் சட்டவரையறைகளும் அவர்களின் வாழ்வியல் சுதந்திரத்தை பறித்து குறித்த நிலப்பரபினுள் அவர்களின் செயற்பாடுகளை வரையறுத்து பாரம்பரியமாக மேற்கொண்டு வந்த சமூகச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்தது.

இந்தியாவில் காலனித்துவ ஆட்சியா!ளர் 'குற்றப்பரம்பரைச் சட்டம்' என்னும் சட்டத்தை உருவாக்கி குறித்த சில இனத்தவரை பரம்பரைக் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தியது. இப்பட்டியலில் இடம்பெற்ற சாதியினர் பிறப்பின் அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் குணம் கொண்டவர்களாகக் காட்டப்பட்டனர் (சிவசுப்பிரமணியம், ஆ., 2017:161). இந்தக் குற்றம்பரம்பரையினருள் பழங்குடியினரும் உள்ளடக்கப்பட்டனர். இதுபோன்று 1846ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வனச் சட்டம் காடுகளில் வேட்டையாடுவதற்கும் விருப்பம்போல் உலாவித் திரிவதற்குமான சுதந்திரத்தைப் பறிப்பதாக அமைந்திருந்தது (பாரதி, பக்தவத்சல, 2017:312). பழங்குடியினரைக் காட்டிலிருந்து வனப்பாகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி விரட்டி பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய தேவைகளுக்காகக் காடுகளைப் பயன்படுத்தி பொருளாதார நன்மைகளை அடைந்தனர்.

பழங்குடியினர் எதிர்கொண்ட புதிய வாழ்வியல் மாற்றங்கள் பல புதிய அனுபவங்களை வழங்குவதுடன் வாழ்க்கையை சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது. இக்கட்டத்திலேயே அவர்களின் வாழ்கைக்கான போராட்டத்தில் அவர்களின் வாழ்வுடன் / வாழ்வியல் தேவையுடன் இணைந்ததான கலைகளை வாழ்வாதாரத்திற்கான பொருளாதார ஈட்ட மூலமாகக் கையாள முற்படுகின்றனர். கலையை வியாபாரப் பண்டமாக்க முயற்சிக்கின்றனர். இக்கட்டத்தில் ஆதிக்க சமூகத்தின் பார்வைக்குரியதாக கலைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவை உருவாகின்றது. அதற்காக நுட்ப ரீதியாகவும், வடிவ ரீதியாகவும் பல மாற்றங்களை புகுத்தவேண்டிய தேவை நான்காம் உலகத்தினருக்கு ஏற்படுகின்றது. இவ்வடிப்படையில் தமிழகத்தில் சாட்டையடிக்காரர் சாட்டையடித்தலை அவர்களின் வருமான ஈட்டத்திற்குரிய தொழிலாகக் கையாள்கின்றனர். இந் நிகழ்வின்போது "இக்குழுவைச் சேர்ந்த ஓர் ஆண் வலது கையில் பிடித்திருக்கும் நீளமான சாட்டையால் தன்னைத் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துக்கொண்டே இடது கையின் முழங்கையில் அல்லது முன்கையில் கத்தியால் கீறப்பட்ட புண்ணிலிருந்து கீறப்பட்ட காயத்தைக் காட்டியவாறே ஆடிப் பிறருடைய அனுதாபத்தைப் பெற்றுப் பொருளீட்டுவான். வேட்டையின் போது உணவு கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. எனவே உணவுத் தேவையை எப்படியாவது நிறைவுசெய்தாக வேண்டும் என்ற பயத்திலும் பதற்றத்திலும் அவர்கள் தங்கள் உடம்பில் கத்தியால் கீறிக் கொள்ளுதல், சாட்டையால் அடித்தல் போன்ற சுய துன்பமுறைகளைப் பயன்படுத்துகின்றனர் (முத்தையா,இ.,2017:283). வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேறு தொழில்கள் எவற்றையும் மேற்கொள்ள முடியாத அவர்கள் இனக்குழுமத்துடன் தொடர்புடைய சாட்டையடித்தலை பொதுமக்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற முறையில் மாற்றியமைக்கும் செயற்பாடாக அது அமைகின்றது. உடற் காயங்கள், உடல் வாதை என்பன பொருளீட்டத்திற்கான தந்திரோபாயங்களாகப் கையாளப்படுகின்றன.

நான்காம் உலகத்தினரின் கலைகளும் அவற்றின் அழகியல் பெறுமானங்களும் சென்ற நூற்றாண்டிலேயே ஆதிக்க சமூகத்தி னரால் அறியப்பட்டன / கவனத்திற்குரியதாகின. அதற்கு முன்னர் அச்சமூகத்தினரையும் அவர்களின் கலைவடிவங்களையும் அறிந்து கொள்ளும் ஆசை, ஆர்வம், ஆராய்ச்சித் தேவை கொண்டவர்களினால் சேகரிக்கப்பட்டும் தேடப்பட்டும் வந்தன. நான்காம் உலகத்தினரின் கலைச் செயற்பாட்டுகளை கண்டு அதிர்ச்சியுற்ற மேலைத்தேசக் கலை ஞர்களின் பாராட்டையே முதன்முதலில் இவை பெற்றன. நான்காம் உலகத்தினரின் கலைவடிவங்களை ஆதிக்க சமூகத்தினர் அவர்களின் உள்ளார்ந்த பழைமை வாதத்தையும் கைவிட்டு அவர்களுக்கிருந்த கண்டுபிடிப்பு உத்வேகத்தினால் எடுத்துக்கொண்டனர். மேலைத்தேச சமூகம் அவர்களின் தேவைக்காகப் பயன்படுத்திக்கொண்ட முதல் முயற்சியாக இதனைக் கொள்ளலாம். இது மேலைத்தேசத்தவர்களின் கலைச் செயற்பாடுகளுக்கு பல விடயங்களைக் கற்றுக் கொடுத் தது. அவர்களின் கலைச் செயற்பாட்டினை புதிய பாணியில் வளப் படுத்துவதற்கு வளஞ்சேர்க்கும் என அப்போது நம்பினர்.

ஆரம்பத்தில் நான்காம் உலகத்தினரின் கலைகளைச் சேகரிக்கும் ஆர்வம் அக்கலைப் பொருட்களின் பண்பாட்டு அம்சங்களில் கவனம் செலுத்தப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காலனித்துவ அரச அதிகாரிகள் இக்கலைப்பொருட்களின் உடமையாளர்களான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் உலக மக்களின் மேலான வெறுப்புணர்வையும் தாண்டி இவற்றில் இருக்கும் கலை அம்சம் மற்றும் கைப்பணித் திறன் என்பவற்றின் காரணமாக ஞாபகார்த்தச் சின்னங்களாகவும் நினைவுச் சின்னங்களாகவும் காலனித்துவ அரசில் பயன்படுத்தினர், ஏற்றுக் கொண்டனர். பரிசில்களாகவும் பிரமுகர்களுக்கு வழங்கினர். காலனித்துவ அதிகாரிகளால் இவ்வாறான கலைப்பொருட்களைத் தயாரிக்கும் நான்காம் உலகத்தினரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதபோது அவர்களின் தேவைக்காக நான்காம் உலகத்தினரின் கலைப்பொருட்கள் போன்று உருவாக்கி அவற்றை நினைவுச்சின்ன பொருட்கள் விற்பனைச் சந்தையின் தன்மைக்கேற்ப மாற்றங்களையும் மேற்கொண்டனர். இக்கட்டத்தில் நான்காம் உலகக் கலைகளின் போலி யாக்க செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. இந்தப் போலியாக்கல் செயற்பாடு பழங்குடியினரின் திறன்களை, கலைப்பொருட்களை பழங் குடியினரின் அனுமதி இல்லாமல் சூறையாடும் செயற்பாடாகவும் அமைந்திருந்தது. நான்காம் உலகத்தினரின் கலைகளுக்கு இருந்த முக்கியத்தவத்தைக் காட்டுவதாக இந்தச் செயற்பாடு அமைந்தாலும் நான்காம் உலகத்தினரின் கலைகள் ஆதிக்க சமூகத்தின் ஆதிக்கத்திற் குட்படும் செயற்பாட்டின் தொடக்கப்புள்ளியாகவும் அமைந்திருந்தது. ஆதிக்க சமூகத்தினர் பழங்குடியினரின் பண்பையும் பாணியையும் அவர்களின் தேவைக்கேற்றாற்போல் மாற்றியமைக்க முற்படுகின்றனர்.

நாகரிக சமூகங்கள் (Civilized Societies) தரநிர்ணயப்படுத்தப்பட்ட வெகுஜன உற்பத்தியான கைப்பணி பொருட்களின் (Artifacts) தனித் தன்மையில் தங்கியிருக்கும் நிலைமை ஏற்படுகின்றது. அதாவது அவற்றை விரும்பி நுகரும் நிலை உருவாகின்றது. கௌரவத்திற்காக இப்பொருட்களுடன் தொடர்புபடுத்தப்படும் நிலையும் உருவாகின்றது. இவை நினைவுச் சின்னப் பொருட்கள் அல்லது பெறுமதியான இறக்குமதிப் பொருட்கள் என மதிக்கப்பட்டன. ஏனெனில் இவை சர்வதேசப் பயணத்துடன் தொடர்புபடுத்தப்படும் சின்னங்கள், ஆய்வுப் பயணச் சின்னங்கள், பன்மைப் பண்பாட்டுச் சின்னம் என பல நிலைகளில் அவர்களால் முக்கியத்துவப்படுத்தி நோக்கப் பட்டன. இந்தப் பொருட்கள் இன்றைய பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை உலகில் நான்காம் உலகத்தைச் சேர்ந்த மக்களின் கைகளால் உருவாக்கப்பட்ட பழமையான நினைவுச் சின்னம் என்ற உயர்வையும் பிரமிப்பையும் ஏற்படுத்தின. இவற்றை வைத்திருப்பது, காட்சிப்படுத்துவதுகூட கௌரவமானதாகவும் பெருமிதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. காட்டுமிராண்டிகளாகவும் நாகரிகமற்றவர்களாகவும் கொள்ளப்பட்டு புறக்கணிக்கப்பட நான்காம் உலகத்தினரால் உருவாக்கப்படும் கலைகள் மதிக்கப்படும் நிலையினை இங்கு காண்கின்றோம். இது போன்றே பழங்குடியினரின் வைத்தியம், ஏனை அபார தொழில்நுட்ப விடயங்களும் உள்வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தேவையானவற்றை மேல்நிலைப்படுத்தி தேவையற்றவற்றை கீழ்நிலைப்படுத்தும் ஆதிக்க சக்தியின் செயற்பாட்டுகளுடன் தொடர்பு டையதாக இவை அமைந்திருந்தன.

மானிடவியல் நோக்கு

ஒருங்கிணைப்பு, வேறுபாடு என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கம் போன்றவை. சமூகக் குழுக்களுக்கு இடையேயும் குழுக்களுக் குள்ளும் ஒற்றுமையை ஏற்படுத்தும் செயற்பாட்டில் இவை இரண்டும் அவசியமானவை. இவை பெரிய நிறுவனங்களாக ஒன்றிணைவதற்கு அடிப்படையானவை. சமூகக் குழுக்களின் தொகுதி பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அதாவது சாதிகள், வகுப்புக்கள், பழங்குடியினர், அடையாளக் குழுக்கள் என பலவகைப்படும். இவையாவும் சமகால உலகில் மேற்கிளம்பிய போக்குகள். இக்குழுக்களின் கலைகள் "நாகரிக முதிர்ச்சியற்ற கலைகள்", "கிராமியக் கலைகள்" என அழைக்கப்படுகின்றன. இந்த சமூகங்கள் இன்றைய சிக்கல்கள் நிறைந்த சமூக அமைப்புக்களில் கீழ்ப்படுத்தப்பட்ட சமூகக் குழுக்களாக / வகுப்பினராக நீண்ட காலமாக ஆதிக்க சமூகத்தினரால் நோக்கப்படுகின்றன / கீழ்ப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

"நாகரிகமற்ற சமூகம்", "கிராமிய சமூகம்" என்னும் சொற்கள் 19ஆம் நூற்றாண்டில் இவர்களை ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியரால் இவர்களை வேறுபடுத்தி அடையாளப்படுத்துவதற்காகவும் அவர்களின் திருப்திக்காகவும் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டவை. இப்பாகுபாடு எந்தவிதமான நோக்கமும் இன்றி உருவாக்கப்பட்டது என்பது இப்பாகுபாடு தொடர்பான சமகால விபரிப்புக்களில் இருந்து அறிந்துகொள்ளலாம். இது நான்காம் உலக கலைஞர்கள் மற்றும் அவர்களால் உருவாக்கப்படும் கலை தொடர்பான நிலையில் பாதகமான மற்றும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

கலை என்பதற்கான ஐரோப்பியரின் முத்திரைகூட உயர் நாகரிகப் பண்பாட்டில் கலை மற்றும் கைவினையின் பிரதிபலிப்புத் தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1644

வினாக்களை எழுப்புகின்றது. இது முக்கியமானதொன்றாக படைப் பாக்கம், அசல், சிறப்புத் தேர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வேறுபாடுகளுடன் தொடர்புடைய வினாக்களை ஐரோப்பியர்களிடம் ஏற்படுத்துகின்றது. ஜே.மாகுவேட் (J.Maquet) அழகியல் படைப்புக்கள் இரண்டு அடிப்படைகளைக் கொண்டிருக்கலாம் என குறிப்பிடுவார். அவை

1. கலை இலக்கை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படுவது. இந்த இலக்கானது கலையை உருவாக்குபவரின் நோக்கங்களில் ஒன்றாக அமையும் அல்லது அழகியலின் அடிப்படையான நிலையிடமாகக் கொள்ளப்படும்.

2. கலையானது உருத்திரிபானது அல்லது கலைஞனின் படைப் பாக்கச் செயல்தொடரின் விளைவு.

ஜே.மாகுவேட்ன் கருத்தின்படி கலையைப் படைப்பவர் அவரின் கருத்துருவில் உள்ள கலையை சிலவேளைகளில் கலைப் படைப்பாக்கச் செயற்தொடரின் முடிவிலேயே உணர்கின்றார். சிறப்பு நிகழ்வான கலை ஒரு உருத்திரிபு என்பது நிகழ்கின்றது (Morphy, Howard, 2006:413). அப்போது ஒரு சமூகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இன்னொரு சமூகத்திற்கு கலை என்னும் முத்திரையுடன் கைமாற்றப்படுகின்றது. இக்கலையானது கலை உருவாகிய சமூகத்தைச் சாராத வெளித்தரப்பினரால் நுகரப்படும் போது அது விசேட தொடர்பினை அக்கலையை உருவாக்கும் நான்காம் உலக பிரதிநிதிகளுக்கும் மேற்கத்திய சுற்றுலாப் பயணிகள் மற்றும் கலையினை நுகர்வோருக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்துகின்றது.

19ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நான்காம் உலகத்தினரின் கலைகளை நாகரிக முதிர்ச்சியற்ற கலை, கிராமியக் கலை என அழைப்பதற்கு முன்னர் (முற்காலத்தில்) இக்கலைப்படைப்புக்களைப் படைக்கும் சமூகத்தினர் தன்னாட்சி அதிகாரம் கொண்ட மக்கள் குழுக்களாக விளங்கினர். இவர்களின் சந்ததியினர் தன்னாட்சியதிகாரம் கொண்டவர்களாகவும் அதேநேரத்தில் அவர்களை ஆதிக்கம் செலுத்திய சமூகத்தின் கல்வியைப் பெறாதவர்களாகவும், ஆதிக்க சமூகத்தின் நோக்கு நிலையில் எழுத்தறிவு இல்லாதவர்களாகவும் விளங்கினர். அந்நாட்களில் நான்காம் உலகத்தினரின் கலைகள் ஆதிக்க சமூகத்தின் பாதிப்புக்கு உட்படாதவையாகவும் விளங்கின.

Arasady Public Library
Municipal Council

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: Acc No

அவர்களின் தேவைகளுக்காக சுதந்திரமாக அவர்களால் படைக்கப்பட்டன.

நான்காம் உலகத்தினர் கலையுருவாக்கம் தொடர்பான நிலையில் இரு தளங்களில் செயற்படுகின்றனர் என்பது ஜே.மாகுவேட் அவர்களின் கருத்தின் மூலம் வெளிப்படுகின்றது. ஒரு நிலையில் அவர்கள் வாழும் சமூகத்திற்காக / அவர்களின் தேவைக்காக கலையைப் படைப்பது. மற்றையது வெளிச் சமூகத்திற்காகக் கலையைப் படைப்பது. இரண்டாவது வகைப்பாடான கலைப்படைப்புகளை உருவாக்குவதற்கு பழங்குடியினர் நான்காம் உலகத்தினர் என்னும் வகைப்பாட்டைப் பெற்றதன் பின்னரே தயாராகின்றனர். இந்த இரு தளங்களிலும் கலையை நுகரும் சமூகம் வேறுபடுவதுடன் கலையைப் படைக்கும் நான்காம் உலகத்தினரின் மனநிலையும் வேறுபட்டதாக அமைகின்றது. வாழ்வியல் தேவைக்காக கலை படைக்கும்போது கலைஞனின் ஆத்மாத்த வெளிப்பாடாக கலை அமைகின்றது. பிற சமூகங்களுக்காக கலை படைக்கும்போது பொருளாதார நோக்கம் மேற்கிளம்புகின்றது. இங்கு கலையை நுகர்வோரை கவரக்கூடிய விதத்தில் எவ்வாறு படைக்க முடியும் என்பது பற்றியே கலைஞன் சிந்திக்கின்றான். கலைஞனின் கலைத் திறனும் கலைத் தராதரங்களும் இப்பின்புலத்திலேலே வெளிப்படுத்தப்படுகின்றது. சிறந்த கலைப்படைப்பு என்பது கலைஞனின் இலக்குச் சமூகத்தைக் கவர்வதாகவே கருதப்படுகின்றது. இங்கு படைப்பாக்கச் செயல் தொடரில் பின்பற்றப்படும் நுட்பங்கள் கலைஞனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றமடைகின்றது. இவை ஜே.மாகு வேட்டின் கருத்தில் இருந்து வெளிப்படுகின்றன.

கீழைத்தேசப் பாரம்பரியத்தில் கிராமியக் கலை என்னும் சொல்லாடல் எழுத்தறிவு மட்டத்தில் மேல்நிலையிலுள்ள சமூகத்தினர் சமூக அடுக்கில் கீழ்நிலையில் உள்ளவர்களின் கலை, கைப்பணியை அடையாளப்படுத்துவதற்கான முத்திரையாகக் கையாளப்பட்டது. கிராமிய பாரம்பரியம் என்னும் சொல்லாடல் தேசிய பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு கையாளப்பட்டது. தேசமானது நிலப்பிரபுத்துவம் என்னும் பிரிகோட்டை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்படுகின்றது. இப்பிரிப்பில் அதிகமான மக்கள் ஆதிக்க சமூகத்தின் கல்வியைப் பெறாதவர்களாவும் எழுத்தறிவு இல்லாதவர்களாகவும் விளங்குகின்றனர். கிராமியக் கலை வடிவம் என்னும் சொற்பிரயோகம் தற்காலத்தில் உள்ளூர் பாரம்பரியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பதற்கு கையாளப்படுகின்றது. சமகாலத்தில் கைகளால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளை குறிப்பதற்கு கிராமியக் கலைகள் என்னும் பிரயோகம் கையாளப்படுகின்றது. இந்த மரபு ஐரோப்பிய கலைப்பாரம்பரியம் மற்றும் பிரபல்யமான கலைப்பாரம்பரியங்கள் போன்று உத்தியோகபூர்வமாக ஸ்தாபனப்படுத்தப்படாதவையாக விளங்குகின்றது. ஆரம்பகாலங்களில் இக்கலைவடிவங்கள் யாவும் வெளிச் சமூகத்தினரின் ரசனைக்காக, நுகர்வுக்காக உருவாக்கப் படாது குறித்த சமூகங்களின் புசிப்புக்காக, தேவைக்காக உருவாக்கப் பட்டிருந்தன.

**நான்காம் உலகக் கலைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான பின்புலம்**

நான்காம் உலகத்தினரின் கலைவடிவங்கள் அவற்றை உருவாக்கும் மக்களுக்கு ஒரு அர்த்தப்பாட்டை வழங்குவன. சமூகத் தேவையின் வெளிப்பாடு. இவை உள்ளூர்ப் பாவனையை (குறித்த சமூகக் குழுக்களின் தேவைக்காக) நோக்கமாகக் கொண்டே உருவாக்கப் படுகின்றன. வெளிக்கலைஞர்களின் நுகர்வுக்கு வழங்கும் நோக்கத்தை கொண்டிராத இவை வியாபார நோக்கத்திற்காக வெளியிடங்களில் காட்சிப்படுத்தல் போன்ற நோக்கங்களை கொண்டிருப்பதும் இல்லை. இவை பாரம்பரியமாக உருவாக்கப்பட்டுக் கொண்டு வரும் முறையில் இருந்து இன்று ஓரளவு மாற்றத்தைப் பெற்றுள்ளன. இருந்தும் பாரம்பரிய தன்மைகளை இழக்காமல் தொடரப்பட வேண்டும் என்னும் நோக்கும் மேலோங்கி காணப்படுகின்றது.

புதிய வாழ்வியல் சூழலில் நான்காம் உலக மக்களின் வாழ்வு பாரிய மாற்றங்களைப் பெற்று கொண்டுவருகிறது. அவர்கள் கலையை படைத்து அதனை நுகர்ந்த சமூகச் சூழலை இழந்து விட்டனர். பாரம்பரிய சூழலில் கலைகளைப் படைப்பதற்கான தேவையும் நான்காம் உலக மக்களுக்கு இல்லாமல் போயுள்ளது. இருந்தும் பாரம்பரிய சூழலில் கலை வாழ்வின் ஒரு பகுதியாக அமைந்து விளங்க, சமகாலத்தில் வாழ்க்கைப் போராட்டத்தில் நான்காம் உலகத்தினருக்கான வருமான ஈட்ட மூலங்களில் பிரதானமானதொன்றாக கலைகள் செயற்படுகின்றன. புதிய வாழ்க்கைச் சூழலுக்குள் பிரவேசித்த பழங்குடியினர் பாரம்பரிய வாழ்க்கைமுறையில் கடைப்பிடித்த வாழ்க்கை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க முடியாமல் போவதால் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்வது நான்காம் உலகப் பிரதிநிதிகளான பழங்குடியினருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சவாலான விடயமாகவே அமைகின்றது. அவர்கள் வாழும் சூழலில் அவர்களால் மேற்கொள்ளக் கூடிய சில தொழில்களை மேற்கொண்டோரும் அவை வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக அமைவதில்லை. இக்கட்டத்திலேயே வாழ்வியலின் ஒரு கூறான கலையை வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்வதற்கான கருவியாகப் பயன்படுத்துகின்றனர். இதனாலேயே பாரம்பரிய சமூக நியமங்கள் யாவற்றையும் கைவிட்டு பொருளாதார ஈட்டம் என்னும் ஒரு நோக்கை கலை உற்பத்தியில் பிரதானப்படுத்துகின்றனர். வாழ்வியல் அடையாளங்களை வாழ்வாதாரத்திற்காகப் பயன்படுத்தும் செயற்பாடாக இது அமைகின்றது. கலையைப் பயன்படுத்தியது போன்று பாரம்பரிய உணவு, வைத்தியம், பழகு பொருட்கள் என்பவற்றையும் விற்பனைப் பண்டங்களாக மாற்றும் செயற்பாடு உலகு தழுவியதாக வாழும் பழங்குடிச் சமூகங்களில் நாம் அவதானிக்கக் கூடிய விடயமாக அமைகின்றது.

பழங்குடியினருக்கு அறிமுகமாகியுள்ள புதிய படைப்பாக்க மூலப்பொருட்கள் புதிய பண்பாட்டின் தாக்கம் என்னும் இரண்டும் நான்காம் உலகத்தினரின் கலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் இரு பெரியளவிலான அம்சங்களாக விளங்குகின்றன. வாழ்வியல் மாற்றத்தை பண்பாட்டு மாற்றம் ஏற்படுத்த புதிய மூலப் பொருட்களினதும் தொழில்நுட்பத்தினதும் அறிமுகம் படைப்பை புதிய முறையில் மேற்கொள்ளத் தூண்டுகின்றது. இதன்படி புதுமையானதும் சில பொதுவானதுமான விடயங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவை நான்காம் உலகக் மக்களின் கலைகளை எவ்விதம் பாதித்தன, அவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமாக உள்ளன என்பது பற்றி அடுத்து நோக்குவோம்.

### புதிய மூலப் பொருட்கள் மற்றும் நுட்பங்களை உள்வாங்கல்

சமூகங்கள் ஏனைய சமூகங்களுடன் தொடர்புகொள்ளும்போது இறுதியில் உற்பத்திக்கான மூலப்பொருட்கள், நாளாந்த பயன்பாட்டுப் பொருட்கள், சிந்தனைகள் ஆகியனவற்றை ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திற்கு பரிமாறிக்கொள்ளும் நிலை இயல்பாகவே ஏற்படுகின்றது. இரண்டு சமூகங்கள் தொடர்ச்சியாக நீண்டகாலம் தொடர்பில் இருக்குமாயின் அவை வேறுபட்ட பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டிருக்கும்போது பண்பாடு, மற்றும் உற்பத்திக்கான மூலப்பொருட்களில் குறைவான வளர்ச்சியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள சமூகங்கள் பெரியளவான மாற்றங்களை பெறுகின்றன. மக்கள் அத்தியாவசிய செயற்பாடுகளை இலகுவாகக் கொண்டு நடத்துவதற்குரிய வழிகளைத் தேடுதல் மக்களின் பொதுவான இயல்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. இதனை சகல மக்கள் குழுக்களிடமும் காணலாம். அதற்கான சிந்தனைகளை விருத்திசெய்து கொள்வர் (Nelson H. H. Graburn, 1976: 10-11).

இந்த விடயம் நான்காம் உலகத்தினரின் சமூக, கலைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றத்துடனும் தொடர்புடையதாக விளங்கியது. கலை, கைப்பணிப் பொருட்களை உருவாக்குவதற்கான பாரம்பரிய நுட்பங்களையும் அதற்கு பயன்படுத்தும் பாரம்பரிய மூலப்பொருட்களையும் நான்காம் உலக மக்கள் பாரம்பரியமாகக் கொண்டுள்ளனர். அவர்களின் கலையாக்கத்திற்கான கருவிகளும் கைத்திறனை மேம்படுத்துவதற்கேற்ற விதத்தில் வாழும் சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களில் இருந்து வருவிக்கப் பட்டனவாக விளங்கின. புதிய சமூகத் தொடர்பாடல்கள் புதிய கருவிகள், மூலப் பொருட்கள், நுட்பங்களை அறிமுகப்படுத்தியதால் அவற்றை உள்வாங்குவதற்கும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கலை வாழ்வியல் தேவைக்காக அன்றி பொருளாதார தேவைக்கான / வாழ்வாதாரத்திற்கான ஒன்றாக முன்னெடுக்கப்படுகின்றது. அப்போது பாரம்பரிய தரம், ஆத்மதிருப்தி, அழகியல் நோக்கு என்னும் விடயங்களை கருத்திற் கொள்ளாது விற்பனைச் சந்தையில் மனோபாவத்தற்கேற்ப கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்ளல் என்னும் நோக்கும் மேலோங்கிக் காணப்படுகின்றது.

இது அவர்களின் கலைப்படைப்புக்களின் தனித்தவத்தைச் குறைப்பதாக அமைந்தாலும் இம்மாற்றங்களை புதிய வாழ்க்கைச் சூழலில் அவர்களால் தவிர்கமுடியாதுள்ளது. இது பாரம்பரிய கலைப் படைப்புக்களின் தரத்தை குறைக்கும் செயற்பாடாக அமைந்தாலும் வியாபார நோக்கத்துடன் பொருட்களை உற்பத்தி செய்யும் பழங்குடியினருக்கு அவை ஒரு பிரச்சினையான விடயமாகவும் அமைவதில்லை. வாழ்வியல் தேவைக்காக உற்பத்தி செய்யும் போது குறைந்தளவான பொருட்களையே உற்பத்தி செய்தனர். விற்பனை மனோபாவத்துடன் உற்பத்தி செய்யும்போது விற்பனைச் சந்தையின் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியை மேற்கொண்டதால் கூடுதலானளவு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. இதனால் இறக்குமதி செய்யப்படும் உற்பத்திக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக் கருவிகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை பழங்குடியினருக்கு இருந்தது.

சமகாலத்தில் பாரம்பரிய முறைப்படி இயற்கையாக அமைந்துள்ள காடுகளில் இருந்தோ அல்லது அவர்களின் குடியிருப்புச் சூழலில் இருந்தோ மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்கள் உள்ளன. இயற்கை மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத விதத்தில் அரசின் கட்டுப்பாடுகள் காணப்படுவதுடன் பல இயற்கை அமைவிடங்கள் அரசால் பொருளாதார உற்பத்தி மையங்களாக மாற்றப்பட்டும் உள்ளன. இக்காரணங்களால் மூலப்பொருட்களை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைப்பாடு உருவாகியுள்ளது.

பெரியளவான மரச்செதுக்கு வேலைகளைச் செய்யும் மவோரி (Maori) மற்றும் வடமேற்குக் கடற்கரையில் வாழும் செவ்விந்தியர்கள் அவர்கள் கலை, கைப்பணிப் பொருட்களைப் உருவாக்குவதற்குப் பயன்படுத்தும் கல்லாலான கூரான ஆயுதங்களுக்குப் பதிலாக சமகாலத்தில் உலோகக் கத்திகளைப் பயன்படுத்துவதற்கு பழக்கப் படுத்திக் கொண்டனர். அவர்களின் சடங்குக் கட்டடம், நினைவுச் சின்னங்கள் என்பவற்றை 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் இருந்து உருவாக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். சடங்கிற்காக பெரிய மரத்திலிருந்து மேற்கொள்ளும் மரச் செதுக்கு அலங்காரங்களை, நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும்போது இலகு வாகச் செய்யக்கூடியதாக இருந்ததை உணர்ந்தனர். சமகாலத்தில் இவர்கள் புதிய வகைமாதிரியான கத்திகள், நவீன திறன்கொண்ட ஆயுதங்கள், நீண்ட காலப் பாவனைக்குரிய வர்ணங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி அவர்களின் கலையாக் நுட்பத்தைப் புதிப்பித்துள்ளதனால் அவர்களின் மரச்செதுக்குக் கலை, சடங்குக் கட்டடக்கலை ஆகியன மலர்ச்சியடைந்தது. அப்போது அவர்ளின் சடங்கு இல்லம், நினைவுச் சின்னப் பொருட்கள் ஆகியன புதுப்பொலிவுடன் வெளிவந்ததை உணர்ந்தனர் (படம் 1).

வெளிநாடுகளில் இருந்துவரும் மூலப்பொருட்கள் உபகரணங்கள் இக்கலைஞர்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த மூலப் பொருட்கள் உபகரணங்களின் இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. இறக்குமதி செய்யப்படும் மணி, முள்ளம்பன்றியின் இறகுகள் போன்ற மூலப்பொருட்களை ஒன்றாக இணைத்து தயார் படுத்தி கலைப்பொருட்களை வடிவமைக்கும் செயற்றொடரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கவனத்தையும் செலுத்தி பெரியளவான தயாரிப்பாக அவற்றைச் செய்துமுடிப்பதில் கலைஞர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இறக்குமதி செய்யப்படும் கலையாக்க மூலப் பொருட்களைப் பயன்படுத்தி கலைப்பொருட்களை வடிவமைப்பதில் அவர்கள் பாரம்பரியமாக கையாண்ட நுட்பங்களை கையாளமுடியாத நிலைமையை உணர்ந்து கொள்கின்றனர்.

அத்துடன் பழங்குடியினரின் பொருட்களைவிட நீண்டகாலப் பாவனையுடையனவாக உலோகங்களும் கலைப்பொருட்களும் ஒன்றாக இணைத்து சமகாலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. இவை கலை, கைப்பணி செயற்பாட்டில் சில நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தாலும் சமூக உறவுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. அதாவது பாரம்பரிய சமூகத்தில் மூலப்பொருட்களை விநியோகிப்பவருக்கும் கலைஞனுக்குமான உறவு பாதிக்கப்படுகின்றது. அத்துடன் பாரம்பரிய சமூகத்தில் இருக்கும் கலைஞரின் மூலப்பொருள் விநியோகமாகிய தொழிலும் பாதிக்கப்படுகின்றது. சங்கிலித் தொடராக பாரம்பரிய கலைஞர்களிடையே இருந்த உற்பத்தி உறவும் வருமான ஈட்டமும் பாதிக்கப்படுகின்றது. அதாவது பாரம்பரிய பொருளாதார அமைப்பு சிதைக்கப்படுகின்றது. இயற்கையாக அவர்களிடம் உள்ள வளங்கள் பயன்படுத்தப்பட முடியாமல் போகின்றது. இது பாரம்பரிய சமூகத்தில் நிலைகுலைவை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் பாரம்பரிய சமூக ஒழுங்கமைப்பு சீர்குலைக்கப்படுவதும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அடுத்து இங்கு இனங்காணப்படும் முக்கிய பிரச்சினை பாரம்பரிய கலையும் கைப்பணி மரபும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுடன் நேரடியாகப் போட்டியிடவேண்டியுள்ள நிலைமையாகும். இறக்குமதிப் பொருட்கள் குறைந்த விலையுடையனவாகவும் விற்பனை அங்கிகாரம் பெற்றனவாகவும் விளங்குவதுடன் அவர்களின் சந்தைப்படுத்தல் நுட்பமும் நேர்த்தியாக உள்ளதால் பாரம்பரிய கலைஞர்களால் அவர்களுடன் போட்டியிட்டு வெற்றிகொள்ளமுடியாத நிலையே உருவாகின்றது. இதனால் அவர்களைப் போன்ற போலியுற்பதியில் ஈடுபட பாரம்பரிய கலைஞர்களும் முயற்சிக்கின்றனர்.

மொத்தத்தில் புதிய மூலப்பொருட்களின் நுழைவால் புதிய வடிவங்கள் தோன்றின. எக்சிமோக்கள் இப்போது அணியும் மயிர் நிறைந்த தோல்களால் உருவான மேல்ச்சட்டையானது அவர்களால் பாரம்பரியமாக அணியும் ஆடைகளில் இருந்து விலகியதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. ஏனெனில் கம்பளியால் உருவான தடிப்பான மயிர் ஆடை, கிறேன்பல் (Grenfull) ஆடைகள் ஆகியன ஏற்றுமதி செய்யப் படுவதனால் இவர்கள் சாதகமான நிலைமைகளையும் பாதகமான நிலைமைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

**பண்பாட்டு கலப்பும் மாற்றமும்**

கலையுற்பத்திக்கான மூலப்பொருட்கள், தொழில்நுட்பம் ஆகிய வற்றால் வரும் மாற்றங்கள் மற்றும் ரசனையில் ஏற்படும் மாற்றம் என்பனவற்றை விடவும் பண்பாட்டு மாற்றமானது கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துமொன்றாகும். நான்காம் உலக மக்களுக்கு வெளிநாட்டு மக்களுடனான தொடர்புகள், அவர்களின் தாய் மொழியல்லாத அவர்கள் வாழும் பிரதேசத்தில் மேல்நிலையில் விளங்கும் மொழி மூலமான கல்வி, தாய்மொழிக்கு மேலதிகமாக திணிக்கப்பட்ட குறித்த மொழி மூலம் ஏற்படுத்தப்பட்ட எழுத்தறிவுத் திறன் விருத்தி, பிரயாண அனுபவம், நவீன ஊடகங்கள் ஆகியன பெரியளவான அனுபவத்தை வழங்குவதுடன் சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. பாரம்பரிய வரையறைக்குட்பட்ட வாழ்க்கை முறையினை மீறி புதிய வாழ்க்கைச் சூழலுக்குள் நுழைவதற்குத் தயாராகின்றனர்.

புதிய சிந்தனைகள், வாழ்வியல் சூழல் ஆகியன புதிய கலைகளைக் கட்டமைத்ததுடன் இதன் முடிவாக பாரம்பரியங்களின் அழிவுக்கும் வழியேற்படுத்தியது. மிஷநெறிகளும் அரசாங்கமும் உலகில் காணப்பட்ட பல நான்காம் உலக மக்களின் கலை மரபுகளை அழித்தன. இது தொடர்பாக என்னுடைய “கலை, பண்பாடு, கலப்பாக்கம்” என்னும் கட்டுரையில் விரிவாகப் பேசி யுள்ளேன் (2017:56-77). அதாவது எந்தவிதமான கட்டுபாடுகளும் இன்றி சுதந்திரமாகச் செயற்பட்ட அவர்களுக்குப் பலமாக இருந்த சிந்தனைகள், வாழ்வியல் நியமங்கள் அழிக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக வடமேற்குக் கரையோர கனேடிய மற்றும் அமெரிக்க செவ்விந்தியர்களினால் பரிசுப் பொருட்களை வழங்கி சடங்காக நடத்தப்படும் விருந்து (Potlatch) தடை செய்யப்பட்டது. அவர்களின் சடங்குடன் தொடர்புடையதாக அமைக்கப்பட்ட குலக்குறி அடையாளமான துருவங்களை (Poles) நீண்ட உயரம் கொண்டனவாக அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டது (படம் 02).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் புதிதாக உருவாக்கப்பட்ட துருவங்கள் கௌரவம், ஆக்கிரமிப்பு, வணிக நோக்கு என்பனவற்றை கொண்டதாகவே அமைந்திருந்தது. சடங்குடன் இணைந்ததாக தொடரப்பட்ட கௌரவம், பாரம்பரிய மரபுகளின் அச்சாணியான சடங்குகள், கலைமரபு ஆகியன அழிக்கப்பட்டன. குலக்குறி அடையாளமான துருவங்கள் இன்றுவரை நடப்பட்டுக் கொண்டிருந்தாலும் அதன் அதிர்வெண், ஆடம்பரம், அர்த்தம் ஆகியவற்றை இழந்ததாகவே காணப்பட்டது. இலங்கையில் வாழும் பழங்குடி சமூகத்தினரான வேடர்களிடமும் சடங்குச் செயற்பாட்டின்போது நீண்ட உயரம் கொண்ட இனத்துவ அடையாளத்தின் சின்னமான ஒரு மரத்தை நடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இது செவ்விந்தியர்களினால் நடப்படும் துருவம் போன்று அலங்காரக் கூறுகளைக் கொண்டிருக்கவில்லை (படம் 03).

பிறமதங்களை அவற்றின் சின்னங்கள் இல்லாமல் செய்யும் நோக்கில் செவ்விந்தியர்களினால் நடத்தப்படும் சடங்குச் தடை செய்யப்பட்டதுடன் காலனித்தவ மதமான கிறிஸ்தவத்திற்கு பழங் குடியினரை மதமாற்றமும் செய்தனர். காலங்காலமாக பூர்வகுடி களால் மேற்கொள்ளப்பட்டு வந்த சடங்குகள் சட்டவிரோதமான மதச் செயற்பாடாகக் கருதி ஆயிரத்திற்கும் அதிகமான சடங்குப் பொருட்களை வலுகட்டாயமாக பழங்குடிமக்களிடம் இருந்து எடுத்து அருங்காட்சியகங்களுக்கும் அருப்பொருட்களைச் சேகரிக்கும் தனியாட்களிடமும் ஒப்படைக்கும் நோக்கில் தென்னமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவிற்கும் எடுத்துச் சென்றனர். இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களுள் அவர்களின் குலமரபுத் துருவங்களும் உள்ளடங்கும் (file:///E:/Works%20for%202020/Recent%20 Article/ Forth%20World%20Photos/ Totem% 20Poles. html). குறித்த சடங்கின் முக்கிய அடையாளமாகத் திகழும் துருவங்கள் என்ன நோக்கத்திற்காக அம்மக்களால் நடப்பட்டதோ அந்நோக்கங்களை இழந்து ஒரு காட்சிப் பொருளாக மாத்திரம் இன்று நடப்படுகின்றன. ஏனெனில் குறித்த சடங்கு அச்சமூகத்தில் பெற்றிருந்த பண்பாட்டு முக்கியத்துவத்தை இழந்ததே இதற்கான காரணமாகும். பூர்விக குடிகளல்லாத குடியேறியவர்களின் நோக்கில் இந்தத் துருவங்கள் புறமதம் சார்ந்தாகக் கருதப்பட்டது.

அனைத்து மக்களும் அவர்களின் தனிப்பட்ட அடையாளத்தைப் பிரதிபலிக்கின்ற பொருட்களை அவர்களைச் சூழ கொண்டுள்ளனர். இது சமூக வகுப்பில் அவர்களது அடையாளத்தையும் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிக்கும். இந்தப் பிரதிபலிக்கும் பொருட்கள் குறியீடுகளால் வெளிப்படுத்தப்படுகின்றன. குறியீடுகளாக கட்புல, வாய்மொழி மற்றும் செழிப்புலக் குறியீடுகள் ஆகியவை மக்களின் வாழ்வுடன் தொடர்புடைய ஏதாவது ஒன்றுக்கான வெளிப்படுத்தலாகக் காணப்படு கின்றன. அவை தன்னிச்சையானவை. ஏனெனில் அந்தக் குறிப்பிட்ட குறியீடு அல்லது சொல்லுக்கு அது இணைந்து காணப்படும் பொருளுடன் எதுவிதமான சம்பந்தமும் காணப்படாது. எனினும் குறியீடுகள் எம்மால் சிலவற்றை இனங்காணக்கூடிய வழக்கமான பொருட்களில் காணப்படும். அவற்றின் ஒரே வரையறையானது அதன் பார்வையாளர்கள் அல்லது அதனுடன் தொடர்புடையவர்கள் அந்தக் குறியீட்டினுடைய மொழியினைப் பேசுவதன் ஊடாகவே அதனுடைய விளக்கத்தினை தெரிவிப்பதற்கு இணங்கிக் கொள்ளமுடியும். சடங்கு விருந்து அதனுடன் இணைந்ததாக நடப்படும் துருவம் என்பன செவ்விந்தியர்களின் பண்பாட்டுடன் இணைந்த பல அடையாளங்களைத் தாங்கிய வடிவமாக அமைந்திருந்தது. அது முக்கியத்தவத்தை இழக்கும்போது அதனூடாகத் தொடரப்பட்ட பல சமூக அடையாளங்கள் வலுவற்றதாகியது. ஒரு குலமரபுத் துருவம் (Totem Pole) குறியீட்டுரீதியான மனித உருவம், மிருகம், இயற்கை கடந்த வடிவங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கும். குலமரபுத் துருவம் அடிப்படையில் குலக்குழும உறவு, குடும்ப முகடுகளின் சித்திரிப்பு, குழு அங்கத்துவம் என்பவற்றின் குறியீடாக அமைகின்றது. உதாரணமாக (Kwakwaka'wakw) குடும்பத்தினர் அவர்களின் குடும்ப ஐதீகத்தை அவர்களின் குலமரபுத் துருவத்தில் பதிவு செய்வர். காலங்காலமாக இத்துருவத்தின் ஊடாக இந்த ஐதீகம் பரிமாறப்படும். துருவங்கள் அவர்களிடம் இருந்து அன்னியப்படுத்தப்படும் போது துருவத்துடன் இணைந்ததாக பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த குடும்ப ஐதீகத்துடன் இணைந்த வரலாறு இழக்கப்படுகின்றது.

சமயம், மொழி, உணவு, சமூக பழக்கம் ஆகிய சமூக அடை யாளங்களை அல்லது பண்பாட்டினைத் தொடர்ந்து முன்னெடுக்கும் சாதனங்களில் மிகவும் முக்கியமானவை. இவற்றின் சிதைவு ஒரு சமூகத்தின் பண்பாட்டு சிதைவுக்கும் அதன் தொடர்ச்சியாக அதன் இனத்துவ அடையாளத்தை அழித்தொழிப்பதற்கும் பெரும் பங்காற்றும். நான்காம் உலக மக்களின் முன் திணிக்கப்பட்ட புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 01



படம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 03



படம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 05



படம் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 07



படம் 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் சூழல் இதனை நிரூபணப்படுத்தியது. இதற்கமைய ஆபிரிக்க முகமூடிகள், புதிய ஜினி (Guinea)[3] மக்களின் இனத்துவ அடையாளத்தை வெளிப்படுத்தும் துருவங்கள் (Biche Poles), நீண்ட வீடுகள் என்பன வெளிச் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் எரித்து இல்லாமல் செய்யப்பட்டன. இவற்றில் மிஞ்சியிருந்த சில புதிய சமய வழிபாட்டை மேற்கொள்ளும் சமயக் குழுக்களான இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்திற்கு மாறிய ஆபிரிக்க மெலனீசியர்களினால் எரித்து அழிக்கப்பட்டன. உண்மையில் பாரம்பரிய கலை மரபின் செயற்பாடுகள் பாரம்பரிய சமயத்துடன் தொடர்புடையதாகவே நீடித்தது. பாரம்பரிய சமயம் எப்போது மர்ணித்ததோ அது செயற் பாட்டுக் கலைகளின் மறைவுக்கும் காரணமாக அமைந்திருந்தது. உலக சமயத்திற்கு எந்த ஒப்பீட்டு வெளிப்பாட்டையும் மாற்றீடு செய்ய முடியாது, அவை வளர்ச்சியடைந்துவரும் மதச்சார்பின்மைக்குச் சார்பாகக் காணப்படலாம். மந்திர மற்றும் ஆன்மீகத்தில் இருந்து மங்கிய பொருள்முதல்வாத வாழ்வு மற்றும் தனிநபர் திருத்தியை மையப்படுத்தியதாகக் காணப்படலாம்.

கல்வி, அரசியல் அதிகாரம் மற்றும் பொருள்முதல்வாத நோக்குநிலை என்பன நான்காம் உலக மக்களை பெருந்திரளான வெளிறிய போலித் தோற்றங்களைக் கொண்ட பெரிய சமூகங்களின் பக்கம் திசை திருப்பின. அதில் அவர்கள் மூழ்கினர். இப்பின்புலத்தில் பாரம்பரிய கலை, கைப்பணி மரபுகளின் நிலைபேறு பின்வரும் விடயங்களில் தங்கியிருந்தது.

1. பொருட்களுக்கு தொடர்ந்து நீடித்துக்கொண்டிருந்த தேவை.
2. பதனிடப்படாத பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை.
3. காலத்திற்கேற்ப வேலை மற்றும் பற்றாக்குறையை கொண்ட போட்டித்தன்மையான கவர்ச்சி
4. அறிவுடன் கூடிய திறன் மற்றும் கலையின் அழகியல் தரம்.
5. நட்புக் குழு உறுப்பினர்களில் இருந்து கிடைக்கும் வெகுமதியும் கௌரவமும்

3. அவுஸ்ரேலியாக் கண்டத்திலிருந்து உருவான ஆழமற்ற நீர்ப்பரப்பைக் கொண்டதொரு பெரியதீவாக இது விளங்குகின்றது. ஆபிரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நம்பிக்கை முறைகள் சடங்கிற்கான ஆதரவில் பொருட்களுக்கான இடம் மற்றும் பரிசு பரிமாற்றப்படும் முறைமைகள்.

கலைச் செயற்பாட்டை இன்று தொடர்வதற்கான அடிப்படையான காரணங்களாக இவற்றைக் குறிப்பிடலாம்.

பாரம்பரியமாக கடைப்பிடித்து வந்த பல பண்பாட்டு மரபுகளை கைவிட்டு புதிய பண்பாட்டு மரபுகளுக்கு நான்காம் உலக மக்கள் பரிச்சயப்படுத்திக் கொள்கின்றனர். வாழ்வின் அடிப்படையான விடயமாக இருந்த சமயம், அது தொடர்பான நம்பிக்கைகள் என்பன படிப்படியாகக் கைவிடப்படுகின்றன. கல்வியின் மேலான ஆர்வம் இனத்துவ அடையாளத்தினைத் தாங்கிய மொழியை கைவிடவேண்டிய நிலைமைக்கு தள்ளி விடுகின்றது. பழங்குடியினர் பெரும்பாலும் இருமொழியாளர்களாக (bilimguals) உள்ளனர். பேச்சுவழக்கில் உள்ள தாய் மொழியுடன் அவர்கள் வாழும் மாநிலத்தின் மொழியையும் பேசுகின்றனர். இந்த இருமொழிநிலையானது அவர்களுடைய தாய்மொழியை இழப்பதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது (பக்தவத்சலபாரதி,2017:09).

புதிய பண்பாட்டுச் சூழலில் வாழும் அவர்கள் கலைகளின் மேல் விருப்பம் கொண்டவர்களாக பழமையான நம்பிக்கைகளுடன் அவற்றை உருவாக்குவதில்லை. அவ்வாறு ஈடுபாட்டுடன் செயற்படு வதற்கான வாய்ப்பு தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தாலும் இல்லாமல்போகின்றது. மக்கள் அக்கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இருந்து விலகி அல்லது ஓய்வெடுத்து தற்காலத்தில் அவர்களின் நாளாந்த வாழ்விற்கான வருவாயைப் பெற்றுக் கொள்ளக்கூடிய, வாழும் சமூகத்தில் மேற்கொள்ளக்கூடிய தொழில்களை மேற்கொள்வதற்கும் தயாராகின்றனர். பாரம்பரிய தொழில், கலைச் செயற்பாடு என்பன அவர்களின் சமூக அடையாளத்தை வெளிப்படுத்தியது. இங்கு பாரம்பரிய அடையாளங்களுக்குப் பதிலாக பொது அடையாளங்களே பேணப்படுகின்றன. அவர்கள் வாழும் சூழலில் அவை அவசியமானவை என்பதையும் உணர்ந்தனர். ஏனெனில் பாரம்பரிய அடையாளங்கள் புதிய வாழ்க்கைச் சூழலில் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு தடையாக அமைகின்றது என அவர்கள் கருதுகின்றனர். இதனால் தொழிலைக் கைவிட்டது போன்று உணவுப் பழக்கம், பண்பாட்டு அடை, பூர்வீக மொழி என்பவற்றையும் மறைக்க முற்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் உலக மக்களின் மாற்றத்தை எதிர்நோக்கிய கலைகள் எல்லாம் அழிந்துவிடவில்லை. புதிய மூலப்பொருட்களின் தாக்கம், தொழில்நுட்பம், எண்ணக்கருக்கள் என்பன ஒரே வழியில் தொடர்கின்றன. அதிகளவான பிரயோகக் கலைகள் புதுப்பித்த நிலையில் எப்போதும் மாற்றமடைந்துகொண்டு வருகின்றன. புதிய எண்ணக்கருக்களையும் நிகழ்வுகளையும் உருவாக்குவதனாலும் சேர்த்துக்கொள்வதனாலும் இது சாத்தியமாகின்றது. நியூசிலாந்தில் அமைந்துள்ள கிழக்குப் பொலினீயாவைச் சேர்ந்த மவோரி (Maori) பழங்குடிகள் 19ஆம் நூற்றாண்டிற்குரிய அந்தஸ்தின் அடையாளமான ஒரு தொகுதி ஐரோப்பிய ஆடைகளை இறக்குமதி செய்யப்பட்ட கருத்துக்களில் இருந்து பெற்று ரவிக்கைகளுடன் கைப்பைகளையும் (Bandoliers) உருவாக்கினர். நீண்ட அங்கியான இது ஒரு வகை பாரம்பரிய ஆடையாகும். இது போன்று குணா இந்தியர்கள் கெனடியின் அரசியல் கட்சிகள், விண்கலன்கள் என்பவற்றை அவர்களின் மோலாஸ் (Molas) துணியலங்காரத்தில் சித்திரித்தனர். இதுதவிர நிக்சன் (Nixon) மற்றும் அவர்களின் இடதுசாரிகளை நான்காம் உலகத்தினரின் லுட்ரக் (Ludrak) என்னும் நாடகத்தின் மூலம் கொண்டுவருகின்றனர். இவ்வாறு நவீன உள்ளடக்கம், நுட்பம் என்பவற்றை சமகாலத் தேவைக்கேற்ப உள்வாங்கி அவர்களின் கலை, கைப்பணி மரபைப் பொதுமைப்படுத்தும் நோக்குடன் நான்காம் உலகத்தினர் செயற்பட்டனர்.

ஏனைய சமூக உறுப்பினர்களில் இருந்து அவர்களை தனித்து அடையாளப்படுத்தும் இனத்துவ அடையாளங்களைக் கைவிட்டு பொது அடையாளங்களைத் தாங்கிக் கொள்ளும் நோக்கு அவர்கள் கலைகளில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களில் எதிரொலித்தது. இவ்வடிப்படையில் "நடனத்தை சடங்கில் விரும்பினாலும் முகமூடி களை அணிவதைத் தவிர்ப்பதனால் எல்லோரும் சமமானவர்கள் என்னும் நிலையுருவாகும் அல்லது ஏனைய மக்களுக்கு சமமானவர் என்னும் நிலை உருவாகும் எனக் கருதினர். அப்போது சமூதாயப் படிநிலை வேறுபாடுகள், குலவழி மரபு என்பனவற்றை வெளிப்படுத்தும் பழக்கவழக்கங்கள், அவர்களுக்கே சொந்தமான உபகரணங்கள் என்பனவற்றை வெளிப்படுத்தத் தேவையில்லை என்னும் நோக்குடையவர்களாக செயற்பட்டனர்" (Morphy, Howard, 2006:420-421). இங்கு முகமூடியை நடனத்தில் இருந்து பிரித்தெடுத்தவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சடங்கு நடனம் இனத்துவ நடனத்திற்குரிய தன்மைகளை இழந்து பொதுமைப்படுத்தப்படுகின்றது.

நான்காம் உலகத்தினர் தம் அடையாளங்களை மறைத்தாலும் முழுமையாகக் கைவிடுவதற்கும் விரும்பவில்லை. ஆனால் பாரம்பரிய மரபு அங்கு வாழ்ந்த அவர்களின் மூதாதையர்களை பழைய வாழ்க்கையை சுட்டிக் காட்டுவதாகவும் நினைவுபடுத்துவதாகவும் அமைகின்றது. சமகாலத்தில் எக்சிமோக்கள் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர். சிலுவைகளையும் பலிபீடங்களையும் அவர்களின் புனிதக் கலையடையாளங்களாக சமகாலத்தில் உருவாக்கியிருக்க வேண்டும். இருந்தும் பாரம்பரியமாக உருவாக்கிவந்த அழகான யானைத்தந்தப் பற்களையே உருவாக்குகின்றனர். இதுபோன்றே நவாஜோ (Navajo) சமூகத்தினர் பாரம்பரிய துணிகளை உள்ளூர்த் தேவைகளுக்காக அதாவது வாழ்வியல் தேவைகளுக்காக உருவாக்குகின்றனர். இருந்தும் அவை இறக்குமதி செய்யப்பட்ட பிரகாசமான இறந்த பூச்சிகளில் இருந்து எடுக்கப்பட்ட செஞ்சாயப் பொருள், நீலவர்ணக் கலவையான இன்டிக்கோ வர்ணச் சாயம் (Indigo dyes) ஆகியவற்றை இணைத்து உருவாக்குகின்றனர். இறக்குமதியாளர்கள் அவர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வர்ணங்களை பயன்படுத்த கற்றுக்கொடுத்து இறக்குமதி செய்யப்படும் வர்ணப்பொருட்களைப் பயன்படுத்தத் தூண்டுவதால் உள்ளூர் தயாரிப்புக்களான இயற்கைச் சாயங்கள் பயன்பாடற்று முடங்கிப் போகின்றது. அத்துடன் பாரம்பரிய கைத்திறனுடன் தொடர்புடைய பாரம்பரிய அறிவு தலைமுறைகள் தாண்டும்போது அழிவடைகின்றது.

இலங்கையில் சாயவேர் அகழ்ந்தெடுப்பதும் சாயங்காச்சுவதும் அதனை துணிகளுக்குப் போடுவதும் பிரபல்யானமானதொன்றாக ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. சாயவேரை தண்ணீரில் ஊறவிடுதல், நன்றாக ஊறியதும் வேரை வேறாக்கி சாயநீரை பாத்திரத்தில் ஊற்றிச் காச்சுதல், அது குழம்பாகியதும் பாத்திரத்தை ஆறவிட்டு வெயிலில் பல நாட்கள் வைத்து காயவைத்து கட்டியாக்குதல், பின்னர் அதனைச் சதுரமான கட்டியாக வெட்டிப் பக்குவப்படுத்தல் என வர்ணச் சாயம் தயாரிக்கும் நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தது. இவர்களால் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய வர்ணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன (பத்மநாதன்,சி.,*2011:150*). இன்றுவரை உள்ளூர் நெசவு உற்பத்தியும் சாயம் போடுதலும் இலங்கையில் பூர்வகாலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் சாயத்தையும் நெசவு செய்வதற்கான நூலினையும் இறக்குமதி செய்கின்றனர். செயற்கைச் சாயங்களின் பயன்பாடு இயற்கைச் சாயம் தயாரிப்பது தொடர்பான பாரம்பரிய அறிவையும் அதனுடன் தொடர்புடைய வளங்களையும் புதிய தலைமுறையினர் அறிய முடியாமல் அழிந்து போனதையும் இவ்வித்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

ஐரோப்பிய சமூகம் பொதுவாக நான்காம் உலக மக்களின் கலை, அறிவியல் மற்றும் ஏனைய விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஊக்கமும் வெகுமதியும் அளிக்கின்றனர். இயற்கையான நிகழ்வுகள் போன்று நாட்டார் மற்றும் நாகரிக மற்ற தன்மையினை இவர்கள் பிரயோகிக்கும்போது அவை ஐதீகமாகக் கட்டியெழுப்பப்படுகின்றன. லீவஸ் ஸ்ரெஸ்ட் (Lévi Satrauss) என்பவர் இயற்கையினை இந்த மக்களின் எல்லைப்படுத்தப்பட்ட அனுபவத்திற்கு எதிராகத் திட்டமிட இனங்காட்டிக் கொடுத்தார். ஆகவே உலகத்தின் தலைவர்கள் சக்தியற்ற மற்றும் கவர்ச்சியானவற்றை இயற்கை எனவும் அவை அவர்களின் பண்பாட்டை வலியுறுத்துவதாகவும் கருதினர்.

### புதிய கலை வடிவங்களின் உருவாக்கம்

நான்காம் உலகத்தினரின் தேவைகளும் வழக்குகளும் புதிய வாழ் வியல் சூழலில் மாற்றமடைந்ததுடன், சில கைவிடப்பட்டு, சில புதிய மரபுகள் உள்நுழைகின்றன. இவை அவர்களின் கலைச் செயற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இதனால் சில புதிய கலைவடிவங்கள் தோற்றம் பெற்றன. அவ்வடிப்படையில் நான்காம் உலகத்தினரின் கலைகளை இரண்டு பெரும் வரையறைக்குட்படுத்தி நோக்கமுடியும். அவை,

1. சமூகத்திற்கான உள்ளார்ந்த இயக்காற்றல் திறன்கொண்ட கலைகள் : இந்தக் கலைகள் அச்சமூகத்தினரின் வாழ்வியல் செயற்பாட்டுடன் இணைந்த வாழ்வியல் செயற்பாட்டிற்குத் தேவையான பல்வேறு பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும். இவை அம்மக்களின் ரசனைக்காகவும் பாவனைக்காகவும் உருவாக்கப்படும். இவை இனத்துவ அடையாளம், சமூகக் கட்ட மைப்பு என்பவற்றைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. அத்துடன் சமூகக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனையை / அறிவுரையை வழங்குகின்ற முக்கிய பெறுமான மாகவும் விளங்குகின்றன.

2. இரண்டாவது வகைப்பாட்டிற்குரியவை நான்காம் உலகத்தினரால் வெளி உலகத்தினருக்காகப் படைக்கப்படுகின்றன. இவ்வாறு படைக்கப்படும் கலைகள் கலைத்தராதரமற்றவை என வல்லுநர் களினால் இழிவாகக் கருதப்படுபவையாகும். இவை சுற்றுலா அல்லது விமானநிலையக் கலைகள் (Airport Art) எனவும் அழைக்கப்படுகின்றன. நான்காம் உலகத்தினரின் இனத்துவ உருவங்களான இவை நான்காம் உலகத்தினைச் சாராத வெளியுலகத்தினருக்கு முக்கியத்துவமுடையதாகக் கொள்ளப் படுகின்றன. (Nelson H. H. Graburn, 1976: 4-5).

நான்காம் உலகத்தினர் மாற்றங்களை அடைந்த பின்னர் முதலாவது வகைப்பாட்டில் குறிப்பிட்ட கலைவடிவங்கள் பாரம்பரிய சமூகத்தில் பெற்ற முக்கியத்துவத்தைப் பெறவில்லை. பழங்குடியினரின் வாழ்விடங்களின் அபகரிப்பு, வாழ்வியல் ஒழுங்கின் சீர்குலைப்பு பண்பாட்டு ஊடாட்டம் அல்லது பண்பாட்டுக் கலப்பு, அறிவியல் தொழில்நுட்பத்தின் அறிமுகம் ஆகியன பாரம்பரிய வாழ்வை தொடரமுடியாத நெருக்கடியான நிலைமைகளை ஏற்படுத்துகின்றது. வாழ்வியல் பிரச்சினைகள், கலையை வாழ்வாதாரத்திற்கான சாதனமாக பயன்படுத்தத் தூண்டுகின்றது. பாரம்பரிய கலைச் செயற்பாடு மாற்றங்களைக் கண்டது போல் பல புதிய கலை வடிவங்களையும் அறிமுகப்படுத்துகின்றனர். அடுத்து நான்காம் உலகத்தினரால் வடிவமைக்கப்பட்ட புதிய கலைவடிவங்கள் பற்றி நோக்குவோம்.

### அ. செயற்பாட்டு நுண்கலைகள்

நிலைத்திருக்கும் பாரம்பரிய கலைவடிவங்கள் நுட்பரீதியாகவும் வடிவ ரீதியாகவும் சில மாற்றங்களைப் பெற்று ஒன்றிணைக்கப்படுகின்றன. அல்லது ஐரோப்பாவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சில உருவங்கள் குறியீடுகளுடன் ஒன்றிணைக்கப்படுகின்றன. இதுவரை இந்த மாற்றங்கள் குறியீட்டுரீதியான அர்த்தத்தின் மாற்றீட்டில் பெரியளவில் பாதிப்பினை ஏற்படுத்தாமலும் பண்பாட்டுரீதியாக குறிப்பிடும்படியான திருப்தியினை வழங்குவதாகவும் உள்ளன. இதனை பாரம்பரிய கலைகளின் செயற்பாடு மற்றும் தொடர்பாடல் செல்வாக்கு என அழைக்கலாம். இதற்கான உதாரணமாக லகரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Lagara) வில் தயாரிக்கப்படும் வீட்டுப்பானைக்கான சில மட்பாண்டப் பொருட்கள் மற்றும் யிர்க்கலா (Yirrkala) வில் உள்ள அர்ன்ஹென் (Arnhen Land) இல் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய செதுக்கு வகையான வார் ஓவியம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். சிறுபான்மைச் சமூகங்களினால் பேணிப் பாதுகாக்கப்படுபவையான இவற்றை இப்போது அரச ஆதரவுடன் உலோக ஆயுதங்கள் நவீன வர்ணங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழக அறிவுறுத்தலுடன் உருவாக்குகின்றனர். இருந்தும் பாரம்பரிய முறைமைகளில் இருந்து மாற்றங்களை மேற்கொள்ளாமல் தொடர்வதற்கு முயற்சிக்கின்றனர்.

**ஆ. வணிகக் கலைகள்**

நான்காம் உலகத்தினர் வணிக நோக்கில் பல கலைவடிவங்களை உற்பத்தி செயகின்றனர். வணிக நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் இவை பாரம்பரிய கலையின் போலியாக்கங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றின் உற்பத்தியின் அடிப்படை விற்பனை மனோபாவத்தை அடிப்படையாகக் கொண்டது. இவற்றில் பண்பாட்டுப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்ட அழகியல் அம்சங்கள் மீறப்படுவதுடன் பாரம்பரிய நோக்கத்திற்காக உற்பத்தி செய்யும்போது பேணப்படும் தரமும் பேணப்படுவதில்லை. பாரம்பரிய கலைகள் வணிகக் கலையின் எல்லைக்கு அவற்றின் உண்மையான சமூக, பண்பாட்டுச் செயற்பாட்டை அறியாமலேயே கொண்டுவரப்படு கின்றன. வணிக நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் கலைப் பொருட்கள் பாரம்பரிய பொருளின் தரத்திலிருந்து மாறுபட்ட தரத்தை உடையனவாகவும் பாரம்பரிய பொருள் கொண்டுள்ள அர்த்தம், தரம் என்பவற்றை இவை கொண்டிருப்பதும் இல்லை. புதிய அயர்லாந்தைச் சேர்ந்த மக்களின் அஸ்மன் விச் துருவங்கள் (Asman Biche Poles) அல்லது மலன்கள் (Malanggan) அவற்றின் சடங்குப் பாவனை முடிவடைந்தவுடன் கைவிடப்படும் அல்லது அழிக்கப்படுதல் பொது நடைமுறையாக உள்ளது (படம் 04 ரூ 5).

இக்கலைப் பொருள் அம்மக்களின் சமய மெய்யியல் கருத்துக் களை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாகக் கொள்ளப்படுகின்றது. இறந்த வர்களைக் கௌரவிப்பதாகவும் நீக்குவதுமான அர்த்தத்தைக் கொண்ட இது குழுவினை அடையாளப்படுத்துவதாகவும் நிலத்தின் உரிமை தொடர்பான கலந்துரையாடல்களின்போதும் பயன்படுத்தப்பட்டு வந்தது (https://smarthistory.org/malangan/).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்போது மானிடவியலாளர்களுக்கும் பாரம்பரிய பொருட்களைச் சேகரிப்பவர்களுக்கும் அவற்றை விற்பனை செய்கின்றனர். இப்பொருட்களின் மேல் வெளிச் சமுகத்தினர் ஆர்வம் காட்டியது, சடங்கு தேவைக்காக பயன்படுத்தப்பட்ட அப்பொருட்களின் பொருளாதார முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டனர். இதனால் சடங்கு முடிந்தவுடன் கைவிடப்படும் பயன்பாடற்ற பொருளாக விளங்கிய பொருட்களை இன்று மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் விற்பனைப் பொருட்களாக மாற்றியுள்ளனர். நான்காம் உலகத்தின,ின் பாரம்பரிய பண்பாட்டு அடையாளம் அவர்களின் வாழ்க்கையை முன்னெடுப்பதற்குரிய பொருளாதார ஈட்ட மூலங்களாக மாற்றியமைத்ததற்கான ஒரு சிறந்த உதாரணமாக மலன்கன் (Malanggan) உருவங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் வாழும் வேடர்கள் அவர்களின் சடங்குத் தேவைக் காக மரத்தால் வடிவமைத்து வர்ணங்கள் தீட்டி அலங்கரித்து உருவாக்கப்படும் "கடுவ", "படம் எடுத்தாடும் தோற்றத்தைக் கொண்ட நாகம்" (படம் 06) ஆகியவற்றை மேலே காட்டிய உதாரணங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கமுடியும். சடங்குத் தேவைக்காக வேடர்கள் இப்பொருட்களை உருவாக்குவதனால் தேவை முடிந்தவுடன் அவற்றைக் கைவிடுகின்றனர். இவற்றின் மேல் ஆதிக்க சமூகத்தின் பார்வை விளாததால் இவற்றின் கலைத்துவ முக்கியத்துவத்தை வேடர்கள் உணரவில்லை. இதனால் இவற்றை பொருளாதார நோக்கத்துடன் உருவாக்கும் நோக்கமற்றவர்களாக உள்ளனர்.

இதனை விட மகியங்கனையில் அமைக்கப்பட்டுள்ள வேடர் களின் கலாசார நிலையத்தில் வேடர்களின் உற்பத்திகளாக பல பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்கின்றனர். இங்கு கருங்காலி மரத்தினால் உருவாக்கப்பட்ட அழகுப் பொருளாகப் பயன்படுத்தப்படும் கத்தி, கோடலி போன்ற பொருட்கள், யானைத் தந்தத்தில் உருவாக்கப்பட்ட மோதிரங்கள், காட்டு மணிகளால் உருவாக்கப்பட்ட மாலை எனப் பல பொருட்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இங்கு உருவாக்கப்படும் பல பொருட்கள் அங்கு செல்லும் உல்லாசப் பயணிகளையும் வேடிக்கை மனோபாவத்துடன் செல்பவர்களையும் கவரும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன (படம் 07).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. நினைவுச் சின்னங்கள்

வருமான நோக்கம் அல்லது அழகியல் தரத்தை மீறிய வறுமையை வெற்றி கொள்வதற்கான பொருளாதாரப் போட்டி மற்றும் கலைஞனின் மகிழ்ச்சியைவிட நுகர்வோரைத் திருத்திப்படுத்தும் நோக்கம் என்பன முக்கியம்பெறும் தன்மை நினைவுச் சின்னப் பொருட்களின் உருவாக்கத்தில் பிரதானம் பெறுகின்றது. இக்கலை சுற்றுலாக் கலை, விமானநிலையக் கலை (Airport Art) எனவும் அழைக்கப்படும். இக்கலைவடிவங்களில் பல பாரம்பரிய நான்காம் உலகத்தினரால் உற்பத்தி செய்யப்படாமல் வர்த்தக குழுக்களால் அல்லது நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் போக்கும் இன்று நிலவுகின்றது. இருந்தும் பாரம்பரிய கலையுருவாக்கப் பண்பாட்டுப் பின்புலத்தைக் கொண்ட குழுக்களுக்கு இடையே சிறியளவான உறவுகள் காணப்படும். இந்த உறவு விற்பனை விளம்பரத்திற்கு அவசியமானதாக விளங்குகின்றது. புதுமையானதாக விளங்கும் இக்கலைவகைப்பாடு குறிப்பிட்ட திகதி, பதிவுகளைக் (எந்த நான்காம் உலக சமூகத்தினரால் உற்பத்தி செய்யப்பட்டது போன்ற பதிவுகள்) கொண்டனவாக விளங்கும். இவ்வகையான கலைகள் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அறிவுக்கு இயைபான உற்பத்தி, இலகுபடுத்தப்பட்ட தன்மை கொண்ட இவை வர்த்தக, மற்றும் சமகாலக் கலைகளுக்கு இழிவான பெயரை பெற்றுக் கொடுப்பனவாகவும் விளங்குகின்றன. இவற்றின் குறியீட்டுரீதியான உள்ளடக்கம் குறைக்கப்பட்டதுடன் இவற்றைக் கொள்வனவு செய்பவர்களின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் விதத்தில் வடிவமைப்பதில் முழுக் கவனம் செலுத்தப்படுகின்றது. கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த மக்களால் மரத்தினால் செதுக்கி உருவாக்கப்படும் நினைவுச் சின்னப் பொருட்களை இவற்றிக்கான சிறந்த உதாரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடலாம்(Akamba wood carving). நினைவுச் சின்னப் பொருட்களின் உற்பத்தியானது கைத்தொழில் உற்பத்தியாக மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டவர்களுக்கும், உல்லாசப் பயணிகளுக்கும் விற்பனை செய்யும் நோக்குடன் அதிகளவான மரச்செதுக்கு நினைவுச் சின்னங்கள் இவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மனித மற்றும் மிருகங்களின் உருத் தாங்கிய கைபிடியைக் கொண்ட கரண்டிகள், பெண்களின் ஆடைத் தோற்றத்தை வெளிப்படுத்தும் பொருட்கள், மிருகங்களின் உருவங்கள் போன்றன செதுக்கி உருவாக்கப்படுகின்றன (https://www.youtube.com/ watch?v= lQrjEDNwQUU).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈ. இணைப்பாக்கக் கலை

சமகாலக் கலைகளில் சில பாரம்பரிய கலைகள், ஐரோப்பியக் கலைகள் என்னும் இரண்டுக்கும் இடையே ஒரு தொடர்ச்சியைக் கொண்டனவாக விளங்குகின்றன. ஆதிக்க சமூகத்திற்கும் சிறுபான்மை மக்களுக்கும் இடையேயான பண்பாட்டுத் தொடர்புகள் புதிய கலைவடிவம், சில புதிய கருத்துக்கள், மூலம் பொருட்கள், நுட்பங்கள் ஆகியவற்றை கைத்தொழில் சமூகத்தில் இருந்து பெற்று வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. சிறியளவான கலை உற்பத்தியாளர்களான நான்காம் உலகத்தினர் புதிய வழிகளில் அவர்களின் கலைச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்குப் பயன்படுத்தினர். இந்தக் கலைத் தொடர்பாடல் புதிய கூட்டிணைவை ஏற்படுத்தியது. கவர்ச்சிகரமான மோலா (Mola Blouses)[4] எனப்படும் ஆடைகளுடன் இணைந்த அலங்கார அணிவகைகள் பனாமாவைச் சேர்ந்த குனா இந்திய மக்களினால் உற்பத்தி செய்யப்பட்டன. இவை பிற்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட துணிகள், ஊசிகள் மற்றும் கத்தரிக்கோல் ஆகியவற்றை தனது ஆடைப் பொருட்கள் அலங்கார உற்பத்தியில் அறிமுகப்படுத்தினர். தென்மேற்குப் பிராந்தியத்தில் வசிக்கும் அமெரிக்கர்கள் நனஜோ (Nanajo) வேட்டையாடிகளுடன் பாரம்பரியமாக தொடர்புடையவர்களாக இருந்தமையால் அவர்கள் பப்லோ (Publo) இந்தியர்களிடம் இருந்து நெசவு நுட்பத்தினைக் கற்று காலனித்துவ ஸ்பானியர்கள் அவர்களுக்கான தனித்தன்மை வாய்ந்த நெசவுமுறையை உருவாக்கி அவர்களுக்கான ஆடைகள் மற்றும் குதிரைச் சவாரி புரிவதற்கான போர்வைகள் முதலியவற்றை உருவாக்கினார்கள். பிற்காலத்தில் இந்த ஆடைகள் வெள்ளை நிற அமெரிக்கர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. நனஜோ (Nanajo) பாரம்பரியத்திற்குரிய இந்தக் கலைவடிவம் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தொகுப்பான புதிய வடிவமாகவும் உயர் பெறுமானம் மிக்க வணிகக் கலையாகவும் வளர்ச்சியடைந்தது.

---

4. இச்சொல்லாடலால் கைகளால் உற்பத்தி செய்யும் ஆடைகள் சுட்டப்படுகின்றன. இவை பாரம்பரிய கைப்பணியாளர்களான Panamaவில் வாழும் Guna பழங்குடியினரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றின் முழுமையான வடிவமைப்பு உடல்பகுதியை முழுமையாக மூடிமறைக்கும் பாவாடை (Saburet), சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தினாலான தலையை மறைக்கும் துணி (Musue), கை மற்றும் கால்களை அலங்கரிக்கும் மணிகள் (Wini), பொன் நிறத்தாலான மூக்குத்தி (Olasu), அதனுடன் காதணி என்பனவற்றைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில் நான்காம் உலகத்தினர்

நான்காம் உலகத்தினரின் கலை, பண்பாடு, வாழ்வியல் விடயங்களைப் பற்றிப் பேசும் இந்த ஆய்வில் இலங்கையில் காணப்படும் நான்காம் உலகத்தினரின் கலை, பண்பாடு புதிய வாழ்க்கைச் சூழலில் எவ்வாறான மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பது பற்றி நோக்குவது ஆய்வை பூரணப்படுத்துவதற்கு அவசியமானது எனக் கருதுகின்றேன்.

இலங்கையில் அடையாளப்படுத்தக்கூடிய முக்கிய நான்காம் உலகப் பிரதிநிதிகளாக வேடர்கள் விளங்குகின்றனர். உலகு தழுவியதாக நான்காம் உலகத்தினர் எதிர்கொள்ளும் அத்தனை சவால்களையும் வேடர்களும் எதிர்கொள்கின்றனர். வேடர்களின் வாழ்வியலுடன் தொடர்புடைய நிலங்கள் பெரியளவான நீர்பாசனத் திட்டங்களுக்காக கையகப்படுத்தப்படல், அரசாங்கத்தின் நிலத்தைப் பாதுகாப்பது தொடர்பான வரையறைகள், உள்நாட்டு யுத்தம் ஆகியவற்றால் வேடர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இவை வேடர்களின் தனித்துவமான பண்பாட்டில் சரிவு ஏற்படுத்திய அடிப்படையான காரணிகளாக அமைந்திருந்தன. 1977 – 1983 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் காலனித்துவ திட்டங்கள், மற்றும் 51468 ஹெக்டேயர் நிலம் நீர் மின் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டமை ஆகியவற்றால் வேடர்களின் வாழ்வாதாரத்திற்கான நிலங்கள் படிப்படியாக கவர்ந்து கொள்ளப்பட்டன. மதுரு ஓயா தேசிய பூங்கா உருவாக்கும் திட்டத்தின் மூலம் வேடர்களின் இறுதி வேட்டையாடும் நிலமும் சூறையாடப்பட்டது (https://en.wikipedia.org/wiki/Vedda).

வேடர்கள் இன்று சிங்கள, தமிழ் சமூகங்களுடன் இணைந்து வாழும் நிலை உருவாகியுள்ளது. சிறந்த வீதிப் போக்குவரத்து, மின்சார வசதி, தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் தொடர்பாடலில் ஏற்பட்ட இலகு தன்மை (தொலைக்காட்சி, வானொலி, கையடக்கத் தொலைபேசி) போன்றன அவர்கட்கு ஏனைய சமூகங்களுடனான தொடர்பை இலகுபடுத்தியன. வேடர்களின் சமூக, பண்பாட்டு, கலை அம்சங்களைப் பிரதிபலிப்பதாகவும் அவர்களின் வழி பாட்டு முறையாகவும் ஆண்டுக்கொரு தடவை அவர்களால் மேற்கொள்ளப்படும் சடங்கு வழிபாடு விளங்குகின்றது. புதிய வாழ்க்கைப் பின்புலத்தில் அதிகளவான வேடர்கள் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதங்களைத் தழுவிக் கொண்டனர். இம்மதமாற்றத்தால் வேடர்களினால் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு அதன் பலத்தை இழந்தது. சில பிரதேசங்களில் வாழ்ந்த வேடர்கள் முழுமையாக மாற்றங்களை உள்வாங்கியதால் சடங்கு வழிபாட்டினைக் கைவிட வேண்டிய நிலைமையும் உருவானது.

அவர்களின் பாரம்பரிய உணவுகளை (உதாரணம் தேன், இறைச்சி) கூடுதலான விலைக்கு விற்று நிறுவன உற்பத்திகளான பொதிசெய்யப்பட்ட நூடில்ஸ், பால்மா, ஏனைய உணவுப் பொருட்களை விரும்பி உண்பதில் ஆர்வம் காட்டினர். அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை கீழானது என்றும் நவீன வாழ்க்கை உயர்வானது என்றும் அவர்கள் முன் திணிக்கப்பட்ட ஆதிக்க சமூகத்தின் கருத்துக்கள் இவ்விடத்தில் தாக்கம் செலுத்தின. வேட சமூகத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினர்கள் "வேடர்" என்னும் அடையாளத்தை தொலைக்கும் நோக்கம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் ஏனைய சமூகத்தினருடனான கலப்புத் திருமணத்திலும் ஆர்வம் காட்டினர். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டம், இலவசக் கல்வி, இலவச வைத்தியம், ஏனைய மானியப் பொருட்களும் சலுகைகளும் பாரம்பரிய உணவுப் பழக்கம், வைத்தியம், சமூக அடையாளத்தினை வெளிப்படுத்தும் கட்டடக்கலை என்பனவற்றினை இல்லாது செய்தன. வேடர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றான மகியங்கனையில் வாழும் வேடர்களின் பிரதிநிதி ஒருவர் "நாங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சம் சோறு சாப்பிடப் பழகிவிட்டோம்" எனக் கூறிய கருத்துக்கள் புதிய வாழ்வியல் சூழலுக்குள் வேடர்கள் இணைத்துக் கொண்டுள்ள தன்மையினை காட்டுவதற்கு போதுமான உதாரணமாக அமைகின்றது. இன்று சேனைப் பயிர்ச் செய்கை, மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இதே நிலையினை இலங்கையில் வாழும் குறவர்களிடமும் காணலாம். இன்று குறவர் சமூகத்தைச் சேர்ந்த அனேகமான உறுப்பினர்கள் கிறிஸ்தவர்களானதுடன் பாம்பாட்டுதல், பச்சை குத்துதல், குறி சொல்லுதல் போன்ற பாரம்பரிய தொழில்களையும் கைவிட்டுள்ளனர்.

புதிதாக தழுவிக் கொண்ட மதம், அவர்கள் வாழும் தேசிய இனங்களுடன் (சிங்கள, தமிழ்) தொடர்புடைய மொழி மூலமாக பெறப்பட்ட கல்வி ஆகியன இலங்கையில் வாழும் நான்காம் உலகத்தினரின் பண்பாட்டு மாற்றத்திற்கும் அதன் மூலம் அவர்களின் அடையாளம் இழக்கப்படுவதற்கும் காரணமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலாங்கொடையில் உற்பத்தி செய்யப்படும் முகமூடிகள், விற்பனை மனோபாவத்துடன் உருவாக்கப்படும் புத்த சிலைகள், மரத்தால் உருவாக்கப்படும் வேறுபட்ட வடிவமைப்பினைக் கொண்ட கைப்பணிப் பொருட்கள், அலங்காரத் திறன் கொண்ட கைத்தறி ஆடைவகைகள் போன்றன இலங்கை பற்றிய நினைவைத் தூண்டு வனவாக அமைகின்றன. இவை உல்லாசப் பயணிகள் மற்றும் உள்நாட்டு மக்களினால் வீடுகளை அலங்கரிக்கும் கலை, கைப்பணிப் பொருட்களாகவும், நினைவுச் சின்னங்களாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கென ஒரு தனித்துவமான விற்பனைச் சந்தையுள்ளதால் இவற்றை உற்பத்தி செய்வோர் விற்பனை மனோபாவத்துடன் உற்பத்தி செய்கின்றனர். இருந்தும் இவை பழங்குடியினரால் உருவாக்கப்பட்ட பழங்குடியினருக்குரிய கலை, கைப்பணிப் பொருட்கள் இல்லை.

இலங்கையில் வாழும் நான்காம் உலகத்தினரின் கலை, கைப்பணி பாரம்பரியத்தை அவர்களால் மேற்கொள்ளப்படும் சடங்குகளின் ஊடாகவே இனங்காணமுடியும். சடங்கின்போது அதனை நிகழ்த்தும் கப்புகன் மேற்கொள்ளப்படும் குருத்தோலை அலங்காரம், சடங்கு வாத்தியம், வேடபாசையில் இசைக்கப்படும் மந்திரம், சடங்குத் தேவைக்காக உருவாக்கப்படும் சடங்குப் பொருட்கள் போன்றவற்றில் இருந்தே இனங்காண வேண்டியுள்ளது. சடங்கு, சடங்குடன் தொடர்புடையதாக உருவாக்கப்படும் கலைப் பொருட்களும் அவர்களின் சமூகத் தொடர்பாடலுக்குரியதாகவே இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கண்டிய நடனம் இலங்கையைத் தரிசிக்கும் வெளிநாட்டவர்களுக்கு இலங்கையின் பாரம்பிய நடனத்தின் அடையாளமாகக் காட்டப்படு கின்றது. அது அவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் வலுவுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் காணப்படும் பழங்குடியினரின் கலைகள் ஏனைய சமூகங்களில் இரசனைக்குரியதாக அடையாளம் காணப்படவில்லை. இலங்கையில் வாழும் நான்காம் உலகத்தினர் எதிர்கொள்ளும் மாற்றங்களின் காரணமாக நாளுக்கு நாள் அவர்கள் பாரம்பரிய அடையாளங்கள் பலவற்றையும் இழந்து கொண்டு வருகின்றனர். இதனால் அவர்களின் வாழ்வியலுடன் தொடர்புடைய கலை, கைப்பணி மரபுகளும் அழிவடையும் நிலையே உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வாழும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த இளைய உறுப்பினர்கள் இம்மாற்றங்களை உள்வாங்குவதற்குத் தயாராகின்றனர். இயற்கையுடன் தொடர்புடைய வாழ்வு அவர்களின் எதிர்கால வாழ்வைச் செப்பனிடுவதற்குப் பொருத்தமற்றது என்னும் மனோபாவம் இன்றைய பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளிடம் தோன்றியுள்ளது. இந்த சிந்தனை மாற்றத்திற்கு அவர்களை சூழ வாழும் மக்களின் தொடர்புகள் முக்கிய காரணமாக அமைகின்றது. இதற்கமைவானதாக அரசு சட்ட வரையறைகள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பன ஆரம்ப காலம் போன்று வேடர்களால் பாரம்பரிய வாழ்வை வாழ்வதற்கு இடமளிக்கவில்லை.

*மாறிவரும் உலகில் நான்காம் உலகத்தினரின் இடம்*

நான்காம் உலக சமூகத்தினர் பல மாற்றங்களை பெற்றுள்ளபோதும் அவர்களின் இனத்தனித்துவத்தினைப் பாதுகாக்கும் அடிப்படையான அடையாளங்களை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர். தென் இந்தியாவில் காணப்படும் மலை வேடர் எனப்படும் சாதியினர் பற்களை ராவிக் கூராக்கிக் கொள்ளும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கான காரணம் பற்றி "இது நாங்கள் மலை வேடர் சாதி என்பதனை அடையாளம் காட்டிக் கொள்வதற்காகச் செய்யப்படுவது. இவ்வாறு வழக்கப்படி பற்களைக் கூர்மை செய்து கொள்ளவில்லையாயின் எங்கள் குலதெய்வம் சினம் கொள்ளும்" (எட்கர் தர்ஸ்டன், 2017:352) எனத் தெரிவிக்கின்றனர். இக்குறிப்பு அவர்களின் இனத்துவ அடையாளத்தைப் பாதுகாக்கும் அல்லது தாங்கிக் கொள்ளும் ஒரு செயற்பாடாக பற்களைக் கூராக்கிக் கொள்ளல் அமைந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

சிறிய சமூகக் குழுக்களாகக் காணப்படும் நான்காம் உலக மக்கள் அவர்களினுடைய அக அடையாளம் மற்றும் சமூக உபபிரிவுகளைக் குறியீடுகள் மற்றும் உபகரணங்களின் ஊடாக பாதுகாத்து வருகின்றனர். இதனை ஆடை அணிகலன்கள் மற்றும் சடங்குப் பொருட்கள் ஆகியவற்றின் ஊடாகவும் வெளிப்படுத்துகின்றனர். இவை ஏனைய குழுக்களில் காணப்படும் உறுப்பினர்களிடையே முறையான நடத்தையை பேணுவதற்குரிய வழிகாட்டியாகவும் அமைந்திருந்தது. எனினும் ஒரு குறியீட்டு முறைமையானது ஒரு குழுவின் அங்கத்துவம் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றை பரஸ்பரமாக இனங்காண்பதற்கான வேறுபாட்டினை வலுவூட்டுவதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளரீதியாகச் சுதந்திரமாகக் காணப்பட்ட மக்களின் புறரீதியான வேறுபாட்டுத் தன்மை மற்றும் அகரீதியான ஒழுங்கமைப்பு ஆகியன இதன் பின்னர் சிக்கலானதாக மாறியது. ஏனையவர்களுடன் தொடர்பாடல் மற்றும் சுற்றுலாத்துறையுடன் அவர்கள் தொடர்புபட்டமையால் வெளிச் சமூகத்தின் அவதானிப்பு நான்காம் உலகத்தினர் மேல் விழுந்ததுடன் அவர்களின் கலைப்பொருட்களும் உலகமெங்கும் ஊடுருவிக் காணப்பட்டது. வானொலி மற்றும் செயற்கைப் பூக்கள் மூன்றாம், நான்காம் உலக மக்களின் வீடுகளுக்குள் நுழைந்த அதே வழியில் நான்காம் உலத்தினரின் கலைப்பொருட்களும் நடுத்தர மக்களின் கைத்தொழில் உலகிற்குள் ஊடுருவியது. இவர்களின் வர்த்தகரீதியான கலைப்பொருட்களானது தூரப்பிரதேசங்களில் இருந்துவரும் மக்களுக்கு நினைவுப் பொருட்களாக காணப்பட்டன. இவை குறிப்பிட்ட சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பிட்ட சுற்றுலாவை மீட்டுப்பார்ப்பதற்கான உறுதிமிக்க நினைவுச் சின்னங்களாகவும் கொள்ளப்பட்டன.

இப்பொருட்களைக் கொள்வனவு செய்வோர் விருப்புடன் வரலாற்றுச் நினைவுச் சின்னமாக்கியது போன்று இந்த அசையக் கூடிய சின்னங்களை உருவாக்கிய நான்காம் உலகத்தினரும் இச் சின்னங்களின் ஊடாக அவர்களின் மதிப்பினை மீள் உறுதிப்படுத்திக் கொண்டனர். சிறிய சனத்தொகையைக் கொண்ட நான்காம் உலக மக்களினால் உருவாக்கப்படும் வர்த்தகரீதியான கலைப்பொருட்கள் வெளிச் சமூகத்தினருக்கு மாத்திரமே உருவாக்கப்படுகின்றன. ஆனால் இந்த உற்பத்திப் பொருட்களானது “நாம் வேறுபட்டோர், எம்மால் பெருமைப்படக்கூடிய விதத்தில் எதையும் உற்பத்தி செய்ய முடியும் எம்மிடம் தனித்துவம் காணப்படுகின்றது, எமது இருப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது” என்னும் செய்திகளை அவர்களிடம் சுமந்து செல்வதாக உணர்கின்றனர்.

விடயம் சார்ந்த மாதிரிகள் மற்றும் நினைவுச் சின்னச் சாதனங்கள் மற்றும் குறிப்பிட்ட குழுவினுடைய பெருமைகளைப் பிரதிபலிக்கும் கலைப்பொருட்கள் ஆகியன பண்பாட்டினுடைய பணி மற்றும் கவர்ச்சி ஆகியவற்றுக்கு உருவம் கொடுக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஏனைய கொள்வனவாளர்களும் இந்த சாதகமான பண்புகளையே எதிர்பார்க்கின்றனர்.

வறுமை மற்றும் விரக்திநிலை என்பன அவர்களின் பாரம்பரிய நம்பிக்கைகளுடன் தொடர்புபடாத கலைப்பொருட்களை உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் தாக்கம் செலுத்தும்போது அந்த உற்பத்திப் பொருட்கள் அவர்களின் முழுமையான கைப்பணித் திறனை பிரதிபலிப்பதில்லை. பாரம்பரிய உற்பத்திபோல் இந்த உற்பத்தியில் பெருமகிழ்சி அடைவதில்லை. இருந்தும் அவர்கள் இந்த உற்பத்தியை மேற் கொள்ளும்போது "எங்களின் வாழ்வாதாரத்திற்காக உற்பத்தி செய்கின்றோம், இது எங்களினுடைய பண்பாடு அல்லது எங்களினுடைய உற்பத்தியின் தரத்தைக் கொண்டதல்ல, நாங்கள் உங்களின் நுகர்வுக்காக குறைந்த கூலிக்கு இவற்றை உற்பத்தி செய்கின்றோம்" எனக் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் நான்காம் உலகத்திராகிய உற்பத்தியாளர்கள் இக்கட்டான நிலையில் எப்போதும் இருப்பதில்லை. புதிய பாணியிலான கலைத் தரத்தினை பேணுவதுடன் போட்டித் தன்மைக்கு ஈடுகொடுக்கக் கூடிய அவர்களினுடைய சிந்தனையால் புத்துருவாக்கம் செய்து கொள்கின்றனர். மாறிவரும் உலகினை எதிர்கொள்வதற்கான ஆற்றல் உடையவர்களாக விளங்குவதையிட்டு இவ்விடயத்தில் அவர்கள் பெருமை கொள்பவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் அவர்களால் பொருளாதாரரீதியாக தாங்கிக் கொள்ளக்கூடிய அளவிற்கும் விரைவாக விற்கக் கூடிய அளவிற்கும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், வெவ்வேறுபட்ட தரங்களில் உற்பத்தி செய்வதற்கும் உரிய திறனையும் கைத்திறனையும் கொண்டுள்ளனர்.

இன்னொரு நிலையில் நான்காம் உலகத்தினரின் கலைப் பொருட்களை சேகரித்து காட்சிப்படுத்தி அவற்றினை தேசிய அடையாளத்தின் குறியீடாக வெளிப்படுத்தும் நிலை உருவாகின்றது. இது நான்காம் உலகத்தினரின் இரவல் வாங்கப்பட்ட அடையாளமாக அமைந்து விடுகின்றது. "உலகம் முன்நோக்கிச் செல்லும்போது சமூகங்கள் அவர்களுக்கான நன்மதிப்பை அல்லது புறரீதியான பெறுமானத்தைத் தக்கவைத்துக் கொள்வதில்லை. அதேவேளை பழைய குறியீடுகளுடன் ஒப்பிடும்போது நவீன குறியீடுகள் மற்றும் பொருட்கள் கௌரவம் மிக்க புறத்தரப்பினரால் கொண்டுவரப்படும் போது அதற்கு உயர்ந்த கௌரவம் வழங்கப்படும். அடையாளத்திற்கான குறியீடுகள் சில வேளைகளில் இரவல் வாங்கப்பட்டதாகவோ அல்லது பரிமாறப்பட்டதாகவோ இருக்கலாம். குழுக்கள் அவர்களுடைய கௌரவத்தினை ஏனைய குழுக்களது பொருட்கள், குறியீடுகள் மற்றும் சின்னங்கள் என்பவற்றினை எடுப்பதன் ஊடாக அவர்களது அல்லது ஏனையோரின் கண்களுக்கு அவர்களின் குழுக்களின் கௌரவத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுபடுத்திக் காட்டுகின்றனர்" (Morphy, Howard, 2006:428). ஒரு பண்பாட்டினுடைய பொருட்களை இன்னொரு பண்பாடானது எடுத்துச் செல்லும்போது அவை பொதுமக்களிடையே இரவல் வாங்கும் குழுக்களின் அடையாளமாக மாற்றமடைகின்றது. இதற்கான உதாரணமாக நான்காம் உலகத்தினரின் கலைப் பொருட்கள் இரவல் வாங்கப்பட்டு தேசிய அடையாளமாக, பண்பாட்டுச் சின்னமாகக் காட்டப்படுவதைக் குறிப்பிடலாம்.

அனேகமான அன்பளிப்புப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களில் காணப்படும் இனம்சார்ந்த பொருட்கள் சிறுபான்மை மக்களது அடையாளத்தினை இரவல் வாங்கும் செயற்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. அவர்களின் இன அடையாளத்தை வெளிப்படுத்தும் பொருட்கள் வர்த்தக நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டு அவர்களின் பெயர்களைத் தாங்கியனவாக விற்பனை செய்யப்படுகின்றன. அவர்களிடம் இருந்து அவர்களின் உற்பத்தி திறன்கள் வர்த்தக நிறுவனங்களால் இரவல் வாங்கப்பட்டு நிறுவன உற்பத்திகளாக வடிவம் பெறுகின்றன. அதேநேரத்தில் அவர்களுடைய பண்பாட்டின் வெவ்வேறு நோக்குகளை அடக்குதலும் இடம்பெறுகின்றது. நாடுகள் தெளிவற்ற ஆனால் கவர்ச்சிமிக்க பண்பாட்டு விடயங்களை ஏனையோருக்கு இனம்சார் சந்தையின் ஊடாக விற்பனை செய்கின்றன. இவை நான்காம் உலகத்தினரின் கலை, ஏனைய பயன்பாட்டுப் பொருட்களுக்குரிய பண்பாட்டு நியமங்களை அவர்களில் இருந்து அன்னியப்பட்டுப் போகும் நிலையினையே பிரதிபலிக்கின்றது. இது பழங்குடியினர் நான்காம் உலகத்தினராக்கப்பட்டதன் பாதகமான விளைவுகளில் ஒன்று.

## முடிவுரை

உலகெங்கிலும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் உலக சனத்தொகையில் சிறுதொகையாக உள்ளதுபோல் வாழும் நாட்டிலும் சிறுபான்மை சமூகமாகவே வாழ்கின்றனர். ஆரம்பகால சமூகங்களில் பழங்குடியினர் எந்தவிதமான சமூக பிரச்சினைகளும் இன்றி இயல்பு வாழ்வினை மேற்கொண்டனர். காலனித்துவ ஆட்சி, அதன் பின்னரான பின்-காலனித்துவ நிலைமை என்பவற்றின்போது நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பழங்குடியினரையும் பாதித்தது. பழங்குடியினர் தனித்துவமான வாழ்க்கை நோக்கு ஏனைய சமூகப் பிரிவினரில் இருந்து வேறுபட்டவர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்களின் வாழ்க்கை நியமங்களுடன் இவர்களை இணைத்துக் கொள்ளமுடியாது விளங்கினர். இதனால் வேறுபட்ட சமூக அடையாளங்களைக் கொண்ட பிரிவாக இனங்காணப்பட்டனர். இது நான்காம் உலகத்தினராக இவர்களைப் பாகுபடுத்த வழியேற்படுத்தியது.

பாரம்பரிய வாழ்வினையும் வாழ முடியாத ஆனால் புதிதாக வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வினை மேற்கொள்வதற்கு தயாரற்ற நிலைமை ஏற்படுகின்றது. புதிய வாழ்க்கைச் சூழலில் பழங்குடியினர் வாழ்வை முன்னெடுப்பதற்கான பொருளாதார ஈட்ட மூலமாக அவர்களின் கலை, பண்பாட்டு, இன அடையாளங்களை விற்பனைப் பண்டமாக மாற்றி ஏனைய சமூகப் பிரிவினருக்கு அவற்றை விற்பனைப் பொருளாக்குகின்றனர். குறிப்பாக கலைப் படைப்புக்கள் சிறந்த முறையில் வடிவமைக்கப்படுகின்றன. இச்செயற்பாடு வாழ்வினை முன்னெடுப்பதற்கான பொருளாதார பலத்தை வழங்குவதுடன் பழங்குடி மக்களுக்கு ஏனைய சமூகப் பிரிவினரிடையே அங்கிகாரத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகவும் அமைகின்றது.

விற்பனை மனோபாவத்துடன் கலைப்பொருட்களை விற்பனை செய்யும் போது பாரம்பரிய கலையுற்பத்தியில் கடைப்பிடிக்கப்பட்ட படைப்பாக்க நியமங்கள், தரம் என்னும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாமல் விற்பனைச் சந்தையின் மனோபாவத்திற்கேற்ற கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தந்திரோபா யங்களை உற்பத்தியில் கடைப்பிடிக்கின்றனர். இது நான்காம் உலகப் பிரதிநிதிகளின் கலைப்படைப்புக்கள் புதிய திசையில் வளர்த் தெடுக்கப்படுவதற்கான ஏதுக்களைப் பெறுகின்றன. இக்கட்டத்தில் கலைப் போலிகள் சந்தையை ஆக்கிரமிக்கின்றன. ஏனெனில் பழங்குடியினரின் கலைப்படைப்புக்களுக்கு இருக்கும் கேள்வி காரணமாக ஏனைய சமூகப்பிரிவினராலும் பழங்குடியினரின் கலைப்பொருட்கள் போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயற்பாடுகள் பழங்குடியினருக்கு கலையாக்கத்தில் இருந்த உரிமம் கைமாறிப் போகும் நிலைமையினையும் ஏற்படுத்துகின்றது.

புதிய வாழ்க்கைச் சூழலில் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த இளைய உறுப்பினர்கள் புதிய வாழ்க்கை ஒழுங்குக்கு ஏற்ப அவர்களை ஒழுங்குபடுத்தும் திறனைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றனர். அத்துடன் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதில் முனைப்புடன் இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை சட்டரீதியாக மேற்கொண்டு அவர்களுக்கான இடத்தைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர். இருந்தும் பாரம்பரிய வாழ்க்கைச் சூழலுக்கு அவர்களால் மீண்டும் செல்ல முடியாது. அதே நேரத்தில் புதிய தலைமுறையினரும் அதற்குத் தயார் இல்லை.

## படங்களுக்கான விளக்கம்

1. மவோரி (Maori) சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மரச் செதக்கு அலங்கார வேலைகளை நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்வது.
2. வடமேற்குக் கரையோர கனேடியர் மற்றும் அமெரிக்க செவ்விந்தியர்களின் சடங்கின்போது நடப்படும் துருவம் (Potlatch).
3. இலங்கையில் வாழும் பழங்குடி சமூகத்தினரான வேடர்களின் சடங்கின் போது நடப்படும் கப்பல் மரம்.
4. புதிய அயர்லாந்தைச் சேர்ந்த பழங்குடியினரால் சடங்கின் போது பயன்படுத்தப்படும் அஸ்மன் விச் துருவத்தின் (Asman Biche Poles) தலைப்பாகம்.
5. அஸ்மன் விச் துருவங்கள்
6. வேடர்களால் சடங்கில் பயன்படுத்தப்படும் மரத்தால் வடிவமைக்கப்பட்ட படமெடுத்தாடும் தோற்றத்தைக் கொண்ட நாகம்.
7. மகியங்கனையில் வேடன் ஒருவன் சிறுவன் ஒருவனுக்கு விற்பனை மனோபாவத்துடன் கருங்காலி மரத்தில் வடிவமைக்கப்பட்ட கத்தியை விற்பனை செய்வதற்கு முயற்சித்தல்.
8. மகியங்கனையில் உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட விற்பனைச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு கடையில் வேடர்களுடன் தொடர்புடைய பொருட்கள் காட்சிப்படுத்தியிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள்**

**நூல்கள்**


எட்கர் தர்ஸ்டன், (2017). *தமிழகத் தொல் குடிகள்,* பக்தவத்சல பாரதி, புத்தாநத்தம் 631310: அடையாளம்.

சிவசுப்பிரமணியம், ஆ., (2017). *காலனியமும் கச்சேரித் தமிழும்,* சென்னை: நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் (பி) லிட்.

திருநாவுக்கரசு, மு., (2018). *பூகோளவாதம் புதிய தேசியவாதம்,* இலங்கை – பிரித்தானியா : தமிழாய்வு மையம்,

பக்தவத்சல, பாரதி, (2017). தமிழகப் பழங்குடிகள், கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 631310: அடையாளம்.

பத்மநாதன்,சி., (2011). யாழ்ப்பாண இராச்சியம் : ஒரு சுருக்க வரலாறு, கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

முத்தையா, இ., (2010). அடித்தள மக்கள் தொடர்பான பண்பாட்டுச் சொல்லாடல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

முத்தையா,இ., (2017). *"சாட்டையடிக்காரர்",* பக்தவத்சல பாரதி (பதி), தமிழக்தில் நாடோடிகள் : சங்ககாலம் முதல் சமகாலம் வரை, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 631310: அடையாளம்.

Chilisa, Bagele., (2012). *Indigenous Research Methodologies,* Los Angeles – America: SAGE Publication, Inc

Claire Smith, Graeme K. Ward (2000). *Indigenous Cultures in an Interconnected World,* Australia: Allen & Unwin.

Demko, George J., William B. Wood, (1994). *Reordering the World : Geopolitical Persoective in the Twenty – First Century,* Oxford : Westview Press.

Leuthold, Steven; , M., (2011). *Cross-Cultural Issues in Art: Frame for Understanding,* New york, Routledge.

Morphy, Howard, & Perkins, Morgan (Ed), (2006). *The Anthropology of Art: A Reader,* USA: Blackwell Publishing Ltd.

Nelson H. H. Graburn (Ed), 1976). *Ethnic and Tourist Arts: Cultural Expressions from The Fourth World,* California: University of California Press, Berkeley and Los Angeles.

Slowey, Gabrielle A., (2005). *Globalization and Development in the Fourth World: Indigenous Experiences in Canada and New Zealand Compared, Cambridge,* UK: 4 th International Critical Management Studies Conference. Judge Institute of Management, University of Cambridge.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சஞ்சிகை**

இன்பமோகன்,வ., (2017). *"கலை, பண்பாடு, கலப்பாக்கம் : ஓர் பிராரம்ப உசாவல்"*, மொழிதல், மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வுவட்டம்.

**இணையதளக் கட்டுரைகள்**

- https://www.nationsonline.org/ oneworld/ third_world_ countries.htm, 21.08.2019.
- https://smarthistory.org/malangan/, 28.09.2019.
- https://www.youtube.com/watch?v=lQrjEDNwQUU, 28.09.2019.
- https://en.wikipedia.org/wiki/Vedda, 09.10.2019.
- https://www.un.org/esa/socdev/unpfii/documents/5sessionfactsheet1.pdf, 31.03.2020.
- https://www.un.org/esa/ socdev/ unpfii/ documents/5sessionfactsheet1.pdf, 31.03.2020.
- file:///E:/Works%20for%202020/Recent%20Article/ Forth%20World%20Photos/ Totem% 20Poles. html. 02.04.2020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் இரண்டு

# ஆபிரிக்க ஒறேச்சர் (Orature): அறிமுகமும் அதன் அளிக்கை மரபுகளும்

- சின்னத்தம்பி சந்திரசேகரம் -

ஆபிரிக்காவில் வாய்மொழி மரபின் பண்புகளும், எழுத்து மரபின் பண்புகளும் இணைந்த இலக்கிய மரபை ஒறேச்சர் (Orature) என்று கூறுவர். ஒறேச்சர் ஆபிரிக்க மக்களின் முதன்மையான இலக்கிய மரபாக உள்ளது.

வாய்மொழி மரபையும் அதனைச் சார்ந்த கலாசாரத்தையும் கொண்ட ஆபிரிக்கச் சூழலில் காலனித்துவ அரசுகள் எழுத்தறிவு மரபைச் சார்ந்த தம் புதிய மொழிகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட மொழிப் பிரயோக முறைகளையும் திணித்தனர். இந்த எழுத்து மரபை ஆபிரிக்க எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் பிரயோகித்தாலும் அதனைத் தொடர்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினர். தம் சொந்த உணர்வுகளையும் அநுபவங்களையும் அவ்வாறே வெளிப் படுத்த அது உகந்ததாக இருக்கவில்லை. முக்கியமாகத் தம் அரசியல் எதிர்ப்புணர்வுகளை எடுத்துரைக்க அது தடையாக இருந்தது. அதேவேளை எழுத்து மரபைப் பின்பற்றிப் படைக்கும் இலக்கியங்கள் தமது மக்களில் இருந்து அன்னியப்பட்டு நிற்பதையும் கண்டனர். மற்றும் இந்த எழுத்து மரபைப் பின்பற்றுவதனூடாக மறைமுகமாக மேற்கத்தேய கலாசார விழுமியங்கள் வாசகர்கள் இடையே பரவுவதையும் எழுத்தாளர்கள் உணர்ந்தனர். எனவே ஆபிரிக்கர்கள் தம் கலாசாரத்தை முழுமையாக ஐரோப்பிய எழுத்துக் கலாசாரத்திற்கு எதிரானதாகக் கருதினர். இந்த நிலையிலேயே எழுத்து மரபைத் தொடர்வது பற்றிய வாதங்கள் ஏற்பட்டன. குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூகி வா தியாங்கோ (Ngugi Wa Thiongo), கப்றியல் ஒகாரா (Gabriel Okara) போன்றோரின் வாதங்களின் அடிப்படையில் ஒறேச்சர் (Orature) பற்றிய கருத்தியல் உருவானது (சுரேஸ், கனகராசா., *1993: 34–38*). ஒறேச்சர் உருவாக்கத்துக்கான பின்னணி பற்றி கூகி பின்வருமாறு கூறுவார்:

"இதனை உருவாக்குவதற்கான உத்வேகம் இரு வாதங்களில் இருந்து ஏற்பட்டது. முதலாவது, ஆபிரிக்க கல்வித் துறையில் ஆங்கிலத் துறைகளுக்கும் ஆங்கில மொழிக்கும் உயர்வான அந்தஸ்து வழங்கப்படுதல் அவதானிக்கப்பட்டமை. இரண்டாவது, வாய்மொழி இலக்கிய வடிவம் மக்களின் மரபு சார்ந்த பழக்க வழக்கங்களின் தொகுதியாகவும் தொன்மைக் காலத்திற்குரியதாகவும் கருதப் பட்டமை, அல்லது அது அனைத்து மூலபாட ஆக்கக் கூறுகளினதும் அடிப்படை மூலமாகக் கருதப்பட்டமையாகும். அநேகமான ஆபிரிக்கச் சமூகங்களில் வாய்மொழி மரபுகள் வெளிப்பாடு, பரிமாற்றம், அறிவுச் சித்திரிப்பு என்பவற்றில் முதன்மையான பங்களிப்புகளை ஆற்றிய நிலையில் மேற்படி வாதங்கள் இலக்கிய மரபு தொடர்பான வாய்மொழி மரபின் பங்களிப்புப் பற்றி வினாக்களை எழுப்பின" *(1998: 128)*.

இத்தகைய வாதங்களின் அடிப்படையில் 'மூலத்திற்குத் திரும்புதல்' என்ற நோக்கு முன்வைக்கப்பட்டது. அதாவது ஆபிரிக்கர்கள் தமது சொந்த எதிர்ப்பு இலக்கியமாகிய வாய்மொழி இலக்கியங்களுக்குத் திரும்ப விரும்பினர்.

"மொழிகளில், கலாசாரத்தில், கென்னிய மக்களின் வீர வரலாறுகளில் எங்களது மூலங்களுக்கு நாங்கள் திரும்புவதன் மூலம் மட்டுமே நாம் கென்னியாவின் சுதேசிய இலக்கிய, கலாசாரத்தின் உருவாக்கத்திற்கு உதவ முடியும்"

என்று மூலத்திற்குத் திரும்புவதன் அவசியம் பற்றிக் கூறுவர் (Caroline, Sinavaiana Gabbard, 2001). இப்போக்குப் பற்றி முகோ (Mugo) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

"இப்போது மூலத்திற்குத் திரும்புதல் என்ற ஒரு பாதையானது ஆபிரிக்க ஒறேச்சரின் ஒழுக்கவியல், அழகியல் என்பவற்றைப் பழைய நிலைக்கு மீண்டும் கொண்டு வருவதாக உள்ளது. அதாவது எங்களது படைப்பாற்றல் அளவுகோலாக உள்ள ஒறேச்சரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான பங்களிப்புகளான ஒழுக்கவியல், அழகியல் என்பவற்றை மீண்டும் கொண்டுவருவதாக உள்ளது" (Mugo, M., n.d.[1]).

அதேவேளை கப்றியல் ஒகாரா இவ்வாறு வெறுமனே பழமைக்குத் திரும்புவதை விமர்சனம் செய்து வாய்மொழி, எழுத்து மொழி என்ற இரு மரபுகளினதும் சிறப்புக்களை இணைத்த பாரம்பரியத்தை வளர்க்கப்போவதாகக் கூறினார் (மேற்கோள்: சுரேஸ், கனகராசா, 1993:38).

சுதேச வாய்மொழி மரபையும் நாட்டார் கலைகளையும் தழுவி இலக்கியம் படைத்தல் என்ற கூகியின் கருத்தினதும், இரு மரபுகளினதும் சிறப்புக்களை இணைத்த இலக்கியப் பாரம்பரியத்தை வளர்த்தல் என்ற ஒகாராவின் கருத்தினதும் அடிப்படையில் ஒறேச்சர் பற்றிய கருத்தியல் உருவானது.

ஒறேச்சர் என்ற சொல் அறுபதுகளின் இறுதிக்கும் எழுபதுகளின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆபிரிக்க இலக்கிய வட்டங்களுக்கு மத்தியிலும் கிழக்காபிரிக்காவில் 'வாய்மொழி இலக்கிய' விமர்சகர்கள் மத்தியிலும் உருவானது. இச் சொல்லை பியோ சிறிமு (Pio Zirimu), ஒஸ்ரின் வுகன்யா (Austin Bukanya) ஆகியோர் உருவாக்கினர். பல ஆண்டுகளாக விமர்சகர்கள் 'வாய்மொழி இலக்கியம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதா, இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டிருந்த சூழலில் இவர்கள் ஒறேச்சர் என்ற சொல்லை உருவாக்கினர்.

ஆயினும் ஒறேச்சர் என்ற சொல்லுக்கான சரியானதொரு வரைவிலக்கணத்தைக் கண்டுபிடித்தல் சற்றுக் கடினமானது. பெரிய கலைக்களஞ்சியங்களிலும் இது பற்றி எதுவும் இல்லை. சொற்களஞ்சியத்தில் இது பற்றி எதுவும் உள்ளடக்கப்படவில்லை (Wayne Rafferty and Sophie salffner, 2006:10). சில இலக்கிய விமர்சகர்கள் ஒறேச்சர் என்ற சொல்லைப் பாரம்பரிய சொற்றொகுதியான 'வாய்மொழி இலக்கியம்' என்ற பதத்திற்கு ஒத்ததாகப் பயன்படுத்துகின்றர். சிலர் எழுதப்படுகின்ற 'வாய்மொழி இலக்கியங்களைக்' குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

---

1. இக்கட்டுரை இணையத்தளத்தில் (https://lic.ned.univie.ac.at/en/node/6321) இருந்து பெறப்பட்டது. கட்டுரை எழுதப்பட்ட ஆண்டு, பக்கங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியோ சிறிமு ஒறேச்சர் என்ற சொல்லை முதலில் வாய்மொழி இலக்கியத்திற்குப் பதிலான சொல்லாகவே பயன்படுத்தினார். ஆனால் பின்னர் அழகியல் வெளிப்பாட்டு முறையினைக் கூறுவதாக மிகவும் நுட்பமாக அச்சொல்லை வரையறுத்திருந்தார். இதனை அவர் ஒரு அழகியல் முறையினைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தினார்.

முகோவும் ஒறேச்சரை ஒரு அழகியல் முறையாகவே பார்க்கின்றார். அவர் தனது My Mother's Poem என்ற நூலின் முன்னுரையில் ஒறேச்சரின் செல்வாக்கை வெளிப்படுத்துமிடத்து, ஆக்கபூர்வமானதும் முற்போக்கு நோக்குள்ளதுமான ஒரு பிரபல்லிய மான கலைவடிவமாக உள்ள ஒறேச்சரின் அழகியல், ஒழுக்கவியல் சிறப்பின் அடையாளங்களைக் காட்ட விரும்புவதாகக் கூறுகின்றார் (மேற்கோள்: Ngugi, W.T.O., 1998: 113).

ஒறேச்சர் ஒரு விடயத்தை நிகழ்த்துவதில் பல வடிவங்களை ஒன்றிணைக்கின்ற உள்ளக ஒழுங்குமுறையுள்ள அழகியல் முறை யாகும். இது வேறுபட்ட நிகழ்த்துகை வகைகளின் கலப்புக் கொண்ட தாகும். அவை கவிதை, பாட்டு, சங்கீதம், கதை, நாடகம் ஆகியவற்றை ஒரே நேரத்தில் கொண்டுள்ள ஒரு இலக்கிய வகையாகும். ஒறேச்சர் எழுதப்பட்ட இலக்கியங்களையும் வாய்மொழி இலக்கியங்களையும் இணைக்கின்ற ஒருவகை எழுதப்பட்ட இலக்கிய வடிவத்தைச் சுட்டுவதாக கொள்ளப்பட்டது.

> "நிகழ்த்துகைக் கற்கைத் துறையில் ஒறேச்சர் வாய்மொழி இலக்கியத்துக்கும் எழுத்து இலக்கியத்துக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்தும் வடிவமாகவும் தொடர்பாடல் தன்மையை முதன்மைப்படுத்துமொன்றாகவும் உள்ளது. ஒறேச்சர் என்பது வாய்மொழி இலக்கிய மூலத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு அச்சு இலக்கிய வகையாகும். அது நிகழ்த்துகையின் ஊடாக வாய்மொழி இலக்கியத்துக்கு திரும்பச் செல்வதாக கூறப்படுகின்றது. கலவை அல்லது இனக்கலப்பு என்பது ஒறேச்சரின் பிரதான தன்மையாகும். இவ்வாக்கங்கள் வாய்மொழி, எழுத்து என்ற இரு வடிவங்களும் கலந்தவையாக உள்ளன. அத்துடன் ஏனைய பலவகையான கலை வடிவங்களும் கலந்தவையாகவும் உள்ளன".

என கவோர் ஆந்ரே ஒறேச்சருக்கு விளக்கம் கூறுகின்றார் (2007: 28) ஒறேச்சர் உயிரோட்டமுள்ள, உறுதியான, நெகிழ்ச்சித் தன்மையுள்ள, வாய்மொழி இலக்கியத்தையும் எழுத்து இலக்கியத்தின் நிரந்தரத் தன்மையினையும் ஒன்றிணைக்கின்றது. வாய்மொழி இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பு அருகிப் போகின்றபோது கிராமிய இலக்கிய கர்த்தாக்கள் வாய்மொழிப் பாரம்பரியங்களைப் பதிப்பிக்கின்றனர். ஆனால் ஒறேச்சர் கலைஞர்கள் இவர்களுக்கு முரணாக வித்தியாசமான வாய்மொழி இலக்கியக் கூறுகளைப் பாதுகாப்பதற்கு அச்செழுத்து சார்ந்த நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஒறேச்சர் வாய்மொழி, எழுத்துப் பாரம்பரியங்கள் ஒன்றுடனொன்று பகிர்ந்துகொள்ள முடியாதவை அல்ல என்பதை விளக்குகின்றது. அது எழுத்து இலக்கியத்திற்கு வாய்மொழி இலக்கியத்தின் கூறுகளை மாற்றுவதை வலியுறுத்துகின்றது எனக் கவோர் ஆந்ரே கூறுகின்றார் (2007: 28). ஒறேச்சர் எழுத்திற்கும் வாய்மொழிக்கும் இடையிலான பழைய எல்லைகளை மறுதலிப்பதாகக் கூகி கூறுவர் (1998: 115 ).

ஆபிரிக்க ஒறேச்சர் படைப்பாளிகளில் பசியர் (Pacere) என்பவரும் ஒருவராவர். இவரது 'From the Womb of the Earth' என்ற ஒறேச்சர் கவிதைத் தொகுதி பலவகையான வாய்மொழி இலக்கியப் பண்புகளையும் எழுதப்பட்ட மரபுகளின் பண்புகளையும் கலந்து உருவாக்கப்பட்டுள்ளதை கவோர் ஆந்ரே ஆராய்ந்துள்ளார்.

பசியரின் இக்கவிதைத் தொகுப்பு வெண்டர்[2] (Bendre) எனப்படும் வாய்மொழி இலக்கியத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான வடிவங்களையும், நுட்பங்களையும் உட்கொண்டுள்ளது. அத்துடன் பசியர் இக்கவிதைகளிலே தம்-தம்[3] எனப்படும் வாய்மொழிக்

2. ஆபிரிக்காவில் மொஆகா (Moaaga) எனப்படும் வாய்மொழி மரபில் ஒரு பகுதியாக வெண்டர் வாய்மொழி இலக்கியம் உள்ளது. வெண்டர் என்பது இசைக் கருவிகளையும் குறிக்கின்றது. அதனை வாசிப்ப வரையும் குறிக்கின்றது. எனவே இசைக் கருவிகளோடும் அதனை வாசிப்பவர்களோடும் தொடர்புடைய இலக்கியமாக வெண்டர் வாய்மொழி இலக்கியம் உள்ளது (Kabore, Andre, 2007: 28).
3. சேமக்கலம் (Gong) எனப்படும் வாத்தியக் கருவிகளில் பேரொலியை எழுப்புகின்ற ஒருவகையினைத் தம் - தம் என்று அழைப்பர். தம் - தம் ஆபிரிக்கக் கிராமங்களில் செய்தியைப் பரப்புகின்ற ஒரு கருவியாக உள்ளது. திருமணம், பருவமடைதல் கொண்டாட்டம் ஆகிய வைபவங்களிலும், தொழிலாளர்கள் பாடல்களை இசைத்து தொழில் புரியும்போதும் தம்-தம் இசை பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கதை நிகழ்த்துகையின்போது கதை சொல்பவருக்கும் நடனமாடுபவருக்கும் இடையில் இசைவை உண்டுபண்ணவும் இந்த இசை பயன்படுத்தப்படுகின்றது. இந்த தம்-தம் இசையுடன் தொடர்புடைய வாய்மொழிப் பாடல்கள் தம்-தம் கவிதைகள் எனப்படும் (Kabore, Andre, 2007: 28-30).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை வடிவத்தைப் பயன்படுத்துவதோடு தனது சொந்த மொழியை அச்சில் வெளிப்படுத்துகிறார். பசியரின் கவிதைகள் இறந்து மண்ணுக்குள் நிரந்தரமாகத் தூங்கும் மூதாதையர்களைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடுகின்றன. வென்டர் வாய்மொழிக் கவிதை அளிக்கையில் மூதாதையர்களைப் பற்றி முக்கியமாகப் பேசப்படுகின்றது. பாரம்பரிய மேற்கு ஆபிரிக்காவில் வாய்மொழி இலக்கிய அளிக்கையில் சபையோர்களில் மூதாதையர்களும் ஒரு அங்கமாவர். பசியர் தனது அடிமனதில் இருந்து சிறையில் உள்ள தனது பிரபுக்களின் விடுதலைக்காக மன்றாடுவதோடு மூதாதையர்களின் உதவியையும் கேட்கின்றார். இவை தம்-தம் வாய்மொழி இலக்கியத்தின் பின்பற்றுகைகளாகவும் உள்ளன (Kabore, Andre, 2007: 28 - 44).

பசியரின் இக்கவிதைகள் வென்டர் வாய்மொழி இலக்கியத்தி லிருந்து பிரதி செய்யப்பட்ட அச்சுக் கவிதைகளாகும். அது அச்சு ஊடகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள வாய்மொழி இலக்கியமாகும். இவ்வூடகத்தில் பசியர் வென்டர் வாய்மொழி இலக்கியக் கூறுகளை அடையாளப்படுத்த அச்சக சாதனங்களைப் பயன்படுத்துகின்றார் அல்லது அளிக்கைக்கு உதவும் பொருட்டு பயன்படுத்துகின்றார். மேற்கோள் குறிகள் பயன்படுத்துவதும், பல வகையான அழுத்தக் குறிகள் இடுவதும் அவரது கவிதைகளில் காணப்படுகின்றன. மேற்கோள் குறிகள் வழக்கமாக கூறிய வசனங்களை அல்லது நேரடிக் கூற்றுக்களைக் கொண்டுள்ள எழுத்து ஆவணங்களிலேயே பயன்படுத்தப்படுகின்றன. பசியரின் கவிதைகளில் மேற்கோள் குறிகள் பல தடவைகள் பயன்படுத்தப்படுகின்றன. வாய்மொழி மரபுக்குச் சொந்தமான பாட்டுக்களை அறிமுகப்படுத்துவதற்கு இவை பயன்படுத்தப்படுகின்றன. இப்பாட்டுக்கள் வாய்மூலமாக அல்லது உபகரணங்களைக் கொண்டு இசைக்கப்படுகின்றன. கவிஞர் வாய்மொழி இலக்கியம் பற்றிய தெளிவை ஏற்படுத்துவதற்காக இந்த முறைகளைப் பயன்படுத்துகிறார்.

பசியர் இக்கவிதைகளை ஒரு தொகுப்பாக அளிப்பதற்கு வாய் பாட்டுத் தன்மையைப் பயன்படுத்துகின்றார். கவிதையை ஊடறுத்துச் செல்லும் பிரதான திரும்பத்திரும்ப வரும் அடி அதற்குப் பிணைப்பைக் கொடுக்கின்றது. ஏனைய திரும்பத் திரும்ப வரும் அடிகள் கவிதையின் பகுதிக்குள் அமைக்கப்படுகின்றன. திரும்பத்திரும்ப வரும் அடிகள் வென்டர் வாய்மொழி இலக்கியத்தை உருவாக்கப் பயன்பட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியரும் அவற்றை அதிகம் பயன்படுத்துகின்றார். திரும்பத்திரும்ப வரும் அடி ஆரம்பம் முதல் இறுதிவரை கவிதையில் பிணைப்புற்று இருக்கின்றது. இரண்டாம் நிலை திரும்பத்திரும்ப வரும் அடி கவிதைத் தொகுதியின் தொனிப்பொருளை தோற்றுவிக்கின்றது. திரும்பத்திரும்ப வரும் அடிகள் கவிதையின் தலைப்புகளாக இருந்து முழுக் கவிதையினையும் ஒரு தொகுதியாகக் காட்டுகின்றன. இந்தவகையில் பசியரின் கவிதைத் தொகுப்பானது கவிதைத் தொகுதி பற்றிய மேற்கத்தேய எண்ணப்பதிவுக்குச் சவால் விடுவதாக உள்ளது.

அதேவேளை பசியரின் கவிதைகள் அளிக்கை வடிவங்களின் கலப்பாகவும் உள்ளன. இக்கவிதைகள் வேறுபட்ட சமூகங்கள் அல்லது சபையோரின் விளக்கத்தைப் பொறுத்து கவிதையாக, இசையாக, கதையாக, நாடகமாக உள்ளன. தம்-தம் கவிதையின் ஒத்திசைவு நயத்தை அச்சு ஊடகத்தில் அமைப்பதிலும் அவர் வெற்றி பெற்றார். ஒறேச்சர் ஒரு அளிக்கை வடிவமாக இருப்பதால் வாசகர்கள் நிகழ்த்துகைக்கு அழைக்கப்படுகின்றனர்.

அத்துடன் இக்கவிதைகள் பாட்டாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அதிக சந்தர்ப்பங்களில் கவிதையில் பாட்டு அடங்கியிருப்பது வாசகர் களுக்கு நினைவு ஊட்டப்படுகின்றது. இவை பாடப்படுவனவாக உள்ளதாகக் கூறும் கவோர் ஆந்ரே, சபையோருக்கும் பாடகருக்கும் இடையிலான தொடர்பாடல் கவிதையை ஒரு உணர்ச்சி மிக்க இசையோடு சேர்த்து நாடகமாக மாற்றுவதாகக் குறிப்பிடுகின்றார் (2007: 36) கவிதையின் பொதுவான ஒழுங்கமைவு அல்லது பந்திகளுக்கு இடையிலான தொடர்புகள் வேறுபட்ட பாத்திரங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு நாடக ஆசிரியராக உள்ள பசியர் வித்தியாசமான நடிகர்களுக்கு வித்தியாசமான விடயங்களை ஒதுக்குகிறார். எனவே, இக்கவிதைத் தொகுதி நாடகமாகவும், கவிதையாகவும், இசையாகவும் உள்ளது. இவ்வாறே அது பல அளிக்கை வடிவங்களது கலவையாகவும் உள்ளது எனக் கவோர் ஆந்ரே கூறுகிறார் (2007: 36-37).

வெண்டர் வாய்மொழி இலக்கியத்தை அச்சில் உருவாக்குவதற்கு பசியர் வித்தியாசமான நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளார். வெண்டர் வாய்மொழி இலக்கிய ஒத்திசைவு நயத்தையும், தம்-தம் உள்ளடக்கும் வித்தியாசமான அளிக்கை வடிவங்களையும் (பாட்டு, நாடகம், இசை) பயன்படுத்தியுள்ளார். பசியரின் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒறேச்சர் வடிவத்தை வளர்ச்சியடையச் செய்கின்றன. ஏனெனில் அவை வாய்மொழி, எழுத்துப் பாரம்பரியங்களுக்கு இடையில் பிணைப்பாக அமைகின்றன. அவை எழுதப்பட்டவையாக உள்ளன; ஆனால் அளிக்கை செய்யப்படுபவையாக அமைகின்றன. எனவே வாய்மொழி, அச்சு இலக்கியங்களின் கலப்பாகவும், அளிக்கை வடிவங்களின் கலப்பாகவும் அமைகின்ற ஒறேச்சர் கவிதைகளுக்கு பசியரின் கவிதைகள் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

ஆபிரிக்காவில் எழுதப்பட்டிருக்கின்ற வாய்மொழிப் பிரதிகளாக உள்ள ஒறேச்சர் ஆபிரிக்க நவீன இலக்கியத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது. அதேவேளை ஒரு ஒழுக்கவியல் முறையாகவும் தத்துவ மாகவும் உள்ளது.

ஆபிரிக்க ஒறேச்சர் பற்றிக் கோட்பாட்டு அடிப்படையில் ஆய்வினை மேற்கொண்டவரான சூகி வா தியாங்கோ ஒறேச்சரை ஒரு அழகியல் முறையாகக் குறிப்பிடுகின்றார். அவர் ஆபிரிக்க ஒறேச்சரின் நிகழ்த்துகை, ஒருங்கிணைவு என்ற இரு பண்புகளை விபரிக்கின்றார். அவர் ஆபிரிக்க சூழலில் அளிக்கை சார்ந்த வாய்மொழி அழகியலை வெளிப்படுத்துகின்ற நான்கு நிலைகளை விபரிக்கின்றார். அவை அளிக்கை வெளி, நேரச் சட்டம், வாய்மூல நிகழ்ச்சிச் சூழ்நிலை, சபையோர்- நிகழ்த்துவோர் உறவு என்பனவாகும்.

அளிக்கை வெளி என்பது திறந்த வெளியாக உள்ளது. இத் திறந்த வெளியில் வட்டம் முக்கியமானது; ஆற்றல் மிக்கது. இந்த வட்டம் சந்திரனும் சூரியனும் பார்ப்பதற்கு எவ்வாறு உள்ளதோ அதனை ஒத்ததாக இருக்கின்றது. அந்த வட்டம் பூரணமானது் அது எல்லாவற்றையும் ஒன்று சேர்ப்பது. அளிக்கை வெளி ஒரு குடிசையில் அல்லது கட்டடத் தொகுதியில் தட்டையான மேற்பரப்பை உடைய வட்டவடிவ அமைப்பினைக் கொண்டதாக இருக்கின்றது (Ngugi, W. T. O., 1998: 110). இவ்வாறு வட்டவடிவமான வெளியைத் தெரிவுசெய்வது தற்செயலானது அல்ல. அது பாரம்பரியங்களுடன் இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அடையாளமாக உள்ளது.

நேரச்சட்டம் என்பது பல்வேறு வழிகளிலே அளிக்கையினை நெறிப்படுத்துவதாக உள்ளது என்பதை சூகி விபரிக்கின்றார். நேரச்சட்டம் குறிப்பிட்ட ஒரு அளிக்கையின் செயற்பாட்டுடன் உறவுடையதாக உள்ளது. அளிக்கைக்கு நேர அளவினை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும் (Ngugi, W.T.O., 1998: 110). அதேவேளை அளிக்கைக்கு பொழுதும் முக்கியமானதாகும். சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகளில் ஒறேச்சர் கதைகள் பகல் வேளைகளில் ஒரு போதும் நிகழ்த்தப்படுவதில்லை. சில பாடல் அளிக்கைகள் வெளி, அளிக்கைக்கான நேரம் என்பவற்றில் தங்கியிருக்கின்றன. சில அளிக்கைகள் பல கிழமைகள் எடுக்கின்றன. ஜெ.பி.கிளாக் (J.P.Clark) என்பவரால் தொகுக்கப்பட்ட இஜாவ் (Ijaw) மொழி பேசுகின்ற நிகரியா மக்களின் ஒஷிடி சாகா (Ozidi Saga) என்ற ஒறேச்சர் அளிக்கை ஏழு நாட்கள் நிகழ்த்தப்படுகின்றது. கூகியைப் பொறுத்தவரை வாய்மொழி நிகழ்ச்சிச் சூழ்நிலை என்பது ஒப்பனை, உடை, ஒளி உருவாக்கம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட சுற்றுப்புறத் தோற்றமாகும்.

வேறுபட்ட நேரங்களில், வேறுபட்ட அளிக்கை வெளிகளில் நடக்கின்ற வேறுபட்ட நிகழ்த்துகைக்கான வேறுபட்ட நிகழ்ச்சிச் சூழ்நிலையினை ஒருவர் கற்பனை பண்ண முடியும். இது வாய்மொழி நிகழ்ச்சிச் சூழ்நிலை எனப்படுகிறது. ஒருவர் நடிகரின் உடலின் மீது, உடைகளின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சுவது, நிழல்படுத்தலைச் செய்வது என்பவற்றைக் கற்பனை செய்யலாம். நெருப்பு, சந்திரன் அல்லது சூரியன் ஆகிய ஒளிமூலங்கள் வேறுபட்ட சூழல்களை உருவாக்குகின்றன (Ngugi,W.T.O., 1998: 110).

ஒறேச்சர் நிகழ்த்துகையில் பார்வையாளர் - நிகழ்த்துவோருக்கிடையிலான உறவு பிரதானமானதாக அமைகின்றது. சபையோர் எவ்வாறு பலவிதங்களில் பங்களிப்புக்களைச் செய்யலாம் என்பதைக் கூகி விபரிக்கின்றார். பார்வையாளர்கள் விமர்சகர்களாகவும் நிகழ்த்து வோராகவும் பங்குபற்றுகின்றார்கள். உதாரணமாக கதைகளில் பாடற் குழுவினருக்குரிய தொடர் அல்லது பாடல்களை அளிப்பவர்களாக அல்லது பதில் சொல்பவர்களாகப் பங்கெடுக்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்வதனால் நடிப்பை வெளிப்படுத்துகின்ற பகுதியாக அமைகின்றனர். அத்தோடு அளிக்கைகள் நாளாந்த வாழ்வு, உற்பத்தி, நுகர்வு என்பவற்றுடன் நெருக்கமானவையாக அமைகின்றன. இவை ஊக்கமும் உரமும் வாய்ந்த நடத்தை முறையில் பரஸ்பரம் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. இந்த உறவுநிலை பற்றி கூகி பின்வருமாறு கூறுகிறார்:

> "பார்வையாளர்- நிகழ்த்துபவர் உறவு என்பது ஒறேச்சர் கூறுகளில் மிகவும் பிரதானமானது. இது நான்கு சுவர்களுடன் கூடிய நாடக அரங்க மேடையை முற்றாக உடைக்கின்றது" *(1998:121).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அனைத்து நிபந்தனைகளும் எல்லா நேரத்திலும் மாற்றங்களுக்கு உட்படுகின்றன. ஆகையால் ஒவ்வொரு அளிக்கையும் ஒருபோதும் அவ்வாறே இருப்பதில்லை. ஒவ்வொரு அளிக்கையும் புதிய கற்பனைத் திறனுள்ள படைப்புகளாக உள்ளன. இந்த நிபந்தனைகள் எழுதப்பட்ட பிரதியின் அழகியலை உணர்வதில் இருந்து மிகவும் வேறுபட்டவையாகும். வாய்மொழிப் பிரதி கற்பனைத் திறன் கொண்ட, ஆக்கத்திறன் மிக்க படைப்பாக, அதன் பூரண பரிமாணக் கூறைக் காணத்தக்கதாக அளிக்கையில் அமைகின்றது. எனவே ஒறேச்சரின் அழகியலை உணர்த்துவதில் வாய்மொழியும், அளிக்கையும் மையங்களாக உள்ளன. அத்துடன் ஒறேச்சர் பல்வேறு கலை வடிவங்களின் இணைப்பினைக் கொண்ட வடிவமாகவும் அமைந்துள்ளது. இது பற்றிக் கூகி பின்வருமாறு கூறுவார்:

> "இலக்கியத்தின் கிளையாக ஒறேச்சர் அமையவில்லை. ஆனால் அது ஒரு பூரணத்துவமான அழகியல் முறையாக உள்ளது. அளிக்கைகளும் கலை வடிவங்களின் இணைப்புகளும் ஒறேச்சரை வரையறை செய்கின்ற இரண்டு பண்புகளாகும். இலக்கியம், நாடகம், சினிமா ஆகிய ஏனைய முறைகளைவிட ஒறேச்சர் மிகவும் அடிப்படையானதாகவும் மிக மூலாதாரமானதாகவும் உள்ளது. ஏனென்றால் ஏனைய அனைத்து முறைகளும் ஒறேச்சரில் இருந்து பல்வேறு அம்சங்களைத் தமது பிரதான தன்மைகளாக உள்வாங்கியுள்ளன. அது ஒன்றிணைக்கும் சக்தியாக உள்ளது. ஏனென்றால் அதனுள் எழுத்து, வாய்மொழி, நாடகம், திரைப்படம் என்ற நான்கு அழகியல் முறைமைகள் அடங்கியுள்ளன" *(1998: 117)*.

இந்த ஒருங்கிணைந்த தன்மையும் ஒறேச்சரை ஒரு பூரண அழகியல் மாதிரியாகக் காண்பிக்கின்றது. வாய்மொழி அளிக்கையின் நிபந்தனைகள், பண்பாட்டு நம்பிக்கைகள், விழுமியங்கள், பங்குபற்றுபவர்களின் சூழல் என்பவற்றோடு தொடர்புபட்டனவாகும். கலாசார விழுமியங்களைச் செயற்படுத்துபவர்களுக்கு ஒறேச்சர் ஒரு முழுமையான அழகியல் முறையாக உள்ளது. அதாவது வாய்மொழி அளிக்கையின் உள்ளடக்கம், அதனைச் செய்வதற்குப் பயன்படுத்தும் கூறுகள், அளிக்கையின் சமூக நிபந்தனைகள் என்பனவெல்லாம் ஒருங்கிணைந்துள்ளமை அதனை ஒரு அழகியல் மாதிரியாகக் காட்டுகின்றது. கலாசார புரிந்துகொள்ளலைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப அது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது எனலாம். மறுபுறமாக ஒறேச்சரின் பண்பாட்டு அமைவுமுறை பழமை பேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வடிவத்தை நிராகரித்து பலவகைப்பட்ட கலை வடிவங்களை ஒன்றிணைப்பதற்கு அனுமதிக்கின்றது. நிகழ்த்துகை வடிவம், நிபந்தனைகள் என்பவற்றின் ஊடாக பண்பாட்டு அம்சங்கள் வலியுறுத்தப்படுகின்றன. உண்மையில் பங்குபற்றுபவர்கள் பண்பாட்டு நம்பிக்கைகள், விழுமியங்கள், சூழ்நிலைகள் என்பவற்றை அதன் வாய்மொழி பரிமாற்ற நிகழ்வினை விடவும் கூடுதலான அழகியல் வடிவப் பண்புள்ளவையாகக் காண்கின்றனர்.

ஆபிரிக்கச் சூழலில் உருவான பண்பாட்டுப் போக்குகளை ஒறேச்சர் நிகழ்த்துகை அம்சங்கள் காட்டுகின்றன. ஆனால், அவை தற்கால (பெரும்பாலும் பின்காலனித்துவ) சூழலுக்கேற்ப பயன் படுத்தப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளில் அளிக்கையினைச் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பொருட்கள் தீவிர மாற்றங்களுக்கு உள்ளாகலாம். உதாரணமாக உண்மையான அளிக்கைவெளி, சங்கீத உபகரணங்கள், உடைகள் போன்றன கிடைக்காமல் போகலாம். மேலும், பங்குபற்றுபவர்களின் பண்பாட்டுச் சூழல் தீவிர மாற்றத்திற்கு உள்ளாகலாம். உதாரணமாக அவர்கள் காலனித்தவ மொழிகளைப் பேசலாம் அல்லது அளிக்கையை அடிப்படையாக் கொண்ட மரபுகளை அறியாதவர்களாக இருக்கலாம். அளிக்கை பல்வேறுவகை அளிக்கை மரபுகளின் கலவையாக இருக்கலாம். அல்லது எழுத்து, சினிமா, கணினித் துறைகளை உள்ளடக்கியிருக்கலாம். இவ்வாறான விடயங்களில் ஒறேச்சர் உள்ளடக்கத்தில் பண்பாட்டுத் தொடர்தல் நோக்கு, உலக நோக்கு, ஊடகப் பயன்பாடு என்பவற்றுடன் இணைந்ததாக, ஒரு தூரநோக்குக் கண்ணாடியாக உள்ளது எனப் டி. பொக்ஸ் ஹரெல் கூறுகிறார் *(2008: 11)*.

கூகியால் கூறப்பட்ட ஒறேச்சரின் பண்புகளான அளிக்கை, ஒருங்கிணைப்பு ஆகியன ஆபிரிக்க பண்பாட்டுப் பின்பற்றுகையினை வெளிப்படுத்துவதைத் தளமாக் கொண்டதாக டி.பொக்ஸ் ஹரெல் கூறுவார். தான் ஆபிரிக்க ஒறேச்சர் பற்றிய கருத்தை ஒரு மாற்றமுறும் பண்பாட்டுக் கருத்தியலாகப் பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிடுவார். மேலும், அது ஊடகத் தொடர்பை மிகத் தெளிவாகப் புலப்படுத்துவதன் காரணமாக அழகியல் மாதிரியைக் கொள்கையாகக் கொண்டுள்ளதாகவும் கூறுகிறார் *(2008: 11)*.

ஒறேச்சரில் பிரதான அம்சம் நிகழ்த்துகையாகும். இதுதான் ஒறேச்சரை இலக்கியத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. நிகழ்த்துகையில் நிகழ்த்துபவர், சபையோர் ஆகியோர் சம்பந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனர். இங்கு சபையோர் பங்குபற்றுபவர்களாக உள்ளனர். ஒறேச்சரின் அளிக்கைகள் குடும்பவாழ்விடம், கிராமச்சதுக்கம், சந்தை ஆகியவற்றிலிருந்து சமய நிலையம் வரை எங்கும் இடம்பெறுகின்றன. ஒறேச்சர் நிகழ்த்துகையிலேதான் முழுமை அடைகின்றது. ஒறேச்சரின் அளிக்கை பற்றி ஏ. ஜே. கனகரத்தினா பின்வருமாறு கூறுகிறார்:

> "Orature இன் ஒன்றிணைக்கும் அம்சம் மிக முக்கியமான ஒரு கூறாகும். பல கற்கை நெறிகளும் நடவடிக்கைகளும் Orature இன் குடையின் கீழ் அடங்குகின்றன. Orature அரங்கேற்றத்தில் பல கடினமான சாத்தியப்பாடுகளை இணைக்கின்றது" *(2003: 42)*.

அளிக்கைக்கும் ஒன்றிணைவுக்கும் இடையே நெருங்கிய உறவு நிலையுண்டு. அளிக்கை ஒன்றிணைக்கும் பொருளாக, நுணுக்கமாகக் காணப்படுகின்றது.

ஒறேச்சரின் மைய நிலையாக அளிக்கைக் கலை அமைவதானது அதற்கு ஒரு தனியிடத்தைக் கொடுக்கின்றது. அத்தோடு அது இலக்கியதின் ஒரு அங்கமாக மட்டும் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. றிச்சாட் ஷெஸ்னர் (Rechard Schechner) என்பவர் ஒறேச்சர் இலக்கியத்துடன் இணைந்துள்ளதோடு நாடகம், கேளிக்கை, இசை, விளையாட்டு, நடனம், சடங்கு போன்ற அரங்கத்துடன் இணைந்த செயற்பாடுகளை உட்கொண்டு மிகவும் நற்பயன் அளிக்கும் ஒன்றாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். நாடகமும் எழுதப்பட்ட பிரதியும் இலக்கியத்துக்கு உரியதாயிருக்கின்றன. அதேவேளை அரங்கம், இசை, பலவகையான அளிக்கை வகைகள் என்பன ஒறேச்சருக்கு உரியவையாக உள்ளன.

ஒறேச்சர் நிகழ்த்துகைக் கலைகளின் ஒழுங்கமைதியினையும் அக்கலை வடிவங்களது ஒன்றிணைவையும் பற்றிப் பேசுகின்றது. வாய்மொழிக் கலைகளில் நிகழ்த்துகை ஒரு மைய அம்சமாக உள்ளதுடன் அந்த அம்சம் வாய்மொழி வடிவங்களின் இயல்புக் கூறுகளைச் செயல்வடிவம் பெறச் செய்கின்றது. வாய்மொழி அழகியலின் நன்கு வளர்ச்சியடைந்த முறை நிகழ்த்துகைக்குள்ளே உள்ளடக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் உள்ளது. ஒறேச்சர் ஒரு வெளிப்பாட்டு முறை. அது அதன் முறையியல், மெய்யியல் என்பவற்றில் ஒரு அழகியல் மாதிரியை உட்கொண்டுள்ளது. அதன் முதன்மைப் பகுதிகளாக வாய்மொழி - வாய்மொழி இலக்கியம், வாய்மொழி வரலாறு, வாய்மொழி ஆன்மீக இயல்பு ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இவையெல்லாம் மக்களுக்குரிய நடத்தை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் தீர்மானிக்கப் பயன்படுவனவாக உள்ளன. ஒறேச்சர் ஆபிரிக்க மக்களின் வாழ்க்கை முறை பற்றிய ஒரு கொடையாக உள்ளது. அது அனைத்துச் சமூகத்தையும் கவர்ந்துள்ளது.

நிகழ்த்துகை மைய அம்சமாக அமைவதனால் ஒறேச்சரில் இசை முக்கியம் பெறுகின்றது. கிகுயு ஒறேச்சரில் இசை பிரதான ஆதாரமாக அமைவதை வெளரா பன்டூ பின்வருமாறு கூறுகிறார்:

> "அவர்களின் பாடல்கள் எப்போதும் எல்லோரும் நன்கு அறிந்த கோரஸ் பாடலுடன் இடம்பெறும். ஒருவர் முன்னேற்பாடு இன்றிப் பாடல் இயற்றிப் பாடுவார். முன்பின் பழக்கமற்ற பலர் பயிற்சி பெற்ற பாடகர்கள் போல் பாடலில் இணைந்து கொள்வர். அவர்களது நடனத்தின் ஒத்திசை இயக்கம் அவர்களின் இசை மீதான கவனத்தை ஈர்க்கக்கூடியதாக அமையும். பாட்டினாலும் ஆட்டத்தினாலும் அவர்கள் உள்ளுணர்ச்சியினை வெளிப்படுத்துகின்றார்கள்" *(2007: 201).*

மேலும், வெளரா பன்டூ ஒறேச்சரின் அளிக்கை பற்றி கூறும்போது, இந்த அளிக்கை அரிஸ்ரோட்டில் கூறுகின்ற துன்பியல் நாடகத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளுக்கும் அதிகப்படியானவற்றை உட்கொண்டுள்ளது எனக் கூறுகின்றார். ஒருவகையில் 'அளிக்கை' என்பது துன்பியல் நாயகனைக் கொண்ட வரையறுக்கப்பட்ட நேர்கோட்டுக் கதை சொல்லலைக் கொண்டிராது. அத்துடன் பார்வையாளரின் மனதில் ஆறுதலை (Cathasis) ஏற்படுத்துவது அதன் இலக்காகும். அளிக்கை என்பது பார்வையாளரின் உணர்வு நிலையினைத் தூண்டுகின்ற நோக்குடன் வாழ்க்கை அநுபவத்தில் ஊக்கத்தினை ஊட்டுவதற்குரிய ஒரு கருவியாகவும் அமைகிறது. இந்த அம்சத்தில் சபையோர் அரங்க வெளிப்படுத்துகையில் எதிர்வினை புரியாத குழுவாக இருக்கவில்லை என்கிறார் *(2007:201)*

ஒறேச்சரை கோட்பாட்டு அடிப்படையில் நோக்கியவர்களில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பிற்றிகா ருட்டி (Pitika Ntuti) என்பவரும் ஒருவர். அவர் எண்பதுகளில் லண்டனில் தஞ்சம் கோரியிருந்த காலங்களில் மேற்கத்தேய உயர்நிலைச் சமூகத்தினரின் கலைகளுக்கு மாறானதாக ஆபிரிக்க மக்களின் வாய்மொழிக் கலைகள் குண மாக்கும் தன்மை (healing) கொண்டனவாக உள்ளமையினை உணர்ந்தார். அதுவே அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்ட முழு நிறைவுத் தன்மையாகும். அவர் தன் சிறுபராயக் கலைகளிலே கலைவடிவங்களுக்கு இடையில் எல்லைகளைக் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பதிலாக நாடகம், கதை, பாட்டு, உரை, அளிக்கை என்பவற்றுக்கிடையில் தொடர்பைக் கண்டார். 'Orature: A self-portrait' என்ற நூலில் பிற்ரிகா 'எல்லாக் கலைவடிவங்களும் இணைந்திருப்பதுதான் ஒறேச்சரின் அடிப்படைத் தன்மை' எனக் கூறுகின்றார். இதனை அவர் கவிதை வடிவில் கூறுமிடத்து, எல்லாக் கலைவடிவங்களும் ஒன்றுசேர்ந்து உருவாகும் இணைவினைவிட மேலானது ஒறேச்சர். ஏனென்றால், அது எண்ணக்கருவாகவும் வாழ்க்கை பற்றிய முழுமையான செயற்பாடாகவும் இருக்கின்றது. ஆகவே, வெறுமனே கலைவடிவங்களது இணைவு மட்டுமல்ல. உணர்ச்சி, எண்ணங்கள், மனித கற்பனைகள், சுவை, கேட்கும் தன்மை என்பவற்றையெல்லாம் கொண்ட ஒரு கொள்கலமாக உள்ளது. அது ஒரு புதிதாக உருவாக்கும் சக்தியினுடைய செயற்பாடாகும். அதன் ஒன்றிணைக்கும் மையக்கூறு, தொடர்புபடுத்தும் அம்சங்கள், கூறுகள் அனைத்தும் முழுமையினை ஏற்படுத்துகின்றன (மேற்கோள்: Ngugi, W.T.O., 2007: 5). மேலும் ஒறேச்சரின் தன்மை பற்றிப் பிற்ரிகா பின்வருமாறு கூறுகிறார்:

> "ஒறேச்சர் கவிதைகள் விடயங்களைக் கருத்துருக்களாகக் காட்டுவது மட்டுமன்றி அவற்றை நிகழ்த்திக் காட்டுவதுமாக உள்ளன. ஒறேச்சர் வெளிப்பாடு, திறனாய்வு என்பவற்றின் பிரபஞ்சமாக உள்ளது. அத்தோடு தனியான ஒன்றினுள் ஒரு குழு, ஒரு சமூகம் இரண்டினது இணைப்பாகவும் உள்ளது. இது வாழ்வின் இயக்கம் மீறப்படுவதற்கு எதிரான ஒரு ஆயுதமாக உள்ளது. இது ஒரு ரத்தினம்; ஒரு கருத்துரு; மெய்மை நிலை. அது எங்களை அதன் அங்கமாக இருக்க அழைக்கின்றது" (மேற்கோள்: Ngugi, W.T.O., 1998:114).

'கலை வடிவங்களின் இணைப்பு' என்பது கறுப்பு இனக் கலைஞர்களுக்கு சர்வதேசப் பண்பினைக் கொடுப்பதாக கூகி கூறுகின்றார் *(1998: 114)*.

கூகி தனது ஒறேச்சர் பற்றிய கோட்பாட்டில் இயற்கை, உருவாக்கல், இயற்கை அதீதம், உருவாக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலை ஆகிய நான்கு அம்சங்களும் ஒறேச்சரில் ஒன்றுடனொன்று இணைந்த செயற்பாடுகளாக உள்ளதைக் காட்டுகின்றார்.

மனிதர்கள் எல்லோருமே இயற்கையின் பகுதிகளாக உள்ளனர். அந்தவகையில் அவர்கள் எந்தவிதத்திலும் விலங்குகளில் இருந்தும் தாவரங்களில் இருந்தும் வேறுபட்டவர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் பூமித்தாயின் உருவாக்கங்கள்தான். அதை ஒறேச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே எடுத்துக்கொள்கின்றது. மனிதனையும் தாவரங்கள், விலங்குகள் போல் எடுத்துக்கொள்வதால் ஒறேச்சர் எடுத்து ரைப்புக்களில் மனிதர்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என்பன ஒன்றுடனொன்று சுதந்திரமாகத் தொடர்புகொள்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒருவரின் வடிவத்தை மற்றையது எடுக்கிறது. மொழிகூட அவ்வாறு மாறுகின்றது. ஒறேச்சரில் மனிதன் தனது துன்பத்தில் பறவைகளோடு கதைத்து தனது செய்தியைத் தெரி விக்கின்றான். ஹோமரின் காவியங்களான இலியட், ஒடிசி என்ப வற்றில் இவ்வாறு மிருகங்களும் பறவைகளும் மனிதர்களும் ஒரேவகையில்தான் பேணப்படுகின்றனர்; சாதாரணமாகப் பழகுகின்றனர். உலகிலுள்ள பிரதானமான எல்லாக் காப்பியங்களும் ஒறேச்சரில்தான் வேரூன்றியுள்ளன. எழுத்தில் வடிவங்கொண்டிருந்தபோதும் அவை பேச்சு, சொற்பொழிவு, வாய்மொழிக் கதைகூறல் என்பவற்றால் மட்டுமே அறியப்படுகின்றன. நான் மகாபாரதம், இராமாயணம் சம்பந்தமாக அநேகமான இந்தியர்களோடு கதைத்திருக்கின்றேன். ஆனால், எவரும் மகாபாரத, இராமாயண நூல்களை வாசித்து விளக்கம் சொல்லவில்லை. அவர்கள் வாய்மொழியாகவே அதிகமான கதைகளை அறிந்திருக்கின்றனர். அடுத்த சந்ததியினருக்கும் வாய் மொழியாகவே பரிமாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பார் கூகி *(2007: 5).*

ஒறேச்சரில் இயற்கை ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வலை யமைப்பாக உள்ளது. இந்த ஒன்றுடனொன்று தொடர்புடைய தன்மையே இயற்கையின் மொழியாகும். இயற்கையின் வெவ்வேறு செயற்பாடுகள் ஒன்றுடனொன்று மிகவும் ஆழமான தொடர்பு கொண்டுள்ளன. அவை தங்களுக்குள் தொடர்புடையனவாக இருக் கின்றன. அதேவேளை மற்றையவற்றுடனும் தொடர்புடையனவாக இருக்கின்றன. இத்தகைய தொடர்புதான் மழை பெய்கின்ற சுற்று வட்டத்திலும் காணலாம். நீர் ஆவியாதல், பின் மேகக்கூட்டமாதல், பின் மழை பெய்கிறது, பின் ஆறு, குளம், கடல் என்பவற்றிற்கு வருகின்றது, இதுதான் ஒறேச்சர் கவிதையின், பாடலின் சுற்று வட்டமாக உள்ளது. தேனீக்களுக்கும் வண்ணத்துப் பூச்சிக ளுக்கும் பூக்களுக்கும் இடையிலான தொடர்பு மூலமும் இதனைப் பார்க்கலாம். இந்த உலகத்திலிருந்து தேனீக்களையும் வண்ணத்துப் பூச்சிகளையும் எடுத்துவிட்டால் வரட்சி உண்டாகி மனித வாழ்க்கையே அழிவுக்குள்ளாகும் (Ngugi, W.T.O., 2007: 5). எனவே ஒறேச்சரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தொடர்புடையவையாக – பிரிக்கமுடியாதவையாக முழு வட்டமாக உள்ளன என்பதை சுகி எடுத்துக்காட்டுகின்றார். அவர் இயற்கைக்கும் உருவாக்கத்துக்கும் இடையிலான தொடர்பைப் பின்வருமாறு கூறுகிறார்:

> "உருவாக்கம் என்பது இயற்கையுடன் மௌனத் (mimetic) தொடர்பு கொண்டுள்ளது. அது தெளிவாக இயற்கையின் தொடர்பாடல் பரிமாற்ற முறையினதும் அமைப்பினதும் போலச் செய்தலாக உள்ளது. ஏவுகணை, விண்வெளிக்கப்பல் ஆகியன உட்பட அனைத்துப் போக்குவரத்து அமைப்புகளும் காலின் வளர்ச்சியாகும். இயந்திர உற்பத்தி, தொழில்நுட்பவியல் முதலியன கையின் வளர்ச்சியாகும். தொலைநோக்கி முறை கண்ணின் வளர்ச்சியாகும். தொலைபேசி உட்பட தொலைத்தொடர்பு முறை காதின் வளர்ச்சியாகும். உருவாக்கம் இயற்கையிலேயே உருவாகும். ஒறேச்சர் இயற்கைக்கும் உருவாக்கலுக்கும் இடையில் எல்லைகளைக் காணவில்லை. இவ்வாறுதான் உருவாக்க வேண்டும் என்ற ஒரு முழுமையான வடிவத்தை அது எடுக்காது. அதாவது ஒறேச்சரில் நிர்ணயிக்கப்பட்ட வடிவம் இருக்காது" *(2007: 5)*.

இயற்கை அதீத நிலையின் உயர்ந்த எண்ணக்கரு கடவுளும் ஆன்மாக்களுமாகும். இயற்கை அதீதமும் இயற்கைக்கு மேற்பட்ட செயற்பாடுகளும் ஆன்மீகத்திலும் ஒழுக்கவியல் செயற்பாடுகளிலும் ஒன்றோடொன்று இணைத்துக் கொள்கின்றன. பெரும்பாலான மதங்கள் கடவுளை மனித ஆன்மாவில் இருந்தும் உலகத்திலிருந்தும் தூக்கி வெளியே ஒரு வாழ்விடத்தைக் கொடுத்துள்ளன. ஒழுக்கவியல் சம்பந்தப்பட்ட சுவர்க்கம், நரகம் பற்றிய நெறிமுறைகளை நாம் எழுதி வைத்துள்ளோம். ஆனால், அவை இரண்டையும் உலகத்தி னுள்ளேயே வைத்துள்ளோம். ஆனால், ஒறேச்சரில் கடவுள் என்கின்ற தன்மை இயற்கையிலேதான் கையாளப்படுகின்றது. ஒறேச்சரில் கடவுள் என்பது இயற்கையின் மிக உன்னதமான வெளிப்பாடு ஆகும். இயற்கையினதும் உருவாக்கத்தினதும் மிக முக்கியமான ஆன்மீக வெளிப்பாடு இறைவன் என்ற நோக்கு ஒறேச்சரில் பேணப்படுகின்றது (Ngugi, W.T.O., 2007: 6).

எனவே, ஒறேச்சரில் இயற்கை, உருவாக்கம், இயற்கை அதீதம், உருவாக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலை ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புபட்டனவாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒறேச்சர் அளிக்கையின் ஆக்கக் கூறுகள்**

ஆபிரிக்க ஒறேச்சர் நிகழ்த்துகைக் கலையாகவும், நாடக வடிவில் ஆக்கப்பட்ட வாய்மொழி வடிவமாகவும் உள்ளது (Ingrid Bjorkman, 1993:109). ஒறேச்சரின் அளிக்கை சொல் (பேச்சு), இசை, நடனம் ஆகிய தனித்தனியாகப் பிரிக்க முடியாத முலக்கூறுகளை உட்கொண்டுள்ளது. இந்த அனைத்துக் கூறுகளும் ஒன்றுடனொன்று சார்ந்ததாகவும், ஒன்றில் ஒன்று பங்களிப்புச் செய்வதாகவும் உள்ளன. இந்த ஒன்றையொன்று சார்ந்துள்ள தன்மை பேச்சுச் சொல், இசை, நடனம் என்பவற்றுக்கு இடையிலான உறவுகள் பற்றிய ஆபிரிக்கக் கருத்தியலில் ஆழமாகப் பதிந்துள்ளது.

ஒறேச்சர் அளிக்கையில் நிகழ்த்துவோருக்கும் சபையோருக்கு மிடையிலான உறவு பற்றி இன்கிறீட் ஜோர்க்மேன் (Ingrid, Bjorkman) என்பவர் கதை கூறல் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். கதையினைச் சொல்பவர்கள் சபையோர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப் பொறுத்தே கதை சொல்பவர்களின் ஆற்றல் மதிப்பிடப்படுகின்றது. திறமையுள்ள கதைசொல்பவர்கள் சபையோரின் மனநிலையினைப் புரிந்துகொள்ளும் ஆற்றலுடையவர்களாக மட்டுமன்றி திறமை வாய்ந்த நடிகர்களாகவும் உள்ளனர். அவர்கள் தாம் செய்கின்ற பாத்திரங்களை நன்கு புரிந்து செயற்படுபவர்களாகவும் உள்ளனர். இப்பாத்திரங்கள் மனிதத் தோற்றங்களாக, மிருகங்களாக அல்லது பூதங்களாகவோ இருக்கலாம். சபையோரின் பங்குகொள்ளலானது ஆபிரிக்க ஒறேச்சரின் பண்பாக உள்ளது. அவர்கள் நிகழ்த்துகையில் பங்கெடுப்பதோடு இணைந்து செயலாற்றுகின்றார்கள். கதை சொல்பவர்கள் சபையோரை அழைத்தல், அவர்களிடம் வினாக்களைக் கேட்டல் என்பவற்றினூடாக சபையோரைப் பங்குபற்றச் செய்கின்றனர். ஆனால், கதை கூறுபவர் அழைக்காத நிலையிலும் சபையோர் வினாக்களைக் கேட்டல், உணர்ச்சிவாய்ந்த உரைகளை நிகழ்த்துதல், நிகழ்த்துநனின் சொற்களைத் திரும்பத் திரும்ப அழுத்திக் கூறல் என்பவற்றைச் செய்கின்றனர். சபையோரின் இந்நிகழ்த்துகைப் பங்களிப்பு பலர் கூட்டிணைந்து பங்கு கொள்கின்ற நாடகத்தின் பகுதியாகவும் நாடகக் கூறாகவும் உள்ளது.

ஒறேச்சர் கதை கூறலை அடிப்படையாகக் கொண்டு நோனஸ் வொறிஷேட் (Knowles Borishade) என்பவர் ஒறேச்சரின் ஆக்கக் கூறுகளை ஐந்தாகப் பகுத்துள்ளார். அந்தவகையில் ஒறேச்சர் அளிக்கை அழைப்பாளர் (+இணைந்து பாடல் பாடும் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chorus), நொம்மோ[4] (Nommo), பதிலிறுப்போர், தெய்வீகக் குழுமங்கள், ஒருமைப்பாடு ஆகிய ஆக்கக் கூறுகளை உள்ளடக்கியுள்ளதாகக் கூறுகிறார். அளிக்கையில் இந்த ஆக்கக் கூறுகளுக்கு இடையிலான உறவினைப் பின்வரும் மாதிரியில் தருகிறார்.

இந்த மாதிரியின் மூலம் ஒறேச்சர் அளிக்கையின் செயல் ஒழுங்கு முறையை வொறிஷேட் எடுத்துக் காட்டுகின்றார். வொறிஷேட் இதனை விளக்கமாகக் கூறினாரோ இல்லையோ இந்த மாதிரியையே அனைத்து ஒறேச்சர் வகைகளுக்கும் பிரயோகிக்கின்றனர். அழைப்பவர் "ஆரம்ப ஆக்கக் கூறாக" இருக்கிறார். அவர்/அவள் சடங்கு உரையினைத் தொடங்கி வைப்பவராக உள்ளார். அத்துடன் இது நொம்மோவை வெளிப்படுத்துகின்ற ஆரம்ப நிலையாகவும் அமைகின்றது. கூடுதலான நிகழ்வுகளின்போது முடிவில் அவர் அல்லது அவள் கதையில் கூறப்படும் சமூக, அரசியல் பிரச்சி னைகளுக்கான தீர்வினை வழங்குவார். மேலும் இவர் சொல்லை வெளிப்படுத்துகின்ற நிகழ்த்துகைக் கவிஞராக மட்டுமன்றி உணர்வின் உயர்ந்த நிலையினைக் கொடுக்கும் பொருட்டு உளச் சக்தியினையும் ஆன்மீகச் செயற்பாட்டினையும் தூண்டுபவராக உள்ளார். அத்துடன் அவர் சடங்கு சார்ந்த ஒழுங்கமைவுகளைத் தொடங்குகின்றார். பக்கப்பாட்டுப் பாடுவோர் அழைப்பவரால் வெளிப்படுத்தப்படும் சொல்லை விளக்குவதோடு அதற்குச் சான்றும் அளிக்கின்றனர். "அது சரி" அல்லது "கற்பி" போன்ற சிறு தொடர்களை உரத்த குரலில் சொல்வதனுடாக அந்தச் சான்றினை அளிக்கின்றனர். இவ்வோசை சுட்டுகின்ற சொல் பலரால் வெளிப்படுத்தப்படுவதாக இருப்பதனால் அது "கூட்டின் முழு நிறைவு" என்ற கருத்தியலைப் பிரதிபலிப்பதாக உள்ளது (Wayne Rafferty and Sophie Salffner, 2006:14).

தெய்வீகக் குழுமம் என்பது கடவுள், ஊறுவிளைவிக்கும் சிறு தெய்வங்கள், புனித ஆவி, மூதாதையர்கள், மரணித்தவர்களின் ஆவிகள், பிறக்கப்போகும் ஆவிகள் ஆகியவற்றைக் குறிக் கின்றது. இவர்களும் இந்நிகழ்வினைப் பார்ப்பார்கள் என்று நம்பப்

4. இச்சொல் ஆபிரிக்க ஐதீகத்தில் இருந்து வந்ததாகும். அதாவது அமா (Amma) என்ற உயர் கடவுளால் படைக்கப்பட்ட ஒரு கடவுளே நொம்மோவாகும். அவர் தனது வார்த்தைகள் மூலம் எதனையும் உருவாக்கக் கூடிய சக்தியைப் பெற்றிருந்தார் (Wayne Rafferty and Spphie Salffner, 2006 :12).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படுகின்றது. இவர்கள் நீதிபதியாகவும் இச்செயல்முறையைச் செயற்படுத்துபவர்களாகவும் பார்க்கப்படுகின்றனர்.

ஆபிரிக்க ஒறேச்சரின் மையக் கருத்தியலாக நொம்மோ (Nommo) என்பது கொள்ளப்படுகின்றது. ஒறேச்சரில் பேசப்படும் வார்த்தையின் சக்திவாய்ந்த தன்மையைக் குறிக்கும் ஒரு கலைச் சொல்லாக நொம்மோ பயன்படுத்தப்படுகின்றது. அதாவது அது குறிப்பிட்ட அளிக்கையில் தெரிவிக்கப்படுகின்ற செய்தியை உள்ள டக்கமாகக் கொண்டது. ஆபிரிக்க ஒறேச்சர் கவிஞர்கள் சொற்களின் பயன்பாட்டினால் நிகழ்வினைச் சிறப்பாகச் செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள்.

மிக்க ஆற்றல் வாய்ந்ததாக உள்ள இந்த நொம்மோவின் சக்தி பல வழிகளில் மேலும் அதிகரிக்கச் செய்யப்படுகின்றது. அந்த வகையில்,

1. அழைப்பாளரின் மேம்பட்ட பண்புகள் (ஒழுக்கம், உறுதிப்பாடு, நோக்கு, திறன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அழைப்பாளரின் குறிப்பிட்ட சில பேச்சு நுட்பங்கள் (உணர்வுடன் கூடிய குரல், நிறுத்தங்கள், அமைதி, வாய்மொழி ஒலிகள்)

3. சடங்குசார்ந்த வடிவத்தில் பயன்படுத்துதல்

என்பவற்றின் ஊடாக நொம்மோவின் சக்தியை மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும் எனக் கூறுவர் (Wayne Rafferty and Sophie Salffner., 2006:13). அளிக்கையில் அழைப்பாளனால் வெளிப்படுத்தப்படுகின்ற பேச்சுமொழியின் ஆற்றல் இத்தகைய சூழல்களில் மேலும் மேம்படுத்தப்படுவதாக உள்ளது.

பதில் கூறுவோர் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு வருகின்ற சமூகமாகும். இவர்கள் இரண்டாம் நிலைப் படைப்பாளர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் அழைப்பவர்கள் சொல்வனவற்றிற்குத் தீர்ப்புக் கூறுபவர்களாக உள்ளனர். இவர்கள் அழைப்பவர்களின் நோக்கு, கூறப்பட்ட நீதி நெறி என்பவற்றைச் சார்ந்த செய்திகளையும், அழைப்பாளர்களின் செய்தி பற்றிய முக்கியமான விடயங்களையும் ஏற்றுக்கொள்வர், அல்லது மறுதலிப்பர்.

இங்கே அழைப்பாளர் / இணைந்து பாடும் குழுவினர், பதிலிறுப்போர் ஆகிய இரு தரப்பாரும் திறனாய்வு செய்வோராக உள்ளனர். ஆனால் ஒருவருக்கொருவர் ஒரு இலக்கை நோக்கிப் பங்காற்றுகின்றனர். அத்துடன் திருப்தியான முழுமையான தீர்வைக் காணுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். இந்த நிகழ்த்துகை உயர்ந்த அழகியல்சார்பு, பாரம்பரிய ஆபிரிக்க சமுதாயங்களால் வளர்க்கப்பட்ட ஒழுக்கவியல் தரம் ஆகியவற்றால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் விமர்சித்தல், அல்லது முன்னேற்றத்திற்கான ஆலோசனை கூறுதல் என்பவற்றைச் செய்யும் நோக்கத்துடன் அளிக்கையாளர்களைக் குறுக்கீடு செய்வதற்குச் சுதந்திரம் பெற்றுள்ளார்கள். இது ஒரு சடங்குநிலைப்பட்ட வடிவ அமைப்பினைக் கொண்டதாக உள்ளது. ஒருமைப்பாடு என்பது தீர்வுக்குரிய நகர்வு அல்லது செயற்பாட்டிற்கான அடிப்படையாக உள்ளது. இது அழைப்பாளர்களால் அளிக்கப்படுகின்றது; இணைந்து பாடும் குழுவினரால் உறுதிப்படுத்தப்படுகின்றது; பதிலிறுப்போரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றது. ஒருமைப்பாடு தீர்வை நோக்கிய நகர்வுக்கு அவசியமானதாக உள்ளது.

ஒறேச்சர் அளிக்கையின் செயல் ஒழுங்குமுறையினைச் சுருக்கமாகக் கூறின், அழைப்பாளர் பேச்சுச் சொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புகின்றார் இணைந்து பாடும் குழுவினர் அதைப் கேட்டு உறுதிப்படுத்துகின்றனர்/சான்றுப்படுத்துகின்றனர். தெய்வீகக் குழுமங்கள் அதைக் கேட்டு மதிப்பிட்டு, யோசனை தெரிவித்து வழிவிடுகின்றனர் நொம்மோ பேச்சுச் சொல்லின் உள்ளடக்கமாக உள்ளது. பதிலிறுப்போர் மதிப்பிட்டு ஏற்றுக்கொள்பவர்களாக அல்லது மறுப்பவர்களாக உள்ளனர். இவற்றினூடாக பேச்சுச் சொல்லின் மூலம் ஒருமைப்பாடு அடையப்பெறுகின்றது.

எனவே ஆபிரிக்க ஒறேச்சர் அளிக்கைகள் ஒரு பிரச்சினைக்குத் தீர்வினை எட்டுவதை மையமாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

### ஒறேச்சரில் பயன்படுத்தப்படுகின்ற கலைப்பண்புக் கூறுகள்

ஆபிரிக்க ஒறேச்சர் அளிக்கையில் பலவகையான கலைப்பண்புக் கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தற்செயலான நிகழ்வுகளின் விளைவாக அல்லாமல் கருத்தியல் சார்ந்த பின்புலத்தை வெளிப் படுத்துவனவாகவும் ஆபிரிக்கர்களின் வாழ்வை விளங்கிக் கொள்ளச் செய்வனவாகவும் உள்ளன. அந்தவகையில் மியூட்டியர் (Mutere) என்பவர் ஒறேச்சரின் கலைப்பண்புக் கூறுகளாக பின்வருவனவற்றைக் கூறுகின்றார்:

1. அழைத்தலும் பதிலிறுத்தலும் (call and Response)
2. கிமோயா (Kimoya)
3. முகமூடி நடனம் (Masquerade)
4. பேசும் பறை (Talking Drum)
5. உடல் அசைவுடன் கூடிய வாய்மொழி (Kinetic Orality)

என்பனவாகும். இவற்றை 'வாய்மொழி அழகியலின்' பகுதிகளாக அவர் குறிப்பிடுகின்றார் (Mutere, M.,n.d., [1], [2], [3], [4], [5]. இவை அனைத்தும் நல்ல ஒறேச்சர் நிகழ்த்துகையில் வெளிப்படுகின்றன.

'அழைத்தலும் பதிலிறுத்தலும்' என்பது ஒரு இலக்கியப் பண்பாக மட்டுமன்றி ஒரு வலுவான ஆன்மீக அடித்தளத்தைக் கொண்டதாகவும் உள்ளது. அத்தோடு அது முக்கிய சமூகப் பணியினையும் ஆற்றுகின்றது. குறிப்பாக இது ஆபிரிக்கச் சமூகங்களில் சமூக, அரசியல் ஒழுங்கை நிலைநாட்டுகின்றது. இது இத்தகைய ஒழுங்கை கருத்தாடலினூடாக அடுத்த சந்ததிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிக்கின்றது. கல்வியிலும் சமூகமயமாக்கலிலும் இது முக்கிய பங்கை வகிக்கின்றது.

கிமோயோ என்பதற்கு 'ஆன்மாவின் மொழி' என அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இது ஒறேச்சரில் இரு விடயங்களை இணைக்கின்ற ஒரு பாலமாகச் செயற்படுகின்றது. உதாரணமாக, படைப்பையும் படைப்பாளனையும், ஆன்மாவையும் உடலையும், ஆன்மீக உலகையும் உண்மையில் உள்ள உலகையும், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒன்றுடனொன்று அது இணைக்கின்றது.

முகமூடிகள் ஆபிரிக்க ஒறேச்சர் அளிக்கையில் மிகவும் சக்திவாய்ந்தவையாக உள்ளன. இவை உருவம் சார்ந்த பண்புகளை வெளிப்படுத்துவனவாக மட்டுமன்றி கட்புலனாகாதவற்றைக் காட்சிப் படுத்துவனவாகவும் உள்ளன. உதாரணமாக தெய்வம், மூதாதையரின் ஆத்மா, இறப்பு போன்ற ஒரு கருத்தியல் அல்லது உடல் வலிமை போன்ற பண்பின் ஒரு ஆளுமைக் கூறு என்பவற்றை அவை கூறலாம். இங்கு முகமூடி அணிந்து ஆடுபவர் மூலமாக நொம்மோ விபரிக்கப்படுகின்றது. முகமூடி அணிந்திருக்கும் ஆட்டக்காரர் தானாகக் கதைப்பதில்லை. ஆனால் அவர் எந்தக் குணவியல்பை அல்லது எந்த அமானுச சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றாரோ அதனை முகமூடி ஊடாக வெளிப்படுத்துவார்.

முகமூடியைப் போல் பேசும் பறை என்ற கலைக்கூறும் நொமோவை வெளிப்படுத்தும் மற்றொரு சாதனமாக உள்ளது. மூதாதையரின் குரல்கள் பறையில் இருந்து வருவதாக இந்த மக்கள் நம்புகின்றனர். அதாவது வாய்மொழி - அழகியல் நிகழ்வில் பறையில் மூதாதையரின் ஆன்மாக்கள் வாழ்வதாக நம்பப்படுகின்றது. அதனால் அக்கருவிகள் பேசும் எனக் கருதுகின்றனர். பறை அதன் ஓசைநயத்தின் (rhytham) வாயிலாக ஆன்மாக்களின் குரல்களை வெளிப்படுத்த வழிசெய்கின்றது. எனினும் தனியே பறை மட்டும் ஒரு ஆன்மாவிற்கான தற்காலிக உறைவிடமாக ஆகிவிடுவதில்லை. ஏனைய இசைக் கருவிகளும் ஆட்டக்காரனின் உடலும்கூட ஆன்மா ஒன்றை ஏற்றுக்கொள்ளும். இவ்வாறு இசை, நடனம் மூலம் நொம்மோ வெளிப்படுத்தப்படுகின்றது. இசைக் கருவிகள் சக படைப்பாளிகளாகவும் நொம்மோவை வெளிப்படுத்துபவையாகவும் இருப்பதனால் 'பேசும் பறை' என்ற கலைக் கூறானது ஒரு தொடர் பாடல் உத்தியாகக் கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி - அழகியல் நிகழ்வுகளில் பங்குபற்றுநர் வாய் மொழி வெளிப்பாட்டை (சொல்லின்) மிகைப்படுத்திக் காட்டும் பொருட்டு நடனம் உள்ளிட்ட உடல் அசைவுகள், முகம் சார்ந்த வெளிப்பாடுகள், உடை போன்ற காட்சி சார்ந்த விடயங்கள் என்பவற்றை வெளிப்படுத்திக் காட்டுவர். அதேவேளை வாய்மொழி வெளிப்பாடானது அழைப்பவர்/ கதை கூறுவோர் ஆகியோரால் வெளிப்படுத்தப்படும் ஒற்றைச் செயல்முறையல்ல. பார்வையாளரும் இதற்குச் சிறந்த பங்களிப்புச் செய்கின்றனர். பதிலிறுத்தல் என்ற செயல்முறையினூடாக அவர்கள் இப்பங்களிப்பைச் செய்கின்றனர். உதாரணமாக 'உண்மையைச் சொல்' போன்ற உற்சாகமூட்டும் தொடர்களை உரக்கக் கூறுவதனூடாகவும், ஓசைநயத்துடன் கூடிய அவர்களின் கைதட்டல்களினூடாகவும் இப்பங்களிப்பை வழங்குகின்றனர்.

எனவே ஒறேச்சர் அளிக்கையில் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு கலைப்பண்புக் கூறுகள் அந்த அளிக்கையின் நொம்மோவை வெளிப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

ஒறேச்சரில் சடங்குநிலைத் தொடர்பாடல்

ஆபிரிக்க சமூகத்தில் சடங்குநிலைப்படுத்தப்பட்ட கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கின்ற ஓர் அம்சம் ஒறேச்சர் ஆகும். சடங்குநிலைத் தொடர்பாடல் வழக்கம், விசேடம், அசாதாரணம் என்ற மூன்று வேறுபட்ட நிலைகளில் நிகழ்கிறது. ஆபிரிக்க ஒறேச்சர் சடங்குநிலைத் தொடர்பாடலை (மேற்படி நிலைகளில் ஒன்றை) ஆக்கக் கூறுகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. அத்துடன் ஆபிரிக்க ஒறேச்சரில் சடங்குநிலைத் தன்மை ஆன்மீக மட்டம், அளிக்கை மட்டம், செயற்பாட்டு மட்டம் என்ற மூன்று நிலைகளில் இடம்பெறுகிறது. செயற்பாட்டு ரீதியாக எல்லா ஒறேச்சரும் ஒத்த இலக்குடையனவாக உள்ளன. அது மகிழ்வூட்டலை நோக்காகக் கொண்டுள்ள அதேவேளை சபையோருக்கு வாழ்வின் பல்வேறு துறைகளில் அறிவூட்டலைச் செய்வதையும் பொருளாகக் கொண்டுள்ளது. தெளிவான உண்மை யாதெனில் இக்கற்பித்தல்கள் சடங்குநிலைப்படுத்தலை கருத்திற்கொண்டதாக உள்ளமையாகும். ஒரு நிகழ்த்துகையில் இடம்பெறும் நடத்தைப்பாங்குகள் கற்றுக்கொள்ள வேண்டிய நியதிகளாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கை நிலையில் சடங்குநிலைப்படுத்தல் தன்மை ஆபிரிக்க ஒறேச்சரில் ஆர்வத்தைத் தூண்டுகின்ற விடயமாக உள்ளது. அளிக்கையின்போது சம்பவங்களிலும் செயற்பாட்டிலும் மக்கள் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு அதனை நிகழ்த்துவது மிகவும் முக்கியமானதாகும். கதை சொல்கின்ற இட அமைவு, நிகழ்கின்ற நேரம், மக்கள் இருக்கின்ற ஒழுங்கு என்பனவெல்லாம் சடங்கு நிலைப்படுத்தலினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். கதைகூறல் ஒரு கலை என்ற வகையில் மேம்பட்ட பயிற்சித் திறனும் அநுபவமும் வெளிப்படும் வகையில் அது நிகழ்த்தப்படுகின்றது. இங்கு நிகழ்த்துநர்களாக மக்கள் ஈடுபடுவதில் வரையறைகள் உள்ளன. சில சமூகங்களில் வயதானவர்கள் அல்லது தலைமைப் பூசை நிகழ்த்துபவர் ஒரு ஐதீகத்தைக் கூறுவார். அது ஒரு பயபக்தி நிறைந்த கதையாக இருக்கும். அது இயற்கை மீறிய விடயங்களுடன் அல்லது தெய்வத்தன்மை பெற்ற மனிதர்களுடன் தொடர்புபட்டதாக இருக்கும். கதைசொல்பவர்கள் சிலவேளைகளில் பாணர்களை வரவழைத்து விசேட பயிற்சிகளைப் பெறுகின்றனர். இதன்மூலம் அவர்களுக்கு ஏற்படும் வாய்மொழி, இசை, நினைவாற்றல் அறிவு என்பன தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துக்கொள்கின்றனர். உண்மையான கதைசொல்லல் சூழ்நிலை சடங்குநிலைப்பட்ட ஒழுங்கமைவினைக் கொண்டிருக்கும். இங்கு சம்பவங்களின் குறிப்பிடத்தக்கதொரு ஒழுங்குமுறை இருக்கின்றதா எனப் பரிசீலிக்கப்படுகின்றது. இவ்வொழுங்குமுறை ஒவ்வொரு கதை சொல்லல் அமர்விலும் பின்பற்றப்படுகின்றது (Wayne Rafferty and Sophie Salffner., 2006: 20-21).

தொடர்பாடலுக்குரிய வாய்மொழி தொழில்நுட்பக் கூறுகளாக நோள்ஸ் வொறிஷேட் பின்வரும் அம்சங்களைக் கூறுகின்றார்:

1. பக்கப்பாட்டுக்காரர்களால் உரக்கக் கூறப்படும் சிறு வாக்கியங்கள். அது அழைப்பாளர்களின் சொற்களைத் தெளிவு படுத்துவனவாகும். உதாரணம்: 'கற்றுக்கொடு', 'அது சரி'.

2. அழைப்பாளர்களால் செய்யப்படும் இடைநிறுத்தத்தின் பயன்பாடு.

3. சொல்லின் வலிமையை மேம்படுத்துவதற்குச் செய்யப்படும் அழைப்பாளர்களின் பேச்சுக்குரல் தொடர்பான நுட்பங்கள்.

என்பனவாகும் (மேற்கோள்: Wayne Rafferty and Sophie Salffner., 2006: 20-21). பங்குகொள்ளலுக்கான மொழிப்பிரயோக விதிகளும், வாய்மொழிக் கதைகூறல் அளிக்கைகளின் செயலாற்றல் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்புக் கூறலும் தொடர்பாடலுக்கான வாய்மொழித் தொழில்நுட்பக் கூறுகளாக உள்ளதாக அகருசி (C.Agatucci) கூறுகின்றார் (மேற்கோள்: Wayne Rafferty and Sophie Salffner., 2006: 11).

எனவே சடங்குநிலைத் தொடர்பாடல் வகைப்பாடுகளைச் சுருங்கக்கூறின், கட்புல ரீதியான சடங்குநிலைத் தொடர்பாடல் கட்புல இயக்கம் சார்ந்த உடை, முக வெளிப்பாடுகள், நடனம் உள்ளிட்ட உடல் அசைவுகள் என்பவற்றின் வாயிலாக – சிறப்பாக முகமூடிகளின் நுட்பமான பயன்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. செவிப்புலன் சார்ந்த சடங்குநிலைத் தொடர்பாடல் என்பது பாடல் சுருதி, வாசிக்கப்படும் இசையின் சந்த ஓசை, றம்மின் சந்த நயங்கள், பார்வையாளரின் 'பொறுப்புவாய்ந்த பங்களிப்பு' (பார்வையாளர் தமது கைகளைத் தட்டி ஓசை எழுப்புதல், அவர்கள் கால்களை அழுத்தி மிதித்து நடத்தல்) என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே ஒறேச்சர் அளிக்கையானது ஒரு இசை நிகழ்வாக அமைகின்றது.

ஒறேச்சரின் நோக்கம்

ஒறேச்சர் மக்களின் மகிழ்ச்சியைப் பேணுவது மட்டுமன்றி மிகவும் பரந்த செயற்பாட்டினை மேற்கொள்கின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி அது மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. ஆனால் வழிகாட்டலையும் அறிவூட்டலையும் செய்கின்றது. இது பண்பாட்டு நடத்தைகள், மனிதருக்கான முன்மாதிரிகள் என்பவற்றை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் ஆபிரிக்க சமூகங்களினுள்ளே அரசியல் நிலை, வலுவூட்டல்கள் என்பவற்றையும் உறுதிப்படுத்துகின்றது. அவ்வாறு இது அளிக்கையில் சபையோரின் அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ளல், ஆராய்தல், ஒழுங்கமைத்தல் என்பவற்றுக்கான ஒரு ஊடகத்தை ஏற்படுத்துகின்றது. ஒறேச்சர் அறநெறி வழிகாட்டலினாலும், கலந்துரையாடலினாலும் முரண்பாடுகளுக்கான தீர்வினைக் காண்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

> ஒறேச்சர் முக்கிய சமூக, ஒழுக்கவியல் நோக்கங்களை நிறைவேற்றுகின்றது. பண்பாடு, அநுபவம், மதிப்புக்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான ஒரு முறையாக இது உள்ளது. மற்றும் வாய்மொழிச் சமூகங்களின் நடத்தைப் பாங்குகள், உணர்வுகள், மதிநுட்பம், அறிவு என்பவற்றைக் கடத்துவதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது (Wayne Rafferty and Sophie Salffner., 2006: 11).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடுகள் அனைத்தையும் செய்வதற்கு அளிக்கையாளர்கள் கடந்த காலத்தினதும் தம் மூதாதையர்களதும் ஆளுமையினைத் துணையாகக் கொண்டிருப்பர். ஆகவே ஒறேச்சர் பழங்கால பண்பாட்டு வாழ்வினதும் மதிநுட்பத்தினதும் எச்சங்களை உட்கொண்டதாகக் கருதப்படுகின்றது. ஆயினும் ஒறேச்சர் மாற்றமடைய முடியாததாகவும் வளர்ச்சியற்றதாகவும் உள்ளது எனக் கருதப்படவில்லை. ஒறேச்சர் படைப்புக்கள் சமுதாய நிலைகள், நடத்தை முறைகள் என்பவற்றைத் திருத்தி அமைப்பதுடன் புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளன. ஒரே படைப்பு காலம், பண்பாடு, இடம், வட்டார நடை, நிகழ்த்துநர், சபையோர் என்பவற்றிற்கு ஏற்ப மிகவும் வேறுபட்ட வகைகளில் அமையலாம்.

ஒறேச்சரை நகலாக்கம் செய்தல் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட் பட்டதாக அமையவில்லை. அச்சடிக்கப்பட்டு பேப்பரில் நிலையான தாக அமைக்கப்பட்டுள்ள சொல் போல் அது இறுகியதாகவும் இல்லை. இது சொந்த வெளிப்பாட்டை, புத்துணர்ச்சியை, புதிது புனைதலை, படைப்பாற்றலை அனுமதிக்கின்றது. ஒவ்வொரு நிகழ்த்துகையிலும் ஆக்கக் கூறுகள் உணர்வுநிலைக்கு உட்பட்டதாக அல்லது உணர்வுநிலைக்கு உட்படாததாக மாற்றமடைகின்றன. ஒறேச்சரின் உள்ளடக்கம் சபையோருக்கும் சூழ்நிலைக்கும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப மாற்றமடைவதாக உள்ளது. பழைய படைப் புக்கள் நவீன வாழ்க்கைப் பாணியைத் தெளிவுபடுத்தும் நோக்குடன் மாற்றப்பட்டிருக்கின்றன. இதன்படி நிகழ்த்துபவர்கள் இலக்கியக் கலையின் உண்மையான படைப்பாளிகளாகக் கருதப்படுகின்றார்கள். அத்துடன் எல்லா ஒறேச்சரும் ஒரு உணர்வாற்றலின் ஒரு தனித் தன்மை வாய்ந்த இலக்கிய ஆக்கமாக உருவாகிறது. இந்த ஆக்கம் குறிப்பிட்ட ஒரு நிகழ்வினை உருப்படுத்திக் காட்டுகின்றது. ஒறேச்சர் நிகழ்த்துகை பற்றி சூகி கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

> "ஒறேச்சரின் முக்கிய அம்சம் அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வியாகும். இது ஆர்வத்தைத் தூண்டி இறுதியில் திருப்திப் படுத்துகின்றது. புதிய ஆர்வத்தைத் தூண்டுபவரே உண்மையான நிகழ்த்துநராவார். குறிப்பிட்ட ஒறேச்சரின் பொதுவான விடயம், முடிவு ஆகியவற்றை பார்வையாளர்கள் அறிந்துகொண்டாலும் பிரதான நிகழ்த்துநர் அப்பார்வையாளரைத் திருப்திப்படுத்துவதற்காகவும் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் இன்னும் புதுப்பிக்கலாம். ஒறேச்சரை நிகழ்த்தும்போதும் திரும்ப நிகழ்த்தும்போதும் அது புதிதாக மாறுகின்றது" (2007: 4).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஒறேச்சரின் பார்வையாளரைத் திருப்திப்படுத்தும் நோக்கினையும் அதன் மாற்றமுறும் தன்மையினையும் வெளிப்படுத்துகின்றார்.

ஒறேச்சர் ஆபிரிக்கப் பண்பாட்டு விடயங்களின் பொது நியதிகளை கூர்ந்து நோக்குகின்றது.

ஒறேச்சரின் இலக்கிய நயம் வாய்ந்த தன்மைகளை நோள்ஸ் வொறிஷேட் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

1. ஒறேச்சர் ஆபிரிக்க கலாசார எதிர்கால எதிர்பார்க்கைகளைப் பின்பற்றுவதாகவும் ஒழுக்கத்தரம், அதிகாரம் என்பவற்றைக் கருத்திற் கொள்வதாகவும் உள்ளது.

2. அது பாரம்பரிய சமுதாய நியதியை ஒப்புக்கொள்வதை பகுப்பாய்வு ரீதியாக நோக்குகின்றது.

3. ஆபிரிக்க ஒறேச்சர் சமுதாய யதார்த்த நிகழ்வுகளுடன் இணக்கமான கருத்துக்களைத் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (மேற்கோள்: Wayne Rafferty and Sophie Salffner, 2006:10).

இங்கு ஒறேச்சரின் முற்போக்கான சமுதாய நோக்கினை அவர் எடுத்துக்காட்டுகின்றார். ஒறேச்சரின் நோக்கம் மகிழ்ச்சியை மட்டும் கொடுப்பது அல்லது காதல் உணர்வுகளை உண்டுபண்ணுவது மட்டுமல்ல. அது சபையோரைத் தெளிவுபடுத்துவதாகவும் கிளர்ச்சியை உண்டுபண்ணுவதாகவும் உள்ளது. சில நற்பயன் அளிக்கும் செயற்பாடுகள் அல்லது ஆன்மீகச் செயற்பாட்டை நிகழச்செய்வதன் மூலம் அதனை உண்டுபண்ணுகிறது. அதன் அளிக்கை சமூகத்தை மாற்றுவதற்கும் உயர்த்துவதற்கும் பல கூறுகள் இணைந்த ஒரு உருவமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஒறேச்சர் நடைமுறை வாழ்க்கைச் சூழலை வருணிக்கும் அதேவேளை எப்போதும் ஒரு நீதி போதனைச் செய்தியினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. ஒறேச்சரின் வெளிப்பாடு மகிழ்ச்சியளிப்பதாக இருந்தாலும் அறிவூட்டலில் அது குறைவுள்ளதாக இருக்காது. அதன் நீதி போதனை செய்யும் நோக்கை மிகத் தெளிவாகக் காணலாம். அந்த நீதி போதனைகள் எப்போதும் கேட்பவர்கள் தெரிந்திருக்க வேண்டியனவாக உள்ளன. அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ள விடயங்களையும் அவசியமான விடயங்களையும் கற்பிக்கும். இவ்வகையில் அளிக்கை முடிந்த பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துபவர் வழக்கமாகப் பின்வருமாறு கூறுவார்: 'இப்போது நீங்கள் இந்தக் கதையிலிருந்து எதனைக் கற்றுக்கொள்ளலாம்' என்பார். பின்னர் பார்வையாளர்களிடையே ஒரு விரிவான கலந்துரையாடல் நடைபெறும். ஒறேச்சர் வாழ்வின் வகைகளைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. அது சமூகத்தின் நடத்தை நியதிகளுக்கு இணங்க ஒழுக்கநெறிப்பட்டதாக இருக்கும். அவர்கள் வாழ்வை வாழ்வதற்கான சிறந்த வழிகாட்டலையும் செயல்திறனுட்பத்தினையும் வழங்குகின்றார்கள். பழைய எடுத்துக்காட்டுகளினூடாக சம்பிரதாய மான நடத்தைகளை ஒருவர் கைக்கொள்ளாமை காரணமாக வாழ்க்கை எவ்வாறு கெட்டுப்போகின்றது என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். சமூகத்தினுள்ளே இடையூறினை விளைவிக்கக் காரணமாக இருப்பவரினால் வாழ்வு எவ்வாறு கெட்டுப் போகின்றது என்று அவர்கள் விளக்குகின்றார்கள். அத்தோடு ஆக்கபூர்வமான செயற்பாட்டு மாதிரிகள் ஊடாக நடத்தை முறைகளைப் பின்பற்றுபவர்கள் எவ்வாறு வெற்றி ஈட்டுகின்றார்கள் என்பதையும் காட்டுகின்றார்கள். இக்கதைகள் குடும்பத்தினுள்ளும், கிராமத்தினுள்ளும், இனக் குழுவினுள்ளும் இணக்கத்தையும் ஒன்றிணைவையும் ஏற்படுத்த ஊக்கமூட்டுகின்றன (Ingrid, Bjorkman., 1993:109-110).

அங்கத ஒறேச்சர் பாடல்களை எடுத்துக்கொண்டால் அப்பாடல் களின் அளிக்கை நோக்கம் சமூக வழிப்படுத்தலும் மகிழ்வூட்டலுமாக அமைகின்றது. இங்கு குற்றச் செயல்கள் அங்கதமாகப் பாடப்படு கின்றன. அங்கதம், தாக்குதல் ஆகியன அதன் பிரதான ஆயுதங்களாக அமைகின்றன. சிலவகை அங்கதப் பாடல்கள் (ஆண்கள் அங்கதம், பெண்கள் அங்கதம்) குற்றமிழைத்தவரை நேரடியாகக் கேலி பண்ணித் தாக்குவனவாக அமைகின்றன. அதாவது இவை தனியாள் நிலைப்பட்டவையாக உள்ளன. சில அங்கதப் பாடல்கள் (வகைமாதிரி அங்கதம்) அவ்வாறன்றி குறிப்பிட்ட வகைக் குற்றங்களைச் செய்தோரைப் பொதுவாக எள்ளிநகையாடுவனவாக உள்ளன. அந்தவகையில் இப்பாடல்கள் சமூகத்திலே பல்வேறு வகையான குற்றங்களைப் புரிகின்ற மக்களைத் தண்டித்து வழிப்படுத்துவதற்கான ஒரு கருவியாக அமைவதோடு சுவைஞரை மகிழ்ச்சிப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன (Ohale, Christine Nwakego., 2003:130-32).

ஒறேச்சர் நவீன கால வாழ்க்கைப் போக்கிற்கேற்ப மாற்ற மடைந்துள்ளது என்னும்போது அதில் பெண்களின் உணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடு என்பது முக்கியப்படுகின்றது. குறிப்பாக ஒறேச்சரின் முக்கிய வகையான கதைசொல்லலை எடுத்தால் கதைசொல்பவர்களாக அதிகம் பெண்களே இருக்கின்றனர். இவர்களின் கதைகளினூடாக பாரம்பரிய சமூகம் பெண்கள் பற்றிக் கொண்டிருந்த நோக்கினைப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆபிரிக்க ஒறேச்சர் பற்றி அய்வு செய்த கென்னிய நாட்டு ஆய்வாளர் விக்கிளி கியரி (Mwikli kieti) என்பவர் ஆபிரிக்க ஒறேச்சரில் பெண்கள் பற்றிய மனப்பதிவைத் தெளிவுபடுத்தி உள்ளார் (மேற்கோள்: Ingrid Bjorkman., 1993:111). ஆபிரிக்க ஒறேச்சர் பெண்களின் தாழ்வுநிலை பற்றித் தெளிவான சான்றுகளைக் கொடுக்கின்றது. கூடுதலான கதைகள் சமுதாய நியதிகளைக் கடைப்பிடிக்குமாறு தமது சபையோருக்கு வற்புறுத்திக் கூறுகின்றன. சமுதாய நியதிகளை நன்னிலையில் வைத்திருக்க அவை முயல்கின்றன. இச்சமுதாய நியதிகள் பெண்களை ஒடுக்குகின்றன; அவை அவர்களுக்கு பல கடமைகளை வழங்குவதோடு பெண்களுக்கு எதிராக அவர்களின் கடமைகள் மீது திணிப்பைச் செய்கின்றன (Ingrid Bjorkman., 1993: 111).

இன்னொரு புறத்தில் ஆபிரிக்க ஒறேச்சர் சுதந்திரமான பெண்களின் செயற்பாடுகள் பற்றியும் சித்திரிக்கின்றன. சில கதைகள் ஒடுக்குமுறைகளைக் கொண்டுள்ள சமுதாய நியதிகளுக்கு எதிராக பெண்கள் எவ்வாறு தமது எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றன. இந்த எதிர்ப்பு ஆக்கபூர்வமான சமூக மாற்றத்திற்கு இட்டுச் செல்வதாக உள்ளது. இவ்வாறான ஒரு கதையே 'Wacu and the Eagle' என்னும் கிகுயு மொழியில் நிலவும் கதையாகும். இக்கதை ஆணாதிக்க மரபுகளுக்கு எதிரான ஒரு இளம் பெண்ணின் எதிர்ப்பினால் எத்தகைய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை எமக்குச் சொல்கின்றது. சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்கு மாறாக அமையும் பெண்களது சுதந்திரம், ஆற்றல் போன்றன இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன. இங்கு ஆணாதிக்க சமூகத்தின் நடத்தை முறைகளை உடைக்கும் வகையில் அமையும் பெண்களின் சுதந்திரம் வெளிப்படுத்தப்படுகின்றது. இப்படைப்புகளில் மரபுவழிப்பட்ட நடத்தை முறைகளில் இருந்து விடுபட்ட பெண்களின் தனித்தன்மை வாய்ந்த ஆற்றலை வெளிப்படுத்துவதில் மிக்க அக்கறை செலுத்தப்பட்டுள்ளது. ஆபிரிக்கப் பெண் ஒறேச்சர் படைப்பாளிகள் 'மக்களின் ஆசிரியர்கள்' என்று கருதப்படுகின்றார்கள். அவர்கள் தமது மண்ணுக்குரிய சொந்த ஒறேச்சரின் உள்ளடக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவ விபரிப்புக்களில் தமது சார்புநிலையினை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றனர். இச்சூழலில் கதை சொல்பவர்களின் தனித்தன்மை வாய்ந்த படைப்பாற்றல் சமூகத்தில் பயனுடைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக இன்கிறீட் ஜோர்க்மேன் கூறுவார் (1993: 111-112).

எனவே, ஆபிரிக்க ஒறேச்சரின் முதன்மை நோக்கங்களாக சமூக வழிப்படுத்தல், மகிழ்வூட்டல், சமூக மாற்றம் ஆகியன அமைந்துள்ளன.

### ஆபிரிக்க ஒறேச்சர் பற்றிய ஆய்வுகள்

ஆபிரிக்காவில் வாய்மொழி மரபினையும், எழுத்து மரபினையும் இணைத்து நிற்கும் ஒறேச்சர் அந்த மக்களின் கலாசாரத்தையும் அடையாளங்களையும் எடுத்துச் செல்லும் ஒரு தேசிய இலக்கிய வடிவமாக செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. இது பற்றி வெளிவந்த பல்வேறு ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் ஆபிரிக்க ஒறேச்சரின் பின்னணி, உருவாக்கம், பண்புக் கூறுகள், அது பற்றிய கோட்பாடுகள், அழகியல் வெளிப்பாடு எனப் பல்வேறு விடயங்களையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

கென்னிய எழுத்தாளரும் ஆய்வாளருமான கூகி வா தியாங்கோ (Ngugi Wo Thiong'o) எழுதிய 'Penpoints, Gunpoints and Dreams: Towards a Critical Theory of the Arts and the State in Africa என்ற நூல் பின்காலனித்துவச் சிந்தனைகளை வெளிப்படுத்துவது. இந் நூலில் இடம்பெறும் 'Oral power and Burophone Glory : Orature, Literature and Stolen Legacies என்ற பகுதியில் ஒறேச்சர் ஒரு பூரணத்துவமான அழகியல் முறையாக ஆய்வு செய்யப்படுகின்றது. அளிக்கையும், கலை வடிவங்களின் இணைப்பும் ஒறேச்சரை வரையறுக்கும் இரு பண்புகளாக கூகி காட்டுகின்றார். அந்தவகையில் அளிக்கை சார்ந்த அழகியலை வெளிப்படுத்தும் அம்சங்களாக இட நிர்மாணிப்பு, நேர அமைப்பு, நிகழ்ச்சிச் சூழ்நிலை அமைப்பு, சபையோர் - நிகழ்த்துவோர் உறவு என்பவற்றை அவர் எடுத்துக் காட்டுகின்றார். ஒறேச்சர் பல்வேறுபட்ட கலை வடிவங்களை ஒன்றிணைத்துள்ள தன்மையானது அதனை ஒரு பூரணத்துவமான அழகியல் மாதிரியாக வெளிக்காட்டுவதாக அவர் கூறுகின்றார் (1998: 111-128). அவர் ஆபிரிக்க ஒறேச்சரின் கோட்பாட்டு அம்சங்கள் பற்றி கவனம் செலுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'Penpoints, Gunpoints and Dreams' என்ற நூலை மையப்படுத்திய கூகியுடனான சார்ள்ஸ் கன்ரலுபோ (Charles Cantalupo) வின் பேட்டி 'பிரவாதம்' சஞ்சிகையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது ஆபிரிக்க ஒறேச்சரின் முதன்மைப் பண்புகளான அளிக்கை, கலை வடிவங்களின் இணைப்பு என்பவை பற்றிய தெளிவைத் தருகிறது (கனகரத்தினா, ஏ. ஜே., *2003: 38-53*).

கூகியின் "Notes towards a Performance Theory of Orature என்ற ஆய்வுக் கட்டுரை ஒறேச்சர் பற்றிய கோட்பாட்டு விளக்கமாக அமைகின்றது. ஒறேச்சர் கோட்பாட்டில் முக்கிய கூறுகளாக அமைகின்ற இயற்கை (nature), போசித்து வளர்த்தல் (nurture), இயற்கை அதீதம் (super-natural), உருவாக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலை (super nurtural) ஆகியன பற்றியும் ஒறேச்சரில் இந்நான்கு அம்சங்களும் ஒன்றுடனொன்று எவ்வாறு இணைந்த செயற்பாடுகளாக உள்ளன என்பது பற்றியும் கூகி ஆராய்கின்றார். அத்துடன் ஒறேச்சரின் மைய அம்சமாக உள்ள நிகழ்த்துகை பல்வேறு ஒறேச்சர் கூறுகளைப் பிணைக்கும் தன்மை பற்றியும் எடுத்துக்காட்டுகின்றார் (*2007: 5-7*).

கூகி தனது Decolonising the Mind என்ற நூலில் ஆபிரிக்காவில் காலனித்துவ மொழிகளின் ஆதிக்கம் காரணமாக உள்ளூர் மொழிகளில் நிலவிய ஒறேச்சர் அருகியதாகக் கூறுகின்றார். இந்நிலையில் தாம் புதிய கொள்கையை முன்வைத்ததாகக் கூறுகின்றார். அந்தவகையில் ஒறேச்சருக்குப் பாடவிதானத்தில் முக்கிய இடங்கொடுக்க வேண்டும் என்ற தேசிய மட்டத்திலான அழைப்பை விடுத்ததாகக் கூறுகின்றார். இவ்விடயம் பற்றிக் கூறும்போது ஆபிரிக்க பாமர மக்களின் இலக்கியமாக உள்ள ஒறேச்சரின் தன்மைகளையும், அதனைக் கற்பதன் மூலம் கிடைக்கும் பயன்களையும் விளக்குகின்றார் (*1986 : 12*).

மியூட்டியர் (Mutere) என்பவர் ஒறேச்சரில் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு கலைப்பண்புக் கூறுகள் பற்றி ஆய்வு செய்துள்ளார். அந்தவகையில் அவரின் 'Motif: Call and Response' என்ற கட்டுரை ஆபிரிக்க ஒறேச்சர் நிகழ்த்துகையின் அடிப்படை அம்சங்களான அழைத்தல், பதில்கூறல் என்பன பற்றிய ஆய்வாக அமைகின்றது (Mutere, M., n.d., [1]).

Motif: Kimoyo ("mojo"), என்ற கட்டுரையில் ஆன்மாவின் மொழியாகக் கொள்ளப்படும் கிமோயோ என்பது ஒறேச்சர் அளிக்கையில் பல்வேறு விடயங்களையும் ஒன்றிணைக்கின்ற கலைப்பண்புக் கூறாக அமைவது பற்றி நோக்கப்படுகின்றது (Mutere, M., n.d., [2]).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியூட்டியர் 'Motif: Masquerade' என்ற கட்டுரையில் ஒறேச்சர் அளிக்கையில் முகமூடியானது உருவம் சார்ந்ததும் கட்புலனாகாத தன்மையுடன் கூடியதுமான சக்திவாய்ந்த கலைப்பண்புக் கூறாக அமைவதை ஆய்வு செய்கின்றார் (Mutere, M., n.d., [3]). அவரது 'Motif: The Talking Drum' என்னும் ஆய்வுக் கட்டுரை ஒறேச்சர் அளிக்கையில் றம் (Drum) என்ற இசைக்கருவியின் பங்கு பற்றி நோக்குகின்றது. றம்மில் மூதாதையரின் ஆவிகள் வாழ்வதாகவும் அதனால் அந்த றம்கள் பேசுவதாகவும் நம்பப்படுவது பற்றி இங்கு ஆராயப்படுகின்றது (Mutere, M., n.d., [4]).

'Motif: kinetic Orality' என்ற அவரின் கட்டுரை ஒறேச்சரில் இயக்கம்சார் வாய்மொழித் தன்மையானது கட்புல, வாய்மொழி, ஆன்மீக இயக்கம் என்ற நிலைகளில் இடம்பெறுவதை ஆய்வு செய்கிறது. இயக்கம்சார் வாய்மொழி என்பது அழைப்பவர்/ பதில் கூறுவோரால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயல்முறையாக எடுத்துக் காட்டப்படுகின்றது. அத்துடன் அளிக்கையில் பார்வையாளரின் வாய்மொழி சார்ந்த சிறந்த பங்களிப்புப் பற்றியும் நோக்கப்படுகிறது (Mutere, M., n.d., [5]).

ஒட்டுமொத்தத்தில் இவ்வாய்வுகளின் ஊடாக மியூட்டியர் ஆபிரிக்க ஒறேச்சரின் மையமான அளிக்கையின் பல்வேறு கலை உத்திகளின் பயன்பாடு, முக்கியத்துவம் என்பன பற்றி ஆராய்ந்துள்ளார்.

Songs and Politics in Eastern Africa என்ற நூலில் வௌரா பன்டு (Mwaura Bantu) எழுதிய 'Orature of Combat:Cultural Aesthetics of Song as Political Action in the Performance of the Mau Mau Songs' என்ற கட்டுரை கிகுயு (Gikuyu) மொழி பேசும் மக்கள் மத்தியில் உள்ள காலனித்தவ கால சுதந்திரத்திற்கான போராட்டப் பாடல்களான மௌ-மௌ (Mau Mau) பாடல்களின் அழகியல் தன்மை பற்றி ஆராய்கின்றது. மௌ-மௌ பாடல்களின் செயற்பாடு நாடகம், சடங்கு இரண்டினதும் பண்புகளைக் கொண்டுள்ளமை இங்கு நோக்கப்படுகின்றது. மற்றும் மகிழ்வூட்டல், நல்லொழுக்க நெறிகள் ஆகியவற்றை வழங்கு வதாகவும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அப்பாடல்கள் அமைந்துள்ளமை ஆராயப்படுகின்றது (2007: 201-204).

மௌ மௌ பாடல்களின் அளிக்கைத் திறன் பற்றிய முக்கிய அம்சங்களாக பொருளுடன் அளிக்கைக்குள்ள தொடர்பு, அளிக்கை வெளியின் பயன்பாடு என்பன எடுத்துக் காட்டப்படுகின்றன. பாடுவதையும் ஆடுவதையும் இப்பாடல்கள் முக்கிய பண்புகளாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தமையும் நோக்கப்படுகின்றது. மௌ மௌ பாடல்கள் காலனித்துவத்திற்கு எதிரான ஒரு வடிவமாக இருந்தமையால் அவை அரசால் தடை செய்யப்பட்டமையும் அதனால் ஏற்பட்ட மாற்றமும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அதிகாரத்தை அடைவதற்கான போராட்டக் கருவியாக அது விளங்கியமை இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது. பெரும்பாலும் போர்க்களத்தில் உருவான இப்பாடல்கள் எவ்வாறு கணநேர ஆற்றலை உட்கொண்டுள்ளன என்பதையும் விபரிக்கின்றார் (Mwaura Bantu, 2007: 204 - 216).

றாவுள் கிறேங்கிஸ்ட் (Raoul Granguist) என்பவரால் தொகுக்கப் பட்ட "Culture in Africa – An Appeal for Pluralism என்ற நூலில் Oppression and Liberation of Kenyan Women: On Orature and Modern Women's Literature என்ற அத்தியாயம் இன்கிறிட் ஜோர்க்மேன் (Ingrid Bjorkman) என்பவரால் எழுதப்பட்டது. இங்கு ஒறேச்சரில் கென்னியப் பெண்களின் சுதந்திரமும் வெளிப்பாடும் பற்றி ஆராயப்படுகின்றது. ஆபிரிக்க ஒறேச்சரை நிகழ்த்துகைக் கலையாகவும் நாடகநிலைப்பட்ட வாய்மொழி வடிவமாகவும் கொள்ளும் ஆய்வாளர் அதன் நிகழ்த் துகையிலே நிகழ்த்துவோர், சபையோர் ஆகியோரின் பங்கு கொள்ளல் செயற்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றார். அத்துடன் அந்நிகழ்த்துகையின் முதன்மை வெளிப்பாடாக நீதிபோதனை அல்லது நல்வழிப்படுத்தல் எவ்வாறு அமைகிறது என்பதையும் ஆராய்கிறார் *(1993:109)*.

ஒறேச்சர் அளிக்கையில் நிகழ்த்துவோராக கூடுதலாகப் பெண் களே இடம்பெறுவதாக இன்கிறிட் ஜோர்க்மேன் கூறுகின்றார். ஆபிரிக்க ஒறேச்சரைப் படைக்கும் பெண் எழுத்தாளர்கள்/பெண் கதை சொல்லிகள் சமூகச் சூழல் மாற்றத்திற்கேற்ப பெண்களின் நிலை பற்றிய முற்போக்கான சிந்தனையுடன் அவ்வாக்கங்களை உருவாக்குவதையும், அளிக்கை செய்வதையும் விபரிக்கிறார். பாரம்பரியமாக சமூகத்தின் பெண்கள் பற்றிய நோக்கத்திற்கு மாறாக பெண்களின் நடத்தை மாற்றங்களைத் தம் சபையோருக்கு எடுத்துரைப்பதாக ஒறேச்சர் ஆக்கங்களை உருவாக்கியுள்ளதைச் சில பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களின் துணையுடன் ஆராய்கின்றார். அதாவது ஒடுக்குமுறைகளைக் கொண்டுள்ள சமுதாய நியதிகளுக்கு எதிராக பெண்கள் எவ்வாறு தம் எதிர்ப்பை ஒறேச்சரில் தெரிவிக்கி றார்கள் என்பதை ஆராய்கின்றார். இந்த எதிர்ப்பு சமுதாய மாற்றத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டுச் செல்வதாக உள்ளதை அவர் விபரிக்கின்றார். சமூகத்தின் ஒரு முகவராக நிகழ்த்துகை செய்யும் பெண்களின் முக்கியத்துவம் என்ன, அவளது தனிப்பட்ட படைப்பாக்கத்திறன் ஆக்கத்தில் என்ன தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது ஆகிய விடயங்கள் இங்கு முக்கியப்படுத்தப்படுகின்றன. இந்த ஆக்கங்களில் அமைந்துள்ள ஆணாதிக்க சமூகத்தின் நடத்தை முறைகளை உடைக்கும் வகையில் அமையும் பெண்களின் செயற்பாடுகளும், மரபு வழிப்பட்ட நடத்தை முறைகளில் இருந்து விடுபட்ட பெண்களின் தனித்தன்மை வாய்ந்த படைப்பாற்றல் வெளிப்பாடும் ஆராயப்படுகின்றன (1993: 110-13).

எனவே இந்த ஆய்வு ஆபிரிக்க ஒறேச்சர் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்ததாய் பெண்களின் சொந்த வெளிப்பாட்டை, புத்துணர்ச்சியை, படைப்பாற்றலை அனுமதித்துள்ளதை எமக்குக் காட்டுகின்றது.

ஆபிரிக்க ஒறேச்சர் பற்றிய ஆய்வு நூல்களில் கிறிஸ்டின் வகெகோ ஒஹாலே (Christine Nwakego Ohale) என்பவர் எழுதிய 'From Ritual to Art: The Aesthetics and Cultural Relevance of Igbo Satire' என்னும் நூல் மிக முக்கியமானதாகும். இந்நூல் ஆபிரிக்காவில் இகியாலா (Ihiala) என்னும் பிரதேசத்திலுள்ள இக்வோ (Igbo) மக்களின் அங்கத ஒறேச்சர் பாடல்களின் ஆக்கம், அளிக்கை, அழகியல் என்பன பற்றிய ஆய்வாக உள்ளது.

இக்வோ சமூகத்தில் குறிப்பிட்ட குற்றச் செயல்கள், சீர்கேடுகள் நடந்தவுடன் அவை பற்றி உடன் அங்கதத் தன்மையில் பாடல்கள் எழுதப்பட்டு பொதுமக்கள் மத்தியில் அளிக்கை செய்யப்படுகின்றன. அத்தகைய அளிக்கைகள் பார்வையாளரை மகிழ்ச்சிப்படுத்துவதையும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டுள்ளதை அவர் ஆராய்கின்றார். இந்த அளிக்கைகள் ஆண்கள் அங்கதம், பெண்கள் அங்கதம், வகைமாதிரி அங்கதம் என மூன்று வகைப்பாட்டின் அடிப்படையில் அளிக்கை செய்யப்பட்டு வருவதும் அவற்றின் உருவாக்கம், போக்கு என்பனவும் ஆராயப்படுகின்றன. அத்துடன் அளிக்கைக்குத் தயார்ப்படுத்துதல், அளிக்கை செய்யப்படும் விதம் ஆகியன பற்றியும் விரிவாக நோக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் அளிக்கையில் அளிக்கை செய்வோருக்குள்ள சுதந்திரம், அவர் களது தனித்தனியான புதுமைகள் அளிக்கையை எவ்வாறு செம்மைப் படுத்துகின்றன, பாரம்பரிய இசைக்கோலங்களுடன் ஆடலும் பாடலு மாக அளிக்கை செய்யப்படுகின்ற விதம், பார்வையாளர் அளிக்கையில் செலுத்தும் பங்களிப்பு ஆகிய விடயங்கள் பற்றியும் நுணுக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கப்படுகின்றன. இது ஆபிரிக்க அங்கத ஒறேச்சர் பாடல்கள் அளிக்கையை மையமாகக் கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது (Ohale, Christine Nwakego, 2003: 121-135).

மேலும், இந்த அங்கதப் பாடல்களை உருவாக்கும்போது பின்பற்றப்பட்டுள்ள அழகியல் கூறுகள் பற்றியும் ஆய்வு செய்யப் பட்டுள்ளது. அந்தவகையில் இப்பாடல்களில் அமைந்துள்ள உவமை, உருவகம், திரும்பத்திரும்ப வரும் தன்மை, உயர்வு நவிற்சி, சொற்களின் ஒலிக்குறிப்புத் தன்மை, முரண்தொடை, பாரம்பரிய நேரடித் தனமை முதலிய படைப்பாக்கக் கூறுகள் ஆராயப்படுகின்றன. (Ohale, Christine Nwakego, 2003: 139-157) இதனூடாக இப்பாடல்களின் இலக்கியத் தரம் நிறுவப்பட்டுள்ளது.

கவோர் ஆந்ரே (Kabore Andre) என்பவரால் எழுதப்பட்ட "Pecere as the Demiurge of Orature" எனும் நூல் பசியர் (Pacere) என்பவரின் 'From the Womb of the Earth' என்ற ஒறேச்சர் கவிதைத் தொகுதி பற்றிய ஆய்வாகும். இவ்வாய்வு ஒறேச்சர் கவிதைகளின் முதன்மைப் பண்பாகிய எழுத்து இலக்கியப் பண்புகளதும் வாய்மொழி இலக்கியப் பண்புகளதும் கலப்புத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

பசியர் தனது எழுத்து இலக்கியத்தில் ஆபிரிக்காவில் உள்ள பல்வேறு வாய்மொழிப் பாரம்பரியங்களின் வடிவங்களையும், அவற்றின் நுட்பங்களையும் பயன்படுத்தியுள்ளார். அந்தவகையில் பசியரின் கவிதைகள் எவ்வாறு வாய்மொழி - எழுத்துப் பாரம்பரியங்க ளுக்கு இடையில் ஒரு பிணைப்பாக உள்ளன என்பதை எடுத்துக் காட்டுவது இவ்வாய்வின் அடிப்படையாக அமைகின்றது. எழுதப் பட்டவையாக உள்ள இப்பாடல்கள் நிகழ்த்துகை வடிவங்களின் கலப்பாக உள்ளமை இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்படுகின்றது (Kabore, Andre., 2007: 27 - 49)). இதனூடாக ஒறேச்சர் வகைப்பட்ட இலக்கியம் பல்வேறு வாய்மொழி இலக்கியங்களின் கூறுகளைப் பின்பற்றி எழுத்தில் உருவாக்கப்படுவது என்பதும் அதேவேளை அது அளிக்கை வடிவமாக இருக்கும் என்பதும் பெறப்படுகின்றது.

கூகி வா தியாங்கோ, மியூட்டியர், வௌரா பண்டு, கிறிஸ்டின் வகெகோ ஒஹாலே, கவோர் ஆந்ரே ஆகியோரின் இந்த ஆய்வுகளில் ஒறேச்சரின் அளிக்கை, அழகியல் ஆகியன பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளன. கூகி ஆபிரிக்க ஒறேச்சரை கோட்பாட்டு அடிப்படையில் நோக்கியுள்ளார். முக்கியமாக அவர் ஒறேச்சரின் அடிப்படைத் தன்மைகளான அளிக்கை, ஒருங்கிணைவுத் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை கோட்பாட்டு அடிப்படையில் அணுகி, ஒறேச்சரை ஒரு அழகியல் முறையாகப் பார்த்துள்ளார். அவர் அளிக்கை சார்ந்த பல்வேறு அழகியல் கூறுகளை ஆராய்கின்றார். அவ்வாறே மியூட்டியரும் அளிக்கையின் பல்வேறு கலைப்பண்புக் கூறுகளை ஆய்வு செய்துள்ளார். கவோர் ஆந்ரே ஒறேச்சரின் வாய்மொழி – எழுத்து மரபு இணைவுத் தன்மை பற்றி விரிவாக ஆராய்கின்றார். கூகியும் இவ்விணைவுத் தன்மை பற்றி ஆராய்ந்துள்ளார்.

வெளரா பன்டு மௌ-மௌ பாடல்களின் அளிக்கை, அழகியல் என்பன பற்றி ஆய்வு செய்யும்போது அப்பாடல்களின் அளிக்கை ஊடான அழகியல் அநுபவங்கள் பற்றியும் ஆராய்கின்றார். ஒறேச்சரின் அளிக்கை பற்றி ஆய்வு செய்த இன்கிறிட் ஜோர்க்மேன் அளிக்கையாளர்களாக அதிகம் பெண்களே பங்குபற்றுவது பற்றியும் அவ்வளிக்கையில் பெண்களின் முற்போக்கான சிந்தனை வெளிப்பாடுகள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

கிறிஸ்டின் வகெகோ ஒஹாலேயின் நூல் அங்கத ஒறேச்சர் பாடல்களின் அழகியல், அளிக்கை பற்றிய ஆழமான ஆய்வாகும். ஒறேச்சரின் பல்வேறு படைப்பாக்க அழகியல் கூறுகளை அவர் ஆராய்கின்றார். மற்றும் அப்பாடல்கள் அளிக்கை செய்யப்படும் முறை பற்றியும், அளிக்கை ஊடான மகிழ்வூட்டல், வழிப்படுத்தல் ஆகிய நோக்குகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

ஜோண் சார்ள்ஸ் ஹவ்லி (John Charles Hawley) என்பவர் Encyclopedia of Post Colonial Studies இல் பின்காலனித்துவ காலத்தில் ஒறேச்சர் அடக்குமுறைக்கு எதிரான வடிவமாக உயிரோட்டமுடன் செயற்பட்டமை பற்றியும் ஆபிரிக்க மொழியைப் பாதுகாப்பதில் அது ஆற்றிய உன்னத பங்களிப்புப் பற்றியும் விபரிக்கின்றார். சில அறிஞர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள் ஊடாக ஒறேச்சரின் போக்குகளையும் அவர் விபரிக்கிறார் (2001: 235).

ஜோண் சார்ள்ஸ் ஹவ்லி, கூகி வா தியாங்கோ (Decolonising the Mind), வெளரா பன்டு ஆகியோர் ஆபிரிக்காவில் காலனித்துவ ஆதிக்கம் நிலவிய பின்புலத்தில் ஒறேச்சரின் செயற்பாடு, அதன் நோக்கு என்பன பற்றி ஆராய்ந்துள்ளனர். அவர்கள் ஒறேச்சரை ஆபிரிக்காவின் தேசிய கலாசாரத்தை எடுத்துச் செல்லும் வடிவமாக எடுத்துக்காட்டுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து Encyclopedia of Black Studies இல் அடிசா. ஏ. அக்கிவுலன் (Adisa A. Alkebulan) என்பவர் Oral Tradition என்ற தலைப்பின் கீழ் ஒறேச்சர் பற்றிய சில அடிப்படையான தகவல்களைத் தருகின்றார். அவர் ஒறேச்சரின் பிரதான பகுதிகளாக இலக்கியம், வரலாறு, புலமை அறிவு என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றார். ஆபிரிக்க மண்ணுக்குரிய கலாசாரத்தைத் தேடுவதே ஒறேச்சரின் நோக்கம் என்பதை எடுத்துக்காட்டும் அவர், அதன் அளிக்கையின் முக்கியத்துவம் பற்றியும் விளக்குகின்றார் *(2005: 391)*.

வெயின் றபற்றி (Wayne Rafferty), சொபி சாப்னர் (Sophie Salffner) ஆகியோரால் எழுதப்பட்ட "Once upon a time in a country far, far away..." Ritualisation and Ritualised Communication in African Orature எனும் நூல் ஆபிரிக்க ஒறேச்சரின் பின்புலம், பொதுக் கருத்தியல் அமைப்பு, முக்கிய பண்புகள் என்பவற்றைத் தெளிவாகத் தருகின்றது. குறிப்பாக ஒறேச்சரில் ஒரு பிரிவாகக் கொள்ளப்படும் 'கதை சொல்லல்' ஊடாக இவை ஆராயப்படுகின்றன. இந்த நூலின் முதன்மை நோக்கம் ஆபிரிக்க ஒறேச்சரின் சடங்குநிலைத் தொடர்பாடலை விபரிப்பதாகும் *(2006: 1-32)*.

இந்த ஆய்விலே ஒறேச்சரின் வகைப்பாடுகள் இனங்காணப்பட்டு அவை வடிவம், செயற்பாடு, அளிக்கை என்ற நிலைகளைப் பொறுத்து எத்தகைய தனித்தன்மைகளைக் கொண்டுள்ளன என்பது நோக்கப்படுகின்றது. வடிவத்தைப் பொறுத்து இவ்வகைப்பாடுகள் பொதுவான உருவ அமைப்பினைக் கொண்டுள்ளமை காட்டப்படு கின்றது. அவ்வாறே அளிக்கை நிலையில் பேச்சுச் சொல், இசை. நடனம் என்ற மூன்று ஆக்கக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்த நிலையில் செயற்படுவது ஆராயப்படுகின்றது. இந்தவகையில் ஒறேச்சரின் மையக் கருத்தியலாக நொம்மோ (Nommo) என்ற பேச்சுச் சொல் பற்றியும், அதன் வலிமை பற்றியும், அது ஆபிரிக்க ஒறேச்சரில் பல்வேறு அடிப்படைகளில் வெளிப்படுவது பற்றியும் ஆராயப்படுகின்றது (Wayne Rafferty and Sophie Salffner, 2006: 10-13).

இந்த ஆய்வில் முக்கியமானதொரு விடயம் ஒறேச்சரின் ஆக்கக்கூறுகளையும், அவற்றிற்கு இடையேயான உறவினையும் ஆராய்ந்துள்ளமையாகும். ஒறேச்சரின் இயங்குமுறை, அதன் ஊடகத் தன்மை, சடங்குநிலைத் தொடர்பாடல் என்பன பற்றி இங்கு நோக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்க ஒறேச்சரின் சடங்குநிலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடலின் கருத்தியலும் அதன் மரபுகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் இந்நூல் ஆபிரிக்க ஒறேச்சரின் அளிக்கை, தொழிற்பாடு, வடிவம் என்பன பற்றிய தெளிவைத் தருகின்றது.

ஜோர்ஜ் ஒலுசோலா அஜிவதே (George Olusola Ajibade) என்பவரால் எழுதப்பட்ட 'Multifaces of Word in Yoruba Orature' எனும் ஆய்வுக் கட்டுரை ஒறேச்சரில் இடம்பெறும் மொழிப் பயன்பாட்டின் பன்முகப்பாட்டுத் தன்மையினை ஆராய்கின்றது. அந்தவகையில் இந்த ஆய்வில் ஒறேச்சரின் பல்வேறுபட்ட பாணியிலான உத்திகளின் பயன்பாடு எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த ஆய்வின் பிரதான நோக்கு ஒறேச்சரின் தொடர்பாடலுக்கான ஆக்கக்கூறுகள் மொழிப் பயன்பாட்டு உத்திமுறைகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதைத் தெளிவுபடுத்துவதாகும். ஒறேச்சரில் ஏனைய ஆக்கக் கூறுகளைவிட சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதையும், அது ஒறேச்சருக்கு பொதுத் தன்மையாக உள்ளதையும் அஜிவதே எடுத்துக் காட்டுகின்றார். கவிஞரால் அமைக்கப்பட்டுள்ள சொல் அழுத்தம் கவிதையில் ஒரு நுட்பமாக அமைவதையும், அது தனிப்பட்டவரில் தாக்கத்தை உண்டுபண்ணுவதையும் அவர் விளக்குகின்றார் *(2005: 20-39)*.

இவ்வாறு ஒறேச்சரின் தொடர்பாடல் பண்பு பற்றி வெயின் றவ்ப்பட்டி, சொபி சாப்னர், ஜோர்ஜ் ஒலிசோலா அஜிவதே ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். வெயின் றவ்ப்பட்டி, சொபி சாப்னர் ஆகியோர் தமது நூலில் ஒறேச்சரின் உருவாக்கத்துக்கான பின்னணி பற்றியும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹபர்ட் டெவொனிஷ் (Hubert Devonish) என்பவரால் எழுதப்பட்ட Electronic Orature : The Deejay's Discovery என்னும் ஆய்வு ஒறேச்சரில் நவீன இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு பற்றியது. இத்தகைய தொழில்நுட்பப் பயன்பாட்டின் பின்னர் ஒறேச்சர் ஒரு புதிய வடிவிலே தேசிய மொழியினையும் தேசிய அடையாளங்களையும் வெளிக்காட்டுவதாக உருவாகியுள்ளதை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும் *(1998: 33-53)*.

டி.பொக்ஸ் ஹரல் (D.Fox Harrell) என்பவர் 'Cultural Roots for Computing: The Case of African Diasporic Orature and Computational Narrative in the GRIOT System' என்ற ஆய்வுக் கட்டுரையில் ஒறேச்சரை கணினிப் பயன்பாட்டில் கொண்டுவந்துள்ளதையும், இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகப் பயன்பாட்டின் மூலம் ஒறேச்சரை வாய்மொழி அளிக்கைக்கு அப்பால் விரிவாக்கியுள்ளதையும் ஆராய்கிறார். மற்றும் ஆபிரிக்க ஒறேச்சரின் முதன்மைத் தன்மைகளாகக் குறிப்பிடப்படும் அளிக்கை, ஒருங்கிணைவுத் தன்மை என்பன பற்றியும் அவர் விவாதித்துள்ளார் *(2008: 1-20).*

இவ்வாறு பொக்ஸ் ஹரல், கியுவர்ட் டெவொனிஸ் ஆகியோர் ஒறேச்சரில் நவீன தொழினுட்பப் பயன்பாட்டினை ஆராய்ந்துள்ளனர்.

ஆபிரிக்க ஒறேச்சர் பற்றி ஆய்வு செய்த இந்த ஆய்வாளர்கள் ஒறேச்சர் பற்றி இரண்டு வகையில் நோக்குவதை அவதானிக்க முடிகின்றது.

1. சிலர் ஒறேச்சரை எழுதப்பட்ட வாய்மொழி இலக்கியமாகக் கொள்கின்றனர். அதாவது வாய்மொழி, எழுத்து மரபுகளை இணைக்கின்ற வாய்மொழி இலக்கியமாகக் கருதுகின்றனர்.
2. வேறுசிலர் மேற்கூறியது போல எழுதப்பட்ட வாய்மொழி இலக்கியங்களையும் வாய்மொழியாகத் தோன்றி வாய்மொழியாக நிலவும் இலக்கியங்களையும் ஒருசேரச் சுட்டுவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

எவ்வாறாயினும் ஒறேச்சர் ஒரு 'வாய்மொழி இலக்கிய மரபு' என்பதில் எவருக்கும் கருத்து முரண்பாடு இல்லை.

### ஆபிரிக்க ஒறேச்சரும் ஈழத்துத் தமிழ் கட்டுப் பாடல்களும்

ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் புலவர்கள் பாரம்பரிய வாய்மொழி மரபைப் பின்பற்றிப் பாடல்களைக் கட்டி மக்கள் மத்தியில் அளிக்கை செய்து வருவது ஒரு மரபாக இருந்து வருகின்றது. இந்தப் பாடல்களைக் கிராமிய மக்கள் 'கட்டுப் பாடல்கள்' என்று கூறுகின்றனர். தனிப்பட்ட கிராமியப் புலவர்களால் உருவாக்கப்படுகின்ற இப்பாடல்கள் பெரும்பாலும் கையெழுத்துப் பிரதிகளாகவும், சிறு அச்சுப் பிரதிகளாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் நிலவுகின்றன. எழுத்திலே உருவாக்கப்பட்ட போதும் இவை வாய்மொழி மரபில் காலூன்றியவையாக உள்ளன. அனர்த்தங்கள், ஊரின் முக்கிய நிகழ்வுகள், சொந்தப் பிரச்சினைகள், கோயில் வரலாறுகள் முதலியவற்றை பொருளாகக் கொண்டிருக்கும் இப்பாடல்கள் காவியம், அம்மானை, கும்மி, காவடிச் சிந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி நடைச் சிந்து, கவி எனப் பல வடிவங்களிலே பாடப்பட்டு வருகின்றன. இந்த மரபு பற்றி சிவத்தம்பி பின்வருமாறு கூறுவார்:

> "எம்மிடையே இப்போது எழுதப்பட்ட- ஆனால் வாய்மொழியாகக் கையளிக்கப்படுகின்ற சில பாடல்கள் உள்ளன. எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்டு – ஆனால் இவற்றினுடைய பயில்நிலையில் அவை பெரும்பாலும் வாய்மொழியாகக் கையளிக்கப்படுகின்றன. அல்லது துண்டுப் பிரசுரங்களாக விற்கப்படுகின்றன. ... மேற்கூறியவற்றை நாம் முற்றுமுழுதாக நாட்டார் மொழிப்பட்ட பாடல்களோடு சேர்த்து விட முடியாது. ஏனென்றால் நாட்டார் பாடல் நிலைக்குள்ள ஆசிரியர் தெரியாமை அல்லது ஒரு ஒட்டுமொத்தக் கூட்டுநிலை ஆசிரியர் தன்மை இங்கு காணப்படவில்லை. இங்கு குறிப்பிட்ட ஒருவர்-கவிஞர் அல்லது புலவர் எழுதுவார். சிலவேளை அவரே அதனை மக்களுக்கு முன்னால் வாசிப்பார். இன்றேல் சிலர் வாங்கி வாசித்துக் காட்டி விற்பார்கள். ஆகவே உண்மையில் இதனுடைய தொடர்பு வலு என்பது வாய்மொழி நிலைப்பட்டதுதான்" (2002: xiii).

இக்கூற்று கட்டுப்பாடல்களின் சில அடிப்படையான தன்மைகளை எடுத்துக் காட்டுவதுடன் இவற்றை ஈழத்து வாய்மொழிப் பாடல்களில் தனித்த ஒரு பகுதியாக அடையாளப்படுத்துகின்றது.

ஆகவே, ஆபிரிக்க ஒறேச்சரும் தமிழ் கட்டுப் பாடல்களும் எழுத்து மரபின் பண்புகளும் வாய்மொழி மரபின் பண்புகளும் கலந்த 'வாய்மொழி இலக்கியங்களாக' உள்ளன. அதாவது 'எழுதப்பட்ட வாய்மொழி இலக்கியங்களாக' உள்ளன. அந்தவகையில் இரு மரபு களினதும் பண்புகளுக்கிடையே பெரும்பாலும் பொதுமைக் கூறுகளே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆயினும் சில பண்புகளின் உட்கூறுகளிடையே வேறுபாடுகளும் தனித்துவங்களும் நிலவுகின்றன.

ஆபிரிக்க ஒறேச்சர் இலக்கியங்களைப் படைக்கின்ற படைப்பா ளர்களின் கல்வியறிவு மட்டத்தை நோக்கின் சாதாரண மக்களில் இருந்து கல்வியறிவில் உயர்நிலையில் இருப்பவர்கள் வரை அவ்விலக்கியங்களை ஆக்குகின்றனர். ஏனெனில் அங்கு இந்த இலக்கியங்களைப் படைத்தல் தேசியரீதியில் பிரக்ஞைபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை அது நவீன இலக்கியப் போக்கை நோக்கியும் வளர்ந்துள்ளது.

தமிழ் சூழலில் நகரமயவாக்கத்திற்கு உட்படாத கிராமப்புறங்களி லேயே இத்தகைய வாய்மொழி இலக்கியச் செல்வாக்கைக் காணலாம். இங்கு கிராமப்புறங்களில் உள்ள சற்று எழுத்தறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களே இவ்வகை இலக்கியப் படைப்ிலும் நிகழ்த்துகையிலும் கூடுதலாக ஈடுபடுகின்றனர். எழுத்தறிவினை அதிகம் பெற்ற சில புலமையாளர்களும் இப்பாடல்களை உருவாக்கினும் அவர்கள் கிராமியப் பின்புலம் உள்ளவர்களாகவே உள்ளனர். எவ்வாறாயினும் செந்நெறிக் கவிதைகளில் இருந்தும் நவீன கவிதைகளில் இருந்தும் இப்பாடல்கள் வேறுபட்டு நிற்கின்றன. நவீன உள்ளடக்கங்களை அவை கொண்டிருந்தபோதும் பாரம்பரிய கிராமிய இசைவடிவங்களில் இருந்து மாறாதவையாகவே உள்ளன. ஏனெனில் அப்பாடல்கள் சாதாரண மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்கு அவ்விசை வடிவங்களே காலாக அமைகின்றன. இவை பாமர மக்களால் பாமர மக்களுக்காக உருவாக்கப்படுகின்ற - அளிக்கை செய்யப்படுகின்ற இலக்கியங்களாகும். இவ்விடத்திலும் ஆபிரிக்க ஒறேச்சர் தமிழ் மரபுடன் இணைகின்றது.

> "ஒறேச்சர் பாமர மக்களுடைய வாழ்க்கையில் வேரூன்றியுள்ளது. இந்த ஒறேச்சர்தான் பாமர மக்களுடைய கவிதைகளாகவும் பாடல்களாகவும் அவர்களுடைய கலையாகவும் அமைந்திருக்கின்றது" (Ngugi, W.T.O., 1986: 95).

என கூகி வா தியாங்கோ கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழில் சில எழுத்துமரபு சார்ந்த புலவர்கள்/கவிஞர்கள் தம் படைப்புக்களில் வாய்மொழி மரபுகளை அமைத்து இலக்கியம் படைப்பது மரபாக உள்ளது. ஆனால், அவற்றை வாய்மொழியும் எழுத்துமொழியும் இணைந்த கட்டுப் பாடல்களாக அல்லது ஒறேச்சர் வகைப் பாடல்களாகக் கொள்ள முடியாது. ஏனெனில் அவற்றின் உள்ளார்ந்த பண்புகள் எழுத்து மரபைச் சார்ந்தவையாகவே உள்ளன. சுரேஸ் கனகராசா ஈழத்து நவீன கவிதைகள் சிலவற்றின் வாய்மொழியும், எழுத்துமொழியும் இணையும் தன்மைகளை எடுத்துக்காட்டி அவற்றை ஆபிரிக்க ஒறேச்சருக்கு ஒத்தவையாகக் காட்டுகின்றார். அவர் இதனை ஈழத்து நவீன கவிதைகளின் வாய்மொழிக்குத் திரும்பும் போக்காகக் காட்டுகின்றார் (சுரேஸ், கனகராசா., 1993: 38-43). ஆனால், இவை வாய்மொழி இலக்கியக் கூறுகளை உட்கொண்ட எழுத்துநிலைக் கவிதைகளே தவிர, ஒறேச்சரைப் போலவோ எமது கிராமியப் புலவர்களது பாடல்கள் போலவோ 'எழுதப்படுகின்ற வாய்மொழிப் பாடல்களாக' அமைவதில்லை. இந்த நவீன கவிதைகள் பாடப்படுவனவாக அமைவதில்லை. அளிக்கையின் ஊடாகவே ஒறேச்சர் பாடல்கள் மக்கள் மத்தியில் வாய்மொழியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல்லப்படுகின்றன. அளிக்கைத் தன்மை இல்லாதபோது ஒருங்கிணைப்புத் தன்மை என்ற அம்சமும் இல்லாமல் போகின்றது. ஏனெனில், அளிக்கையிலேயே இவை இசை, நடிப்பு, பாட்டு போன்ற கலை வடிவங்களை இணைத்துக்கொள்கின்றன. மேற்படி கவிதைகள் எழுத்து மரபின் வாசிப்புக்குரிய கவிதைகளாகவே உள்ளன.

இரு மரபுகளிலும் ஒருங்கிணைப்புத் தன்மை என்பது அடிப்படைப் பண்பாக உள்ளது. தமிழ் கட்டுப்பாடல் மரபிலும் வாய்மொழி, எழுத்து, பாட்டு, நடிப்பு, இசை எனப்பல கலை வடிவங்களின் இணைப்பினைக் காணலாம். எழுத்தில் உருவாக்கப்படுகின்ற வாய்மொழி இலக்கியம் என்றவகையில் இரு மரபுகளும் நெருங்கிய உறவுடையன. அதாவது எழுத்து, வாய்மொழி என்ற இரு மரபுகளும் இணைகின்ற 'கலப்பு இலக்கியங்களாக' அவை உள்ளன. எழுத்தில் உருவாக்கப்படினும் அவை முற்றாக வாய்மொழி இலக்கிய உள்ளியல்பை உடையனவாகும். எழுத்து மொழியூடான பேணுகை, கையளிப்பு இங்கு உள்ளபோதும் பெரும்பான்மையும் அவற்றின் கையளிப்பு வாய்மொழிநிலைப்பட்டதேயாகும்.

தமிழ் கட்டுப்பாடல் மரபில் எழுத்து, வாய்மொழி இணைவுத் தன்மை ஆதாரமாக அமையும் அதேவேளை அவை பாடப்படுவதற்காக உருவாக்கப்படுகின்றன. இவை தமக்குப் பரிச்சயமான பல்வேறு இசை வடிவங்களுக்கு அமையவே (அம்மானை, காவியம், சிந்து, கும்மி, ஒப்பாரி, தாலாட்டு) உருவாக்கப்படுகின்றன. பின் அவை பாடப்படுகின்றன. பல பாடல்கள் இசைக்கருவிகளின் பயன்பாட்டுடனும் ஆட்ட, அபிநயங்களோடும் அளிக்கை செய்யப்படுகின்றன. இவற்றில் பல கலை வடிவங்களின் ஒருங்கிணைப்பைக் காணலாம்.

அளிக்கை என்பது இரு மரபுகளினதும் மையமாக அமைகின்றது. அளிக்கையின் ஊடாகவே இவ்விலக்கியங்களின் நோக்கு பார்வையாளரைச் சென்றடைகின்றது. அளிக்கையிலேயே அவை நிறைவுறுகின்றன. இவ்விலக்கியப் படைப்பாளியின் பணி அதனைப் படைப்பதுடன் நிறைவுறுவதில்லை. அதனை நிகழ்த்திக் காட்டுவதிலேயே பூரணத்துவம் அடைகின்றது. ஆனால், இரு மரபுகளுக்குமிடையே அளிக்கைத் தன்மைகளிலே பாரிய வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக நாடகநிலைப்பட்ட ஒரு நிகழ்த்துகைப் போக்கு தமிழ் மரபில் குறிப்பாக கூத்து, கும்மிப் பாடல்களிலே காணப்படினும் பார்வையாளர் - நிகழ்த்துவோர் உறவுநிலையில் அதிக வேறுபாடுகள் உள்ளன. ஒறேச்சரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளரின் பங்குகொள்ளல் செயற்பாடு தனித்துவமானது. இத்தகைய 'பார்வையாளர் பங்குகொள்ளல் அளிக்கை' யினைத் தமிழ் மரபில் காண்பது கடினம். அதாவது அளிக்கைகளின் இடையே பார்வையாளர் கருத்துக் கூறல், தலையிடுதல் என்பவை இங்கு இல்லை. இங்கு பார்வையாளர்கள் அளிக்கையின் ஊடாக மகிழ்வினையும் அழகியல் அநுபவத்தினையும் பெற்று அநுபவிப்பவர்களாகவும் அளிக்கை நிகழ்வுக்கான ஒழுங்கமைவுச் செயற்பாடுகளில் பங்குகொள்பவர்களாகவும் உள்ளனர்.

நிகழ்த்துகைவெளி தமிழ் கட்டுப்பாடல் மரபிலும் வரையறுக்கப்படவில்லை. நிகழ்த்துகைகள் மரநிழல்கள், மக்கள் கூடும் இடங்கள், கோயில்கள், தொழிற்களங்கள் எனப் பல்வேறு களங்களில் நடைபெறுகின்றன. அநேகமாக இந்நிகழ்த்துகைக் களங்கள் வட்ட வடிவமாக மக்கள் நின்று பார்க்கத்தக்கதாகவும் திறந்தவெளியாகவுமே அமைகின்றன. ஆபிரிக்காவில் ஒறேச்சர் நிகழ்த்துகைவெளி வட்ட வடிவமானதாக அமைகிறது என்றும் அது திறந்தவெளியை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூகி கூறுகிறார் (*1998: 110*). வாழ்விடத்தில் இருந்து சமயநிலையம் வரை அத்தகைய வெளிகள் அமையலாம். சில ஒறேச்சர் பாடல்கள் தடை செய்யப்பட்டபோது அவை மரநிழல்கள், குடிசை எனப் பல வரையறுக்கப்படாத வெளிகளிலும் நிகழ்த்தப்பட்டன (Ngugi,W.T.O., 2007: 4). மக்களை மையப்படுத்திய இவ்விரு மரபுகளிலும் நிகழ்த்துகை வெளி வரையறுக்கப்படாததும் அடைக்கப்படாததுமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்த்துகையின் நோக்கிலும் இரு மரபுகளுக்குமிடையில் நெருங்கிய உறவுண்டு. ஆபிரிக்க ஒறேச்சரின் அளிக்கை மகிழ்வூட்டல், அறிவூட்டல் என்பவற்றை நோக்காகக் கொண்டது போல் தமிழ் மரபிலும் இவ்விடயங்களே முக்கியம் பெறுகின்றன. அதேவேளை தமிழ் மரபில் 'உளத்திருப்தி' என்ற அழகியல் உணர்வுப் பெறுகை மேலோங்கி நிற்பதைக் காணலாம். ஆபிரிக்க ஒறேச்சர் பார்வையாளருக்கு உள அமைதியை வழங்குவதாக வன்ரு மௌரா குறிப்பிடுவது இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. எனவே, இந்த மரபுகள் மக்களின் வாழ்வை வழிப்படுத்துவதையும் அழகியல் அநுபவங்களை வழங்குவதையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்பாட்டு ரீதியில் ஆபிரிக்க ஒசேச்சர் புதிர்கள், பாடல்கள், கதைகள், கவிதைகள், காவியம் எனப் பல வகைப்பாடுகளைக் கொண்ட பரந்த இலக்கிய அமைப்பாகக் காணப்பட, தமிழ் மரபு 'பாடல் மரபு' என்றவகையிலேயே நிலவுகின்றது. குறிப்பாக பாடல்கள், கதைப்பாடல்கள் என்பனவே இதில் அடங்குகின்றன. வாய்மொழிக் கதைகளையோ, பழமொழிகளையோ எழுத்தில் உருவாக்கி அளிக்கை செய்யும் போக்கு தமிழ் வாய்மொழி மரபில் இல்லை.

ஆகவே, ஆபிரிக்க ஒரேச்சரும் ஈழத்துத் தமிழ் கட்டுப்பாடல்களும் வாய்மொழி இலக்கியப் பண்புகளையும், எழுத்துமொழி இலக்கியப் பண்புகளையும் ஒருசேரக் கொண்டிருக்கும் இலக்கியங்களாக அமை வதைக் காணலாம்.

முடிவுரை

முற்றிலும் வாய்மொழி மரபுகளைக் கொண்டிருந்த ஆபிரிக்க சமூகத்தில் எழுத்து மரபு அறிமுகமானபோது ஒறேச்சர் இலக்கியம் பிரக்ஞைபூர்வமாக உருவாகியது. வாய்மொழி இலக்கியத்தின் ஒரு பாய்ச்சலாக அமைந்த இப்புதிய வடிவம் பின்வரும் பொதுமை குணாம்சங்களைக் கொண்டுள்ளன.

- எழுத்து மரபும் வாய்மொழி மரபும் ஊடாடிய இலக்கியமாக அமைந்தது. ஆனால், அது அடிப்படையில் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தது.
- அளிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- பல்வேறு கலைவடிவங்களையும் இணைத்த இலக்கியமாக அமைந்தது.
- பாமர மக்களை மையப்படுத்திய - வெகுசன இலக்கியமாக விளங்கியது.
- மகிழ்ச்சியூட்டல், அறிவூட்டல், மனஅமைதியை ஏற்படுத்தல் ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களைக் கொண்டிருந்தது.

ஆபிரிக்க ஒறேச்சரின் இத்தகைய அடிப்படைத் தன்மைகள், ஒறேச்சர் பற்றிய கோட்பாடுகள் என்பவற்றைப் புரிந்துகொள்வது எமது தமிழ் வாய்மொழி மரபுகள் பற்றிய நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொள்ளத் துணை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள் நூல்கள்**

Finnegan, Ruth, 1970, *Oral Literature in Africa,* Oxford: Clarendon Press.

Harrison, Paul Carter, 2002, *Black Theatre: Ritual Performance in the African Diaspora,* Philadelphia: Temple University Press.

Ingrid, Bjorkman, 1993, 'Oppression and Liberation of Kenyan Women: On Orature and Modern Women's Literature', Raoul Granquist, (ed.), *Culture in Africa: An Appeal for Pluralism,* Africa: Nordiska Afrikainstitute.

Joyce, Burkhalter Flueckiger and Laurie, J. Sears, (eds.), 1991, *Boundaries of the Text -Epic Performances in South and Southeast Asia,* America: The University of Michigan Centre for South and Southeast Asian Studies.

Mwaura, Bantu, 2007, 'Orature of Combat: Cultural Aesthetics of Song as Political Action in the Performance of the Mau Mau Songs', Kimoni,Njogu and Herve Maupeu,(eds.), *Songs and Politics in Eastern Africa,* Nairobi and Kenya: Mkuki na Nyota Publishere.

Ngugi, W.T.O., 1986, *Decolonising the Mind – The Politics of Language in African Literature,* London: James Currey Ltd.

.....1998, *Penpoints, Gunpoints, and Dreams: Towards a Critical Theory of the Arts and the State in Africa,* Oxford: Oxford University Press.

Okpewho, Isidore, 1990, *The Oral Performance in Africa,* Ibadan: Spectrum Books Limited.

Vansina,Jan, 1965, *Oral Tradition – A Study in Historical Methodology,* Wright, H.M.(Trans.), London: Routledge & Kegan Paul Ltd.

Wayne, Rafferty and Sophie, Salffner, 2006, *Once upon a time in a Country far, far away... Ritualisation and Ritualised Communication in African Orature,* Egbokhare, Francis and Kolawole,Clement ,(eds.), Ibadan: University of Ibadan.

**கட்டுரைகள்**

Ingrid, Bjorkman, 1993, 'Oppression and Liberation of Kenyan Women: On Orature and Modern Women's Literature', Raoul Granquist, (ed.), *Culture in Africa: An Appeal for Pluralism,* Africa: Nordiska Afrikainstitute.

Mwaura,Bantu, 2007, 'Orature of Combat: Cultural Aesthetics of Song as Political Action in the Performance of the Mau Mau Songs', Kimoni,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Municipal Council
Batticaloa.

Njogu and Herve Maupeu,(eds.), *Songs and Politics in Eastern Africa,* Nairobi and Kenya: Mkuki na Nyota Publishere.

Ngugi, W.T.O., 2001, 'The Language of African Literature', Bill Ashcroft, Gareth Griffiths and Helen Tiffin, (eds.), *Post Colonial Studies Reader,* London and New York: Routledge & Francis Group.

கனகரத்தினா,ஏ.ஜே.(மொ.பெ.), 2003,'பேனாமுனைகள், துப்பாக்கி முனைகள், கனவுகள்- கூகி வா தியாங்கோ சார்ள்ஸ் கன்ரலூபே-ாவுடன் ஒரு நேர்காணல்', *'பிரவாதம்'*, தொகுதி-3, கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

சுரேஸ், கனகராசா, 1993, 'வாய்மொழி மரபும், எழுத்தறி மரபும் - சமகால தமிழ்க் கவிதை பற்றிய மூன்றாம் உலக இலக்கிய கண்ணோட்டம்,' *'பண்பாடு'*, மலர் 3, இதழ் 1, கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

Arasady
Municipal
Batticaloa.

## இணையத்தளக் கட்டுரைகள்

Adeleke, Adeeko, 1999, Micere Mugo's African Orature and Human Rights, www. Highbeam.com//library, 07.02.2010.

Alkebulan,Adisa,A., 2005, Oral Tradition, Asante,K. and Ama Mazama Molefi, (eds.) Encyclopedia of Black Studies, http://books.google. lk/ books?id =orature Encyclopedia+ of+Black+studies &source , 02.05.2010.

Caroline, Sinavaiana Gabbard, 2001, From Speaking to Writing in Oceanic Literature, http://www.babelguides.Com/view/Work, 02.03.2010.

Fox, Harrell,D., 2008, Cultural Roots for Computing: The Case of African Diasporic Orature and Computational Narrative in the GRIOT System, Fibreculture Issue 11, http://journal.fibreculture.org/ issue11/issue11-harrell.html, 17.01.2010.

George, Olusola Ajibade, 2005, Multifaces of Word in Yoruba Orature, http:// muse. jhu.edu/ journals/studies-in-word..../13,2 ajibade-html, 09.01.2010.

Hubert,Devonish, 1998, Electronic Orature:The Deejay's Discovery, www. mona.uwi. edu/dllp/jiu/..../elwctronic-orature-the deejays-discovery. pdf, 09.03.2010.

John, Charles Hawley, 2001, Encyclopedia of Post Colonial Studies, http:// books.google.lk/books? id=orature Encyclopedia+post+colonial+ studies, 26.01.2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kabore,Andre, 2007, Pacere as the Demiurge of Orature, www.the freelibrary. com/ pacere+ as +the+demiurge+of +orature,

Mugo,n.d.,Orature and Oral Literature,https://lic.ned.univie.ac.at/en/node/, 15.01.2010.

Mutere,M.,n.d., African Culture and Aesthetics, http://artsedge. kennedy-center. org/aoi/ resources/hg/aesthetics.html.10.02.2010.

......... n.d.[1], Motif1: Call and Response, http://artsedge. kennedycenter. org/aoi/resources/hg/Motif1.html., 10.02.2010

......... n.d.[2], Motif2: Kimoyo ("mojo"), http://artsedge.kennedycenter. org/aoi/ resources/hg/ Motif2.html.11.02.2010.

......... n.d.[3], Motif3: Masquerade, http://artsedge.kennedycenter.org/aoi/resources /hg/Motif3.html.16.02.2010.

......... n.d.[4], Motif4: The Talking Drum, http://artsedge.kennedycenter .org/aoi/resources/hg/Motif4.html, 18.02.2010.

......... n.d.[5], Motif5: Kinetic Orality, http://artsedge.kennedycenter. org/aoi/resources/hg/Motif5. Html, 22.02.2010.

Ngugi,W.T.O., 2007, Notes towards a Performance Theory of Orature, www. africabib. org/guery- P.PuP.PG – 339 , 24.02.2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் மூன்று

# ஒழுக்கவியல் கொள்கைகளும் பிரயோக ஒழுக்கவியலும்

- இரத்தினசபாபதி பிரேம்குமார் -

## ஒழுக்கவியல் என்றால் என்ன?

ஒழுக்கவியலை குறிக்கும் 'Ethics' எனும் ஆங்கிலச் சொல் 'Ethos' எனும் கிரேக்கச் சொல்லில் இருந்து வருகின்றது. இது ஒருவரின் குணத்தை குறிக்கின்றது. இதேபோல் ஒழுக்கவியலைக் குறிக்கும் மற்றுமொரு ஆங்கிலச் சொல்லான 'morality' என்ற சொல்லானது இலத்தின் மொழிச் சொல்லான 'moralitas' என்ற சொல்லில் இருந்து வருகின்றது. இதன் அர்த்தம் வழக்காறு என்பதாகும். ஒழுக்கவியல் மெய்யியலின் ஒரு பிரிவாகவும் மெய்யியலின் முக்கிய பகுதியாகிய ஒழுக்கவியல், அளவையியல் மற்றும் அழகியல் என்பதுடன் இணைந்து நியமவியல் (Axiology) எனும் பகுதியின் ஒரு துறையாக கருதப்படுகிறது. ஒழுக்கவியல் தனது இறுதி நோக்கமாக 'நன்மைத்தனத்தை' (goodness) கொண்டிருக்கிருக்கிறது. பொதுவாக ஒழுக்கவியல் நாம் எப்படி வாழ வேண்டும்? எதைச் செய்ய வேண்டும்? எதை செய்யக்கூடாது போன்ற வாழ்வின் விழுமியங்களை வழங்குவதாக இருப்பதுடன் ஏன் இந்த செயல் சரியானது? ஏன் இந்த செயல் தவறானது? போன்ற கேள்விகளுக்கு பகுத்தறிவு ரீதியாக வாதங்களை முன்வைத்து விடை தேட முற்படும் ஒரு துறையாக அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும் 'நல்லது', 'கெட்டது', 'சரி', 'பிழை' போன்ற ஒழுக்க ரீதியாக எண்ணக்கருக்கள், எத்தகைய அர்த்தங்களை பெற்றுக் கொள்கின்றன என்பது தொடர்பாகவும் ஆராயும் துறையாக ஒழுக்கவியல் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கவியல் மனிதர்களின் நடத்தை தொடர்பாக தீர்ப்புக்களை முன்வைக்கும் துறையாக இருப்பதுடன் அவற்றுக்கான அடிப்படைகளை ஆராயும் துறையாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் நாம் எமது சுய உணர்வுடன் அறிந்து செய்யும் செயல்களே ஒழுக்கவியலின் எல்லைக்குள் உட்படுமே தவிர தற்செயலான எமது சுய உணர்வற்ற செயல்கள் இதற்குள் உட்படாது. எடுத்துக்காட்டாக எனக்கு 500 ரூபாய் மட்டுமே கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் ஒருவர் மறதியாக 1000 ரூபாய் கொடுத்தால், அதில் 500 ரூபாவை திருப்பிக் கொடுக்கலாமா? வேண்டாமா? திருப்பிக் கொடுக்காமல் விடுவது சரியா? தவறா? என சிந்திக்கும் போதுதான் நாம் ஒழுக்கவியலின் எல்லைக்குள் செல்பவர்களாக இருப்போம். ஒழுக்கவியல் மனம், வாக்கு மற்றும் காயம் (உடல்) என்ற மூன்றுடனும் தொடர்புபடுவதாக இருந்த போதும் மனத்தின் பங்கு வாக்கு காயம் என்பவற்றை விட அதிக முக்கியத்துமுடையதாக ஒழுக்கவியல் அறிஞர்களினால் கருதப்படுகிறது. மனமும் அதன் செயல்பாடுகளான சிந்தனைகளும் ஒழுக்கத் தீர்ப்பில் முக்கிய பங்கு வகித்து வருகின்றது. ஒழுக்கவியல் தனது தீர்ப்புக்களை மனிதனுடன் மட்டுமே நிறுத்திக் கொள்கின்றது. ஏனைய உயிரற்ற பொருட்கள் மற்றும் உயிரினங்கள் (விலங்குகள், தாவரங்கள், இன்னும் பல) ஒழுக்கவியலின் வறையரைக்குள் வருவதில்லை. ஆயினும் ஒரு மனிதன் உயிருள்ள பிராணிகளுடனும் தாவரங்களுடனும் மற்றும் உயிரற்ற பொருட்களுடனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் தொடர்பாக உரையாடல்கள் ஒழுக்கவியலின் எல்லைக்குள் வருகின்றன. இத்தகைய நோக்கினை நாம் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் (environmental ethics) காண முடிகிறது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் மனிதன் தான் வாழும் சூழலில் எப்படி நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும்? எப்படி நடந்து கொள்ளக்கூடாது? ஏன் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? போன்ற கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கான விடைகளை தேடுவதாக இருக்கின்றது. பொதுவாக ஒழுக்கவியல் ஆராய்ச்சிகளும் உரையாடல்களும் அதிகமாக மனித நலனை மையமாகக் கொண்டிருப்பதனை நாம் காண முடிகின்றது. ஒழுக்கவியல் சார்ந்த உரையாடல்களில் ஏனைய உயிரினங்களும் உயிரற்ற பொருட்களும் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இதனை மனித மைய வாதம் (anthropocentrism) என அழைக்கின்றனர். இத்தகைய நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய ஒழுக்கவியல் சிந்தனைகளிலும் கோட்பாடுகளிலும் விரவிக்கிடப்பதை நாம் காணலாம். அண்மையில் தோற்றம் பெற்ற சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கூட இத்தகைய நோக்கிற்கு விதிவிலக்கல்ல. சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்ட போதும் மனித நலனை மையமாகக் கொண்டதாக சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் சிந்தனைகள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது.

ஒழுக்கவியலில் ஒரு தனி மனிதனின் கடமைகளும் உரிமைகளும் அவன் வாழும் சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்டே வரையறுக்கப்படுவதுடன் ஒழுக்க ரீதியாக நல்லது, கெட்டது, சரி, பிழை என்பன அந்த சமூதாயத்துடன் இணைந்த வகையிலே தீர்மானிக்கப்படுகின்றது. இதன் காரணமாகவே அரிஸ்டோட்டில் சமூதாயத்துடன் இணைந்து வாழாத மனிதன் கடவுளாகவோ அல்லது கொடிய விலங்காகவோ இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இயற்கை விஞ்ஞானங்களும் சமூக விஞ்ஞானங்களும் இயற்கை நிகழ்வுகளையும் சமூக நிகழ்வுகளையும், விபரித்து விளக்குவதில் தமது கவனத்தை செலுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, சமூக விஞ்ஞானமான வரலாறு மொகலாயர்கள் இந்திய அரசியல் நிருவாக துறைக்கும் கட்டிடக் கலைக்கும் ஆற்றிய பங்களிப்புக்களை விபரிக்கும் அதேவேளை இயற்கை விஞ்ஞானமான தாவரவியல் ஒவ்வொரு தாவரத்தினதும் உருவாக்கம், வளர்ச்சி மற்றும் நோய்கள் என்பன பற்றி எடுத்துரைக்கும். இத்தகைய பண்புகளில் இருந்து வேறுபட்ட பண்புகளை ஒழுக்கவியல் கொண்டு விளங்குகின்றது. ஒழுக்கவியல் நியமங்கள் அல்லது தராதரங்களின் துணைக்கொண்டு மனிதனின் செயல்கள் பற்றிய தீர்ப்புக்களை அல்லது மதிப்பீடுகளை வழங்குகின்றது. நல்லது, கெட்டது, சுயாதீன சித்தம், நன்மைத்தன்மை, கடமை, உரிமை, இன்னும் பல தொடர்பாக ஒழுக்கவியல் பகுத்தறிவு ரீதியாக சிந்திப்பதுடன் மேற்குறிப்பிட்ட எண்ணக்கருக்கள் பற்றி நடைமுறை ரீதியாக எழும் பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவரும் செயற்பாட்டை ஆற்றி வருகின்றது. விழுமியங்களை பின்பற்றுவது தொடர்பாக பல்வேறு தளங்களில் எழும் பிரச்சினைகளை விவாதிக்கும் ஆற்றல் கொண்டதாக ஒழுக்கவியல் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒழுக்கவியல் மொழி ரீதியான தர்க்கவியல் ரீதியான மற்றும் அறிவாராய்ச்சியியல் சார்ந்த கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கு பதில் அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

தற்கால ஒழுக்கவியலாளர்கள் மொழி ரீதியான ஒழுக்க எண்ணக்கருக்கள் தொடர்பான பகுப்பாய்வு முயற்சிகளை விரும்பி மேற்கொள்கின்றனர். நியம ரீதியான பாரம்பரிய அணுகுமுறைகள் ஒழுக்கவியலில் முக்கியத்துவத்தை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒழுக்கவியல் என்பது அடிப்படையில் கலை, சட்டம், மதம், வழக்காறு மற்றும் விஞ்ஞானம் என்பவற்றில் இருந்து வேறுபட்டு விளங்குவதோடு, ஒரு சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் கருவியாகவும் தனிநபர்களை வழிநடத்தும் வழிமுறையாகவும் விளங்கி வருகின்றது. உண்மையில் ஒழுக்கவியல் என்பது வழக்காறுகளில் இருந்தும் சட்டங்களில் இருந்தும் வேறுபட்டு காணப்படுகின்றது. ஒழுக்கவியல் ரீதியான பகுதி என்பது சட்ட ரீதியான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் அதேபோல் வழக்காறு செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றில் இருந்து வேறுபட்டதாக காணப்படுகின்றது.

ஒழுக்க ரீதியான வாழ்க்கை என்பது சட்ட ரீதியான தன்மையில் இருந்தும் வழக்காறுகளின் தன்மையில் இருந்தும் வேறுபட்டு தனித்துவ பண்புகளைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது. மேலைத்தேய ஒழுக்கவியல் என்பது அதிகளவு தனிநபர் தன்மை கொண்ட ஒன்றாக காணப்படுகின்றது. உரிமைகள் மற்றும் கடமைகள் என்பதன் அடிப்படையில் அதிகம் ஒழுக்கவியல் சமுதாயம் சார்ந்த ஓர் தோற்றப்பாடாக பார்க்கப்பட்டாலும், ஒரு தனிமனிதனின் சுயாதீனத் தன்மை மற்றும் பகுத்தறிவு என்ற அத்திவாரத்தின்மீது கட்டப்பட்ட கட்டிடமாக ஒழுக்கவியல் விளங்குவதை நாம் காணலாம். எத்தகைய சமூக சூழ்நிலைகளும் அழுத்தங்களும் ஒரு தனிமனிதன் மீது பிரயோகிக்கப்பட்டாலும் அவனது மனசாட்சியின்படி அவனது பகுத்தறிவிற்கு ஏற்ப அவனுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான தீர்ப்புக்களை அவன் எடுப்பதையே ஒழுக்கவியல் விரும்புகின்றது. ஆயினும் ஒரு மனிதனின் பிறப்புக்கு முன்னமே இருக்கும் விழுமிய ங்களும், வழக்காறுகளும் சமூகமயமாக்க செயன்முறை மூலம் அவனது உள்ளத்தில் ஆழப்பதிந்து சமுதாயத்தின் பொதுப்படையான கருத்துக்கள் (நல்லது, கெட்டது, சரி, பிழை) என்ற விழுமியங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதில் ஆழமாக பதித்து விடுகின்றது. ஒரு சமுதாயத்தின் வழக்காறுகளும் கருத்துக்களும் அவனது கருத்துக்களாக மாறுகின்றன. ஆயினும் ஒரு பகுத்தறிவு மனிதன் என்ற நிலையில் இருந்து சிந்திப்பதை இவை தவிர்த்து விடுகின்றன என்று கூற முடியாது. ஆபிரகாம் தனது மகனான ஈசாக்கை கடவுளுக்கு பலியிட சென்று மனமாற்றத்துக்கு உள்ளானதை யூத மத வரலாறு கூறுகின்றது. இதே போல் யூத மதத்தின் அதிகளவான வெளிப்புறமான சடங்கு முறைகள் கிறிஸ்தவத்தில் கேள்விக்குறியாக்கப்படுகின்றன. இவ்வகையில் ஒழுக்க விழுமியங்கள் பெருமளவிற்கு மனிதனின் உள்ளம் சார்ந்து வளர்ச்சி பெறுவதை நாம் காண முடிகின்றது. சடங்கு, சம்பிரதாயம் மற்றும் சட்ட நிலைகளில் இருந்து தனிமனிதன் எதிர் நோக்கும் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தும்போது குறிப்பிட்ட தனிமனிதன் முழுமையான ஒழுக்க ரீதியான மனிதனாக மாறுகின்றான்.

விபரிப்பு ஒழுக்கவியல் (Descriptive Ethics) என்பது ஒழுக்கவியலின் ஒரு பிரிவாகும். இது விஞ்ஞான ரீதியாக மக்களின் ஒழுக்க நம்பிக்கைகளை ஆய்வு செய்வதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக: இலங்கையில் உள்ள எவ்வளவு சதவீத மக்கள் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லுவதை விரும்புகின்றனர்? என்ற ஆய்வினை விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி முடிவுக்கு வருதல்.

ஒழுக்கவியலின் ஒரு பகுதியாகிய உரையாடல் ஒழுக்கவியல் Discourse Ethics விமர்சன கோட்பாட்டு மெய்யியலாளரான ஹாபர்மா ஸினால் முன்வைக்கப்பட்ட ஒரு கொள்கை ஆகும். உரையாடல் ஒழுக்கவியலின்படி குறிப்பிட்ட இரு குழுவினர்களுக்கு இடையே காணப்படும் உள்நோக்கங்கள் மற்றும் நலன்கள் என்பவை தொடர்பில் அவர்களுக்கு இடையே உரையாடல்கள் இடம்பெறும். உரையாடலின் பின் அவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வர். இதன் அடிப்படையில் அவர்களது செயல்கள் இடம்பெறும். பங்கு ஒழுக்கவியல் (Role Ethics) குடும்பம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தனிநபர் கடமைகள் மற்றும் சமூக கடமைகள் என்பவற்றுடன் தொடர்புபடுகின்றது. கன்பூஷியஸ் ஒழுக்கவியல் இதற்கு தக்க உதாரணமாகும்.

அரசிலி ஒழுக்கவியல் (Anarchist Ethics) மனிதர்களுக்கு இடையே சமத்துவம், நேர்மை, உண்மை என்பவை பற்றி பேசுகின்றது. மனிதர்கள் அரசில்லாமல் வாழ வேண்டும் என்பதே இதன் நோக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். அரசியல் செயற்பாட்டாளரான பீட்டர் குரொப்ட் கின் (Peter kropotkin) உடைய பங்களிப்பானது இந்த ஒழுக்கவியல் வளர்ச்சிக்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது.

## நோக்குக் கொள்கைகளும் நோக்கமில்லாக் கொள்கைகளும் (Teleological and Deontological Theories)

### நோக்குக் கொள்கைகள்

'நல்லது' (Good) 'கெட்டது' (Evil) என்ற மதிப்பீடுகள் நாம் நினைப்பது போல் சமுக சூழ்நிலைகளில் இலகுவானதாக காணப்படுவதில்லை. ஒரு மனிதன் குறிப்பிட்ட சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளை பிரயோகிப்பது கடினமானதாகும். ஒழுக்க மெய்யியலாளர்கள் இவ்வாறான நல்லது, கெட்டது, சரி, பிழை தொடர்பாக பல்வேறு வகைப்பட்ட தராதரங்களையும், நிலைகளையும் உருவாக்கி வைத்துள்ளனர். இத்தகைய தராதரங்களில் ஒன்றாக நோக்குக் கொள்கைகள் மற்றும் நோக்கமில்லாக் கொள்கைகள் என்ற வகையீடு காணப்படுகிறது.பொதுவாக தனிப்பட்ட ஒழுக்கவியல் கொள்கைகள் இந்த வகையீட்டில் வருவதை நாம் காண முடிகின்றது. நோக்குக் கொள்கைகளின்படி ஒரு செயல் நல்லதா? கெட்டதா? சரியா? பிழையா? என தீர்மானிப்பதற்குரிய கட்டளைக் கல்லாக அச்செயலின் பயன் கருத்திற் கொள்ளப்படுகின்றது. ஒரு செயல் அதிகளவு நன்மையினையும் குறைந்தளவு தீமையினையும் விளைவிக்குமாயின் அதனை நல்ல செயல் என கருதலாம் என்ற நோக்கினை நோக்குக்கொள்கைகள் வெளிப்படுத்துகின்றன. ஒரு செயலினால் வரும் நன்மையும் தீமையும் இங்கு ஒப்பிடப்படுகின்றது. ஒரு செயலின் விளைவு இங்கு கவனத்திற்கொள்ளப்படுகின்றது. பயன்பாட்டுவாதம், தன்னலவாதம் மற்றும் பிறர்நலவாதம் என்பன நோக்குக்கொள்கைகளுக்கு உதாரணங்கள். இங்கு நன்மை என்பது பயனாகவோ இன்பமாகவோ கருதப்படலாம்.

### நோக்கமில்லாக் கொள்கைகள்

செயல்கள் தொடர்பாக நோக்குக் கொள்கைகள் கூறும் விடயங்களுக்கு எதிரான கருத்துக்களை நோக்கமில்லாக்கொள்கைகள் வெளிப் படுத்துகின்றன. ஒரு செயல் நல்ல செயலா? கெட்ட செயலா? என தீர்மானிப்பதற்கு அதன் பலன் அல்லது இன்பத்தை கட்டளைக் கல்லாக கொள்ளும் நோக்குக்கொள்கைகளின் அணுகு முறைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமில்லாக் கொள்கைகள நிராகரிக்கின்றன. நல்ல செயல்களா? கெட்ட செயல்களா? என தீர்மானிப்பது அவற்றின் பலன்களோ இன்பமோ அல்ல மாறாக நியதிகளின் அடிப்படையில் நல்ல செயல் அல்லது கெட்ட செயல் என்பது தீர்மானிக்கப்படுகின்றது என இக் கொள்கைகள் எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக: நாம் ஏன் உண்மை பேச வேண்டும் என்றால் உண்மை பேசினால் சொர்க்கம் கிடைக்கும் அல்லது உண்மை பேசாவிட்டால் நரகம் கிடைக்கும் என்பதனாலோ அல்ல. மாறாக நாம் உண்மை பேச வேண்டும் என்பது கடவுளின் கட்டளையாக உள்ளது அல்லது அரசின் கட்டளையாக உள்ளது அல்லது மனசாட்சியின் ஆணையாக உள்ளது. இவ்வகையில் நோக்கமில்லாக் கொள்கைகளின் படி ஒரு செயல் நல்லது அல்லது கெட்டது என்பது அதன் பலனை கருத்திற் கொள்ளாமல் அதன் நியதி தன்மையை கருத்திற் கொண்டு முடிவு செய்யப்படுகின்றது. ஒரு செயல் கொண்டுவரும் பலன்கள் நன்மைகள், தீமைகள் என்பவற்றை நோக்கமில்லாக் கொள்கைகள் கருத்திற் கொள்வதில்லை. இக்கொள்கையினரின் கருத்துப்படி ஒரு செயல் நல்லதா? கெட்டதா? என்பது அந்த செயலின் தன்மையில் தங்கியுள்ளதே தவிர அந்த செயல் விளைவிக்கும் பலன்கள் அல்லது இன்பங்களில் காணப்படுவதில்லை. நோக்கமில்லாக் கொள்கையினர் ஒழுக்க சீலங்களை (உண்மை பேசுதல், பொய் சொல்லாமை, இன் னும் பல) ஒரு கருவியாக பார்ப்பதை தவிர்க்கின்றனர். ஒரு செயல் நல்ல விளைவினை கொண்டு வரலாம் அல்லது தீய விளைவினை கொண்டு வரலாம் அவர்கள் அதை பற்றி கவலைப்படுவதில்லை.

## அ) செயல்நோக்கமில்லாக் கொள்கை (Act deontological Theory)

நோக்கமில்லாக் கொள்கைகளில் நுட்பமான வேறுபாடுகளை அல்லது வகைகளை ஒழுக்க மெய்யியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். இவற்றுள் ஒரு கொள்கையாகவே செயல் நோக்கமில்லாக் கொள்கை (Act deontological Theory) காணப்படுகின்றது. செயல் நோக்கமில்லாக் கொள்கையினர். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நல்ல செயல் எது? தீய செயல் எது? என தீர்மானித்து நல்ல செயலை செய்ய வேண்டும் என வற்புறுத்துவர். இவர்கள் பொதுவான விதிகளின் அடிப்படையில் செயல்களை செய்வதை ஏற்பதில்லை. குறிப்பிட்ட சூழ்நிலையில் இவர்கள் செயற்படும்போது பொது விதிகளையோ அல்லது ஒரு செயலின் விளைவினையோ கருத்திற்கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாண்மையான இருத்தல் இயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகள் செயல் நோக்கமில்லாக் கொள்கையினராக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட சூழ்நிலையினை அடிப்படையாகக் கொண்டு ஒரு செயல் நல்ல செயலா? அல்லது தீய செயலா? என தீர்மானிப்பதன் காரணமாக இதனை 'சூழ்நிலை ஒழுக்கவியல்' (Situation Ethics) என அழைக்கின்றனர் (பிரான்கேனா, டபிள்யூ.கே *1989 : 17*). ஒரு செயலின் விளைவினை கருத்திற் கொள்ளாமல் (இன்பமாக இருக்கலாம் அல்லது பயனாக இருக்கலாம்) மனசாட்சி, உண்மை, ஒழுக்கம் என்ற விடயங்களை கருத்திற்கொண்டு ஒரு செயலை செய்ய தீர்மானிக்கும்போது ஒருவர் இவ்வகை ஒழுக்க கொள்கையினை பின்பற்றுபவராக கருதப்படுவார். எடுத்துக்காட்டாக:- ஒருவர் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி ஒருவரின் மருத்துவ செலவிற்கு *10* இலட்சம் ரூபாய் வழங்குதல்.

## ஆ) பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கை
## (Rule-Deontological Theory)

பொதுவிதிகளை அடிப்படையாகக் கொண்டதாக பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கை (Rule-deontological Theory) காணப்படுகிறது. இந்த வகைக்குள் வரும் ஒழுக்கச் செயல்கள் நுட்பமான மற்றும் பொது விதிகளை அடிப்படையாக கொண்டதாக இருக்கும் இக் கொள்கையானது பொதுமையான நிலையிலிருந்து செயல்கள் பற்றிய தீர்ப்புக்களை வழங்குவதாக இருக்கின்றது. இக்கொள்கையானது ஒரு செயலின் விளைவினை கருத்திற்கொள்ளாத அதேவேளை அந்த செயலோடு தொடர்புபட்ட சூழ்நிலையையும் கருத்திற்கொள்ளாது அந்த செயல் பற்றிய தீர்ப்பினை வழங்குவதாக உள்ளது. பொதுமைப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து குறிப்பிட்ட சூழ்நிலைகளில் காணப்படும் செயல்கள் பற்றிய தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:- மனுநீதி கண்ட சோழன் தனது மகனை தேர் சில்லில் இட்டுக் கொன்றமை. இங்கு நீதி என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானதாக கருதப்பட்டது.பசுவும் மனிதனும் ஒரு வகையீட்டில் வைத்து நோக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளவரசன் வீதி விடங்கன் அரசனுக்கு ஒரே மகன், வருங்கால அரசன், தற்செயலாக பசுக்கன்று கொல்லப்பட்டது அதாவது இது ஒரு விபத்து, இந்து மதத்தில் விலங்குகளைக் கொன்றால் பிராயச்சித்த சடங்குகள் உண்டு, இன்றும் பல என பல்வேறு விதமான சிறப்பு சூழ்நிலைகள் கவனத்திற் கொள்ளப்படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழன் தனது தீர்ப்பினை நிறைவேற்றினான். மனசாட்சி ஒரு செயல் சரியா? அல்லது பிழையா? என தீர்மானிக்கும் கட்டளைக் கல்லாக இக்கொள்கையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மனசாட்சி, பொதுவிதி மற்றும் செயல் நோக்கமில்லாக் கொள் கைகளில் முக்கியப்பங்கினை வகித்து வருகின்றது. இமானுவல் காண்ட் மற்றும் டபிள்யு.டீ ரோஸ் பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையின் ஆதரவாளர்களாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. செயல் நோக்கமில்லாக் கொள்கையின்படி தனிப்பட்ட தீர்ப்புகளில் இருந்து பொது விதிகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒரு தனி நபர் குறிப்பிட்ட சூழ்நிலையில் மேற்கொள்ளும் தனிப்பட்ட தீர்ப்பு செயல் நோக்கமில்லாக் கொள்கையின் அடிப்படைப் பண்பாகும். ஒருவர் எப்படி நல்ல செயல் மற்றும் கெட்ட செயல் என்பதை தீர்மானிக்கின்றார் என்ற கேள்விக்கு செயல் நோக்கமில்லாக் கொள்கையினர். உள்ளுணர்வு மூலம் ஒரு செயலின் கர்த்தா ஒரு செயலை தீர்மானிக்கின்றார் என விளக்கம் கொடுக்கின்றனர். இன்னொரு வகையில் கூறுவதாயின், ஒரு தனிநபர் தான் வாழும் சூழ்நிலையில் பல்வேறு கூறுகளை பகுப்பாய்வு செய்து ஒரு நல்ல செயல் பற்றிய தீர்ப்பினை மேற்கொள்கின்றார் எனலாம். இதை தவிர வேறுவகை வழிகாட்டி விதிகளை செயல் நோக்கமில்லாக் கொள்கையினர் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் அடிப்படையில் செயற்படுவது என்பது இக்கொள்கையின் முக்கியப் பண்பு எனலாம். பின் நவீனத்துவ மெய்யியல் குறிப்பிடுவதுபோல் ஒவ்வொரு நிகழ்வும் தனித்துவ தன்மை கொண்டது என்றும் ஒன்றை இன்னொன்றுக்காக குறைப்பு செய்ய முடியாது என்றும் பொது விதிகளைக் கொண்டு எல்லா தனிப்பட்ட நிகழ்வுகளையும் விளங்கிக்கொள்ள முடியாது போன்ற கருத்துக்கள் செயல் நோக்கமில்லாக் கொள்கையோடு இணைந்து செல்கின்றது (பிரேம்குமார், இர.2016: 59-60.). ஒரு நல்ல செயல் அல்லது தீய செயல் பற்றிய தீர்ப்பு தொடர்பான பொது விதிகள் பெரிதும் உதவும் என்று கூறமுடியாது என செயல் நோக்கமில்லாக் கொள்கையினர் வாதிடுகின்றனர். செயல் நோக்கமில்லாக் கொள்கை யினர் ஒரு செயலுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு சூழ்நிலையும் புதியது என்றும் தனித்துவமானது என்றும் கருதுவதன் காரணமாக பொதுவான ஒழுக்கவிதிகள் மற்றும் நியமங்களின் இருப்பும் முக்கியத்துவமும் கேள்விக்குறியாக்கப்படுகின்றன. உலக அரசுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சமுக மற்றும் அரசியல் சார்ந்த விதிகள் மற்றும் சட்டங்களின் மூலம் இயங்கி வருவதை நாம் அறிவோம். இத்தகைய விதிகள் மற்றும் சட்டங்கள் என்பவற்றுக்கு எதிரான போக்கினை செயல் நோக்கமில்லாக் கொள்கை கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. செயல் நோக்கமில்லா கொள்கை தொடர்பாக முன்வைக்கப்படும் முக்கிய விமர்சனம் என்னவெனில் எந்தவொரு பொதுவான விதியும் இல்லாமல் நாம் ஒரு செயல் பற்றிய ஒழுக்க தீர்ப்புக்களை உருவாக்குவது கடினம் என்பதாகும். ஒவ்வொரு சூழ்நிலைகளையும் புதியதாகவும் தனித்துவமானதாகவும் எடுத்துக்கொள்வோமானால் ஆனால் நாம் ஒழுக்க தீர்ப்புக்களை உருவாக்குவதில் அதிக சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்ற கருத்து செயல் நோக்கமில்லாக் கொள்கையினருக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றது. ஒழுக்க மெய்யியலாளரான ஆர்.எம். ஹெயார் (R.M.Hare) கருத்துப்படி ஒழுக்க ரீதியான கற்றல் பொது விதிகளில் தங்கியுள்ளதே தவிர தனிப்பட்ட செயல்களில் அல்ல. மேலும் பொது விதிகளின் துணையின்றி நாம் எதையும் எமது மூதாதையர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிடுகிறார் (பிரான்கேனா டபிள்யூ.கே 1989 : 24). பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையினர் பல விமர்சனங்களை முன்வைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட செயல் தொடர்பாக வெவ்வேறு மனிதர்கள் முரண்பாடான முடிவுகளை எடுப்பார்களாயின் (ஒழுக்க ரீதியான விதிகளின் இருப்பு நிலை கேள்விக்குறியாக்கப்படும். உண்மையில் ஒருவரின் ஒரு செயல் பற்றிய மதிப்பீடு கடந்தகால அனுபவங்களில் இருந்தும் மூதாதையர்களின் அறிவின் சாரமாகவும் அமைவதை நாம் காணலாம். ஒவ்வொரு ஒழுக்க விதியும் அனுபவத்தின் தேறலாக இருப்பதனை நாம் அவற்றை பகுப்பாய்வு செய்யும்போது புரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக:- 'கடன் வாங்கினால் திருப்பி கொடுக்க வேண்டும்.' என்ற விதியினை எடுத்துக்கொள்வோம். ஆனால் வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு நபர்கள் கடனை திருப்பிக்கொடுக்கலாம் கொடுக்காமலும் விடலாம். மேற்குறிப்பிட்ட முரண்பாடான இரண்டு முடிவுகளும் சரியானது என்ற வாதிட முடியாது. "யார் கடன் வாங்கினாலும் கட்டாயம் திருப்பி கொடுக்க வேண்டும்" என்ற விதி பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதியாக இருப்பதால் இதனை பிழையானது என்றோ அல்லது முட்டாள்தனமானது என்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிட முடியாது. ஏனெனில் எந்தச் சூழ்நிலையிலும் கடனை திருப்பிக்கொடுத்தல் என்பது கடனை திருப்பிக் கொடுப்பவர்களுக்கு நன்மையே ஏற்படுத்தும் இந்த விதி எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட செயல் ஒருவரினால் சரியானது என தீர்மானிக்கப்படுமேயானால் அந்தச் செயல் அது போன்ற எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருத்தமானதாக இருக்கும். இவ்வகையில் ஒரு சரியான செயல் பொதுமை தன்மையினை வெளிப்படுத்துவதுடன் பகுத்தறிவுடன் இணைந்து செல்வதாக இருக்கும். இவ்வகையில் ஒழுக்க ரீதியான தீர்ப்புக்கள் ஒரு வகை உய்த்தறி முறைக்குரிய தத்துவங்களாகக் காணப்படும். குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட செயல் தொடர்பாக ஒரு ஒழுக்க தீர்ப்பினை ஒருவர் உருவாக்குவாரேயானால் அது கட்டாயம் பொதுமையான ஒழுக்க விதியினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இப்படியான பொதுவான கட்டளைக் கற்கள் இல்லாவிட்டால் எமது அறிவு இத்தகைய தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளாது. குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட செயல் தொடர்பாக ஒருவர் எடுக்கும் முடிவுகள் முழுமைத்தன்மை தனித்தன்மை வாய்ந்தது என்று கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஒருவரின் நல்ல அல்லது கெட்ட செயல் என்ற தீர்ப்பு தனியே குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு மட்டுமல்லாமல் அது போன்ற சமமான சூழ்நிலைகளுக்கும் பொருந்தக்கூடியது. இவ்வகையில் செயல் நோக்கமில்லாக் கொள்கை பற்றி விமர்சனமும் முன்வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஒழுக்கவியல் தீர்ப்புக்கள் பகுத்தறிவினை திருப்திப்படுத்துவதாக இருப்பதன் காரணமாக அவை தனித்தன்மை உடையனவாக இருப்பதை காட்டிலும் பொதுமை தன்மை உடையனவாகவோ அல்லது பொது விதிகளை சார்ந்து காணப்படும். இவ்வகையில் செயல் நோக்கமில்லா கொள்கைகளின் இருப்பு நிலையும் நியாயப்படுத்தலும் கேள்விக் குறியாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

செயல் நோக்கமில்லாக் கொள்கைகளைப் போல உறுதியற்ற தன்மையினை பொதுவிதி நோக்கமிலாக் கொள்கைகள் கொண்டிருக்க வில்லை. பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையின் பின்புலம் மிகவும் உறுதியாக இருப்பதை நாம் பார்க்க முடிகின்றது. பிளேட்டோ சோபிசவாதியான புரோட்டோகோரஸ்க்கு எதிராக முன்வைத்த வாதங்களை நாம் அப்படி எடுத்துக்கொள்ளலாம். மாறாத்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்தக்கூடியதன்மை தான் உயர்ந்த அறிவு என பிளேட்டோ குறிப்பிட்டார். அதேபோல் பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையினரும் ஒழுக்க விழுமியங்களுடன் தொடர்புபட்ட வகையில் ஒரு செயல் தொடர்பான பொது விதிகளை முன்வைக்கின்றனர். பொதுமையில் இருந்து தனியன்களுக்கு செல்கின்ற உய்த்தறி முறையினை இக்கொள்கையினர் ஒழுக்கவியல் பரப்பில் பயன்படுத்துகின்றனர். இக்கொள்கை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட மனிதன் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற நியதி அல்லது விதியினை முன்வைக்கின்றது. அதிகளவான ஒழுக்கம் தொடர்பான விதிகளை இக்கொள்கை முன்வைக்கின்றது.

இக்கொள்கை தொடர்பாக பல காத்திரமான விமர்சனங்களை முன்வைக்க ஒழுக்க மெய்யியலாளர்கள் தவறவில்லை. இக்கொள்கை அளவுக்கதிகமான விதிகளை முன்வைக்கும் அதேவேளை விதிவிலக்குகளையும் முரண்பாடுகளையும் ஏற்றுக்கொள்கின்றது. எடுத்துக்காட்டாக : "ஒரு சிறந்த வீரன் போரில் எதிரியை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும்." என்பது போருடன் தொடர்புபட்ட ஒரு ஒழுக்க விதியாகும். ஆனால் இராமாயண கதாநாயகனான இராமன் சிறந்த வீரனாக புகழப்படுகின்றான். இத்தகைய இராமன் வாலியினை மறைந்து நின்று கொல்கின்றான். ஏனெனில் வாலியினை வேறுவகையில் கொல்ல முடியாது என்பதுடன் வாலியின் தம்பியான சுக்கிரீவனுக்கு கொடுத்த வாக்குறுதியினை – 'வாலியினை கொன்று உனக்கு அரச அதிகாரத்தை பெற்றுத் தருவேன்.' என்பதை மீறிய வனாக இராமன் இருப்பான். மேலும் சூரிய குலத்தில் உதித்தவர்கள் தனது வாக்குறுதியினை நிறைவேற்றாவிட்டால் உயிரை விட்டுவிடுவது வழக்கம். இத்தகைய பின்புலத்தில் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒழுக்க விதி 'ஒரு சிறந்த வீரன் தனது எதிரியினை நேரடியாக எதிர்கொள்வான்' என்ற ஒழுக்க விதிக்கு முரணாக இருப்பதை காணலாம். மேலும் நிராயுதபாணியான இராவணனை 'இன்று போய் நாளை வா!' என்று போர் ஒழுக்கத்தை பின்பற்றிய இராமன் வாலி விடயத்தில் 'ஒரு சிறந்த வீரன் தனது எதிரியினை நேரடியாக எதிர்கொள்வான்' என்ற போர் ஒழுக்க விதியினை பின்பற்ற முடியாமல் போய் விட்டது. இத்தகைய சூழ்நிலை ஒழுக்க விதிகளை பின்பற்றும்போது விதிவிலக்குகளை உருவாக்குகின்றது. இவ்வகையில் நிறைய ஒழுக்க விதிகளை நாம் பின்பற்றும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி விலக்குகளையும் முரண்பாடுகளையும் எமது நாளாந்த வாழ்வில் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். விதிகளும் விதிவிலக்குகளும் இணைந்தவையாகவே ஒழுக்கத் தீர்ப்புக்களை மேற்கொள்ளும் சூழ்நிலைகள் காணப்படுகின்றன என்ற கருத்தினை ஏற்றுக்கொள்பவர்களாக பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையினர் இருக்கின்றனர்.

விதிகளுக்கு இடையே காணப்படும் விதிவிலக்குகள் முரண்பாடுகள் தொடர்பில் பொதுவிதி நோக்கமில்லா கொள்கையாளரான டபிள்யு. டீ ரோஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கிறார். இதன் பொருட்டு சூழ்நிலை கடமை (Actual duty) மற்றும் பொதுவான கடமை (Prima Facie Duty) என வகைப்படுத்துகிறார். குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவரால் செய்யப்படும் கடமையாக சூழ்நிலை கடமை காணப்படுவதுடன் முரண்பாடுகளையும் விதிவிலக்குகளையும் இவ்வகை கடமைகள் கொண்டிருக்கும் என்பதை உறுதியாக ஏற்றுக்கொள்கிறார். ஆனால் பொதுவாக கடமைகள் விதிவிலக்குகள் அற்றதாக இருக்குமென வாதிடும் ரோஸ், ஒருவர் அதிகளவு பொதுவாக கடமைகள் தொடர்பான விதிகளை விதிவிலக்குகள் இன்றி உருவாக்கிக்கொள்ள முடியும் என நம்புகிறார். ஆயினும் ஒரு பொதுவான வகை கடமை விதி இன்னொரு பொதுவான வகை கடமை விதியுடன் முரண்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதனை அவர் மறுக்கவில்லை. ரோஸ் பொதுவான கடமை மற்றும் சூழ்நிலைக் கடமை என்ற வகையீட்டினை உருவாக்கிய போதும் பொதுவான வகை கடமைகளில் எது முக்கியத்துவம் உடையது? எது முக்கியத்துவம் குறைந்தது? என்ற அடுக்கமைவினை பற்றி தெளிவாக குறிப்பிடவில்லை என்றும் பொதுவான வகை கடமைகள் தொடர்பான கட்டளைக்கற்கள் மற்றும் நல்ல/தீய செயல் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் அவர் தெளிவான விளக்கங்கள் முன்வைக்கவில்லை என ஒழுக்க மெய்யியலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர் (பிரான்கேனா, டபிள்யூ.கே 1989 : 27).

ஆயினும் ரோஸ் சில பொதுவான வகை கடமைகளை தற்புல ஆதாரமாக கருதுவது குறிப்பிடத்தக்கது. தற்புல ஆதாரங்களுக்கு வெளி ஆதாரங்கள் தேவையில்லை. இவ்வகை தற்புல ஆதாரங்களாக சில பொதுவான கடமைகளை அவர் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக : விசுவாசம், நன்றியுடைமை, நீதி இன்னும் பல. ஆனால் ஒழுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யியலாளர்கள் அனைவரும் இவற்றை தற்புல ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடிப்படை ஒழுக்க விதிகள் தொடர்பாக எல்லா பொது விதி நோக்கமில்லாக் கொள்கையாளர்களும் ஒரே கருத்தினை கொண்டிருக்கிறார்கள் என்று கூற முடியாது. குறிப்பாக ஒழுக்க விதிகள் தற்புல ஆதாரங்கள் என்ற கருத்தில் பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையினரும். தம்முள் வேறுபடுவது குறிப்பிடத்தக்கது. ஒரு சிலர் அடிப்படை ஒழுக்க விதிகள் தற்புல ஆதாரங்கள் என்றும், சிலர் இல்லை என்றும் வாதிடுகின்றனர். இன்னும் சிலர் இவ்விதிகள் எதிர்பாராத விதமாக எடுக்கப்படுகின்றன என்றும், சிலர் இவை கடவுளின் வெளிப்படுத்தல் என்றும், மேலும் சிலர் பௌதீக அதீத சிந்தனைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டபோதிலும் மிகவும் பொதுமைப்படுத்தப்பட்ட சில விதிகளை ஒழுக்க மெய்யியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். இத்தகைய பொதுமைப்படுத்தப்பட்ட விதிகளை குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு பிரயோகிக்க முடியும். எடுத்துக்காட்டாக 'நான் எனது நலன்களை கருத்திற்கொள்வதுபோல ஏனையோரது நலன்களையும் கருத்திற்கொள்வேன்' இவ்வாறான மிகவும் பொதுமைப்படுத்தப்பட்ட அடிப்படை விதிகளை பொது விதி நோக்க மில்லாக் கொள்கையினர் உருவாக்கிக்கொண்டாலும்கூட இத்தகைய விதிகள் முரண்பாடு அற்றவை என உறுதியாக கூற முடியாது.

### ஆண்டவன் கட்டளை ஒழுக்கக் கொள்கை
### (Divine Command Theory)

பொது விதி நோக்கமில்லாக் கொள்கைகளில் ஒன்றாக இக்கொள்கை காணப்படுகின்றது. ஒரு செயல் நல்லதா? கெட்டதா? சரியா? பிழையா? என்பது கடவுளின் கட்டளை அல்லது கடவுளின் சித்தம் என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. கடவுள் எத்தகைய செயல்களை செய்ய வேண்டும் எனக் கட்டளை இடுகின்றாரோ அத்தகைய செயல்கள் நல்லவை ஒழுக்கமானவை அதேவேளை கடவுள் எவ்வாறான செயல்களை செய்யக்கூடாது என்று கட்டளை இடுகின்றாரோ அவை ஒழுக்கமற்றவை தவறானவை இக்கொள்கையின்படி கடவுளின் கட்டளையால் மட்டுமே ஒரு செயல் நல்ல செயலாகவும் ஒழுக்கமான செயலாகவும் மாறுகின்றது. எடுத்துக்காட்டாக :- யூத மதத்தில் கூறப்படும் 10 கட்டளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையின் பிரச்சனையான எண்ணிறைந்த ஒழுக்க விதிகளில் எவற்றை பின்பற்றுவது? எவற்றை விடுவது? என்பவற்றுக்குரிய தீர்வாக இக்கொள்கையினர் குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த விதியினை பின்பற்றுவது என்பதை கடவுளே கட்டளை இடுவார் என விளக்கம் அளிக்கின்றனர். எடுத்துக்காட்டாக : மெய்யியலாளரான சோக்கிரடீஸ் அசரீரி மூலம் வழிநடத்தப்பட்டமை. இக்கொள்கையின்படி கடவுளின் கட்டளையாக ஒழுக்க விதிகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுகின்றபோது கடவுளினால் நன்மைகள் கிடைக்கும். அதே வேளை அவற்றை நிறைவேற்றாதபோது கடவுளின் கட்டளைகளை மீறிய குற்றத்திற்காக தண்டனைகளும் கிடைக்கும்.

மேலும் இக்கொள்கை கடவுளின் கட்டளைக்கு நாம் அடி பணிய வேண்டும் என வலியுறுத்துகிறது. கடவுளின் கட்டளை சரியானதாகவும் எமக்கு நன்மையினை விளைவிப்பதாகவும் இருக்கும் எனக் இக்கொள்கையினர் உறுதியாக கூறுகின்றனர். மேலும் ஒரு செயல் நல்ல செயலாக இருப்பதன் காரணமாகவே கடவுள் அதனை செய்ய வேண்டும் என கட்டளை இடுகிறார் என்ற கருத்தினையும் இவர்கள் முன்வைக்கின்றனர். கடவுள் நன்மை மற்றும் கருணை என்பவற்றின் மொத்த உருவமாக இருப்பதனால் கடவுள் கொடுமையான செயல்களை செய்ய ஒருபோதும் எமக்கு கட்டளை இடமாட்டார் எனவும், கடவுள் நன்மையான செயல்களையே செய்ய எமக்கு கட்டளை இடுவார் எனவும் இக்கொள்கையினர் வாதிடுகிறார். கடவுள் நன்மையானவர் கருணையே வடிவமானவர் போன்ற கருத்துக்களை நாம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, அவரால் கட்டளை இடப்படும் ஒழுக்க செயல்கள் சரியானவையாகவும் நல்லவையாகவும் இருக்கும் என ஏற்றுக்கொள்ளலாம். மனிதனின் பகுத்தறிவின் அடிப்படையில் கடவுளினால் கட்டளை இடப்படும் செயல்களை நாம் நல்ல செயல்களாக கருத முடியாத சூழ்நிலைகள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக:-திருஞானசம்பந்தர் குறைந்த வயதில் சிவபதமடைதல். மனிதனின் பகுத்தறிவு கடவுளின் அறிவுடன் ஒப்பிடும்போது முழுமையாக இருக்க முடியாது என்பதுடன் மனித பகுத்தறிவின் அடிப்படையில் கடவுளினால் கட்டளையிடப்படும் செயல்களை பகுப்பாய்வு செய்தால் அவை சில வேளைகளில் பிழையானதாகவும் தவறானதாகவம் தோன்றலாம். எடுத்துக்காட்டாக : கொரோனா வைரஸ் மனிதர்களை அழிப்பது மனிதர்கள் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளுக்கு எதிரான பாவத்தின் விளைவு என ஒரு சமயவாதி கூறுவாராயின் பகுத்தறிவின் அடிப்படையில் கடவுளின் இந்த செயற்பாடு விமர்சிக்கப்பட்டலாம். ஆனால் கடவுளின் நோக்கில் இருந்து பாாக்கும்போது இது சரியாக தோன்றலாம். இக்கொள்கை அதிகம் உள்ளுணர்வு தன்மையுடனும் சமயத்துடனும் நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ளதை நாம் காண முடிகின்றது.

### காண்டின் ஒழுக்கக் கொள்கை

பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கையின் வகையீட்டுக்குள் அடங்கும் ஒரு கொள்கையாக காண்டின் ஒழுக்கவியல் கொள்கை காணப்படுகின்றது. (பிரான்கேனா, டபிள்யூ.கே 1989:30) 18ம் நூற்றாண்டை சேர்ந்த ஜேர்மானிய மெய்யியலாளரான இமானுவெல் காண்ட மிகச் சிறந்த ஒழுக்க மெய்யியலாளர்களுள் ஒருவராக அறிஞர்களால் கருதப்படுபவா். மனிதனின் ஒழுக்க வாழ்க்கை தொடர்பாக ஒரு சிறந்த கொள்கையினை முன்வைக்கின்றார். இதனை 'நிபந்தனை இல்லா ஒழுக்கக் கொள்கை' (Categorical Imperative) என அழைக்க முடியும் ஒழுக்கவியலின் பௌதீக அதீத அடிப்படைகள் (1785) என்ற படைப்பில் ஒழுக்கவியலுக்கான தமது பங்களிப்பினை காண்ட் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. நாம் பல்வேறு நோக்கங்களுடனும் அடிப்படைகளுடனும் ஒழுக்கச் செயல்களை செய்கிறோம். நல்ல செயல்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்றும், தீய செயல்களுக்கு நரகம் கிடைக்கும் என்றும் என்ற நம்பிக்கை பெரும்பாலான மக்களிடம் காணப்படுகின்றது. இதைவிட நல்ல நோக்கத்துடன் ஒரு செயலில் ஈடுபடும்போது இயற்கை சூழ்நிலை காரணமாகவோ அல்லது வேறு காரணங்களிலோ நமது செயல் நாம் நினைக்கும் விளைவைக் கொண்டு வருவதில்லை. சில வேளைகளில் நாம் எமது நண்பர்களுக்கு நன்மை செய்யும்போது அவர்களுக்கு அது தீமையாக மாறி அவர்கள் எமக்கு எதிரிகளாக மாறிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதைவிட ஒரு மனிதன் ஒழுக்க ரீதியான செயல்களை செய்ய முற்படும் போது தேர்வுப் பிரச்சினை ஏற்படுகின்றது. அதாவது நிறைய செயல்களை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது எதனைச் செய்வது? எதனை விடுவது? என்ற தர்ம சங்கடமான சூழ்நிலைகள் மனித வாழ்வில் அடிக்கடி ஏற்படுகின்றன. இத்தகைய பிற்புலத்தில் காண்டின் ஒழுக்கவியல் சார்ந்த பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டின் நற்செயல், அதன் விளைவுகள் மற்றும் நன்மை போன்ற ஒழுக்கவியல் ஆராய்ச்சியின் முடிவாக நற்சித்தம் (Good will) அமைகின்றது.

> "இவ்வுலகமாயினும் இவ்வுலகத்துக்கு மேலான உலகங்களாயினும் மிகவும் உயர்ந்த நன்மையாக கருதப்படக்கூடியது நற்சித்தமே" (கோடன் கிரஹம், 2004: 101).

பொருளாதார வசதிகளும் சிறந்த வாழ்க்கைக்குரிய பொருட்களும் சேவைகளும் ஒருவரிடம் நிறைந்து காணப்பட்டாலும் வேறு பல நன்மைகளும் விழுமியங்களும் காணப்பட்டாலும் நற்சித்தத்தினை அவர் கொண்டிராதபோது அவரது வாழ்க்கையை உயர்ந்த ஒழுக்க வாழ்க்கையாக கருத முடியாது. என காண்ட் வாதிடுகின்றார். ஏனைய விழுமியங்களும் வசதிகளும் நற்சித்தம் இல்லாதபோது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படலாம் என்ற கருத்தினையும் முன்வைக்கின்றார் காண்ட். பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக ஒரு செயலை முழுமையாக செய்து முடிக்க முடியாவிட்டாலும் நாம் செய்து முடிக்க முயற்சிக்கும் செயல் தொடர்பாக நற்சித்தத்தினை கொண்டிருப்போமேயானால் அது மிக உயர்ந்த நிலை என காண்ட் வாதிடுகிறார். இவ்வாறாக செயலின் விளைவினை விட செயலின் நோக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குபவராக காண்ட் காணப்படுகிறார்.

காண்டின் ஒழுக்கவியலிலுள்ள சிறப்பம்சம் என்னவெனில் அவர் ஒரு செயலின் நோக்கத்தினையும் அந்த செயலின் விளைவினையும் பிரிப்பதுதான். நல்ல நோக்குடன் ஒருவர் ஒரு செயலை செய்யும்போது, தீமையான விளைவு ஏற்படும் போது, அந்த செயல் மற்றும் அந்த செயலை செய்தவர்கள் விமர்சிக்கப்படுவார்கள். அதேவேளை ஒருவர் தீய நோக்கத்துடன் ஒரு செயலை செய்து அந்த செயல் நன்மையினை கொண்டுவரும்போது அந்த செயலை செய்தவரும் அந்த செயலும் போற்றுவதற்கு உரியதாக மாறுகின்றது. இத்தகைய நிலையினை காண்ட் ஏற்கவில்லை. ஒரு செயலின் விளைவினைக் கொண்டு ஒரு செயல் நல்ல செயலா? தீய செயலா? என தீர்மானிக்க முடியாது என வாதிடும் காண்ட், ஒரு செயல் நல்ல செயலா? அல்லது தீய செயலா? என தீர்மானிப்பது அதன் நோக்கமே என வாதிடுகிறார். இதனை நற்சித்தம் என்கிறார். ஒரு ஒழுக்க ரீதியான செயலை செய்வதற்குரிய சித்தமே நற்சித்தமாகும். ஒரு செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரும் நல்ல பலன்கள் அல்லது தீய பலன்கள் என்பதை காட்டிலும் அச்செயலை செய்வதற்கான நோக்கம் ஒழுக்க ரீதியாக உயர்ந்தது என காண்ட் வாதிடுகின்றார்.

சிலர் நற்செயல்களில் ஈடுபடும்போது சுயநலம் இல்லாமல் அனுதாபத்துடன் ஏழை மக்களுக்கு சேவை செய்து அதன்மூலம் திருப்தியும் மனமகிழ்ச்சியும் அடைகின்றனர். இத்தகைய செயல்கள் பிறருக்கு நன்மையினையும் செயல் செய்பவருக்கு மனமகிழ்ச்சியையும் அளிப்பதாக இருந்தபோதிலும் மேற்குறிப்பிட்ட செயல்கள் ஒரு விதமான பலன்களை எதிர்பார்த்தே செய்யப்பட்டவை காரணமாக இத்தகையச் செயல்களை உயர்ந்த ஒழுக்கச் செயல்களாக காண்ட் கருதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவர் ஒழுக்க ரீதியான செயல்கள் மூலம் மகிழ்ச்சியினையும் இன்பத்தினையும் பெற்றுக்கொள்கின்றபோது இத்தகைய செயல்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியானதாக இருக்கின்ற போதும் இப்படியான செயல்களை உயர்ந்த ஒழுக்கச் செயல்களாக காண்ட் கருதவில்லை. ஏனெனில் இத்தகைய செயல்கள் ஒருவித விளைவுகளையோ அல்லது பயன்களையோ கொண்டிருக்கின்றன. ஒரு செயலை நாம் செய்யும்போது மகிழ்ச்சியினையோ அல்லது இன்பத்தினையோ எதிர்பார்க்காமல் 'இது எனது கடமை', 'இதை நான் செய்ய வேண்டும்' என்ற உணர்வுடன் விருப்பு வெறுப்புகள் இன்றி ஒரு செயலை செய்யும்போது மட்டுமே அதனை உயர்ந்த ஒழுக்கச் செயலாக காண்ட் கருதுகிறார். எடுத்துக்காட்டாக : மனுநீதி கண்ட சோழன் தனது பாச பந்தங்களுக்கு அடிபணியாமல் ஒரு நல்ல அரசனின் கடமையினை நிறைவேற்றும் நோக்குடன் தனது மகனை தேர் சில்லில் இட்டு கொன்றமை.

கடமை உணர்வுடன் செய்யப்படும் செயல்களே ஒழுக்க ரீதியாக பெறுமதி உடையவை என காண்ட் கருதுகிறார். இன்னும் தெளிவாக கூறுவதாயின், குறிப்பிட்ட ஒரு செயல் சரியானது என்பதனாலேயே அச்செயலைச் செய்ய ஒருவர் முன்வர வேண்டுமே தவிர அந்த செயலின் பலன்களை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட செயலைச் செய்ய முன்வரக்கூடாது என வாதிடும் காண்ட், கடமையின் பொருட்டு கடமையினைச் செய்தலே நற்சித்தமாகும் எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய நற்சித்தம் தூய பகுத்தறிவு சித்தமாக உள்ளது என்றும் குறிப்பிடுகிறார் (கோடன் கிரஹம் 2004 : 105).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபந்தனை இல்லா ஒழுக்க உணர்வினை சிறந்த கண்டுபிடிப்பாக கருதும் காண்ட் இதனை ஒழுக்கவியலின் மையமாக கருதுகின்றார். எமது விருப்பு வெறுப்புக்கள், ஆசைகள், முற்சாய்வுகள், இன்னும்பல என்பவற்றை கடந்ததாக இந்த நிபந்தனை இல்லா ஒழுக்க உணர்வு காணப்படுகின்றது.

ஒரு செயல் ஒழுக்க ரீதியாக நல்ல செயல் என்பதை எப்படி தீர்மானிப்பது? என்ற கேள்விக்கு பதிலாக இரண்டு விடயங்களை ஒரு செயல் தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும் எனக் காண்ட் குறிப்பிடுகிறார்.

1. பொதுமைப்படுத்தல் செயல்முறை
2. ஏனைய மனிதர்களையும் தன்னை போன்ற மனிதர்களாக கருதுதல்

பொதுமைப்படுத்தல் செயன்முறை பகுத்தறிவு சிந்தனையினை பிரயோகித்து எத்தகைய செயல்களை நாம் செய்ய வேண்டும். எத்தகைய செயல்களை செய்யக்கூடாது என்ற முடிவுக்கு நாம் வர உதவுகின்றது.இவ்வகையில் நாம் பின்பற்றும் ஒழுக்க விதியினை உலகில் உள்ள எல்லோரும் பின்பற்றினால் என்ன நடக்கும் என சிந்தித்து பார்த்து ஒரு முடிவுக்கு நாம் வர வேண்டும் என காண்ட் கூறுகிறார். இதுவே பொதுமைப்படுத்தல் செயல் முறையாகும். எடுத்துக்காட்டாக:- ஒருவர் தனக்குரிய ஒரு பிரச்சினைக்கு தீர்வாக தற்கொலையினை ஒரு முடிவாக எடுப்பாரேயானால் ஒவ்வொருவரும் இப்பிரச்சனைக்குரிய தீர்வாக தற்கொலையினை தேர்ந்தெடுப்பார்களாயின் என்ன நடக்கும் என சிந்தித்தது பார்க்க வேண்டும். இவ்வாறு சிந்திக்கும்போது உலகில் உள்ள அனைவருமே தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். ஆகவே தற்கொலை செய்தல் தவறானது எனும் முடிவுக்கு நாம் வரலாம்.

பொது விதியினை தீர்மானிக்கும்போது ஒருங்கிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என காண்ட் குறிப்பிடுகிறார். ஒருங்கிணைந்த தன்மை என்பது எந்த சூழ்நிலையிலும் எல்லோராலும் ஒரு குறிப்பிட்ட ஒழுக்க விதி எந்த விதமான சிக்கல்களும் முரண்பாடுகளும் இன்றி பின்பற்றக்கூடியதாக இருத்தல். இது விதியினை உருவாக்கும் கர்த்தாவினையும் உள்ளடக்குவதாக இருக்க வேண்டும். விளங்க சொல்வதாயின் பஸ்மாசூரன் சிவனிடம் பெற்ற வரம்போல் இருக்க வேண்டும். அதாவது, நான் யார் தலைமேல் கைவைக்கிறேனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும். இந்த விதிக்கு பஸ்மாசூரன் விதி விலக்கல்ல என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக:- நான் அதிக பணபற்றாக் குறையினால் அதிக பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றேன் என வைத்துக்கொள்வோம். இத்தகைய சூழ்நிலையில் பணத்தை யாரிடம் இருந்தாவது கடனாக பெற்றால்தான் எனது வாழ்க்கையினை பிரச்சனையில்லாமல் நடத்த முடியும் என நம்புகிறேன் என்றும் வைத்துக் கொள்வோம். மேலும் என்னால் கடன் வாங்கினால் திருப்பிக்கொடுக்க முடியாது என்பதையும் நான் அறிவேன். இத்தகைய சூழ்நிலையில் எனக்கு சாதகமாக காண்டின் பொதுமைப்படுத்தல் செயன்முறைமூலம் ஒரு ஒழுக்க விதியினை உருவாக்கி அதனை கடைப்பிடிக்க முடியுமா? என நான் சிந்தித்து 'கடன் வாங்கினால் திருப்பிக் கொடுக்க தேவை இல்லை' என்ற ஒழுக்க விதியினை உருவாக்குகிறேன் என வைத்துக்கொள்வோம். இந்த விதி ஒருங்கிணைந்த தன்மையினை பெற்றுக்கொள்ளுமா? என பார்ப்போம். என்னைப்போல் ஒவ்வொருவரும் கடன் வாங்கி திருப்பிக்கொடுக்காவிட்டால் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.

1. எனக்கு கடன் கொடுத்தவர் இனி யாருக்கும் கடன் கொடுக்க மாட்டார்.
2. ஒவ்வொருவரும் பெற்ற கடனை திருப்பிக்கொடுக்காத பட்சத்தில் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் மற்றும் கடன் கொடுக்கும் தொழில் இல்லாமல் போய்விடும்.
3. ஒவ்வொருவரும் கடனை திருப்பிக் கொடுக்காததன் காரணமாக ஒருவருக்கு அவசரமாக கடன் தேவைப்படும் இடத்து கடன் கொடுக்க யாரும் இருக்க மாட்டார்கள்.
4. என்னிடம் ஒருவர் கடன் பெற்றாலும் திருப்பி தருவார் என நான் எதிர்பார்க்க முடியாது.
5. கடன் கொடுத்தவர் மனவேதனைக்கு உள்ளாவார்.

கடனை பெறும் அனைவரும் என்னைப்போல் சிந்திப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. கடனை பெறும் ஒருவர் கடனை கொடுக்க தேவையில்லை அதுதான் சரி என சிந்திப்பார். எனவே இத்தகைய சூழ்நிலையில் ஒருங்கிணைந்த தன்மையினை இந்த விதி தொடர்பாக நாம் பெற முடியாது. ஆனால் 'கடன் கொடுத்தால் திருப்பி கொடுக்க வேண்டும்' என்ற விதி தொடர்பாக நாம் ஒருங்கிணைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையினை பெறலாம். இந்த விதி தொடர்பாக சிக்கல்களோ முரண்பாடுகளோ இருக்காது என காண்ட் குறிப்பிடுகிறார். மேலும் மனிதர்களை எம்மைப்போன்ற மனிதர்களாக மதிக்க வேண்டும்.அவர்களை எமது நோக்கங்களை அடையும் வகையில் கருவிகளாக பயன்படுத்தக்கூடாது என ஒழுக்க விதி உருவாக்கம் மற்றும் நடைமுறை தொடர்பில் தனது கருத்துக்களை காண்ட் தெரிவிக்கின்றார்.

காண்ட் ஒழுக்க ரீதியான வாழ்க்கை மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை என்று தொடர்களை பயன்படுத்துவதன்மூலம் ஒழுக்க ரீதியான வாழ்க்கையினை மகிழ்ச்சியான வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்துகிறார். ஒழுக்க ரீதியான மனிதர்கள் பகுத்தறிவு ரீதியான ஒழுக்க ரீதியான செயல்களை தீர்மானிக்கும் கர்த்தாவாக இருப்பதுடன் செயல்களுக்கு பின்னால் உள்ள நோக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் மனிதர்களாக இருப்பர். "சரியான செயலை நாம் ஏன் செய்கின்றோம் என்றால் அது சரியான செயலாக இருப்பதனால் தான்" என காண்ட் குறிப்பிடுகிறார் (கோடன் கிரஹம் 2004: 116).

காண்டின் கருத்துப்படி ஒரு செயல் முழுமையாக பகுத்தறிவின் அடிப்படையிலேயே சரியானது என தீர்மானிக்கப்படுகின்றது. பொதுமைப்படுத்தல் செயன்முறை மற்றும் ஒவ்வொரு மனிதர்களையும் மனிதர்களாக மதித்தல் போன்ற எடுகோள்களின் அடிப்படையில் நல்ல மற்றும் தீய செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

பின்வரும் விமர்சனங்கள் காண்டின் ஒழுக்கவியல் தொடர்பாக முன்வைக்கப்படுகின்றன. காண்ட் ஒரு செயலின் நோக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கி அந்த செயலில் விளைவுக்கு முக்கியத்துவம் வழங்க மறுக்கின்றார். இன்னொரு வகையில் கூறின், ஒரு செயலையும் அதன் நோக்கத்தையும் பிரிக்கின்றார் எனலாம். ஒரு பொருளை திருட நினைத்தல், ஒரு பொருளை உண்மையாக திருடுதல் என்பவை வேறுபட்ட செயல்கள் ஆனால் காண்ட் நோக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் ஒரு பொருளை திருட நினைத்தல் என்ற செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்குகின்றார். இது யதார்த்த சிந்தனையில் இருந்து அதிகம் விலகியதாக காணப்படுகின்றது. ஒரு செயலை நான் உண்மையில் செய்வதற்கும் அந்த செயலை செய்ய நான் முயற்சிப்பதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு.

எடுத்துக்காட்டாக :- ஆற்றில் குளிக்கச் சென்ற ஒருவர் தவறி ஆற்றில் மூழ்கி விட்டார் என வைத்துக்கொள்வோம். அங்கு என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர வேறு யாரும் இல்லை என்றும் எனக்கு நீச்சல் தெரியாது என்றும் வைத்துக்கொள்வோம். ஆனால் நான் அவரை காப்பாற்ற ஆற்றில் இறங்கவில்லை ஏனெனில் ஆற்று நீர் என்னை அடித்துச் சென்று விடலாம் என்ற பயம் எனக்கு இருந்தது. ஆயினும் நான் ஆற்றில் விழுந்தவரை எப்படி காப்பாற்றலாம் என யோசித்தேன். இங்கு நான் நல்ல செயலை செய்ய முயற்சித்து இருக்கிறேன். உண்மையில் எதுவும் செய்யவில்லை. இதன் காரணமாக ஆற்றில் அவர் அடித்துச் செல்லப்பட்டு விட்டார். இவ்வகையில் செயல் என்பது வெறும் சிந்தித்தலாக மட்டும் இருக்கக்கூடாது. அது விளைவுகளை கொண்டதாக இருக்க வேண்டும். என்ற விமர்சனம் காண்டிற்கு எதிராக முன் வைக்கப்படுகின்றது.

வெறும் நற்சித்தம் மட்டுமே ஒரு செயலின் முழுமைத் தன்மையினைத் தீர்மானிக்காது. அந்த செயலின் விளைவுகள் அதைவிட முக்கியமானவை. சட்டத்துறையின் பொருள்கோடலின் பிரகாரம், ஒருவரை கொலை செய்ய முயற்சிப்பதற்கும் ஒருவரை உண்மையாக கொலை செய்வதற்குமிடையே தண்டனைகளில் வேறுபாடு உண்டு. ஒருவரை கொலை செய்ய எண்ணுவதற்கும் உண்மையாகவே அவரை கொலை செய்வதற்கும் இடையில் வேறுபாடு உண்டு. இது போலவே ஒரு செயல் தொடர்பான நற்சித்த்திற்கும் அந்த செயலின் விளைவுக்கும் இடையில் வேறுபாடு உண்டு.

பொதுமைப்படுத்தல் செயன்முறைகளை கொண்டு சரியான விதிகளை உருவாக்க முடியும் என்று கூற முடியாது. எடுத்துக்காட்டாக:- காண்டின் கருத்துப்படி ஒருவர் தனது பிரச்சினைக்குரிய தீர்வாக தற்கொலை செய்துகொள்ளுதல் தவறானது. ஏனெனில் உலகிலுள்ள எல்லோரும் தற்கொலை செய்வார்களாயின் உலகத்தில் மக்களே இல்லாமல் போய்விடுவர் மற்றும் உலக இயக்கம் தடைப்பட்டு விடும். ஒருவருக்கு தீராத தொற்று நோய் ஏற்படும் பட்சத்தில், அவரினால் குறிப்பிட்ட நோய் ஏனையோருக்கு பரவும் சூழ்நிலை காணப்படுகின்றபோது, அவரின் அந்த நோயினை குணப்படுத்த முடியாது என்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது, குறிப்பிட்ட நபர் தற்கொலை செய்வாராயின் அத்தற்கொலையினை நியாயப்படுத்தலாம். இதேபோல் போரில் கைதிகளாக ஒரு நாட்டு இராணுவத்தினர் இன்னொரு நாட்டு இராணுவத்தினரால் சிறை பிடிக்கப்படும்போது அவர்கள் தொடர்ந்து சித்திரவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு குறிப்பிட்ட நாட்டின் இராணுவ இரகசியங்களை எதிரி நாட்டு இராணுவத்தினர் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய சூழ்நிலையில் கைதிகளாக பிடிக்கப்பட்ட இராணுவத்தினர் தற்கொலை செய்துகொள்வது நியாயப்படுத்தப்படலாம். இவ்வகையில் காண்டின் பொதுமைப்படுத்தல் செயன்முறையில் விதிவிலக்குகள் இருப்பதை காணலாம்.

மேலும், ஒவ்வொருவரும் தனது நிலையில் இருந்தே ஒழுக்க விதிகளை உருவாக்கவோ பின்பற்றவோ முயற்சிப்பர். இத்தகைய சூழ்நிலையில் இன்னொருவர் நிலையில் இருந்து ஒருவர் எல்லா விடயங்கள் பற்றியும் சிந்திக்க முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. இதுவும் காண்டின் பொதுமைப்படுத்தல் செயன்முறைக்கு பெரும் சவாலாக உள்ள விடயமாகும். காண்டின் ஒழுக்கக் கொள்கை யதார்த்தத்தில் இருந்து அதிகம் விலகியதாக காணப்படுகின்றது. உண்மையில் ஒரு செயலுக்கும் செயலின் விளைவுக்கும் இடையிலுள்ள இன்றியமையாத் தொடர்பினை காண்ட் கண்டுகொள்ள மறந்துவிட்டார் எனலாம். காண்டின் படி கடமைக்காக கடமையை செய்யும் வாழ்வே ஒழுக்கமான வாழ்க்கையாக இருக்கின்றது. கவர்ச்சியற்ற ஒழுக்க வாழ்க்கையினை காண்டின் ஒழுக்கவியல் எடுத்துரைக்கின்றது என பல ஒழுக்க மெய்யியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். காண்டின் கருத்துப்படி அவர் எடுத்துரைக்கும் ஒழுக்க வாழக்கையானது மிகவும் உயர்ந்த வாழ்க்கை நெறிமுறையாகும். தன்னளவில் பெறுமதியுடைய இவ் வாழ்க்கைக்கு பலன்களோ விளைவுகளோ கடவுளிடம் இருந்தோ அல்லது இயல்பாகவோ தேவையில்லை. இத்தகைய ஒழுக்க வாழ்க்கையினை வாழ்வதே அதற்குரிய பயனாகும். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் ஒழுக்கமான வாழக்கைக்கும் எப்போதும் போராட்டம் மனித மனதில் நடந்துகொண்டு இருப்பதாக கருதும் காண்ட், மகிழ்ச்சியான வாழ்க்கையா? ஒழுக்கமான வாழ்க்கையா? என்று தேர்வு செய்யும் சூழ்நிலைக்குள் அடிக்கடி மனிதர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு இருக்கின்றனர் எனக் குறிப்பிடுகிறார். சிலர் ஒழுக்கமான வாழ்க்கையினை தேர்ந்தெடுத்து மகிழ்ச்சியான வாழ் வினை தியாகம் செய்கின்றனர். பலர் மகிழ்ச்சியான வாழ்க்கையினை தேர்ந்தெடுத்து ஒழுக்கமான வாழ்க்கையினை தியாகம் செய்கின்றனர். எவ்வாறாயினும் ஒழுக்க ரீதியான வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதே பகுத்தறிவு சார்ந்தது என காண்ட் வாதிடுகிறார். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வழங்கும்போது முரண்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும் எனக் குறிப்பிடும் காண்ட், இத்தகைய வாழ்க்கை விரக்தியும் சோகமும் நிறைந்ததாக இருக்கும் என குறிப்பிடுகிறார். சரியாக சிந்திக்கக் கூடிய மனிதனுக்கு ஒழுக்க வாழ்க்கை பிரச்சினையாக இருக்காது என கருதும் காண்ட், ஒருவரது கடமைக்கும் மகிழ்ச்சிக்கும் இடையில் முரண்பாடு இல்லாத நிலையினை கடவுள் உருவாக்கியிருப்பதாக காண்ட் நம்புகிறார். (கோடன் கிரஹம் 2004: 125 – 126).

இவ்வகையில் காண்டின் ஒழுக்கமானது யதார்த்த அனுபவத்தில் இருந்து அதிகம் விலகியதாகவும் அதிக பொதுமைத் தன்மை கொண்டதாகவும் பின்பற்றுவதற்கு கடினமானதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. நோக்கமில்லாக் கொள்கை என்ற வகையீட்டில் காண்டின் கொள்கை உள்ளடக்கப்பட்டிருந்த போதும் பொதுமையாக்கல் செயன்முறையில் இக்கொள்கை விளைவுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பயன்பாட்டு வாதம் (Utilitarianism)

நோக்குக் கொள்கை வகையின் ஒரு முக்கிய கொள்கையாக பயன்பாட்டு வாதம் காணப்படுகின்றது. தனிநபர் நலன் மற்றும் சமுதாய நலன் என இரண்டு நலன்களையும் கருத்திற்கொள்வதாக இக்கொள்கை காணப்படுகின்றது. ஒரு நல்ல அல்லது சரியான செயல் தீமைகளை காட்டிலும் அதிக நன்மைகளை கொண்டதாக இருக்கும் (பிரான்கேனா, டபிள்யூ.கே.1989 : 34). இங்கு நன்மை தீமை என்பது ஒழுக்க பரப்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கும் (Non Moral) இக்கொள்கையின்படி நன்மை மற்றும் தீமை என்பது அளவு ரீதியாகவும் கணித ரீதியாகவும் கணிப்பிடப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்பம் (Pleasure) மற்றும் வேதனை (Pain) என்ற உணர்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் தத்துவமாக பயன்பாட்டு வாதம் காணப்படுகின்றது. பயன்பாட்டு வாதியான ஜெரமி பென்தம் (Jeremy Bentham) இன்பத்தினை கணிப்பீடு செய்ய பல குறிகாட்டிகளை உருவாக்கியுள்ளார்.

1. ஒரு செயலில் இருந்து கிடைக்கக்கூடிய நிர்ணயிக்கப்பட்ட இன்பத்தின் அளவு (Certainity)
2. இன்ப உணர்வு இடம்பெறும் காலம் (Duration)
3. குறுகிய காலத்தில் கிடைக்க கூடிய இன்ப பலன் (Propinquity)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒரு இன்ப உணர்வு இன்னும் பல இன்ப உணர்வுகளை உருவாக்கக்கூடிய ஆற்றல் (Fecundity)
5. துன்ப உணர்வுகள் கலக்காத தூய இன்பம் (Purity)
6. இன்ப உணர்வுகளுக்கு உடன்படும் மனிதர்களின் எண்ணிக்கை (Extent)
7. கிடைக்கக்கூடிய இன்பத்தின் அளவு (Intensity) (லில்லி வில்லியம் *1994: 162-163*).

*19*ம் நூற்றாண்டில் தோன்றிய இது ஆங்கில சமூக சீர்திருத்த வாதிகளினால் உருவாக்கப்பட்ட ஓர் தத்துவமாகும். இந்தக்கொள்கை பயன்பாடு என்பதை சமூக ரீதியாக எடுத்துரைக்க முயல்கின்றது. பயன்பாட்டு வாதத்தின் வேர்களை ஹட்சசன் போன்ற மெய்யியலாளர்க ளிடமும் காண முடிகின்றது. ஆயினும் பயன்பாட்டு வாதத்தின் தந்தையாக பென்தமினையே நாம் கருத வேண்டும் (கோடன் கிரஹம் *2004 : 30*)

பென்தமினின் கருத்துப்படி பயன்பாட்டு தத்துவம் வாழ்க்கையின் இரு முக்கிய பகுதிகளான இன்பத்தினையும் துன்பத்தினையும் கொண்டுள்ளது. ஒழுக்க ரீதியான நல்ல வாழ்க்கை என்பது அதிகளவு மகிழ்ச்சியினையும் குறைந்தளவு துன்பத்தினையும் கொண்டிருக்கும் என பென்தம் வாதிடுகிறார். மெய்யியல் ரீதியாக பயன்பாட்டு வாதத்திற்கு பென்தமின் பங்களிப்பு குறைவானதாகவே காணப்படுகின்றது. பெந்தமினின் பயன்பாட்டு வாத சிந்தனைகளை மெய்யியல் ரீதியான சிறந்த கொள்கையாக மாற்றிய பெருமை ஜேம்ஸ் மில்லின் மகனான ஜோன் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill 1806-1873) என்பவரையே சாரும். மில் பயன்பாட்டு வாதம் தொடர்பான தன் கருத்துக்களை 'பயன்பாட்டுவாதம்' என்ற குறுங்கட்டுரை மூலம் விளக்கியிருந்தார். உயர்ந்த பட்ச மகிழ்ச்சியும் குறைந்தளவு துன்பமும் பயன்பாட்டு வாத்தின் தாரக மந்திரமாக இருக்கின்றது. இக்கொள்கை எல்லா மக்களாலும் அதிகம் விரும்பப்படுகின்ற கொள்கையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒழுக்க ரீதியாக அதிக சிக்கல்களையும் முரண்பாடுகளையும் எதிர்நோக்கும் கொள்கையாக இக்கொள்கை காணப்படுகின்றது. பென்தம் மகிழ்ச்சிக்கும் (Happiness) இன்பத்துக்கும் (Pleasure) வேறுபாட்டினை கொண்டு வராமல் இரண்டையும் ஒன்றாகவே கருதினார். ஆனால் ஜே.எஸ்.மில் மகிழ்ச்சியினையும் இன்பத்தினையும் வேறுபடுத்துகிறார். தனிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் இன்பமும் மகிழ்ச்சியும் பயன்பாட்டு வாதத்தினால் முக்கியத்துவப்படுத்தபடவில்லை. ஒவ்வொரு மனிதர்களும் தம்மளவில் சம மதிப்பு உடையவர்களே என்ற கருத்தில் பெந்தமும் மில்லும் உடன்படுகின்றனர். எனக்கு ஒரு செயல் எவ்வாறு இன்பத்தையோ துன்பத்தையோ விளைவிக்கின்றதோ அவ்வாறே அந்த செயல் எல்லோருக்கும் துன்பத்தையும் இன்பத்தையும் விளைவிக்கும் என்ற சிந்தனையினை நாம் பயன்பாட்டு வாதத்தில் காண முடிகின்றது. தன்னலவாதம் (Egoism) மற்றும் பிறர்நல வாதம் (Altruism) போன்ற கொள்கைகளின் கூட்டு கலவையாக பயன்பாட்டுவாதம் இருப்பதை நாம் காண முடிகின்றது. தன்னல வாதம் செயல் செய்பவரின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது. பிறர்நல வாதம் செயல் செய்பவரின் நலனை தவிர்த்து பிறர் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.ஆனால் ஒவ்வொருவரது நலன்களையும் மகிழ்ச்சிகளையும் அதிகரிக்கும் தத்துவமாக பயன்பாட்டுவாதம் இருப்பதை நாம் காணலாம். அதாவது, தனிநபர் மற்றும் சமுதாயம் என்ற நிலைகளில் இருந்து சிந்திக்கும் ஒழுக்க தத்துவமாக பயன்பாட்டுவாதம் மிளிர்வதை நாம் காணலாம். பயன்பாட்டு வாதிகள் ஒரு செயல் மகிழ்ச்சியினையோ அல்லது இன்பத்தினையோ மட்டுமே கொண்டுவர வேண்டும் என எதிர்பார்க்காமல் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களையும் அவர்கள் தமது கொள்கையில் உள்ளடக்குகின்றனர். எடுத்துக்காட்டாக 19ஆம் நூற்றாண்டு பிரான்சிய ஓவியரான கௌகேன் (Gauguin) தனது மனைவியையும் குடும்பத்தையும் விட்டு விட்டு ஓவியக் கலையில் தாம் முழுமையாக ஈடுபடுவதற்காக தகட்டி எனும் தீவுக்கு சென்றார். இவரின் இந்த செயல் தொடர்பாக பின்வரும் பொருள்கொள்ளல்கள் முன்வைக்கப்பட்டன. கௌகேன் தனது மனைவி மக்களை துன்பத்துக்கு ஆளாக்கினார். இவ்வகையில் ஓவியருக்கு இந்தச் செயல் மகிழ்ச்சியினை கொண்டு வருவதாக இருந்தாலும் அவரது குடும்பத்திற்கும் மனைவிக்கும் துன்பத்தை கொண்டு வருவதன் காரணமாக இதனை ஒழக்க ரீதியாக தவறான செயல் என பயன்பாட்டு வாதிகள் வாதிட முடியும். அதேவேளை கலை உலகிற்கும் கலை இரசிகர்களுக்கும் அவரது தன்னலமற்ற பங்களிப்பு மூலம் ஏற்படுத்திய மகிழ்ச்சி அவரது குடும்பம் பெற்ற துன்பத்தை விட உயர்வானதுதான் என்ற வாதத்தினையும் முன்வைக்க முடியும். இவ்வகையில் ஒருங்கிணைந்த ஒழுக்க தீர்மானங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதிலும் முரண்பாடுகள் அற்ற மதிப்பீடுகளை ஒரு செயல் தொடர்பாக ஏற்படுத்துவதிலும் பயன்பாட்டு வாதம் தவறிவிட்டது எனலாம். (கோடன் கிரஹம் 2004:138). பென்தம் இன்பத்தினை அளப்பதற்கான குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தினாலும் அளவு ரீதியாக கணித ரீதியாக பொருட்களை அளவீடு செய்து போல் ஒழுக்க செயலின் பயனாக விளைகின்ற இன்பத்தினை அளவீடு செய்ய முடியாது. ஒவ்வொரு செயலின் விளைவினையும் இன்னொரு செயலின் விளைவோடு ஒப்பிடும்போது அதனை அளவீடு செய்ய முடியும் என ஒழுக்க மெய்யியலாளர்கள் கருதுகின்றனர்.பென்தமின் இன்பத்தை அளப்பதற்கான குறிகாட்டிகள் ஒரு செயலின் விளைவு தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தீர்ப்பு என ஒழுக்க மெய்யியலாளர்கள் வாதிடுகின்றனர். இன்பத்தை அளப்பதற்கான குறிகாட்டியின் கூறுகள் மறைமுகமாக ஒப்பீட்டு தன்மையினை கொண்டு செயல்படுவதை பல ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிலவும் சமூகத்தில் பயன்பாட்டு வாத ஒழுக்கக் கொள்கைகள் நீதியாக இருக்கும் என கூற முடியாது.எடுத்துக்காட்டாக:- கடந்த காலத்தில் சிறுபான்மையினர் ஆட்சியில் தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையினர் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு சிறுபான்மை யினரின் நலன்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. அரசியல்ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பெரும்பான்மையினரின் நலன்கள் புறக்கணிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் இன்பம் பற்றிய ஒரு பொதுவான கட்டளை கல்லை அனைவரும் ஏற்றுக்கொள்வர் என்ற நம்பிக்கையினை கொண்டவராக மில் காணப்படுகிறார்.

"ஒவ்வொருவரது மகிழ்ச்சியும் அவர் அவர்களுக்கு நன்மையான தாயினும் பொது மகிழ்ச்சி என்பது எல்லா மனிதர்களுக்கும் நன்மை யானதாக இருக்கின்றது." என மில் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மதிப்பீடுகள் பற்றி மில் கூறும்போது உள்ளார்ந்த மதிப்பீடு (intrinsic value) மற்றும் கருவி ரீதியான மதிப்பீடு (instrumental value) பற்றி மில் பேசுகிறார். எடுத்துக்காட்டாக : இசை என்பது மகிழ்ச்சியினை கொண்டுவரும் ஓர் கருவியாக இருப்பதுடன் அது தன்னளவில் மகிழ்ச்சியில் ஒரு பகுதியாகவும் இருப்பதாக குறிப்பிடும் மில் பணம் மகிழ்ச்சியினை கொண்டுவரும் கருவியாக இருக்கும் அதேவேளை ஒரு சிலருக்கு பணம் தன்னளவில் மகிழ்ச்சி தரும் பொருளாக இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மகிழ்ச்சி விரும்பக்கூடியது' (Happiness is desirable) என்ற கொள்கையினை சுற்றிச்சுழல்வதாக காணப்படும் பயன்பாட்டு வாதம், 'விரும்பக்கூடியது' என்ற சொல் தொடர்பாக தெளிவற்ற தன்மையினை கொண்டுள்ளது. முதல் வகை பொருள் கொள்ளலில் 'விரும்பக்கூடியது' என்பது எல்லா விதமான ஆசைகளையும் உள்ளடக்குகின்றது என்றும் ஒழுக்கத்தின் எல்லையினை கடந்து செல்கின்றது என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

இரண்டாம் வகை பொருள் கொள்கையின்படி 'விரும்பக்கூடியது' என்பது நன்மையான ஒழுக்கமான விடயங்களை குறிப்பதாக பொருள் கொள்ளப்படுகின்றது. மகிழ்ச்சி என்பது விரும்பக்கூடியது என்ற பயன்பாட்டு வாத தத்துவத்தினை இரண்டாம் வகை பொருளிலேயே மில் பயன்படுத்துவதாக சிலர் வாதிடுகின்றனர்.

உயர்ந்த பட்ச இன்பம் அல்லது மகிழ்ச்சி ஒரு சிலருக்கு மட்டுமல்ல பெரும்பாண்மை மக்களுக்கும் கிடைக்க வேண்டும். (The greater happiness for the greatest number) என்ற நோக்கத்தினை கொண்ட தத்துவமாக பயன்பாட்டு வாதம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (லில்லி வில்லியம் 1994.166)

## அ) செயல்நிலை பயன்பாட்டு வாதம் (Act - Utilitarianism)

செயல்நிலை பயன்பாட்டு வாதம் எத்தகைய செயல்கள் தீமைகளை காட்டிலும் நன்மைகளை அதிகம் இவ்வுலகிற்கு தருகின்றது என தனியனில் இருந்து பொதுமைக்கு செல்வதாக இருக்கின்றது. குறிப்பிட்ட சூழ்நிலையில் தீமைகளை காட்டிலும் நன்மை தொடர்பில் என்ன விளைவினை ஒரு செயல் கொண்டிருக்கும் என்ற விடயம் முக்கியத்துவம் பெறுமே தவிர குறிப்பிட்ட சூழ்நிலையில் தீமைகளை காட்டிலும் நன்மை தொடர்பில் ஒவ்வொரு செயல்களும் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்ற விடயம் முக்கியத்துவம் பெறுவதில்லை. 'உண்மை பேசுதல்' பொதுவாக உயர்ந்த நன்மையினை கொண்டுவருவதாக இருக்கும் என்ற விடயம் பொதுவான சூழ்நிலைகளில் சரியானதாக இருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட சிறப்பு சூழ்நிலையில் இந்த பொதுவான உண்மை பொருத்தமானதாக இருக்குமா? என்பது இங்கு எழுப்பக்கூடிய கேள்வியாகும். செயல்நிலை பயன்பாட்டு வாதம் பின்வரும் விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கும். அதாவது குறிப்பிட்ட விடயத்தில் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலையில் உண்மையினை பேசுவது உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான நன்மையினை தருமா? இல்லையா? என்ற விடயத்துடன் தொடர்புபட்டதாக இருக்கும். இந்த வாதம் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு தனிநபரின் ஒழுக்கச் செயலை பொதுமைப்படுத்திப் பார்க்க எம்மைத் தூண்டுகிறது. குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் உருவாக்கும் ஒழுக்கத் தீர்ப்புக்கள் எவ்வாறாயினும் ஏனையோர் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது. செயல்நிலை பயன்பாட்டுவாதி தான் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த கால அனுபவங்களிலே தங்கியிருப்பார். அவர் தான் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தனது நிலையில் இருந்து குறிப்பிட்ட ஒழுக்க ரீதியான தீர்மானங்களை எடுப்பவராக இருப்பார். இத்தகைய தீர்மானங்கள் முரண்பாடுகளை கொண்டதாகவும் ஒரு வகையில் அநிதீயாகவும் காணப்படும். பயன்பாட்டு வாதத்தில் ஒரு செயலின் நன்மை என்பது இன்பம் மற்றும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவதாலும் செயல்களின் சரி மற்றும் பிழை தன்மை அவற்றின் விளைவுகளில் தங்கியிருப்பதாலும் செயல்நிலை பயன்பாட்டுவாதம் வாதம் முழுமையாக ஒழுக்கம் சார்ந்த தீர்ப்புக்களை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் என நாம் கூற முடியாது. எடுத்துக்காட்டாக:- அரிச்சந்திரன் எந்த சூழ்நிலையிலும் எத்தகைய விளைவுகள் ஏற்பட்டாலும் உண்மையை பேசுவேன் பொய்யே பேசமாட்டேன் என்ற ஒழுக்க விதியினை கடைப்பிடித்தான். இத்தகைய விதி தன்ன ளவில் அதிகம் பொதுமைத்தன்மை கொண்டதாகவும் தீமையினை காட்டிலும் நன்மையை கொண்டதாக இருப்பதுடன் ஒருங்கிணைந்த தன்மையை கொண்டதாகவும் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் இத்தகைய விதிகளை செயல்நிலை பயன்பாட்டுவாதிகள் நிராகரித்து 'பொய் சொல்லுதல் தீமைகளை காட்டிலும் அதிக நன்மையினை கொண்டு வருகின்றது' என்ற ஒழுக்க தீர்ப்பினை உருவாக்கி அதனை பின்பற்றலாம். ஒருவர் தனது சூழ்நிலையில் இருந்து ஒருவிதியினை உருவாக்கி பின்பற்றுவதன் காரணமாக இதனை தவறு என்று நாம் கூற முடியாது. ஆயினும் இந்த விதியானது ஒருங்கிணைந்த தன்மையினை கொண்டிருக்கும் என்பது கேள்விக்குறியே. வள்ளுவரின் கருத்து செயல் நிலை பயன்பாட்டு வாதத்திற்கு ஆதரவாக இருப்பதை நாம் காணலாம். ஒரு பொய்யானது நன்மையினை கொண்டுவரும் எனின் அது உண்மை என வள்ளுவர் வாதிடுவது குறிப்பிடத்தக்கது.

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (திருக்குறள் 30 : 02).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வள்ளுவர் செயலின் விளைவுக்கு முக்கியத்துவம் வழங்குவதை நாம் காணலாம். இக்கொள்கையினர் செயலின் நோக்கம் அதன் தன்மை என்பவற்றிற்கு முக்கியத்துவம் வழங்காமல் செயலின் விளைவு அது கொண்டு வரும் இன்பம் அல்லது நலன் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். இக்கொள்கையின்படி ஒரு தனிநபரின் நிலையிலிருந்து குறிப்பிட்ட சூழ்நிலையில் இருந்து ஒரு செயலின் விளைவுகள், நன்மைகள் மற்றும் தீமைகள் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு பொதுமையாக்கம் செய்யப்படுகின்றன. இங்கு தனி நபரின் மதிப்பீடு பொது மதிப்பீடாக எடுத்துக் கொள் ளப்படுகின்றது. ஒழுக்க ரீதியாக நல்ல செயல்களையும் தீய செயல் களையும் பகுத்தறிவு ரீதியாகவும் நடுவுநிலைமையில் நின்றும் சிந்திப்பதற்கு இக்கொள்கை தவறிவிட்டதாக பல ஒழுக்க மெய்யிய லாளர்கள் குற்றம்சுமத்துகின்றனர். ஒழுக்க ரீதியாக பல தவறான செயல்களை ஒழுக்க விதிகளாக செயல்நிலை பயன்பாட்டுவாதிகள் அங்கீகரிப்பதை பல ஒழுக்க மெய்யியலாளர்கள் சுட்டிக் காட்டியு ள்ளனர். ஒழுக்க ரீதியாக தவறான பல செயல்களை ஒழுக்க ரீதியாக சரியான செயல்களாக இக்கொள்கைகள் காட்ட முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஆ) பொதுவிதிப் பயன்பாட்டு வாதம் (Rule-Utilitarianism)

இக்கொள்கையினை உருவாக்கியவராக ஜே.எஸ்.மில் காணப்படு கின்றார். குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட செயலை செய்வதற்கு சரியான விதி எது? எந்த விதி தீமையினைக் காட்டிலும் அதிகளவு நன்மையினை வழங்கும் என்ற விடயங்களை கருத்திற்கொண்டு ஒழுக்க விதிகள் மற்றும் செயல்களை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்கின்ற ஒழுக்கக் கொள்கையாக இது காணப்படுகின்றது. எவ்வாறாயினும் ஒழுக்க விதிகள் அவற்றின் விளைவுகளின் அடிப்படையில் (இன்பம் அல்லது நலன்) உருவாக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. சமூகத்தினாலும் அரசினாலும் சரியான ஒழுக்க விதிகளாகவும் செயல்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை இக்கொள்கையும் ஏற்றுக் கொள்கின்றது. மேலும் சரியான ஒழுக்க விதி இக்கொள்கையின்படி அதிகளவு நன்மையினை அல்லது பயன்பாட்டினை கொண்டு வருகின்ற விடயமாக கருத்திற் கொள்ளப்பட்டு உருவாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சமூகத்தினாலும் அரசினாலும் நடைமுறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டு வருகின்ற ஒழுக்க விதிகள் உண்மையில் பொது நன்மையினையும் பயன்பாட்டினையும் பொதுவாக கொண்டிருப்பது இல்லை என்றும் சமூதாயத்தினாலும் அரசினாலும் உருவாக்கப்பட்ட விதிகள் காலத்திற்கு காலம் சமுதாயத்திற்கு சமுதாயம், அரசுக்கு அரசு மாற்றமுறுவதன் காரணமாக எல்லோருக்கும் நன்மையினையும் பயன்பாட்டினையும் விளைவிக்கக்கூடிய பொது விதிகளை உருவாக்க முடியுமா? போன்ற விமர்சனங்களையும் ஒழுக்க மெய்யியலாளர்கள் பொது விதிப் பயன்பாட்டு வாதத்திற்கு எதிராக முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. எவ்வகை பயன்பாட்டு வாதக் கொள்கையும் ஒழுக்க விழுமியங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை என்பதை மிகவும் பிரதான குற்றச்சாட்டாக ஒழுக்க மெய்யியலாளர்கள் முன்வைக்கின்றனர். ஒழுக்கம், விழுமியம் மற்றும் நீதி என்பன பயன்பாட்டில் இருந்து விலகியிருப்பதை பயன்பாட்டுவாதக் கொள்கையினர் மிக முக்கிய குறைபாடாக சுட்டிக் காட்டுகின்றனர். எவ்வாறாயினும் நீதிக்கும் பயன்பாட்டுக்கும் இடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த ஜே.எஸ்.மில் முனைகின்றார். "எது நீதியினை திருப்திப்படுத்துகின்றதோ அது பயன்பாட்டினையும் திருப்திப்படுத்துகிறது. பயன்பாட்டில் நீதி அடங்கியுள்ளது" (பிரான்கேனா, டபிள்யூ.கே 1994 : 41). பயன்பாட்டு வாதியான பென்தமின் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது. "ஒவ்வொருவரும் ஒருவராகவே கருதப்படுவர். ஆனால் ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்டவராக கருதப்படமாட்டார்" இவ்வகையில் நீதிக்கும் பயன்பாட் டுக்கும் இடையிலுள்ள இன்றியமையாத தொடர்பினை எடுத்துக் காட்டுவதன் மூலம் பயன்பாட்டு வாதக் கொள்கையினை பயன்பாட்டு வாதிகள் நியாயப்படுத்த முயல்கின்றனர். செயல் நிலை பயன்பாட்டு வாத கொள்கையினைக் காட்டிலும் பொது விதிப் பயன்பாட்டுக் கொள்கை அதிகளவு நன்மை அல்லது பயன்பாட்டினை அதிகளவு மக்களுக்கு வழங்குவதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

**உளவியல் தன்னல ஒழுக்கக் கொள்கை (Psychological Egoism)**

இக்கொள்கையின்படி ஒரு மனிதனது செயல்கள் அவனது இன்பம் அல்லது நலன் என்பதை நோக்கமாகக் கொண்டே செய்யப்படுகின்றன என்றும் ஒழுக்கச் செயல்கள் என்று கூறப்படுபவைகள் கூட இத்தகைய சுயநல நோக்கிலேயே செய்யப்படுவதாக இக்கொள்கை வாதிடுகின்றது. இக்கொள்கை மனிதனை ஆசைகளை நிறைவேற்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கும் ஒரு உயிரியாக பார்க்கின்றது. மனிதனின் ஒழுக்கச் செயல்கள் மற்றும் ஒழுக்கம் அல்லாத செயல்கள் என எல்லா வகைச் செயல்களும் சுயநல நோக்கிலேயே செய்யப்படுவதாக இக்கொள்கை வாதிடுகின்றது.சுயநலனே ஒழுக்கச் செயல்களின் மையம் எனக்கூறும் இக்கொள்கை, எல்லா செயல்களும் 'நான்', 'எனது' என்ற ஆளுகை பண்புகளில் திருப்தியினை நோக்கியதாக இருக்கின்றது என வாதிடுகின்றது. இதனை 'சுய காதல்' (Self Love) என ஒழுக்க மெய்யியலாளரான பட்லர் அழைக்கின்றார் (பிரான்கேனா, டபிள்யூ.கே.1989:20).

பொதுவாக ஒழுக்கச் செயல்கள் எல்லோரையும் சமமாக கருதுவதாக இருக்கும். அவ்வகையில் எவ்வாறு ஒருவர் தனது நலன் மட்டும் கருதி செய்யப்படும் செயல்கள் ஒழுக்கவியலில் உள்ளடங்குகின்றது என்ற கேள்வியினை எழுப்பலாம். ஒரு மனிதன் தனக்கு நலன்களை கொண்டு வராத செயல்களை செய்தல் என்பது யதார்த்ததிற்கு முரணானது என இக்கொள்கையினர் வாதிடுகின்றனர். பொதுநலன் என்று கூறக்கூடிய எல்லாச் செயல்களிலும் சுயநலன்கள் இருப்பதாக இவர்கள் வாதிடுகின்றனர். எடுத்துக்காட்டாக:- ஒரு ஏழைக்குழந்தைக்கு பண உதவி செய்தல். இது ஒரு உயர்ந்த ஒழுக்கச் செயலாக நோக்கப்படலாம். ஆனால் இவர்களது பார்வையில் இத்தகைய உதவியினை ஒரு மனிதன் செய்வதன் மூலம் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அல்லது மனக்கஷ்டம் இல்லாது போகின்றது. ஆகவே ஒரு மனிதன் தனது மன மகிழ்ச்சிக்காவே இந்த செயலை செய்கின்றானே தவிர அந்த குழந்தையின் ஏழ்மை நிலையினை போக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படவில்லை. இச்செயலின் பிரதான நோக்கம் செயல் செய்பவரின் மனமகிழ்ச்சியே தவிர ஏழைக் குழந்தையின் வறுமையை போக்குதல் அல்ல. ஒரு செயலை செய்யும் கர்த்தா தனக்கு மகிழ்ச்சியை பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது தனது துன்பங்களை குறைத்துக்கொள்வதற்காகவோ அச்செயலை செய்கின்றான். இத்தகைய செயல்கள் அதிர்ஷ்டவசமாக பிறருக்கு நன்மையினை கொண்டு வருகின்றது என்பதே இக்கொள்கையினரின் வாதம். இக்கொள்கையின்படி ஒருவர் தனது மகிழ்ச்சி அல்லது இன்பத்திற்காக மற்றவர்களை கருவியாக பயன்படுத்திக்கொள் கின்றார். ஒரு செயலைச் செய்பவரின் குறிக்கோள் அவரது மகிழ்ச்சி அல்லது அவரது நலன் ஒருவரது செயலினால் கர்த்தாவினை தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு ஏற்படும் மகிழ்ச்சி அல்லது நலன் என்பது கருவி சார்ந்தது அல்லது ஒரு செயலின் இரண்டாம் நிலை நோக்கம் எனலாம். இக்கொள்கையின்படி ஒருவர் தனக்கும் பிறர்க்கும் நன்மைகளை கொண்டுவரும் செயல்கள் பிறருக்கும் அவருக்கும் தீமை தரும் செயல்கள் என எல்லா வகைச் செயல்களையும் செய்யக் கூடியவராக இருப்பார். இக்கொள்கையின்படி ஒரு மனிதன் எப்போதும் தன்னை நேசிப்பது, தனது ஆசைகளை பூர்த்தி செய்வது, தன்னை பாதுகாப்பது போன்ற நோக்கங்களுடனே செயற்படுவான் எனக் கூற முடியாது. எடுத்துக்காட்டாக :- தனது காதலியினை அதிகமாக நேசித்த ஒருவர் தனது காதலியின் இறப்பினை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் தானும் தற்கொலை செய்து கொள்ளல். இக்கொள்கையின்படி பகுத்தறிவினை காட்டிலும் ஆசைகளும் ஊக்கிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கொள்கையின்படி ஆசைகள் ஒரு மனிதனை எந்த எல்லைக்கும் அழைத்துச் செல்லலாம். ஒரு உளவியல் தன்னல ஒழுக்கவியல்வாதியின் மகிழ்ச்சியில் அல்லது நலனின் ஒரு பகுதியாக ஏனையோரின் நலன் அல்லது மகிழ்ச்சி காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பிறர் நலத்திலும் மகிழ்ச்சியிலும் தன்னலம் அடங்கியுள்ளது என்பதை உளவியல் தன்னல ஒழுக்கவியல் வலியுறுத்திக் கூறுகின்றது. ஒரு செயலுக்கும் அதன் விளைவுக்கும் இடையில் காணப்படும் நேரடி தொடர்பினை விட மறைமுகத் தெடர்பினை ஒரு செயலின் நோக்கம் மற்றும் அது விளைவிக்கும் மகிழ்ச்சி அல்லது நலன் தொடர்பின் காணப்படும் உறவு நிலைகளை உளவியல் தன்னை ஒழுக்கவியல் கொள்கை முன்வைக்கின்றது. பிறரின் மகிழ்ச்சி அல்லது நலனில் கருத்தாவின் மகிழ்ச்சி அல்லது நலன் அடங்கியிருக்கும் செயல்களை பற்றி இக் கொள்கை பேசுவதை நாம் காண முடிகின்றது. பிறர் நலனுக்காவும் மகிழ்ச்சிக்காகவும் செய்யப்படும் செயல்களின் நோக்கம் கருத்தாவின் சுயநலமாகும்.எடுத்துக்காட்டாக, பசியில் இருக்கும் ஒரு வளர்ப்பு கிளிக்கு உணவிடுவதன் மூலம் கிளி, மகிழ்ச்சியினை தெரிவிக்கின்றது. இங்கு குறிப்பிட்ட எஜமானர் கிளியின் மகிழ்ச்சியால் தானும் மகிழ்ச்சி அடைந்தார் என்று வைத்துக் கொள்வோம். உணவிடும் செயல் இங்கு கிளியின் மகிழ்ச்சிக்காக அல்ல உண்மையில் எஜமானரின் மகிழ்ச்சிக்காகவே. ஒரு கிளி, கிளிக்காக வளர்க்கப்படுவதில்லை, கிளி எஜமானர்களுக்காக வளர்க்கப்படுகின்றது.

மேலும் மனிதனுக்கு எண்ணற்ற ஆசைகளும் ஊக்கிகளும் இருக்கின்றன. இவற்றுக்குள் முரண்பாடுகள் ஏற்படும். ஆசைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதற்காகத்தான் மனிதன் செயல்களை செய்கின்றான். என இக்கொள்கை வலியுறுத்துகின்றது. இத்தகைய சூழ்நிலையில் ஆசைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும்போது எத்தகைய ஆசைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு பின்வருமாறு தன்னல ஒழுக்கவியல்வாதி பதில் வழங்கலாம். நிறைய ஆசைகளுக்கு மத்தியில் எந்த ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என உள்ளம் சொல்கின்றதோ அந்த ஆசையுடன் தொடர்புபட்ட செயலே மிகவும் சரியான செயல். அதையே ஒருவர் செய்வார் ஆயினும் ஆசைகள், ஊக்கிகள் மற்றும் செயல்கள் என்பவற்றுக்கு இடையே உள்ள உறவினை உளவியல் தன்னல ஒழுக்கவியல் வாதம் தெளிவாக விளக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆயினும் நாம் ஒழுக்க ரீதியான செயல்களை செய்யும்போது முரண்பாடுகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன. நாம் எப்போதும் எமது செயல்கள் தொடர்பான தீர்மானங்களிலும் தேர்வுகளிலும் மிகச் சரியாக இருக்கின்றோம் என்று கூற முடியாது. ஒழுக்க ரீதியாக சரியான செயலை செய்து விட்டு மகிழ்ச்சி இல்லாமல் இருக்கின்றோம். சில வேளைகளில் ஒழுக்கமற்ற செயல்களை செய்துவிட்டு மகிழ்ச்சி அற்ற சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்த அடிப்படையில் எமது எல்லாச் செயல்களும் ஆசைகளை பூர்த்தி செய்கின்றன என்றும் ஆசைகளை பூர்த்தி செய்வதற்காகவே அனைத்து செயல்களும் இடம் பெறுகின்றன என்று உறுதியாக கூற முடியாமல் உள்ளது.

**ஒழுக்கவியல் தன்னலவாதம் (Ethical Egoism)**

நோக்க ஒழுக்கக் கொள்கைகளுள் ஒன்றாக கருதப்படும் இக் கொள்கை தனது உயர்ந்த பட்ச நன்மையினை கருத்திற்கொண்டே ஒருவர் ஒரு செயலை எப்போதும் செய்வார் என இது வாதிடுகின்றது. இக்கொள்கையின் ஆதரவாளர்களாக எபிகூரஸ், ஹொப்ஸ் மற்றும் நீட்சே போன்றவர்கள் இருக்கின்றனர் (பிரான்கேனா, டபிள்யு. கே.1989:15). உளவியல் தன்னை ஒழுக்கக் கொள்கையினருடன் ஒப்பிடும்போது அதிகம் பிறர் நலம் சார்ந்த செயல்களை ஆற்று பவர்களாக இக்கொள்கையினர் காணப்படுகின்றனர். எதிர்கால விளைவுகளை கருத்திற்கொண்டு இவர்கள் செயல்களில் ஈடுபடுகின்றனர். தீமைகளை காட்டிலும் அதிக நன்மைகளை கொண்டு வரக்கூடிய செயல்களையே இவர்கள் நல்ல செயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடுகின்றனர். ஒவ்வொருவரும் தனக்கு எச்செயல் நன்மையினைக் கொண்டு வருமோ அச்செயலையே ஒருவர் செய்ய வேண்டும் என இக்கொள்கை வற்புறுத்துகின்றது. ஒழுக்க வியல் தன்னலவாத கொள்கையின்படி செயலின் நோக்கம் புலனின்பம் மட்டுமல்ல அத்துடன் நலன்கள், அறிவு, அதிகாரம் மற்றும் தன்னை உணர்தல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை நோக்கங்களாகக் கொண்டிருப்பதை நாம் காண முடிகின்றது. ஒழுக்கவியல் தன்னலவாத கொள்கையினர் ஈடுபடும் செயல்கள் எல்லோரும் ஒழுக்க ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சரியான செயல்களாக தோன்றும். பொதுவிதிப் பயன்பாட்டு கொள்கை எவ்வாறு ஒரு செயலை பொதுமைப்படுத்தி பார்க்கும் ஆற்றலை கொண்டிருக்கின்றதோ அவ்வாறே ஒரு ஒழுக்கவியல் தன்னல வாதி எல்லோருக்கும் நன்மையினை கொண்டு வரும் செயலாகவும் எல்லோரும் கட்டாயம் செய்ய வேண்டிய செயலாகவும் தான் செய்யும் செயலை எல்லோருக்கும் எடுத்துக்காட்டும் ஆற்றல் உடையவனாக இருப்பதால் உண்மையில் குறிப்பிட்ட செயல் நீண்ட காலத்தில் அவனுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் ஒரு சுயநலம் சார்ந்த செயலை பொதுமைப்படுத்தி எல்லோருக்கும் நலன் பயக்கும் செயல் எனக் காட்டக்கூடிய ஆற்றலை ஒரு ஒழுக்கவியல் தன்னலவாதி பெற்றிருப்பான். இவன் ஈடுபடும் செயல்கள் குறுகிய காலத்தில் பிறருக்கு நன்மையினை விளைவிப்பதாகவும் நீண்டகாலத்தில் செயல்களை செய்பவனுக்கு நன்மையினை கொண்டு வருவதாகவும் இருக்கும். எடுத்துக் காட்டாக:- ஒரு வியாபாரி குறித்த இலாபத்துடனோ அல்லது இலாபமோ இல்லாமல் பொருட்களை விற்கும்போது மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்பட்டு அதிக நுகர்வோர்களை தன்பக்கம் வைத்துக் கொள்வான். 'நுகர்வோர்களின் திருப்தியே முதன்மை நோக்கம்' எனவும் குறிப்பிடுவான். காலப்போக்கில் ஏனைய வியாபாரிகளுடன் ஒப்பிடும்போது அதிக நுகர்வோர்கள் கொண்டிருப்பதன் காரணமாக தனது தொழிலில் முதன்மை நிலையினை பெற்றுவிடுவான். இவ்வகையில் இவனது நடவடிக்கைகள் நீண்ட கால நோக்கினை அடிப்படையாக கொண்டிருப்பதை காண முடியும்.

பொதுமைப்படுத்தப்பட்ட விதியாக தனியொருவனது நலனைப் பேணும் ஒழுக்கவிதி இருக்க முடியாது என காண்ட் வாதிடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் கருத்துப்படி பொதுமைப்படுத்தப்பட்ட விதி தன்னலம் சார்ந்த ஒழுக்க விதிக்கு முரணாகவே இருக்கும். ஆனால் உண்மையில் நாம் தன்னலம் சார்ந்த ஒழுக்க விதியும் பொதுமைப்படுத்தப்பட்ட ஒழுக்க விதியும் ஒன்றிணைந்து செல்லும் பல சந்தர்ப்பங்களை காண முடிகின்றது. ஒருவரது நலனுடன் ஏனையோர்களது நலன்கள் முரண்படாத சூழ்நிலைகளையும் காண முடிகிறது. பொதுமைப்படுத்தப்பட்ட விதிகளுக்கும் தன்னலம் சார்ந்த ஒழுக்க விதிகளுக்கும் இடையில் முரண்பாடு இல்லாவிட்டாலும் அல்லது அதிர்ஷ்டவசமாக இரண்டு விதிகளும் எல்லோருக்கும் நன்மையினை அளிக்கக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தினாலும் ஒழுக்கவியல் தன்னலம் சார்ந்த கொள்கையின் நோக்கத்தின் அடிப்படையில் (செயல் செய்பவரின் நலனை மட்டுமே கருத்திற் கொள்ளுதல்) உயர்ந்த ஒழுக்கவியல் சார்ந்த பண்பினை இழப்பதாக ஒழுக்கவியல் மெய்யியலாளர்கள் வாதிடுகின்றனர். ஒழுக்கவியல் தன்னல கோட்பாடானது செயல் செய்பவரின் நலனை முதன்மைப்படுத்துவதாகவும் ஏனையோர்களது நலனை இரண்டாம் நிலைக்கும் தள்ளுவதாகவும் இருக்கின்றது. இவ்வகையில் இக்கொள்கை எல்லா மனிதர்களையும் சமமானவர்களாக கருதுகின்றது என்று என கூறமுடியாது

இக்கொள்கையானது ஒழுக்க ரீதியாக நல்லது என்பதற்கு அப்பாற்பட்டவகையில் புத்திசாதூர்யம் மற்றும் சமயோசிதம் ஆகிய பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. உண்மையான ஒழுக்க நன்மைக்கு முக்கியத்துவம் வழங்க தவறுகின்றது என ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. இக்கொள்கையின்படி ஒருவர் முதலில் வல்லவனாகவும் பின்பு நல்லவனாகவும் இருக்க வேண்டும். இக்கொள்கை ஒருவனது மூளைக்கு முக்கியத்துவம் வழங்குகின்றதே தவிர அவனது இதயத்திற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. ஒரு மனிதனின் சுயநலத்தையும் பகுத்தறிவினையும் இணைப்பதாகவும் இக்கொள்கை காணப்படுகின்றது. உண்மையில் இக்கொள்கையானது ஒழுக்க நோக்கில் இருந்து செயல்களை மதிப்பீடு செய்யாமல் நேர் காட்சிவாத நோக்கில் இருந்து மதிப்பீடு செய்யமுயல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற ஒழுக்கக் கொள்கை (Virtue Ethics)**

இக்கொள்கை ஒழுக்கச் செயல்களை செய்யும் தனி மனிதனின் குணம் மற்றும் பண்பின் அடிப்படையில் ஒழுக்கத் தீர்ப்புக்களை எடுத்துரைக்க முயல்கின்றது. எடுத்துக்காட்டாக:- நீ உண்மையினை பேச வேண்டும் என்பதற்கு பதிலாக உண்மை பேசுவது சிறந்த ஒழுக்கப் பண்பு என எடுத்துக் கூறுதல். இக்கொள்கையில் சிறந்த ஒழுக்கப் பண்புகள் எடுத்துரைக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்படுவதைக் காணலாம். இவ்வொழுக்கக் கொள்கை எமக்கு நேரடியாக நல்ல செயலை செய்ய வேண்டும் தீமையான செயலை தவிர்க்க வேண்டும் என்று கூறுவதில்லை. இதற்கு பதிலாக இந்தப் பண்பு நன்மையானது. இந்தப் பண்பு தீமையானது என ஒழுக்கப் பண்புகள் பற்றிய மதிப்பீட்டினை வழங்குவதாக இருப்பதை நாம் காணமுடியும். ஒழுக்கவியலில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் ஒழுக்க கொள்கைகளின் முக்கியமான ஒழுக்க பண்புகளை இக் கொள்கையினர் அடையாளமாக காண்கின்றனர். தன்னலவாத கொள்கையில் சமயோசிதம் மற்றும் புத்திசாதுர்யம் போன்ற ஒழுக்கப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பயன்பாட்டு வாதத்தில் தயாளகுணம் மற்றும் உண்மை பேசுதல் என்ற ஒழுக்கப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நோக்கமில்லாக் கொள்கையில் நீதி, நேர்மை மற்றும் கடவுளின் கட்டளைகளுக்கு அடிபணிதல் போன்ற ஒழுக்கப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன (பிரான்கேனா, டபிள்யு.கே1989:64). நீதியும் தயாள குணம் பாரம்பரிய அடிப்படை ஒழுக்கப் பண்புகளாக ஒழுக்க மெய்யியலாளர்களால் கருதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.கிரேக்கர்கள் ஒழுக்கப் பண்புகளை நான்காக வகுத்தார்கள் :- 1. ஞானம் 2. தைரியம் 3.தன்னடக்கம் மற்றும் நீதி (லில்லி வில்லியம் 1994 : 278 – 287) கிறிஸ்தவர்கள் ஏழு அடிப்படை ஒழுக்கப் பண்புகளை எடுத்து ரைக்கின்றனர். 1. விசுவாசம் 2. நம்பிக்கை 3. அன்பு 4. சமயோசிதம் 5. தைரியம் 6. தன்னடக்கம் மற்றும் நீதி. பொதுவாக ஒழுக்க மெய்யியலாளர்கள் தயாள குணம் மற்றும் நீதி என்ற இரண்டு ஒழுக்கம் பண்புகளில் இருந்து ஏனைய ஒழுக்கப் பண்புகளை பெற முடியும் என வாதிடுவது குறிப்பிடத்தக்கது.

இக்கொள்கையின்படி ஒழுக்கப் பண்புகளின் நன்மைகள் மாத்திரம் எடுத்துரைக்கப்படுவதுடன் மறைமுகமாக ஒழுக்கப் பண்புகளை பின்பற்ற வேண்டும் என்ற ஊக்குவிப்பும் ஒவ்வொரு ஒழுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுகூற்றுக்களிலும் காணப்படுவதை ஒழுக்க மெய்யியலாளர்கள் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் நேர்வும் (fact) மதிப்பீடும் (value) ஒன்றாக இணைந்ததாக ஒழுக்கப் பண்புகள் காணப்படுகின்றன என்ற கருத்தினை சில மெய்யியலாளர்கள் முன்வைக்கின்றனர் (கோடன் கிரஹம் 2004 : 62). எடுத்துக்காட்டாக:- 'நன்மை செய்தால் நன்மை விளையும்' என்ற கூற்று ஒருங்கே நேர்வினையும் மதிப்பீட்டினையும் கொண்டதாக காணப்படுகின்றது. இக்கூற்று நன்மை செய்தால் நன்மை விளையும் என்ற நேர்வினை எடுத்துக்கூறுவதுடன் நாம் நன்மை செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒழுக்கப் பண்புகள் நிறைந்தவரின் செயல்கள் நன்மையானதாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கும். அதேவேளை ஒழுக்கப் பண்பு இல்லாதவரின் செயல்கள் மகிழ்ச்சி அற்ற தன்மைக்கும் விரக்திக்கும் இட்டுச் செல்லும் எனக் குறிப்பிடும் அரிஸ்டோட்டில், ஒழுக்கப் பண்பு கள் இல்லாதவர் இலட்சியத்தினை அடையமாட்டார் என்றும், அவரது வாழ்க்கை சிறப்பானதாக அமையாது எனவும் குறிப்பிடுகின்றார். ஒழுக்க பண்புகளை பின்பற்றும் ஒருவனே நிறைவுடைய முழுமையான வாழ்வினை அடைவான் என கிரேக்கர்கள் நம்புகின்றனர். ஒழுக்கப் பண்புகளின் இறுதி இலக்காக அமைவது மகிழ்ச்சியாகும்.குறிப்பிட்ட சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கப் பண்புகளை பின்பற்றி வாழ்வதே சிறந்த வாழ்க்கை. ஆனால் அது இலகுவானதல்ல. எடுத்துக் காட்டாக:- உலகில் மிகச் சிறந்த சாதனைகளை படைத்தவர்கள் மிக மோசமான ஒழுக்கக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாவதை நாம் காண்கின்றோம். "சரியான செயலை, சரியான வழியில் சரியான நேரத்தில் சரியான காரணத்திற்காக செய்வதே ஒழுக்கப் பண்பு" என வரைவிலக்கணப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

அற ஒழுக்க மெய்யியலாளர்கள் (Stoics) உலக ஆசைகளை அடக்குதல் மற்றும் துறத்தல் என்பதோடு தொடர்புபட்ட ஒழுக்கப் பண்புகளை உயர்ந்த ஒழுக்க பண்புகளாக எடுத்துரைக்கின்றனர். ஆசைகளுக்கு அடிபணியாத உயர்ந்த மனவுறுதி இத்தகைய மெய்யி யலாளர்களால் உயர்ந்த ஒழுக்கப் பண்பாக போற்றப்படுகின்றது. துறவற மனப்பான்மையுடன் தொடர்புபட்ட ஒழுக்கப் பண்புகளை கிரேக்கர்கள் மற்றும் அறஒழுக்க மெய்யியலாளர்கள் வற்புறுத்துவது குறிப்பிடத்தக்கது. ஒருவன் உலகத்தை வெல்வதைவிட தன்னை வெல்வது உயர்ந்த வெற்றி எனப் போற்றப்படுகின்றது. உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் மாற்றங்களை உடன்பாடாக ஏற்றுக்கொள்ளுதல், மரணத்தை உடன்பாடாக ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பிரச்சினைகளை தைரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் எதிர்கொள்ளுதல் என்பவற்றை மேற்குறிப்பிட்ட மெய்யியலாளர்கள் முக்கிய ஒழுக்கப் பண்புகளாக கருதுகின்றனர். மேலும் இவர்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை ஆன்மீக மேம்பாட்டுக்கான ஆன்மீக பயிற்சிகளாக எடுத்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

நவீன அற ஒழுக்க கொள்கையானது 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஜீ.ஈ.எம். அனஸ்கொம்பின் (G.E.M.Anscombe) நவீன அற ஒழுக்கக் கொள்கை தொடர்பில் முக்கியத்துவம் உடையதாகும். அனஸ்கொம்ப் ஒரு கிறிஸ்தவராக அற ஒழுக்கவியலை நோக்குகின்றார். இவரின் கருத்துப்படி நோக்குக் கொள்கைகளும் நோக்கமில்லாக் கொள்கைகளும் அடிப்படையில் கடவுளின் சட்டத்தை ஆதாரமாக கொண்டவை என்றும் மேற்குறிப்பிட்ட இரண்டுவகை கொள்கைகளையும் ஏற்காதவர்கள் அற ஒழுக்கவியலுக்கு முக்கியத்துவம் வழங்குவதாக வாதிடுகின்றார். பயன்பாட்டுவாதக் கொள்கையினர் சமய நம்பிக்கையில் அடிப்படையில் அற ஒழுக்கவியலை ஏற்றுக்கொள்வதாகவும் அனஸ்கொம்ப் குறிப்பிடுகிறார். நவீன அற ஒழுக்கவியலுக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியவராக அலஸ்டயர் மக்ன்டயர் (Alasdair Macintyre) இருக்கின்றார். ஆயினும் இவரது பங்களிப்பு கலாசார நியமங்களை அடிப்படையாக கொண்ட சார்பு நிலைபட்ட விளக்கங்களை அற ஒழுக்கம் தொடர்பாக வழங்குவதாக விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. மர்தா நுஸ்பம் (Martha Nussbaum) என்ற சமகால அற ஒழுக்க மெய்யியலாளர் மக்ன்டயரின் சார்புவாத தன்மையினை விமர்சித்து புறவயமான ஒழுக்கப்பண்புகளை வழங்குவது குறிப்பிடத்தக்கது. ஆயினும் மகன்டயரின் அற ஒழுக்க பண்புகள் பற்றிய விளக்கங்கள் புறவயமானவையே என்ற கருத்துக்களும் ஒழுக்க மெய்யியலாளர் மத்தியில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சமகால அற ஒழுக்க வியலில் மேலைத்தேய அற ஒழுக்கவியலையும் கீழைத்தேய அற ஒழுக்கவியலையும் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்ப வாதம் (Hedonism)**

கிரேக்க காலத்திலேயே இன்பவாதம் பற்றிய கருத்துக்களை பிளேட்டோவின் உரையாடல்களில் காணமுடிகின்றது. பிலேபஸ் (Philebus) என்ற படைப்பில் இன்பம் நல்லது என்றும், ஒவ்வொரு உயிரியும் தனது இலக்காக இன்பத்தை கொண்டுள்ளது என்றும் ஒவ்வொருவரும் இன்பத்தை இலக்காக கட்டாயம் கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுவதை காண முடிகின்றது (பிரான்கேனா, டபிள்யூ. கே 1989 : 83) ஒரு இன்ப வாதியை பொருத்தவரையில் ஒரு செயல் அதிகளவு இன்பத்தையும் குறைந்தளவு துன்பத்தையும் கொண்டு வரும் போது அச்செயல் நல்ல செயல் என்ற தராதரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கமில்லாக் கொள்கையினரும் இன்ப வாதியும் நல்லது மற்றும் சரியானது என்பவற்றில் முரண்பட வேண்டிய அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக:- ஒழுக்க விதிகளை முழுமையாக பின்பற்றுவதன் மூலம் ஒரு நோக்கமில்லா ஒழுக்கக் கொள்கை வாதி முழுமையான இன்பத்தை பெறுபவனாக இருப்பான்.

பொதுவாக இன்ப வாதிகள் இன்பம் பற்றிய வேறுபாட்டினை சரியாக வரையறை செய்யாமல் எவையெல்லாம் மனத்துக்கு மகிழ்ச்சியை தருகின்றதோ அவற்றை எல்லாம் இன்பமாக கருது கின்றனர். எவ்வாறாயினும் பெரும்பாலான இன்ப வாதிகள் புலன் இன்பங்களையே மகிழ்ச்சியாக கருதுகின்றனர். ஒரு இன்ப வாதியை பொறுத்தவரையில் எல்லா விதமான இன்பங்களும் தன்னளவில் பெறுமதியுடையதாகும். எல்லா விதமான இன்பவாதிகளும் இன்பத்தினை நல்லதாக கருதுகின்றனர். சில இன்பவாதிகள் சில வகை இன்பங்கள் ஒழுக்க ரீதியாக தவறானவை என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். ஒழுக்க ரீதியான தன்மைகளை அடைவதற்கு துன்பங்களையும் வேதனைகளையும் நல்லவையாக கருதும் இன்ப வாதிகளும் உள்ளனர். (மேலது.:84) இன்பங்களுக்கான வேறுபாட்டினை இன்பவாதிகள் கற்பிக்கின்றனர். அதாவது உயர்ந்த இன்பம், தாழ்ந்த இன்பம் என்ற வேறுபாட்டினை இன்ப வாதிகள் உருவாக்கி காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக:- ஜே.எஸ். மில் அறிவு சார்ந்த இன்பங்கள் உடல் சார்ந்த இன்பங்களை காட்டிலும் உயர்வானவை என குறிப்பிடுகின்றார். பென்தம், எபிகூரஸ் போன்றவர்கள் இத்தகைய வேறுபாட்டினை ஏற்றுக்கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு சிறந்த கவிதை கொண்டுவரும் கவிதையின் இன்பத்திற்கு சமனானதாக ஒரு பிரியாணி கொண்டுவரும் இன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படலாம். இன்பவாதிகள் புலன் இன்பத்துடன் தொடர்புபட்ட வகையில் அளவு ரீதியான இன்பவாதிகள் (Quantitative Hedonists) என்றும் உள்ளம் அல்லது அறிவுசார்ந்த இன்பங்களுடன் தொடர்புபட்ட இன்ப வாதிகள் (Qualitative Hedonists) என்றும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மனித வாழ்வின் இறுதி மற்றும் உயர்ந்த இலக்காக இன்பம் இருப்பதாக கிரேக்கர்களான யூடோசக்ஸ் (eudosux) மற்றும் எபிகூரஸ் (Epicurus) ஆகியோர் வாதிடுவது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவருமே இன்பமே விரும்பத்தக்கது என்றும் நன்மையானது என்றும் குறிப்பிடுகின்றனர். இன்பவாதிகள் இன்பம் எல்லோராலும் விரும்பப்படுவதனால் அதுவே நல்லது என்ற முடிவுக்கு வருகின்றனர். ஆனால் ஜீ.ஈ.மூவர் (G.E.Moore) விரும்பப்படுவது (desire) என்பதிலிருந்து நல்லது (good) என்பதை பெற முடியாது என வாதிடுகின்றார். இத்தகைய உய்த்தறி முறை வலிதற்றது என்றும் கூறுகின்றார். (பிராான்கேனா, டபிள்யு.கே 1989 : 85).

ஒழுக்க மெய்யியலாளரின் கருத்துப்படி 'இன்பம் எல்லோராலும் விரும்பப்படுவதனால் அதுவே நல்லது' என்ற வாதம் தர்க்க ரீதியாக வலிதற்றதாக இருக்கலாம். ஆனால் உளவியல் ரீதியாக வலிதானது. ஏனெனில் இன்பத்தை விரும்புவது மனித இயல்பாக இருப்பதால் இது தற்புல உண்மையாக இருக்கின்றது. இதனை மறுக்க முடியாது என சில ஒழுக்க மெய்யியலாளர்கள் வாதிடுகின்றனர். எல்லா செயல்களும் இன்பத்தை நோக்கியதாக இருக்கின்றது அல்லது இருக்க வேண்டும் என்ற இன்ப வாதியின் நிலைக்கு விதிவிலக்காக இன்பங்களை நோக்காமல் சில செயல்களை மனிதர்கள் செய்வதை காண்கின்றோம். இது இன்ப வாதத்தின் பலவீனத்தை காட்டுகின்றது. 'இன்பமே நல்லது' என இன்ப வாதிகள் அடையாளம் காண்பதுபோல் ஏனைய ஒழுக்கவியல் வாதிகள் இன்பத்திற்கு பதிலாக நல்லது என்பதை அவரவர் கொள்கைக்கேற்ப முன்வைக்கின்றனர். எடுத்துக்காட்டாக:- அக்குவினாஸ் கடவுளுடன் இணைந்த வகையில் நல்லதை அடையாளம் காணும் அதேவேளை நீட்சே அதிகாரத்தினை நல்லதாக அடையாளம் காண்கின்றார். மனிதர்களினால் விரும்பப்படுவது என்பதற்காக ஒன்று நல்லதாக இருக்க முடியாது என்ற இன்ப வாதிகளின் வாதம் பல ஒழுக்க வியலாளர்களினால் மறுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்பவாதிகள் மகிழ்ச்சி (Happiness) மற்றும் இன்பம் (Pleasure) என்பவை தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான வேறுபாட்டினை கொண்டிருக்கவில்லை என ஒழுக்க மெய்யியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு சில இன்பவாதிகள் கணித அளவீட்டு ரீதியாக இன்பத்தை அளக்கவும் விளக்க முற்படுகின்றனர். அதிகளவு இன்பம் மிகவும் உயர்ந்தது என்று கருதும் கருத்தும் இன்பவாதிகளிடம் காணப்படுகின்றது. ஆயினும் இன்பத்தை கணித ரீதியாக மதிப்பிடுதல் மற்றும் அளவு ரீதியாக மதிப்பிடுதல் தொடர்பாக விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னலவாதத்தினையும் இன்பவாதத்தினையும் வேறுபடுத்திக்கொள்வது கடினமான விடயமாகும். இன்பவாதம் முதன்முதலாக வரலாற்றில் ஆரம்ப கால இன்பவாத மெய்யியலாளர்களினால் (Cyrenaics) முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்பவாதத்தின் மதிப்பீடுகள் நேர்வுகளுடன் தொடர்புபடுவதை காணமுடியும். இன்பவாதத்தின் மதிப்பீடுகளான இன்பம் துன்பம் என்பன ஒழுக்கம் சார்ந்த மதிப்பீடுகளாக இருப்பதை காட்டிலும் நேர்வுகள் சார்ந்த மதிப்பீடுகளாக இருப்பதை நாம் காணலாம். புலன்சார்ந்த இன்பங்களை அதிகளவாக அனுபவிக்கும்போது சில துன்பங்களையும் நாம் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என இன்பவாதிகள் வாதிடுகின்றனர். தூய இன்பம் என்பது இவ்வுலகில் எதுவும் இல்லை. எல்லா இன்பங்களும் துன்பம் கலந்தவையே இது இயற்கையின் நியதியாகும். எடுத்துக்காட்டாக:- ஐஸ்கிறீம் சாப்பிடுவது அதிக இன்பத்தை சிறுவர்களுக்கு வழங்கும் அதே வேளை இதன் காரணமாக அவர்களுக்கு பல்வலி அல்லது தடிமன் ஏற்படலாம்.

பொதுவாக இன்பவாதிகள் உயர்ந்தளவு இன்பத்தினையும் குறைந்தளவு துன்பத்தினையும் கொண்ட செயல்களை செய்ய எமக்கு அறிவுரை கூறினாலும் கூட இன்பவாதிகளில் ஒரு பிரிவினரான எபிகூரியவாதிகள் (The Epicureans) துன்பங்கள் கலப்பில்லாத இன்பங்களை தேட வேண்டும் என குறிப்பிடுகின்றனர். துன்பமற்ற இன்ப வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என அவர்கள் குறிப்பிடுகின்றனர். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழி இவர்களது தாரக மந்திரமாக உள்ளது. எடுத்துக்காட்டாக:- அளவோடு குடிக்க வேண்டும் அளவோடு சாப்பிட வேண்டும். அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டு வயிற்று வலியை ஏற்படுத்திக்கொள்ள கூடாது. எல்லா இன்பங்களிலும் அளவுடன் ஈடுபட வேண்டும் என எபிகூரியர்கள் எமக்கு அறிவுறுத்துகின்றனர். பொதுவான இன்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்துடன் ஒப்பிடும்போது இவர்களது இன்பவாதம் தனித் தன்மையுடன் விளங்கும்படி காணலாம் (கோடன் கிரஹம் 2004 : 43).

இன்பங்களில் வேறுபாடுண்டு உயர்ந்த இன்பம், தாழ்ந்த இன்பம். உயர்ந்த இன்பம் அறிவுடன் தொடர்புபடுகின்றது. தாழ்ந்த இன்பம் புலன் இன்பங்களுடன் தொடர்புபடுகின்றது. இதனை உயர்ந்த அறிவினால் சோக்கிரட்ஸ் அடையும் இன்பத்தை தாழ்ந்த இன்பமான ஒரு மனிதன் தனது உணவில் அடையும் இன்பத்தையும் இன்பவாதிகள் ஒப்பிட்டு விளக்குகின்றனர். சோக்கிரடீஸ் அடையும் இன்பமும் பன்றி அடையும் இன்பமும் ஒரே தரம் உடையனவாக இருக்க முடியுமா? என கேள்வி எழுப்பி அறிவு சார்ந்த இன்பம் உயர்ந்த இன்பம் என்றும் புலன் சார்ந்த இன்பம் தாழ்ந்த இன்பம் என்றும் ஒரு சில இன்ப வாதிகள் முடிவுக்கு வருகின்றனர். மில் உயர்ந்த இன்பம் தாழ்ந்த இன்பம் என்ற வகையீட்டை குறிப்பிட்டபோது இத்தகைய வகையீடு தொடர்பாக விமர்சனங்களை ஒழுக்க மெய்யியலாளர்கள் முன்வைக்கின்றனர். பல ஒழுக்க மெய்யியலாளர்கள் இன்பங்களை ஒப்பிட்டு வகைப்படுத்த முடியாது என வாதிடுகின்றனர். எடுத்துக்காட்டாக:-இந்துஸ்தானி சங்கீதம் மற்றும் கர்நாடக சங்கீதம் என்ற இரண்டுவகை பாரம்பரிய சங்கீதங்களிலும் பரீச்சயம் மற்றும் அறிவு உள்ள ஒருவரை எந்த சங்கீதம் அதிக இன்பத்தை தருகிறது எனக் கேட்டால் அவர் எனக்கு கர்நாடக சங்கீதத்தை காட்டிலும் இந்துஸ்தானி சங்கீதம் அதிக இன்பத்தை தருகின்றது எனக் கூறுவாராயின் இந்த ஒப்பீடு ஒருவகை மதிப்பீடாகும். இவரின் முடிவில் இருந்து இந்துஸ்தானி சங்கீதம் உயர்ந்த இன்பத்தை தரக்கூடியது என்றும் கர்நாடக சங்கீதம் தாழ்ந்த இன்பத்தை தரக்கூடியது என்றும் ஒரு பொது முடிவுக்கு வர முடியாது. ஏனெனில் இந்துஸ்தானி சங்கீதம் அதிக இன்பத்தை தருகின்றது என்பது ஒரு தனி நபரின் தனிப்பட்ட அகவயமான தீர்ப்பாகும். இதேபோன்று இன்னொருவரிடம் இக்கேள்வியை கேட்கும்போது மேற்குறிப்பிட்ட பதிலையே பெறுவோம் என நாம் உறுதியாக கூற முடியாது. இத்தகைய பிரச்சினைகளை நாம் இன்பம் பற்றிய வகையீட்டில் காண முடிகின்றது. மில்லின் இத்தகைய வகையீடு இன்பம் தொடர்பான நிபுணர்கள் மற்றும் வழக்காறுகளை பின்பற்றுகின்றதே தவிர மனித அனுபவங்களை அடிப்படையாக கொண்டவை அல்ல என்ற விமர்சிக்கப்படுகின்றது. மேலும் இன்பம் சாரந்த நிபுணர்கள் கடவுள்களா? எனவும் வழக்காறுகள் இன்பம் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுபவை பொய்ப்பிக்கப்படாத உண்மைகளா? போன்ற கேள்விகள் இப்பிரச்சினைத் தொடர்பில் எழுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்பவாதத்தின் இலக்கு இன்பமாக இருப்பதன் காரணமாக இன்பம் ஒழுக்கத்திற்கு தவறான வழியிலும் பெறமுடியுமாகையினால் ஒழுக்கமற்ற செயல்களினால் வரும் இன்பங்களை இன்ப வாதம் அங்கீகரிக்கின்றது என விமர்சனம் ஒழுக்கவியலாளர்களினால் முன்வைக்கப்படுகின்றது. இவ்வகையில் இன்பவாதத் தத்துவம் இன்பத்தை இலக்காக கொண்டிருந்த போதும் இன்பம் மகிழ்ச்சி மற்றும் ஆசை போன்ற சொற்கள் இவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றி தெளிவான விளக்கங்களை வழங்கவில்லை என்பதுடன் இன்பவாதம் என்பது ஒரு பல்லினத் தன்மை கொண்ட ஒரு கொள்கை என்பதை நாம் காண முடிகின்றது.

**உள்ளுணர்வு வாதம் (Intuitionism)**

உள்ளுணர்வு வாதத்தின்படி சரியான செயல், பிழையான செயல், நன்மை, தீமை, நல்லது என்பவை நேர்காட்சிவாத முறையிலோ அல்லது தர்க்க ரீதியாகவோ தீர்மானிக்கப்படாமல் உள்ளுணர்வு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. உள்ளுணர்வு வாத ஒழுக்கவியல் வெளிப்படுத்தல்கள் தற்புல உண்மைகளாக (தன்னளவில் உண்மையாவை வெளி ஆதாரங்கள் தேவையில்லை) இருப்பதாக உள்ளுணர்வு வாதிகள் வாதிடுகின்றனர் (பிரான்கேனா டபிள்யு.கே 1989 : 102). இத்தகைய தீர்ப்புகள் மிக தெளிவாக இருக்கின்றன என டேகாட் குறிப்பிடுகிறார். பட்லர், சிட்விக், ரஷ்டால், மூவர் போன்றவர்கள் இக்கொள்கையினை ஆதரிக்கின்றனர்.

இயற்கை அல்லாத வாதம் (Non - Naturalism) என இது அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்பவாதம், பயன்பாட்டு வாதம், இயற்கை வாதம் போன்ற கொள்கைகள் கருதுவதுபோல் மற்றும் 'நல்லது' (Good) மற்றும் 'கட்டாயம் செய்ய வேண்டும்' (Ought) போன்ற எண்ணக்கருக்களை புறவயமாதலுக்கு உட்படுத்த முடியும் என்ற நம்பிக்கையினை உள்ளுணர்வு வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளுணர்வு வாதிகள் அனுபவம் அல்லாத, இயற்கை அல்லாத நேர்வுத் தன்மை அற்றதாக காணப்படும் ஒழுக்கத் தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் தற்புல உண்மைகளாகவும் உள்ளுணர்வு மூலம் அறியக் கூடியதாகவும் இருக்கும் என வாதிடுகின்றனர். இருத்தலியல் மற்றும் அறிவாராய்ச்சியியல் சார்ந்த பிரச்சினைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பும் ஆற்றல் படைத்த கொள்கையாக உள்ளுணர்வு வாதம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. நியமம் மற்றும் பௌதீக அதீதம் சார்ந்த எண்ணக்கருக்களை இக்கொள்கை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்ளுணர்வுவாதம் கொண்டிருக்கும் புலன் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட எண்ணக்கருக்களையும் தற்புல உண்மைகளையும் தர்க்க ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் ஏற்றுக்கொள்வதும் ஆய்வு செய்வதும் கடினமானது என ஒழுக்க மெய்யியலாளர்கள் கருதுகின்றனர். உள்ளுணர்வுவாதிகளின் கருத்துப்படி அதிகமான ஒழுக்க தீர்ப்புக்கள் நியாயப்படுத்தலுடன் தொடர்புடையதாக உள்ளனவே தவிர ஒரு செயலுக்கான ஊக்கிகள் முக்கியத்துவப்படுத்தப்படவில்லை என்பது விமர்சனமாக முன்வைக்கப்படுகிறது. உள்ளுணர்வு வாதிகள் தங்களது ஒழுக்கத் தீர்ப்புக்களை தொகுத்தறி முறை மூலம் உருவாக்குகின்றனர். உருவாக்கப்பட்ட பொதுமையான பொது விதிகளை தனிப்பட்ட ஒழுக்கச் செயல்களுக்கு பிரயோகிக்கின்றனர். ஒழுக்கச் செயல்கள் தொடர்பாக உள்ளுணர்வு மூலம் எது சரியான செயல்? எது பிழையான செயல்? என தீர்மானிக்கும்போது ஆளுக்கு ஆள் வேறுபடான முடிவினை எடுக்கலாம். ஏனெனில் ஒவ்வொருவரது உள்ளுணர்வும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூற முடியாது என்ற விமர்சனம் உள்ளுணர்வு வாதம் தொடர்பாக முன்வைக்கப்படுகின்றது. உள்ளுணர்வுவாதிகளின்படி உண்மையை பேசுவது நல்லது. ஆகவே நான் உண்மையை பேச வேண்டும் என்று உள்ளுணர்வு மூலமும் உய்த்தறிமுறை மூலமும் முடிவு எடுக்கப்படும்போது இங்கு நான் ஏன் உண்மையை பேச வேண்டும்? அதனால் என்ன நன்மை என்ற கேள்விகள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை ஏனெனில் உள்ளுணர்வு அவ்வாறு கூறுகின்றது என்பதனால் இந்த முடிவுக்கு தர்க்க ரீதியான வாதங்களோ பகுப்பாய்வுகளோ தேவையற்றது. சில பொதுவான ஒழுக்க விதிகள் ஒவ்வொருவரிடமும் காணப்படுவதாகவும் அவற்றை எல்லா மனிதர்களும் செய்ய வேண்டும் என்ற உணர்வும் ஏற்படும் போன்ற விளக்கங்களை உள்ளுணர்வுவாதிகள் வழங்குகின்றனர். இதற்காக தர்க்க ரீதியான வாதங்களோ அல்லது ஒரு செயல் பற்றிய அல்லது அதன் பயன் பற்றிய பகுப்பாய்வு தேவையற்றது என இக்கொள்கை குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக:- உண்மை பேசுவது நல்லது. ஆகவே உண்மை பேச வேண்டும். மேற்குறிப்பிட்ட ஒழுக்க ரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு உள்ளுணர்வு சார்ந்தது. இதற்கு தர்க்க ரீதியான பயன்பாட்டு ரீதியான பகுப்பாய்வுகள் தேவையில்லை. எவ்வாறாயினும் ஒழுக்கத் தீர்ப்புக்கள் தற்புல உண்மைகள் அவற்றுக்கு வெளி ஆதாரங்கள் தேவையில்லை என்ற உள்ளுணர்வுவாதிகளின் கருத்து தொடர்பாக ஒழுக்கவியலாளர்கள் பல்வேறு விமர்சனங்கள் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஒழுக்கவியல் அகவயவாதம் (Moral Subjectivism)**

மதிப்பீடுகள் ஒழுக்கத்துடன் தொடர்புபடும் அதேவேளை ஒழுக்கவியல் அடிப்படையில் அகவயமானது என்ற கருத்து ஒழுக்கவியலாளர்கள் மத்தியில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானத்துடன் ஒழுக்கவியலை ஒப்பிட்டு விஞ்ஞானம் நேர்வுகளுடனும் ஒழுக்கவியல் மதிப்பீடுகளுடன் தொடர்புபட்டுள்ளது என்ற நோக்கினை அறிஞர்கள் மத்தியில் காண முடிகின்றது. (கோடன் கிரஹம் *2004 : 1*) கிரேக்க காலத்தில் ஒழுக்கவியல் அகவயவாதத்தின் அடிப்படையினை காண முடிகின்றது. பிளேட்டோ மற்றும் சோக்கிரடீஸ் ஒழுக்கவியல் எண்ணக்கருக்கள் ஆன நல்லது, கெட்டது, சரி, பிழை என்பவற்றை புறவயமான பண்புகளாக கருதினர். ஆனால் அவர்கள் காலத்தில் இருந்த சோபிஸ்ட்டுக்கள் இவற்றை அகவயமான மதிப்பீடுகளாகவே நோக்கினர். சோபிஸ்ட்டுக்கள நல்லது, கெட்டது, சரி, பிழை என்பவை அகவயமானவை என்றும், ஆளுக்காள் சமூகத்துக்கு சமூகம் தேசத்துக்கு தேசம் மாறுபடும் எனவும் வாதிட்டனர். சோபிஸ்ட்டுக்களில் ஒருவரான புரட்டோகோரஸ் (Protogoras) கூறிய கூற்றான 'மனிதனே அனைத்துக்கும் அளவுகோல்' (Man is measurement of all things) அகவய தன்மைக்கு தக்க உதாரணமாகும். ஆயினும் கிரேக்க காலத்தில் பிளேட்டோ, சோக்கிரடீஸ், அரிஸ்டோட்டில் போன்றவர்களின் ஆதிக்கம் தீவிரமாக இருந்ததன் காரணமாக ஒழுக்கவியல் அகவயவாதம் தனது செல்வாக்கினை இழந்து காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மனித உரிமைகள் தொடர்பான ஒழுக்கவியல் சிந்தனைகள், அரசியல் சிந்தனைகள் சமூகவியல் சிந்தனைகள், சுற்றுப்புறச்சூழல் ஒழுக்கவியல் சிந்தனைகள் என்பன புறவயமான ஒழுக்கவியல் சிந்தனைகளாக இருப்பதை நாம் மறுக்க முடியாது. அகவய ஒழுக்கவியல் சிந்தனைகள் பின்வரும் பண்புகளை கொண்டவையாக இருக்கின்றன (கோடன் கிரஹம் *2004 : 3*).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முரண்பாடான ஒழுக்கவியல் நோக்குகள்
2. ஒரு ஒழுக்கவியல் நோக்கினை விட மற்றுமொரு ஒழுக்கவியல் நோக்கு உயர்வானதென நிரூபிக்க முடியாத தன்மை.
3. விஞ்ஞான நேர்வுகளை போல் ஒழுக்க நேர்வுகளை நிரூபிக்க முடியாத தன்மை.

ஒவ்வொரு சமூகங்களிலும் கலாசாரங்களிலும் வெவ்வேறு விதமான ஒழுக்க நியமங்களும் வழக்காறுகளும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இவற்றை புறவயமாகவோ அல்லது விஞ்ஞான ரீதியாகவோ சரியானது என்றோ பிழையானது என்றோ எம்மால் வாதிட முடியாது. எடுத்துக்காட்டாக:- கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையினை மங்கலகரமான நாளாக கருதுகின்றனர். அதேவேளை இந்துக்கள் ஞாயிற்றுக் கிழமையினை மங்கல நாளாக கருதவில்லை. மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்களையும் சரியானது அல்லது பிழையானது என்றும் ஒழுக்க ரீதியான நிரூபிக்க கூடிய விதிகள் எதுவும் இல்லை எனலாம். மேற்குறிப்பிட்ட உதாரணம் ஒழுக்கம் சார்ந்த கூற்றுக்கள் அகவய தன்மை சார்ந்ததாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. விஞ்ஞான ரீதியாக பிரச்சினைகளுக்கு நேர்காட்சிவாத முறைமை, பரிசோதனை மற்றும் அவதான முறைமை மூலம் தீர்வு காண்பதுபோல ஒழுக்கவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடலாம் என நாம் உறுதியாக நம்ப முடியாது. தொலமியன் புவி மைய கொள்கையினை மறுத்து சரியான புறவய ஆதாரங்களுடன் கலிலியோ கொப்பர்னிக்கஸின் சூரிய மைய கொள்கையினை நிருபித்தார். இதுபோன்ற ஒரு புறவயமான தெளிவான வேறுபாடான நிலையினை ஒழுக்கவியல் பிரச்சினைகள் தொடர்பாக ஒழுக்க மெய்யியலாளர்களால் முன்வைக்க முடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக:- விலங்குகளை இறைச்சிக்காக கொல்வது தொடர்பாக ஆதரவான மற்றும் எதிரான அதிகளவிலான வாதங்களை நாம் காண முடியும். ஆயினும் விஞ்ஞான ரீதியான ஒரு பிரச்சினை தொடர்பாக ஒரு முடிவுக்கு வருவது போல் இப்பிரச்சினை தொடர்பாக நாம் இறுதி முடிவுக்கு வரமுடியாது என்பதை நாம் உணரலாம்.விஞ்ஞான ரிதியான கூற்றுக்களையும் கருதுகோள்களையும் நாம் ஏற்பது போலவும் நிராகரிப்பது போலவும் ஒழுக்கவியல் பிரச்சினைகள் தொடர்பாக நாம் நடந்துகொள்ள முடியாது. இத்தகைய சூழ்நிலை ஒழுக்கவியலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவய தன்மையினை வெளிப்படுத்துகின்றது. ஒழுக்கப் பிரச்சினை தொடர்பாக வாதங்கள் எதிர்வாதங்கள் முன்வைக்கப்பட்டு அவற்றை சிலர் ஏற்றுக்கொள்வர். சிலர் நிராகரிப்பர். இது ஒழுக்கவியல் சிந்தனையின் நிலையாகும். ஒருவகை முற்சாய்வுத் தன்மை ஒழுக்கவியல் சிந்தனையிலும் பிரச்சினையிலும் இருப்பதை நாம் காணலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஒழுக்கவியல் அகவயவாத கொள்கைக்கு சாதகமாக அமைவதை நாம் காண முடிகின்றது. குறிப்பிட்ட சமுகம் அல்லது தனி மனிதர்களால் உருவாக்கப்பட்டு பின்பற்றப்படுகின்ற ஒழுக்க விதிகளையும் விழுமியங்களையும் அகவய ஒழுக்கவியல் கொண்டிருக்கின்றது. இக்கொள்கைபடி ஒழுக்க விதிகளுக்கும் விழுமியங்களுக்கும் இடையே தர்க்க ரீதியான முரண்பாடு இருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு கலாசாரமும் ஒவ்வொரு தனிமனிதரும் அவரவர்களுக்கு சரியானது எதுவோ அதனை பின்பற்றுவர்.

**இயற்கை வாத ஒழுக்கவியல் (Naturalism)**

ஒழுக்கவியல் கூற்றுக்கள் தொடர்பாக மெய்யியலாளரான டேவிட் ஹியூம் முன்வைத்த கருத்துக்களுக்கு எதிராக உருவான ஒரு கொள்கையாக இயற்கை வாதம் காணப்படுகின்றது. ஒழுக்கமல்லாத எடுகூற்றுக்களில் இருந்து (Non-Moral) ஒழுக்க ரீதியான முடிவுக் கூற்றினை பெறுவது வலிதற்றது என ஹியூம் வாதிட்டார். இக் கருத்துக்களை அவர் தனது 'மனித இயல்பு தொடர்பான கட்டுரைகள்' (1740) என்ற படைப்பில் வெளிப்படுத்தியிருந்தார். ஒழுக்க ரீதியான கூற்றுக்கள் மதிப்பீடுகளுடன் தொடர்புபட்டவை. அவற்றை நேர்வு ரீதியான கூற்றுக்களில் இருந்து பெற முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.அதாவது இருக்கின்றது (is) என்பதிலிருந்து (Ought) என்பதை பெற முடியாது என இவர் வாதிட்டது குறிப்பிடத்தக்கது. ஒழுக்கவியல் அல்லாத நேர்வுகளுடன் தொடர்புபட்ட அர்த்தங்களை தரக்கூடிய ஒழுக்கத் தீர்ப்புக்களை உள்ளடக்கியதாக இயற்கை வாத ஒழுக்கவியல் காணப்படுகின்றது.

இயற்கைவாத ஒழுக்கவியல் ஒழுக்கச் சொற்கள் பற்றிய அர்த்தங்கள் பற்றிய நோக்கினை வெளிப்படுத்துகிறது. ஒழுக்கம் சார்ந்த சொற்களின் அர்த்தம், வரைவிலக்கணம் மற்றும் பகுப்பாய்வு என்பன தொடர்பான ஆய்வாகவும் இது காணப்படுவது குறிப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. ஒழுக்க எடுகூற்றுக்களில் இடம்பெறும் முக்கியமான சொற்களில் அர்த்தத்தினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் வரைவிலக்கணப்படுத்துதல் போன்ற பணிகளில் இயற்கை வாத ஒழுக்கவியல் ஈடுபடுகின்றது. ஒழுக்கக் கொள்கைகளிலும் ஒழுக்க வாதங்களிலும் 'நல்லது' மற்றும் 'சரியான செயல்' போன்ற சொற்களின் அர்த்தங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவற்றை வரைவிலக்கணப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் போன்ற பணிகளை இயற்கைவாத ஒழுக்கவியல் ஆற்றுகின்றது.

**உணர்ச்சி வாதம் (Emotivism)**

உணர்ச்சி வாதத்தின்படி ஒழுக்கத் தீர்ப்புக்கள் ஒழுக்க ரீதியான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக இருக்கும் அல்லது ஒழுக்கத் தீர்ப்புகளை வெளிப்படுத்தும் வார்த்தைகள் ஒழுக்க ரீதியான செயல் தொடர்பாக மற்றொருவருக்கு ஒழுக்கத் தீர்ப்புக்கள் கொண்டிருக்கும் உணர்ச்சியை எழுப்புவதாகவோ அல்லது அவரை குறிப்பிட்ட அந்த ஒழுக்கத்தீர்ப்பு வெளிப்படுத்தும் செயலை செய்யத் தூண்டுவதாகவோ இருக்கும்.எடுத்துக்காட்டாக:- A என்பவர் B என்பவரை பார்த்து நாம் இலங்கையில் வெள்ள அனர்த்த்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் அல்லவா! அது நமது கடமை அல்லவா! என உணர்ச்சி பூர்வமாக கூறும்போது B என்பவர் அதனை ஏற்றுக்கொண்டு நாம் உதவா விட்டால் வேறு யார் உதவ போகிறார்கள். நாம் உதவ வேண்டும் என A என்பவரின் ஒழுக்கத் தீர்ப்பினை ஏற்றல் மற்றும் வெள்ள நிவாரணத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட தயாராகுதல். விபரிப்பல்லாத (non-descriptive) ஒரு வகை ஒழுக்கக் கொள்கையாக இது கருதப்படுகின்றது. ஏ.ஜே. அயரின் படைப்பான 'மொழி, உண்மை மற்றும் அளவையியல்' (1930) உணர்ச்சி வாதம் தொடர்பாக முக்கிய பங்களிப்பினை ஆற்றியிருந்தது. இதேபோல் சி.எல் ஸ்டீவென்சன் (C.L.Stevenson) முக்கிய பங்களிப்பினை உணர்ச்சி வாதத்திற்கு ஆற்றியிருந்தார். உணர்ச்சி (Emotion) என்பதற்கு பதிலாக உளப்பாங்கு (Attitude) என்ற வார்த்தைகளை இவர் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு உளப்பாங்கு என்பது குறிப்பிட்ட மனநிலைகள் அல்லது குறிப்பிட்ட செயல்களை குறிக்கின்றது. இந்த உளப்பாங்கு மெய்யியலின் ஒழுக்கத் தத்துவங்களுக்கு சமமானவை என்று கருதப்படுகின்றது. ஒழுக்கத்தீர்ப்புக்கள் உணர்ச்சி சார்ந்தவை மட்டுமல்ல. அவை விபரிப்புத் தன்மையினையும் கொண்டிருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தினையும் ஸ்டீவென்சன் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு ஒழுக்கத் தீர்ப்பின் அர்த்தத்தினை இரண்டு வகைகளாக உணர்ச்சிவாதக் கொள்கையினர் வகுத்து நோக்குகின்றனர்.

1. அனுபவம் சார்ந்த இயற்கை வாத நோக்கினை கொண்ட ஒழுக்கம் அல்லாத (Non - moral) எடுகூற்றுக்கள்.

2. உணர்ச்சி சார்ந்த எடுகூற்றுக்கள்

ஒழுக்க தீர்ப்புக்களில் உணர்ச்சி கலந்த அர்த்தம் ஒழுக்க தீர்ப்பு தொடர்பான உளப்பாங்கினை வெளிப்படுத்துவதாகவும் ஒழுக்கத் தீர்ப்பினை பின்பற்ற தூண்டுவதாகவும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக:- 'அறம் செய்ய விரும்பு' என்ற ஒழுக்கக் கூற்றை எடுத்துக் கொள்வோமானால், அறம் இங்கே உயர்வானது என்பதுடன் அறம் செய்ய வேண்டும் என்ற மறைமுகமான கட்டளையும் காணப்படுகின்றது. உணர்ச்சிவாத கொள்கையில் ஸ்டீவென்சனின் உணர்ச்சி சார்ந்த தன்மைகளின் முக்கியத்துவத்தினை அவருக்கு பின்வந்தவர்கள் அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஒழுக்க பதங்களின் தன்மை. ஒரு வகை வார்த்தை அலங்காரமாகவே இருக்கின்றதே தவிர தர்க்க ரீதியான பகுத்தறிவு ரீதியான தன்மையினை கொண்டிருக்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர். இரண்டு ஒழுக்கவியல் தீர்ப்புக்களுக்கிடையே தர்க்க ரீதியான உறவு காணப்படும்போது ஒழுக்க ரீதியான வாதம் சாத்தியமாகின்றது என உணர்ச்சிவாதிகள் வாதிடுகின்றார். நேர்வுகளில் இருந்து ஒழுக்க தீர்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாது என ஹியுமின் கருத்தினை இவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். உணர்ச்சி வாதம் பற்றி ஸ்டீவென்சனின் கருத்துக்களும் வாதங்களும் போதுமானதாக இல்லை என ஒழுக்கவியல் மெய்யியலாளர்கள் விமர்சிக்கின்றனர்.

### பெண்ணியம் சார்ந்த ஒழுக்கவியல் (Ethics of Care)

பாரம்பரிய ஒழுக்கவியல் கொள்கைகள் ஆண்மையவாத தன்மை கொண்டவை என்றும் பெண்களின் முக்கியத்துவம், அவர்கள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் அவர்களது நலன்கள் என்பவை பெருமளவுக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளன என இந்த ஒழுக்கவியல் கொள்கை வாதிடுகின்றது. ஆயினும் பாரம்பரிய ஒழுக்கக் கொள்கைகளில் பெண்கள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் ஒழுக்க அறங்கள் தொடர்பான விடயங்களையும் வெளிப்படுத்துவதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சிந்தனை வரலாற்றில் பெண்களுக்கு எதிரான சகலவிதமான அநீதிகளையும் முற்சாய்வுகளையும் விமர்சன ரீதியாக எடுத்துரைப்பதாக பெண்ணிய ஒழுக்கக்கொள்கை காணப்படுகின்றது. மற்றவர்கள் நிலையிலிருந்து தன்னை எண்ணிப்பார்க்கும் மனப்பான்மை, (Empathetic attitude) பெண்களின் முக்கிய குணங்களான: கருணை, இரக்கம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயும் கொள்கையாக இது காணப்படுகிறது. பெண்ணியல் ஒழுக்கவியலானது கரோல் ஜிலிக்கன் (Carol Gilligan) மற்றும் நெல்நொடிங்ஸ் (NelNoddings) என்பவர்களினால் விருத்தி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. வீட்டு அணுகுமுறை மற்றும் பராமரிப்பு சமூக ரீதியாக பெண்களுக்கு வழங்கப்பட்டமை மற்றும் எவ்வாறு வீட்டுப் பராமரிப்பானது மதிப்பீடு குறைந்த விடயமாக மாறியது என்பன தொடர்பான விமர்சன நோக்கினை இது வெளிப்படுத்துகிறது. பெண்ணிய ஒழுக்கவியலாளர்களின் ஒரு பிரிவினராகிய பராமரிப்பு - மைய - பெண்ணிய வாதிகள் (Care Focused Feminists) பெண்ணின் பராமரிப்பு இயலுமை மனித ஆற்றலின் சிறப்பு பண்பு என குறிப்பிடுகின்றனர். இத்தகைய பராமரிப்பு பண்பு பெண்களிடம் இருந்து மட்டுமல்லாமல் ஆண்களிடம் இருந்தும் வர வேண்டும் எனக் கருதுகின்றனர். மேலும் இருபாலாருக்கும் பராமரிப்பு பண்பு கற்பிக்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் வாதிடுகின்றனர். நீதி பற்றிய ஒழுக்கவியல் சிந்தனைகளை காட்டிலும் பராமரிப்பு தொடர்பான ஒழுக்கவியல் சிந்தனைகள் அதிக முக்கியத்துவம் உடையதாக உள்ளது என நொடிங்ஸ் குறிப்பிடுகிறார். பெண்ணிய மெய்யியல் சிந்தனைகளும் அவை தொடர்பான பிரச்சினைகளும் சரியாக இனம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பெண்ணிய ஒழுக்கவியல் வாதிடுகின்றது.

### இருத்தலியல் ஒழுக்கக் கொள்கை (Existentialist Ethics)

இருத்தலியல் மெய்யியலாளர்கள் சமூக மற்றும் சமய வழக்காறுகள் நம்பிக்கைகள் என்ற முற்சாய்வுகள் இன்றி நான் எப்படி வாழ வேண்டும்? எப்படியான வாழ்க்கை உயர்ந்தது போன்ற வினாக்க ளுக்கு விடை தேட முயல்கின்றனர். இந்த முயற்சியில் இரு வகைப் பட்ட மெய்யியலாளர்கள் காணப்படுகின்றனர். ஒரு வகையினர் கடவுள் இருப்பினை ஏற்க, ஏனையோர் கடவுள் இருப்பினை நிராகரித்து தமது கருத்துக்களை முன்வைக்கினற்னர். இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தலியல் சிந்தனையாளர்கள் தனி மனித நோக்கிலிருந்து தமது ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. எல்லா இருத்தலியல் மெய்யியலாளர்களும் ஒரே மாதிரியாக சிந்திக்கின்றனர் என கூறமுடியாது ஆயினும் எல்லா இருத்தலியல் சிந்தனையாளர்களுக்கும் பொதுவான சில பண்புகள் உண்டு. இதனை தவிர ஒவ்வொரு மெய்யியலாளரும் தனது தனித்தன்மை யினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடவுளை ஏற்றுக்கொள்ளும் மெய்யியலாளரான கீர்ககார்ட் (Kierkegaard 1813 - 1855) புறவயமான முறையில் பகுத்தறிவு ரீதியாக தர்க்க ரீதியாக மதங்களின் உண்மைகளை தேடி கண்டு அவற்றின் அடிப்படையில் வாழ முற்படுவது தவறு என சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்தவ மத கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் இவர் கிறிஸ்தவ வாழ்க்கைமுறை ஒரு அகவயமான வாழ்க்கை முறை என குறிப்பிடு கிறார். கிறிஸ்தவத்தின் உண்மைகளை உணர்வதற்கு ஒரு விஞ்ஞானி புறவயமான உண்மைகளை தேடி கண்டறிவது போன்ற முறைகளை கையாள்வது தவறு என்றும், ஒருவர் தனது சொந்த வாழ்க்கை அனுபவத்தின் மூலமே அதனை உணர முடியும் எனவும் கீர்க்ககார்ட் குறிப்பிடுகிறார். உண்மை என்பது அகவயமானது என்றும் அதனை எமது சொந்த வாழ்வின் அனுபவத்தின்மூலம் புரிந்துகொள் முடியும் என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ மதத்தில் கூறப்படும் கருத்துக்களையும் ஒழுக்க சீலங்களையும் புறவயமாகவும் நேர்க்கட் வாத ரீதியாகவும் பகுத்தறிவு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் ஆய்வு செய்ய முயன்றால் அது முட்டாள் தனமான நடவடிக்கை ஆகும். மதத்தின் உண்மைகளை அறிவதற்கும் அடைவதற்குமான ஒரே வழி நம்பிக்கை அல்லது விசுவாசம் (faith) என்றும் கடவுளையும் மத கருத்துக்களையும் நம்புகின்ற நிலையினை 'விசுவாச பாய்ச்சல்' என குறிப்பிடுகிறார் கோடன் கிரஹம் 2004 : 74). மதக் கருத்துக்களை கடைப்பிடிப்பதில் பகுத்தறிவினை காட்டிலும் உணர்ச்சி முக்கியமானது என குறிப்பிடுகிறார்.

மற்றுமொரு இருத்தலியல் மெய்யியலாளரான அல்பர்ட் கமு (Albert Camus) மதக் கோட்பாடுகள் தனது சொந்த சமய வாழ்க்கையினை பலவீனப்படுத்துவதாக குறிப்பிடுகிறார் (மேலது : 75).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் தெய்வத்தின் காட்சியம்மா! அது தான் உள்ளத்தின் சாட்சியம்மா! அதுதான் உண்மைக்கு சாட்சியம்மா!"

என்ற கண்ணதாசன் பாடல் இருத்தலில் மெய்யியலாளர்களின் கருத்தினை தெளிவாக விளக்குகின்றது. இவ்வகையில் ஆத்தீக இருத்தலியல் மெய்யியலாளர்கள் மதக் கருத்துக்களையும் ஒழுக்க சீலங்களையும் தமது சொந்த அனுபவம் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கடைபிடிப்பதை உயர்ந்த வாழ்க்கை முறையாக கருதுகின்றனர். இவர்கள் தர்க்க ரீதியாக பகுத்தறிவு ரீதியாக நேர்காட்சி வாத முறையில் மதக்கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அணுகுவதை கண்டிக்கின்றனர். இவர்களது நம்பிக்கை உணர்ச்சி மற்றும் பௌதீக அதீதம் சார்ந்தது. மதக் கோட்பாடுகளும் கருத்துக்களும் சமூகம் சார்ந்ததாக காணப்பட்டபோதும் மதத்தின் உண்மைகளை ஒவ்வொருவரும் தனித்தனியாக கண்டறிகின்றனர்.

நாத்திக இருத்தலியல் மெய்யியலாளர்கள் நோக்கில் எது உயர்ந்த வாழ்க்கை? எப்படி ஒரு மனிதன் வாழ வேண்டும்? என்பதை ஆராய்வோமேயானால் நாத்தீக இருத்தலில் மெய்யியலாளரான சார்த்தர் (Sartre) முக்கியமானவர். கீர்ககார்ட்டை போல இவரும் ஒரு மனிதனின் அகவய தன்மைக்கே முக்கியத்துவம் வழங்குகிறார். ஒவ்வொரு மனிதனின் இருப்பும் தனித்துவமானது என வாதிடுகிறார். ஒரு மனிதன் அவனையே உருவாக்கி கொள்கின்றான். கடவுள் என்று ஒருவர் இல்லாததன் காரணமாக மனிதர்களின் இயல்பு இதுதான் என யாரும் வாதிட முடியாது என குறிப்பிடும் சார்த்தர், சரியான செயல், பிழையான செயல் என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் தீர்மானிக்கும் ஆற்றலும் சுதந்திரமும் உடையவனாக இருக்கிறான் எனக் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு மனிதனும் அதகிளவு சுதந்திரமும் அதேவேளை அதிகளவு பொறுப்பும் உள்ளனவாக இருக்கின்றான். கடவுள் இல்லை கடவுளுக்கு பதிலாக மனிதன் அந்த இடத்தில் இருப்பதன் காரணமாக அவனுக்கு சுதந்திரமும் பொறுப்பும் அதிகமாக உள்ளது என வாதிடுகிறார். ஒவ்வொரு மனிதனும் தப்பிக்கொள்ள முடியாத அளவிற்கு சுதந்திரத்துடனும் பொறுப்புடனும் செயற்படும்போது அச்செயல் நல்ல செயலாகவும் அத்தகைய வாழ்க்கை நல்ல வாழ்க்கையாகவும் இருக்கும் என சார்த்தர் வாதிடுகிறார். அனேகமாக ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியினை கொடுக்கக்கூடிய செயல் எல்லோருக்கும் மகிழ்ச்சியினைக் கொடுக்கக்கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்ற நம்பிக்கையினையும் கொண்டவராக சார்த்தர் இருக்கின்றார். மனிதனிடம் காணப்படும் அதிகளவிலான சுதந்திரம் அவனுக்கு தேர்வு உரிமையினை வழங்குகின்றது. இருக்ககூடிய தெரிவுகளில் ஒருசிலவற்றை அவன் தேர்வு செய்கின்றான். எவ்வாறாயினும் தனிநபர் நலனுக்கும் சமுக நலனுக்கும் இடையில் முரண்பாடு உருவாக வாய்ப்பு இல்லை என சார்த்தர் வாதிடுகிறார். ஒருவருக்கு நன்மையினையும் மகிழ்ச்சியினையும் தரக்கூடிய செயல் எல்லோருக்கும் நன்மையினையும் மகிழ்ச்சியினையும் தருவதாக இருக்கும் என ஒரு தனி நபர் தேர்வினை சமூகத்தேர்வாக சார்த்தர் நோக்குகிறார். தவிர்க்க முடியாத சுதந்திரம் மனிதனை புதிய விழுமியங்களை படைப்பவனாக மாற்றுகின்றது. உண்மையில் சார்த்தரின் கருத்துப்படி மனிதனின் இருப்பு வெறுமை மற்றும் பயனற்ற ஒன்றாகும்.

சார்த்தர் மனித வாழ்க்கை என்பது வெறுமையானது என்று கருதிய போதிலும் இத்தகைய மனிதன் தீமையான செயல்களை காட்டிலும் நன்மையான செயல்கள் செய்வான் என நம்புகின்றார். ஆயினும் பல மனிதர்கள் மனித வாழ்வில் வெறுமை நிலை காரணமாக ஒழுக்க ரீதியாக தவறான செயல்கள் செய்வார்கள் என சார்த்தர் குறிப்பிடுகிறார். வெறுமையான வாழ்க்கை மற்றும் பொறுப்பு காரணமாக தவறுகளை செய்பவர்களும் கடமைகளை சரியாக நிறைவேற்றாதவர்களும் காணப்படுகின்றனர் என்பதை சார்த்தர் ஏற்றுக்கொள்கிறார். தவறு செய்யும் மனிதர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள் என சார்த்தர் கருதுகிறார்.

மனித வாழ்வில் ஏற்படும் ஒருவகை வெறுமை நிலை காரணமாக பதட்டம் அல்லது அமைதியின்மை ஏற்படுகிறது. மேலும் அதிகளவிலான நமது தேர்வுச் சுதந்திரமும் எமக்கு அமைதியின்மையினை உருவாக்குகின்றது. இத்தகைய பின்னணியில் மனித வாழ்வின் வெறுமை நிலை மற்றும் செயல்களை தேர்ந்தெடுப்பதில் உள்ள உச்சபட்ச சுதந்திரம் என்பன நல்ல தீய செயல்கள் தொடர்பான முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. ஒரு செயல் தொடர்பாக நாம் எடுக்கும் முடிவு முழு மனித இனத்துடனும் தொடர்புபடுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என சார்த்தர் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதனாக இருப்பது கடவுளாக ஆவது; மனிதனின் தெரிவுச் சுதந்திரம் அவனது கடவுளாக மாறும் ஆசையில் வெளிப்பாடு" (கோடன் கிரஹம் 2004 : 80).

மனித இருப்பு அர்த்தமற்றதாக தோன்றினாலும் மனிதன் நன்மையான செயல்கள் செய்வான் என்ற நம்பிக்கையினை சார்த்தர் வெளிப்படுத்துகிறார். ஆயினும் அமைதியின்மை காரணமாக சிலர் தவறான செயல்களில் ஈடுபடுவதை சார்த்தர் சுட்டிக்காட்ட தவற வில்லை. தவறான செயல்களில் ஈடுபடுவோர் அச்செயல்களில் இருந்து அவர்கள் எதிர்பார்க்கும் திருப்தியை அடைய முடியாது எனவும் சார்த்தர் வாதிடுகிறார்.

இருத்தலியல் வாதிகளின் கருத்துப்படி ஒரு செயலை முழுச் சுதந்திரத்துடன் தேர்ந்து எடுத்து அச்செயலுக்கும் அதன் விளைவுக்கும் நாமே பொறுப்பு என நாம் உணர்ந்து செயல்படும்போது அது நல்ல செயலாக இருக்கின்றது. காண்டினை போல் செயலின் நோக்கத்திற்கு இருத்தலியல்வாதிகள் முக்கியத்துவம் வழங்குகின்றனர். சுயநல நோக்கினை காட்டிலும் பொதுநல நோக்கினை கொண்ட செயல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதத்தினை அடிப்படையாக கொண்ட செயல்களை இருத்தலியல்வாதிகள் போற்றுகின்றனர். இருத்தலியல்வாதிகளின் கருத்துப்படி, ஒருவர் இன்னொருவரின் ஆலோசனைப்படி ஒரு நல்ல செயலை செய்வாராயின் அதனை முழுமையாக நல்ல செயலாக கருதமுடியாது. ஏனெனில் ஒரு செயலை செய்பவர் அவரின் முழு சுயாதீன சித்தத்துடனும் பொறுப்புடனும் செயல்களில் ஈடுபட வேண்டும் என இருத்தலியல்வாதிகள் எதிர்பார்க் கின்றனர். புதிய புதிய ஒழுக்கவியல் மதிப்பீடுகளை உருவாக்கக்கூடிய ஆற்றலை மனிதர்கள் கொண்டிருப்பதாக இருத்தலியல்வாதிகள் நம்புகின்றனர். ஒரு மனிதனின் மதிப்பீடு இன்னொரு மனிதனின் மதிப்பீட்டில் இருந்து வேறுபடக்கூடியது என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் (சார்த்தர் 1973).

இருத்தலியல்வாதிகளின் கருத்துப்படி தவிர்க்க முடியாத வகையில் ஒரு மனிதன் தேர்வு செய்து செயற்படும் சுதந்திரத்தை மட்டும் கொண்டவன் அல்ல. அத்துடன் தவிாக்க முடியாத வகையில் அச்செயல் தொடர்பாக பொறுப்பினை கொண்டுள்ளான். இவ்வுலகில் கடவுள் இல்லாததன் காரணமாக கடவுளிடத்தில் இருந்து மனிதன் நன்மைகளை செய்ய வேண்டும் என சார்த்தர் குறிப்பிடுகிறார்.இருத்தலியல்வாதிகளின் கருத்துப்படி ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயாதீனமாக சுதந்திரமான முடிவெடுத்து ஒரு செயலை செய்வதற்கு உண்மையில் எந்த தடையும் இல்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிவுச் சார்ந்த சுதந்திரத்தை கொண்டுள்ளான். ஒரு நல்ல மனிதன் ஒரு செயலை செய்வதற்கு புறவயமான தடைகளை ஏற்படுத்த முடியாது என சார்த்தர் உறுதியாக வாதிடுகிறார். ஒழுக்க விதிகள் தொடர்பான கருத்துக்களும் பின்பற்றல்களும் சுயாதீனமாக ஒவ்வொரு மனிதனிடம் இருந்து வரவேண்டுமே தவிர அவற்றை நாம் பலத்காரமான முறையிலோ அல்லது அறியாமலோ அல்லது வழக்காற்றினாலோ பின்பற்றுவதாக இருக்கக் கூடாது என்பது அனைத்து இருத்தலியல்வாதிகளின் கருத்தாக உள்ளது. தவறான செயல்களை செய்வது இலகுவானது, பொதுவானது, அதேவேளை சரியான செயலை செய்வது கடினமானது. ஆயினும் தவறான செயல்களை செய்வதற்கு மனிதன் சுதந்திரம் உடையவனாக இருக்கிறான் தவறான செயல்களை காட்டிலும் சரியான செயல்கள் மிகவும் உயர்ந்தவை. நாம் தவறான செயல்களை செய்கிறோமா? அல்லது சரியான செயல்களை செய்கின்றோமா? என்பது உண்மையில் ஒவ்வொருவரும் எதிர்நோக்கும் மனிதத்துவ சோதனையாகும் என்பது இருத்தலியல்வாதிகளின் முக்கிய கருத்தாகும் (கோடன் கிரஹம் 2004 : 96).

### பிறர்நலவாதம் (Altruism)

பிறர் நல வாதம் என்ற எண்ணக்கருவானது 19 நூற்றாண்டு சமூகவியலாளரும் விஞ்ஞான மெய்யியலாளருமான அகஸ்ட் கொம்டினால் (August Comte) உருவாக்கப்பட்டது. இக்கொள்கைப்படி செயல் செய்பவரை தவிர்த்து ஏனைய மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு நன்மை அல்லது மகிழ்ச்சியினை கொண்டுவரும் செயல்கள் இந்த வாதத்துக்குள் அடங்கும். இக்கொள்கைப்படி பிறர் நலன் கருதி செய்யப்படும் செயல்களே சரியான செயல் மற்றும் நல்ல செயல். இச்செயலானது பிறரது இவ்வுலக நலன்களை கொண்டிருக்கலாம் அல்லது அவ்வுலக நலன்களை கொண்டிருக்கலாம். பல மதங்களில் இக்கொள்கை முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கொள்கையின்படி ஒருவரின் சுயநலம் புறக்கணிக்கப்பட்டு பிறர்நலம் முக்கியத்துவப்படுத்தப்பட்டு செயல் செய்பவரது தியாகம் முதன்மைப்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தவொரு பிரதியுபகாரமும் இன்றி பிறர் நலன் கருதி செய்யப்படும் செயல்களே பிறர் நல வாதத்தில் உள்ளடங்கும்" என ஸ்டெயன்பெர்க் குறிப்பிடுகிறார். கடமை உணர்வுடனும் உறவு நிலை தொடர்பிலும் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் செய்யும் செயல்கள் பிறர்நலவாதத்தில் இடம்பெறாது என சில ஒழுக்கவியலாளர்கள் வாதிடுகின்றனர்.

மனித உளவியலில் உண்மையான பிறர்நல வாதம் சாத்தியமா? என்ற பொருளில் அறிஞர்களுக்கு இடையே காரசாரமான வாத விவாதங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உளவியல் தன்னல வாத்தின்படி ஒவ்வொரு செயலையும் மனிதன் சுயநல நோக்குடனே செய்வான் என்ற கருத்துக்கு முற்றிலும் முரணானதாக பிறர்நலவாத சிந்தனை காணப்படுகிறது. பிறர்நல வாதம் ஒரு ஒழுக்க கொள்கையாக தனிநபர்கள் ஒழுக்க ரீதியாக பிறரின் நன்மைக்கு கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றனர் என்ற கருத்தினை முன்வைக்கின்றது. பிறர்நல வாதம் பல்வேறு சமூக விஞ்ஞானங்களிலும் இயற்கை விஞ்ஞானங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்படும் கொள்கையாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மனித நடத்தைகளில் இருந்தும் விலங்குகளின் நடத்தைகளில் இருந்தும் ஆய்வாளர்கள் பிறர்நல வாத நடத்தைகளை அடையாளம் கண்டுள்ளனர். மனிதர்களும் விலங்குகளும் தங்களது நெருங்கிய உறவுகளுக்கு இடையே பிறர்நலவாத நடத்தையை வெளிப்படுத்துவதை ஆய்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. சிலர் சமூகத்தில் மதிப்பினை பெற்றுக்கொள்வதற்காக பிறர் நலவாத செயல்களில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது.

ஒரே இனம் ஒரே மொழி என்ற அடிப்படையில் பிறர் நல வாத செயல்களில் ஈடுபடுவோர்களை ஆய்வாளர்கள் அடை யாளம் காட்டிநிற்கின்றனர். மனித பரிணாமத்தில் ஒரு மனிதன் சுயநலவாதியாக இருந்து பிறர்நல வாதியாக மாறுகிறான் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. அமீபா போன்ற நுண்ணுயிர்களின் செயற்பாட்டில் பிறர்நல வாதச் செயற்பாட்டை கண்டுகொள்வதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர் அமீபாவில் சில செல்கள் ஏனைய செல்கள் உயிர் வாழ்வதற்காக அவை தமது உயிரை தியாகம் செய்வதாக இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். நரம்பியல் விஞ்ஞான ஆய்வாளர்கள் (Neurobiologists) மூளையின் சில பகுதிகள் ஒருவரின் பிறர்நல வாத செயல்களுக்கு காரணமாக இருக்கின்றன என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பகுதி மகிழ்ச்சிக்குரிய பகுதியாகவும் இருப்பதை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில நரம்பியல் அறிஞர்களின் கருத்துப்படி மூளையில் குறிப்பிட்ட சில பகுதிகள் பாதிக்கப்பட்டவர்கள் (Ventro Medial Prefrontal Cortex) பிறர் மீது கருணை, இரக்கம் போன்ற பண்புகளை கொண்டிருக்க மாட்டார்கள் என்றும் இதேபோல் மன நோயாளர்கள் (Pychopaths) பிறர் மீது இரக்கம் கொள்ளமாட்டார்கள் என்றும் தமது தவறுகளுக்கு வருந்தமாட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. இவ்வகையில் இத்தகைய மனிதர்களின் செயல்களை ஒழுக்க ரீதியான பகுப்பாய்வுக்கு கொண்டுவரும்போது ஒழுக்கவியலில் உடலியல் சார்ந்த உளவியல் சார்ந்த பண்புகளை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். பிறர் நல வாதிகள், தன்னல வாதிகள் என்று கருதப்பட்டோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது பிறர்நல வாதிகளை காட்டிலும் தன்னல வாதிகள் அதிகம் பிறர்நல செயல்களில் ஈடுபட்டிருந்ததை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். (Moll and Jordan Grafman ) ஏனையோரின் நலன்களை அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கில் உந்தப்பட்ட நிலையினை உளவியல் சார் பிறர்நல வாதம் (Psychological Altruism) என அழைக்கின்றனர். சமூக பரிமாற்ற கொள்கை (Social Exchange Theory) பிறர்நல வாதம் ஒருவருக்கு (செயலின் நன்மையை பெறுபவர்) துன்பத்தை காட்டிலும் அதிக நன்மைகளையும் இன்பங்களையும் கொண்டு வருவதாக இருக்கும் என வாதிடுகிறது.அகவய பிறர்நல வாதத்தின்படி (Empathy Altruism) ஒருவர் பிறரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதி அவரின் துன்பத்தை கலைய உதவுவார். பிறர்நலம் தொடர்பான ஆராய்ச்சிகள் தெரிவிக்கும் விடயம் என்னவெனில் பெரும்பான்மையினர் பிறர் துன்பத்தை போக்க விரும்புகின்றனர் என்பதாகும். பிறர் நலவாத செயல்களில் ஈடுபடும் சிலர் மீது நடத்தப்பட்ட ஆய்வில் பின்வரும் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டது. இத்தகைய மனிதர்கள் வாழ்க்கையில் அதிகம் திருப்தி அடைந்தவர்களாகவும் வாழ்க்கையினை வாழ விருப்பம் உடையவர்களாகவும் மன அழுத்தம், பதட்டம் மற்றும் உடல் பலவீனம் ஆகிய பண்புகளை குறைவாக கொண்டிருந்தனர்.

உளவியல் ரீதியான ஆராய்ச்சிகள் பிறர்நலவாதம் தொடர்பில் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றன. பிறர்நலவாத செயல்களை செய்பவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக மகிழ்ச்சி உள்ள மனிதர்களாக இருக்கின்றனர். தயாள குணமும் கொடை வழங்குதலும் ஒருவரை துன்ப நிலையில் இருந்து இன்பத்திற்கு அழைத்து செல்கின்றது. பிறர்நலவாதி ஒருவன் துன்பத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டால் அவனது ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் பாதிப்படைகிறது. நன்கொடை வழங்குதலும் பிறருக்கு உதவுதலும் பிறர்நல வாதிக்கு நல்ல மனநிலையினை உருவாக்குகின்றது.

பிறர்நலவாதம் சிறந்த சமூகத்திற்கு முக்கியமானது என்றும் பிறர்நலவாதம் எப்படி உருவாகின்றது? எப்படி செயற்படுகிறது? பிறர்நலவாத்தினை எவ்வாறு உருவாக்க முடியும்? என்பவை தொடர்பில் அமெரிக்க சமூகவியலாளர்கள் சிந்தித்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எந்த நோக்கத்திற்காக பிறர் நல செயல் களை ஒருவர் செய்கின்றாரோ அந்த நோக்கத்திற்கு எதிரான தவறான பலன்களை ஒருவர் பெறுகின்றபோது அல்லது தவறான வழியில் பிறர்நலவாதச் செயல்களை பயன்படுத்தும்போது அதனை நோய்யியல் பிறர்நலவாதம் என அழைக்கின்றனர் (Pathological Altruism) எடுத்துக்காட்டாக:- ஒருவர் ஏழைப் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக என்று பொருட்களையும் பணத்தையும் சேகரித்து ஏழைப் பிள்ளைகளுக்கு கொடுக்காமல் தனது சுயநல நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுதல்.

சமய நோக்கில் பிறர்நல வாதம் முக்கியத்துவம் உடைய சமய ஒழுக்க சீலமாக கருதப்படுகிறது. பிறருக்கு செய்யும் நன்மை கடவுளுக்கு செய்யும் நன்மையாகவும் சொர்க்கத்தை அடைய வழிகாட்டும் செயலாகவும் பாவத்தை குறைக்கச் செய்யும் செயலாகவும் ஆன்ம விடுதலையினை நோக்கிய செயலாகவும் மற்றும் கடவுளின் கட்டளையாகவும் இருப்பதை நாம் பொதுவாக எல்லா மனிதர்களிலும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக:- பௌத்த மதம் கருணை, அன்பு என்பவற்றை போதிப்பதை கூறலாம். இதேபோல் கிறிஸ்தவம் உன்னைப்போல் உன் அயலவர்களையும் நேசி என குறிப்பிடுகிறது. சைவத்தில் திருமூலர் அன்பே சிவம் என குறிப்பிடுகிறார்.

அதிகளவு பிறருக்கு நன்மையினை கொண்டுவருகின்ற செயல்களை செய்ய வேண்டும் எனக் கூறும் பிறர்நல வாத கொள்கை வினைத்திறன் பிறர் நல வாதம் என அழைக்கப்படுகிறது. விஞ்ஞான ரீதியான திட்டங்கள் பெரும் நிறுவனங்கள் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு நன்மை தரும் செயல்கள் என்பவற்றுடன் இணைந்த வகையிலும் இலாப நோக்க மற்ற வகையிலும் இவ்வாதம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் ஆர்வலர்களாக பீட்டர் சிங்கர் மற்றும் பேஸ் புக் நிறுவனத்தின் உதவி நிறுவனர் டஸ்டின் மோஸ்கோவிஸ் (Dustin Moskovits) என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மனிதன் அல்லாத விலங்குகளிடம் பிறர் நலன் சார்ந்த நடத்தை காணப்படுகின்றதா? என்ற நோக்கில் இயற்கை விஞ்ஞானங்களில் ஆய்வு நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. பிறர் நல வாத செயல்கள் பிறருக்கு நன்மையினை கொண்டு வருமே தவிர தீமையினை அல்ல என்ற விடயத்தினையே பிறர் நல வாத செயல்கள் செய்வோர் கவனத்திற் கொள்வர். பிறர் நல வாத செயல்களில் ஈடுபடுவோர் கட்டாயம் தனது நலனை தியாகம் செய்ய வேண்டி அவசியம் இல்லை. ஒரு தன்னலவாதி கூட பிறர் நல வாத செயல்களை செய்ய முடியும் என ஒழுக்கவியலாளர்கள் வாதிடுகின்றனர். அதாவது பிறர் மகிழ்ச்சியில் தன் மகிழ்ச்சியினை காணும் ஒருவன் இத்தகைய செயல்களை செய்யக்கூடியதாக இருக்கும். எடுத்துக்காட்டாக:- ஒரு பிறர் நல வாதி தனது பசியினை தீர்ப்பதனால் ஏற்படும் மகிழ்ச்சியை காட்டிலும் ஏழைக்குழந்தைகளின் பசியினை தீர்ப்பதில் அதிக மகிழ்ச்சியினை காணலாம். தனது இன்பம் அல்லது மகிழ்ச்சியினை கொஞ்சம் கூட கருத்திற்கொள்ளாது பிறரின் நலம் அல்லது மகிழ்ச்சியை முழுமையாக கருத்திற்கொள்ளும்போது அதனை தூய பிறர் நல வாதம் (Pure Altruism) என அழைப்பர். பிறர் நலத்தில் அல்லது மகிழ்ச்சியில் தனது இன்பம் அல்லது மகிழ்ச்சியை காண்பவர்களை தூய பிறர் நல வாதிகளாக நாம் பார்க்கிறோம்.

ஒழுக்க ரீதியான விதிகள் மற்றும் கடமையில் இருந்து பிறர்நல வாத செயல்கள் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக A என்பவர் B என்பவரிடம் இருந்து 2000 ரூபாய் கடன் பெற்று அதனை குறிப்பிட்ட தினத்தில் திருப்பிக்கொடுப்பதாக கூறினால் அந்த கடனை குறிப்பிட்ட தினத்தில் திருப்பிக் கொடுக்கும்போது கடன் வாங்கினால் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்ற ஒழுக்கவிதியினை A என்பவர் பூர்த்தி செய்பவராக இருப்பார். ஆனால் B என்பவர் A என்பவருக்கு எந்த விதமான நிபந்தனையும் பிரதிபலனும் இன்றி A யின் வறுமையினை கருத்திற்கொண்டு 2000 ரூபாய் பணத்தை வழங்குவாரேயானால் அதனை பிறர்நல வாத ஒழுக்க செயல் என அழைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரது நல்வாழ்விற்கு (well being) உதவுதல் பிறர்நலவாத செயல்களின் முக்கிய இலக்காக உள்ளது. ஆயினும் ஒழுக்க மெய்யியலாளர்களுக்கு இடையே நல்வாழ்வு எது? என்பது தொடர்பாக வாத விவாதங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நல்வாழ்வு தொடர்பில் ஒழுக்கம் சார்ந்த மதிப்பீடுகள் மற்றும் ஒழுக்கமல்லாத மதிப்பீடுகள் என இரண்டையும் பிறர்நலவாதம் பற்றி பேசும் ஒழுக்கவியலாளர்கள் பயன்படுத்துவதை காண முடிகிறது. பிறர்நல வாதம் வெறும் அறிவு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யும் செயல்களை காட்டிலும் மனிதாபிமான அடிப்படையிலான தேவைகளை பூர்த்தி செய்யும் செயல்களுடன் அதிகம் தொடர்புபடுவதைகாண முடிகிறது. பிறர்நல வாதத்தை அடிப்படையாக கொண்டு செயல்படுதல்தான் பிறர் நல வாதத்தின் முக்கிய நோக்கு என கருதப்பட்டாலும் பிறர் நல வாதத்திலும் தன்நலம் காணப்படும் என்பதே மனித உளவியல் என சில ஒழுக்கவியலாளர்கள் வாதிடுகினற்னர்.

மேலும் ஒருவர் . செய்யும் பிறர்நலவாத செயல் அவருக்கு தீமையினை கொண்டு வருவதாக இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது. பிறர்நலவாத சிந்தனை தொடர்பாக முன்வைக்கபப்டும் முக்கிய விமர்சனம் என்னவெனில் ஒரு செயல் தொடர்பாக செயல் செய்பவரும் செயலின் பயனை பெறுபவரும் ஒரே தன்மையான நோக்கினை அச்செயல் தொடர்பாக கொண்டிருக்கமாட்டார்கள் என்பதாகும். எடுத்துக்காட்டாக:- ஒரு பணக்காரர் ஒரு ஏழை மாணவனின் கல்விபற்றி சிந்தித்து அவன் எப்படி எதிர்காலத்தில் வரவேண்டும் என கற்பனை செய்து அவனுக்கு உதவ முற்படும் பட்சத்தில் அந்த மாணவனும் அவரைபோலவே சிந்திப்பான் என்று உறுதியாக கூற முடியாது. குறிப்பிட்ட பணக்காரருக்கு நன்மையாக தோன்றுவது சில வேளைகளில் குறிப்பிட்ட மாணவனுக்கு நன்மையாக தெரியாமல் போகலாம்.எமது புலனின்ப ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளல் என்ற நோக்கத்திற்கு அப்பாற்பட்ட வகையில் மனிதன் இருக்கிறான் என்ற உண்மையினை வெளிப்படுத்துவதாக பிறர்நல வாதம் காணப்படுகிறது. பிறர்நலவாதம் மனித ஆளுமையின் தன்னலமற்ற பகுதியினை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

ஒரு தனி நபரின் அகவய தன்மையுடன் (நான், எனது) இணைந்த வகையில் பிறர்நல வாதிகள் பிறர்நல வாதத்தின் பண்புகள் காணப் படுவதை சுட்டிக் காட்டுகின்றனர். ஒருமனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயது முதல் குழந்தை இளைஞன் மற்றும் முதியவன் என்ற ஆளுமை வேறுபாடுகளை கொண்டுள்ளான். இத்தகைய ஆளுமை வேறுபாடுகள் தனிமனிதனில் பிறர்நலவாத பண்புகளை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது என்றும் இதேபோல் ஒரு மனிதனின் சுயம் மாற்றமடைந்து கொண்டே செல்கின்றது என்றும் ஒரு கணத்தில் இருக்கும் மனிதன் அடுத்த கணத்தில் இருப்பதில்லை எனவும் கூறப்படுகிறது. இத்தகைய நிலையானது பிறர்நலவாதத்திற்கு அடிப்படையாக அமைவதாக ஒழுக்கவியலாளர்கள் வாதிடுகின்றனர். மேலும் ஒரு மனிதன் சமுகம் எனும் பெரும் தொகுதியில் ஒரு பிரிவாக இருக்கின்றான்.அவனது இருப்பு சமுகத்தினை சார்ந்ததாக காணப்படுகிறது. இவ்வகையில் பிறர்நலவாத அடிப்படையினை நாம் தனிப்பட்ட மனிதனில் காண முடிவதாக ஒழுக்கவியல் அறிஞர்கள் வாதிடுகின்றனர்.

பிறருக்கு நன்மை செய்தல் பிறர்நல வாதத்தில் முக்கிய நோக்கமாகும். பிறருக்கு ஏன் நாம் நன்மை செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு பின்வரும் காரணங்களை பிறர்நலவாத கொள்கையினர் முன்வைக்கின்றனர்.

1. பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்வு தூண்டு வதால் நாம் நன்மை செய்கின்றோம்.
2. அடிப்படை ஒழுக்கச்சிந்தனை பிறர்நலவாதத்தை அடிப்படையாக கொண்டுள்ளதே தவிர சுயநலத்தை அல்ல.
3. பகுத்தறிவினை காட்டிலும் பிறர்நலவாத உணர்வுகளான: கருணை, அன்பு, அனுதாபம் போன்றன ஒழுக்கவாழ்வின் முக்கிய பங்கினை விக்கின்றன. மூளையை விட இதயம் ஒழுக்கவியலில் முக்கிய இடத்தை பெறுகிறது.
4. பிறருக்கு நன்மை செய்யும் செயல்கள்: கொடை வழங்குதல், உதவுதல், விருந்தோம்பல் என்பன சொர்க்கத்திற்கும் கடவுளி டத்திலும் எம்மை அழைத்து செல்கின்றன.
5. எல்லோருக்கும் அன்பு செய்வதும் நேசிப்பதும் கடவுளின் கட்டளையாகவும் விருப்பமாகவும் இருக்கின்றது.

கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்டோட்டில் முழுமையாக பிறர் நலத்தை கெண்டுவரும் செயல்களுக்கு முக்கியத்துவம் வழங்க வில்லை. ''எனக்கு நன்மை தராத எந்தவொரு செயலையும் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்போவதில்லை'' என்ற அவரின் கூற்று இதனை தெளிவு படுத்துகிறது. ஒரு செயல் நல்ல செயல் என்றால் அது பிறருக்கும் செயல் செய்பவருக்கும் நன்மையினை கொண்டுவருவதாக இருக்க வேண்டும் என்பதே அவரின் நிலையாக இருக்கும் என்பது தெளிவு.

பகுத்தறிவுடனும் மற்றும் நடுவுநிலைமையுடனும் சிந்திக்கும் போக்கினை கொண்ட நவீன ஒழுக்கவியலில் பிறர்நல வாத சிந்தனைகள் முக்கிய இடத்தை பெறுகின்றன. குறிப்பாக பயன்பாட்டு வாதம் தனி ஒருவரின் நலன் அல்லது மகிழ்ச்சி என்பதை காட்டிலும் பெரும்பான்மையான மக்களின் நலன் அல்லது மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இதேபோல் பயன்பாட்டு வாதத்தின் ஒரு பிரிவினராகிய விளைவுவாதிகளும் (Consequentialists) ஒரு நல்ல செயலில் விளைவினை நடுவுநிலைமையுடன் அணுகு கின்றனர். இவர்களின் கருத்துப்படி ஒரு நல்ல செயல் அதனை செய்பவருக்கு மகிழ்ச்சியினை கொண்டுவருவதை காட்டிலும் பிறருக்கு மகிழ்ச்சியை கொண்டுவருவதாக இருக்கும் என கருதுகின்றனர்.

நடுநிலைமையான நோக்கினை வெளிப்படுத்துவதாக பிறர்நல வாதம் காணப்படுவதாக தோமஸ் நேகல் குறிப்பிடுகிறார். இவரின் கருத்துப்படி இந்த நடுவுநிலைமையான நோக்கானது ஒரு மனிதன் பகுத்தறிவு ரீதியான உயிரி என்ற வகையில் ஒரு தனிநபர் பிறரின் நிலையில் இருந்து பொதுமையான நிலையினை வெளிப்படுத்துவதாக இருக்கிறது என்பதுடன் ஒரு தனிநபரையும் ஏனையோரையும் திருப்திப்படுத்துவதாகவும் இருக்கிறது என குறிப்பிடுகிறார் (Negal 1970)

உணர்வு வாதிகளின் (Sentimentalists) கருத்துப்படி மனிதன் தனது இனம் என்ற வகையில் இன்னொரு மனிதனின் நலன் மற்றும் நல்வாழ்க்கை மீது அக்கறை கொண்டுள்ளான் என்றும் இந்த உணர்வு காரணமாகவே பிறர்நலவாதம் சார்ந்த செயல்களில் ஈடுபடுகிறான் என்றும் வாதிடுகின்றனர். இது மனிதனுக்கு மட்டுமல்ல எல்லா விலங்குகளுக்கும் கூட பொதுவாக உணர்வாகும். பெரும்பாலான மனிதர்கள் கருணை மற்றும் இரக்கத்தினை மகிழ்ச்சியுடன் பிறர் மீது வெளிப்படுத்துகின்றனர் என காண்ட குறிப்பிடுகிறார். (kant 17854 : 398). இவ்வாறான கருணை மற்றும் இரக்கத்தை வெளிப்படுத்தும்போது அவர்களுக்கு தாம் இவ்வாறு செய்வது தமது கடமை என்ற உணர்வே ஏற்படுவதாகவும் இதன் மூலம் மகிழ்ச்சி ஏற்படுவதாகவும் காண்ட குறிப்பிடுகிறார். காண்ட் கூறுவது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை உணர்வுடன் பற்றற்ற முறையில் பிறர் நலவாத செயல் களை செய்வது உயர்ந்ததாயினும் அவ்வாறு செய்வது மிகவும் கடினமானதாகும். தூய்மையான பிறர் நலம் சார்ந்த செயல்களை காண்பது மிகவும் அரிதான விடயம் என ஒழுக்க மெய்யியலாளர்கள் கருதுகின்றனர்.

மனிதர்களில் பிறர்நலன் சார்ந்த செயல்கள் அவனது உணர்வு களையும் உறவுகளையும் அடிப்படையாக கொண்டு இடம்பெறுவதை ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக:- ஒரு பணக்காரனின் மகன் எய்ட்ஸ் நோயால் இறந்தான் என வைத்துக் கொள்வோம் அந்த பணக்காரர் தன்னிடமுள்ள செல்வம் அனைத்தையும் செலவழித்தும் தனது மகனை காப்பாற்ற முடியாமல் போனது இதன் காரணமாக தனது மகனை போன்ற ஏனைய எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உதவுவதற்காக தனது செல்வத்தை செலவிட்டு வருதல்.

சுயநலமற்ற பரந்த மனப்பான்மையுடன் பிறர்நலம் சார்ந்த செயல் களை உயர்ந்த பிறர்நல செயல்கள் என ஒழுக்கவியலாளர்கள் மதிப்பீடு செய்கின்றனர். எடுத்துக்காட்டாக : தனது மகளை பணைய கைதியாக கடத்தி வைத்திருக்கும் ஒரு கடத்தல் கும்பலின் தலைவனின் மிரட்டலுக்கு - 'நீ என்னை பற்றிய தகவல்களை அரசாங்கத்துக்கு வெளியிட்டால் நான் உனது மகளை கொன்றுவிடுவேன்' - அஞ்சாது தனது சொந்த மகளின் வாழ்வினை தியாகம் செய்து தனது கடமையினை செய்யும் உளவுத்துறை பொலிஸ் அதிகாரி கடமை உணர்வினால் உந்தப்பட்டு தனது சொந்த உணர்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்காது செயற்படும்போது இத்தகைய செயல்களை உயர்ந்ததாக பிறர்நலவாத கொள்கையினர் கருதுகின்றனர். முழுமையாக பிறர் நலத்தை அடிப்படையாக கொண்டு செயற்படும் செயல்களே பிறர்நலவாத செயல்கள். இச்செயல்களில் சுயநல நோக்கம் இருக்கக்கூடாது. ஆனால் எது பிறர்நலம்? என தீர்மானிப்பதில் சிக்கல்கள் இருப்பதை ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பயன்பாட்டுவாதிகள் கருதுவது போல் பொது விதிகளை பயன்படுத்தி ஒரு செயல் பெரும்பான்மையான உயிரினங்களுக்கு அதிக நன்மையினையும் குறைந்தளவு தீமையினையும் கொண்டுவருமானால் அச்செயலை பிறர்நல வாதத்திற்குள் உள்ளடக்க முடியும். எவ்வாறாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலமற்ற பொதுநல நோக்கினை உடைய எல்லா செயல்களையும் பிறர்நலவாத செயல்களாக கருதலாம்.

**பிரயோக ஒழுக்கவியல் (Applied Ethics)**

பிரயோக ஒழுக்கவியல் ஒழுக்கவியலின் மிக முக்கிய ஒரு பிரிவாகும். இது ஒழுக்கவியல் கொள்கைகளையும் சிந்தனைகளையும் நாளாந்த வாழ்க்கைச் சூழலில் பிரயோகிக்கின்றது. பிரயோக ஒழுக்கவியல் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது "பிரயோக ஒழுக்கவியல் என்பது ஒழுக்கவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த ஓர் மெய்யியல் விசாரணை முறையாகும். மனிதனின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைந்த நிலையில் ஒழுக்க தீர்ப்புக்களை தீர்மானிப்பதற்காக குறிப்பிடத்தக்க சூழ்நிலையில் ஒழுக்கவியல் கோட்பாடுகள் பிரயோகப்படுத்தி பரிசீலனை செய்து கொள்ளுதலே பிரயோக ஒழுக்கவியல் என்றானது" (கனகசபை சிவானந்தமூர்த்தி 2012 :8).

எமது வாழ்க்கை பல்வேறு விடயங்களுடனும் நிகழ்வுகளுடனும் தொடர்புபடுவதாக உள்ளது. மனித வாழ்க்கை உயிருள்ள பொருட்களில் இருந்து உயிரற்ற பொருட்கள் வரை வியாபித்துள்ளது. மனிதர்கள் வெவ்வேறு சமூகங்களாக உலகில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் அதிகளவு ஆசைகளுடன் வாழ்கின்றனர்.இவ்வாறான ஆசைகளை நிறைவேற்ற முற்படும்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மக்கள் சமூகமாகவும் நாடுகளாகவும் வாழ்கின்ற போது பல விதமான ஒழுக்க விதிகளை பின்பற்றுகின்றனர். சட்டங்களும் ஒழுக்க விதிகளை பேசுகின்றன. சமயங்களும் ஒழுக்க விதிகளை பேசுகின்றன. சமூக பொருளாதார நிறுவனங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமக்குள் ஒழுக்க கோவைகளை உருவாக்கி அவற்றின் உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டும் என வற்புறுத்தி வருவதுடன் அவற்றை பின்பற்றாவிட்டால் பல்வேறு விதமான தண்டனைகளையும் இந்நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. மனித சமூகத்தில் பல்வேறு துறைசார்ந்த தொழில்கள் காணப்படுகின்றன. இத்துறைகளோடு தொடர்புபட்ட வகையில் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இத்துறைகளையும் அவற்றில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளையும் ஒழுக்க மெய்யியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். உண்மையில் இத்துறைகள் (தொழில்கள்) எல்லையற்றவை ஆயினும் சில முக்கிய துறைகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருவன காணப்படுகின்றன:- மருத்துவ ஒழுக்கவியல், வணிக ஒழுக்கவியல், ஊடக ஒழுக்கவியல், சூழலியல் ஒழுக்கவியல், இராணுவ ஒழுக்கவியல், அரசியல் ஒழுக்கவியல், பொதுத்துறை ஒழுக்கவியல், இயந்திர ஒழுக்கவியல், இன்னும் பல.பிரயோக ஒழுக்கவியலில் பின்வரும் பிரச்சினைகள் முக்கிய ஒழுக்கப் பிரச்சினைகளாக காணப்படுகின்றன.

1. கருக்கலைப்பு சரியானதா? பிழையானதா?

2. கருணைக்கொலை சரியானதா? பிழையானதா?

3. உண்மையில் மனித உரிமைகள் இருக்கின்றதா?

4. விலங்குகளுக்கு உரிமை உண்டா?

5. ஒரு தனி நபர் சர்வதேச மற்றும் தேசிய அரசியல் சூழலில் தனது சுய நிர்ணய உரிமையினை கொண்டுள்ளாரா?

தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவுரீதியாகவும் மனிதாபிமானரீதியாகவும் பல்வேறு துறைகளில் காணப்படுகின்ற மிகவும் முக்கியத்துவம் உடைய பிரச்சினைகளை ஆராய்வதாக பிரயோக ஒழுக்கவியல் காணப்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகள் தொடர்பான வாதங்கள் எதிர் வாதங்கள் ஆதாரங்கள் என்பவற்றைக்கொண்ட தொகுதியாக பிரயோக ஒழுக்கவியல் என்ற பெரும்பரப்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் (Environmental Ethics)**

மெய்யியலின் ஒரு முக்கிய பகுதியாக விளங்கும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் மனிதன், சூழல், விலங்குகள் என்பவற்றுக்கு இடையிலான ஒழுக்க ரீதியான உறவுகளை விரிவாக ஆராயும் துறையாக காணப்படுகின்றது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியலின் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன:-

1. பாரம்பரிய மேலைத்தேய சிந்தனையில் காணப்படும் மனிதமையவாதத்திற்கு (anthropocentrism) எதிரான சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்களும் விமர்சனங்களும்.

2. சுற்றுச்சூழல் ஒழுக்கவியலின் ஆரம்ப கால வளர்ச்சி

3. அரசியலுக்கும் சுற்றுச் சூழல் ஒழுக்கவியலின் பிரிவுகளாகிய ஆழ இயற்கைச் சூழலியல் (Deep Ecology), இயற்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலியல் பெண்ணியம் (Eco Feminism) அனைத்து உயிர்வாதம் (animism) மற்றும் சமூக இயற்கைச் சூழலியல் (Social Ecology) என்ற துறைகளுக்கு இடையிலான தொடர்புகளை ஆராய்தல்.

4. பாரம்பரிய ஒழுக்கவியல் கொள்கைகளை சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் பிரச்சினைகளுக்கு பிரயோகித்தல்.
5. உயிர் பன்முகத்தன்மையினை (biodiversity) ஒழுக்கவியலின் முக்கிய இலக்காக கருதி பாதுகாத்தல்.
6. காடு, இயற்கைச் சூழலின் வளர்ச்சி மற்றும் வறுமை தொடர்பான அரசியல் பற்றிய சில சிந்தனையாளர்களின் கருத்துக்களை ஆராய்தல்.
7. பேண்தகு அபிவிருத்தியும் காலநிலை மாற்றமும்.
8. இயற்கைச்சூழல் தொடர்பான எதிர்கால எதிர்வுகூறல்கள்

### யூத கிறிஸ்தவ சிந்தனைகளும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலும்

இயற்கை மற்றும் விலங்குகள் தொடர்பான யூத கிறிஸ்தவ சிந்தனைகள் சுற்றுச் சூழல் ஒழுக்கவியலுக்கு எதிராக இருப்பதை பல சுற்றுச்சூழல் ஒழுக்க மெய்யியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கடவுள் மனிதனுக்காகவே இயற்கை பொருட்களையும் விலங்கு களையும் படைத்தார் என்ற கருத்து மேலைத்தேச சிந்தனை மரபில் ஊடுறுவி இருப்பதற்கு யூத மற்றும் கிறிஸ்தவ மதங்கள் காரணமாக இருக்கின்றன. தனது சாயலில் கடவுள் மனிதனை படைத்தார் என்ற பைபிளின் வார்த்தைகள் மனித மைய வாதத்தினை உறுதிப்படுத்துவதாகவும் சூழலியல் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையும் காண முடிகின்றது.

'மனிதனுக்காகவே உலகம்' என்ற கருத்து இயற்கை வளங்களை அளவுக்கதிகமாக மனிதன் பயன்படுத்துவதற்கும் இயற்கை மீதும் ஏனைய உயிர்களின் மீதும் தனது மேலாதிக்கத்தை செலுத்து வதற்கும் முக்கிய காரணமாக இருப்பதை பல அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மத்திய காலத்தை சேர்ந்த கிறிஸ்தவ ஆட்சியாளர்களும் மெய்யியலாளர்களும் இயற்கை தொடர்பாக யூத கிறிஸ்தவ கருத்துக்களையே பின்பற்றினர். இத்தகைய கருத்துக்கள் மனிதமையவாதத்தினை அடிப்டையாக கொண்டு இருந்தது. புனித பைபிளில் ஆதி ஆகமத்தில் காணப்படும் கருத்துக்கள் சுற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் ஒழுக்கவியலுக்கு பெரும் அச்சுறுத்தலாக நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

புனிதர் அக்குவினாஸ் "விலங்குகள் மனித பாவனைகளுக்காக கட்டளை இடப்படுகின்றன." எனக் குறிப்பிடுவது விலங்குகளின் உரிமைகளை கேள்விக்குறியாகின்றது. யூத கிறிஸ்தவர்களின் படைப்பு பற்றிய கருத்தானது இயற்கையும் மனிதனையும் பிரித்துவிட்டது என வைட் வாதிடுகிறார். இயற்கை மற்றும் விலங்குகள் பற்றிய யூத மற்றும் கிறிஸ்தவர்கள் கருத்து நிலைகளையே விஞ்ஞானமும் தொழினுட்பமும் பயன்படுத்தி வருகின்றன. என வைட் வாதிடுவது இது குறிப்பிடத்தக்கது. (white1967:1207) இயற்கை மற்றும் விலங்குகள் பற்றிய யூத கிறிஸ்தவ சிந்தனைகள் பெரும்பாலும் சூழலுக்கு எதிரானதாக காணப்பட்டாலும் மனிதன் இயற்கையின் காவலன் என்ற கருத்தும் யூத கிறிஸ்தவ சிந்தனைகளில் காணப்படுவதாக அவர் வாதிடுகின்றார்.

### கிரேக்க மற்றும் நவீன கால மெய்யியல் சிந்தனைகளும் சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியலும்

மனிதன் தனது இலக்குகளை அடைந்துகொள்வதற்குரிய கருவிகளாக இயற்கையும் விலங்குகளும் காணப்படுகின்றன என்ற கருத்தினை கிரேக்க சிந்தனையாளர்களும் கொண்டிருந்தனர். இது தொடர்பில் விலங்குகள் பற்றிய அரிஸ்டோடின் கருத்துக்கள் முக்கியமானது. "இயற்கை எல்லா பொருட்களையும் மனிதர்களுக்காகவே படைத்துள்ளது." (அரசியல் 1.8) என்ற அரிஸ்டோட்டிலின் கூற்று மிகவும் வெளிப்படையாகவே மனிதமையவாதத்தினை எடுத்துரைக்கின்றது.

அரசியல் மற்றும் சமூக உரிமைகளை பற்றி அதிகம் பேசிய நவீன மெய்யியலாளராகிய காண்டின் விலங்குகள் பற்றிய சிந்தனைகள் மனித மையவாதத்தினை கொண்டிருப்பதை காண முடிகின்றது. ஒரு நாயின் மீது கொடுமைகளை செய்யும் ஒருவரின் மனப்பான்மை மனிதர்களின் மீது கொடுமை செய்யும் மனப்பான்மைக்கு அடிப்படையாக இருக்கிறது என்றும் விலங்குகளுக்கு கொடுமை செய்தால் அது மனிதனை பாதிக்கும் என்பதன் அடிப்படையில் விலங்குகளுக்கு கொடுமை செய்யக்கூடாது என காண்ட் குறிப்பிடுகிறார்.இயற்கை நலன்கள் பற்றியோ அல்லது விலங்குகள் நலன் பற்றியோ மனிதன் சில வேளைகளில் சிந்திப்பது தனது சுயநலன் நோக்கிலேயாகும். அதாவது இயற்கை வளங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளும் சரியாக பாதுகாக்கபடாவிட்டால் அது எதிர்கால சந்ததியினருக்கு ஆபத்தை விளைவிக்கும் போன்ற சூழல் பற்றிய சிந்தனைகள் மனிதனில் எழுகின்றன. இத்தகைய சிந்தனைகள் கூட மனிதமையவாதத்தினை அடிப்படையாகக் கொண்டவை என்பது வெளிப்படை

**சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியலின் தோற்றமும் வளர்ச்சியும்**

1949களில் நவீன சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியலில் அடிப்படையினை ஆல்டோ லியோ போல்டின் (Aldo Leo Pold) நில ஒழுக்கம் தொடர்பான ஒரு மணல் பிரதேச இயற்கைச் சூழல் தகவல் புத்தகம் (A Sand County Almanac) என்ற படைப்பு முக்கியமானது லியோ போல்டின் சிந்தனைகளில் சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியலில் வேர்களை நாம் காண முடிகிறது.

"ஒரு நிலப்பரப்பு இயற்கைச் சூழலியல் (ecology) தொடர்பில் மிகவும் முக்கியமான எண்ணக்கருவாகும். இந்த நிலப்பரப்பினை நேசித்தலும் மதித்தலும் ஒழுக்கத்தின் விரிவாக்கமாகும்" (லியோ போல்ட் 1949: vii-ix).

"இயற்கை சூழலின் அழகு, நிலையான தன்மை மற்றும் ஒருங்கிணைந்த தன்மை என்பவற்றை பாதுகாத்தலே சரியான செயல். இவ்வாறான இயற்கை சூழலை பாதுகாக்காதபோது அது தவறான செயலாக மாறுகிறது." என லியோ போல்ட் குறிப்பிடுகிறார் (லியோ போல்ட் 1949:224 – 225).

லியோ போல்டின் நிலப்பரப்பு ஒழுக்கம் தொடர்பான பணிகளை தொடர்ந்தவராக அவுஸ்திரேலிய மெய்யியலாளாரான ரிச்சட் ரூட்லே (Richard Routley) இருக்கிறார். இவர் மனிதர்கள் இயற்கையினையும் விலங்குகளையும் தன்னளவில் மதிப்புடைய பொருட்களாக கருதமாட்டார்கள் என்றும் அவர்கள் இயற்கை மற்றும் விலங்குகளின் அழிவிற்கும் பின்னர் தமது அழிவிற்கும் காரணமாக இருப்பார்கள் என்றும் கூறுகிறார்.

லியோ போல்டினை தொடர்ந்து ரெச்சல் கார்சனின் ஒரு மௌனமான வசந்தம் (Rachel Carson's silent spring 1963) சுற்றுப்புற சூழல் ஒழுக்கவியலை பொறுத்தவரையில் முக்கியமான படைப்பாகும். பூச்சி நாசினிகளான டி.டி.ரி. (D.D.T.), அல்டிரின் (Aldrin) மற்றும் (Dieldrin) டெயில்ரின் எவ்வாறு நமது உணவுகளில் கலந்து காணப்படுகிறது என்றும், எவ்வாறு இலாப நோக்கம் கருதிய விவசாய நடவடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலையும் மனிதர்களின் ஆரோக்கியத்தினையும் பாதிக்கின்றது என எடுத்துக்காட்ட முயல்கிறது.

சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியல் ஒரு கல்வித்துறையாக 1970களில் வளர்ச்சி பெறுவதை நாம் காண முடிகிறது. சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியல் இரண்டு முக்கியமான பணிகளை வரலாற்றில் ஆற்றியுள்ளது.

1. ஏனைய உயிர்களை காட்டிலும் மனிதன் ஒழுக்கத்தில் உயர்வானவனாக இருக்கின்றான் என்ற எடுகோளை கேள்விக்குறியாக்குகிறது.
2. விலங்குகளும் இயற்கையும் தன்னளவு மதிப்பீட்டினை (intrinsic value) பெற்றுத்தரக்கூடிய வாதங்களை முன்வைத்தமை

சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியல் சார்ந்த துறைகளில் பணிபுரிவோர் சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியல் சார்ந்த நோக்கினை கொண்ட மனிதமையவாதத்திற்கு எதிரான ஒரு எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியுள்ளனர். இதனை அறிவொளி மனிதமையவாதம் (Enlightened Anthropocentrism) என அழைக்கின்றனர். உயர்ந்த மனிதர்களாக நாம் இயற்கை மற்றும் விலங்குகளை பாதுகாக்கும் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்க முடியும் என இந்தக் கொள்கை நம்புகிறது. மனித மைய வாதத்திற்கு எதிரான மனபாங்கினையும் செயல்களையும் மனிதர்கள் செய்ய வேண்டும் என இது வற்புறுத்துகிறது.

இயற்கைச் சூழலையும் விலங்குகளையும் நாம் பாதுகாக்க வேண்டுமாயின் நாம் தனிநபர் நிலை தேசிய நிலை மற்றும் சர்வதேச நிலை என்ற தளங்களில் எமது மதிப்பீடுகளிலும் நோக்கங்களிலும் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் வற்புறுத்துகின்றனர். இயற்கைச் சூழல் மற்றும் விலங்குகள் தொடர்பில் நாம் பாரம்பரியமாக கொண்டிருக்கும் மதிப்பீடுகளிலும் கொள்கைகளிலும் கட்டாய மாற்றம் தேவை என இவர்கள் வற்புறுத்துகின்றனர். இத்தகைய ஒரு சூழ்நிலை சுற்றுச்சூழல்ஒழுக்கவியல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகில் உள்ள ஏனைய உயிரினங்கள் மனிதர்களை போல வாழ்வதற்கான உரிமைகளை கொண்டுள்ளன. அத்தகைய உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு உயிரினங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இருந்து அழிக்கப்படும்போது உயிர் மரபியல் தொடர்பான சாத்தியப்பாடுகளையும் அறிவினையும் மனித குலம் இழக்கின்றது என ஹோம்ஸ் ரோல்ஸ்டன் (Holmes Rolston III) குறிப்பிடுகிறார். உலகில் உள்ள ஒவ்வொரு உயிர்களும் கடவுளின் பகுதி என்பதை நாம் நினைவில் கொண்டு அவற்றை அழிவில் இருந்து பாதுகாக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றார். அமெரிக்க இறையியலாளரும் சுற்றுச் சூழல் மெய்யியலாளருமான இவர் உயிரினங்களை பாதுகாத்தல் மனிதனின் ஒழுக்க கடமை என வாதிடுவது குறிப்பிடத்தக்கது. மேலும் பொருளாதார நோக்கத்திற்காகவும் இலாபத்திற்காகவும் உயிரினங்களை அழிப்பதை இவர் வன்மையாக கண்டிக்கிறார்.

சட்டத்தை பேணுபவர்கள் மனிதர்கள் எவ்வாறு சட்டத் துறைசார் மற்றும் ஒழுக்கத் துறைகளில் பாதுகாப்பினை கொண்டிருக்கின்றனரோ அவ்வாறே இயற்கையில் உள்ள மரங்கள், மலைகள், காடுகள், ஒழுக்கத்துறை மட்டும் சட்டத்துறையின் பாதுகாப்பினை கொண்டிருக்க வேண்டும் என கிறிடோபர்ஸ்டோன் (Christopherstone) வாதிடுகிறார். எடுத்துக்காட்டாக:-ஐக்கிய அமெரிக்காவில் சியரா கிலப் (Sierra Club) இயற்கை வளங்களை பாதுகாப்பதில் மிகத் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. மரங்கள், மலைகள் மற்றும் சில விலங்குகளுக்கும் சட்ட பாதுகாப்பு கோரப்பட்டமை ஐக்கிய அமெரிக்காவினால் 70 களில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1970 களின் பின்னர் சட்ட ரீதியான அரசியல் ரீதியான ஒழுக்க ரீதியான விவாதங்கள் சுற்றுப்புறச் சூழல் தொடர்பாக சர்வதேச அளவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1980களில் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான இயக்கங்கள் உருவாக ஆரம்பித்தன. இத்தகைய இயக்கங்களின் நோக்கில் முதலாளித்துவ சிந்தனைகளும் செயற்பாடுகளும் சுற்றுச் சூழலுக்கு பெரும் அழிவினை ஏற்படுத்துவதாக கருதப்பட்டது.

### சுற்றுப்புறச் சூழலும் ஆழ இயற்கைச் சூழலியலும்
### (Environmental Ethics and Deep Ecology)

சுற்றுப்புறச் சூழல் ஒழுக்கவியல் வரலாற்றில் ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனையானது மிகவும் முக்கியத்துவம் உடைய சிந்தனையாகும். ஸ்கண்டிநேவிய சுற்றுச்சூழலியல் சிந்தனையாளர்களாகிய ஆர்ன் நாஸ் (Arne nass) சிக்மண்ட் கவ்லோவ் மற்றும் நில்ஸ் பார்லண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Sigmund Kavaly and Nils faarlund) ஆகியோரினால் உருவாக்கப்பட்ட ஒரு சிந்தனை முறைமையாக காணப்படுகிறது. இயற்கையில் உள்ள உயிர் உள்ள பொருட்களையும் உயிரற்ற பொருட்களையும் தனது ஆத்மாவாக கருதும் உளப்பாங்கினை இந்த மெய்யியல் சிந்தனை கொண்டுள்ளது.

இமயமலை அடிவாரத்தில் வாழ்ந்துவரும் ஒரு இனக் குழுவான 'சேர்பா' (Sherpa) மலை உள்ளிட்ட இயற்கை பொருட்களை கடவுளாக மதிக்கும் உளப்பாங்கினை ஆழ இயற்கை சூழலியல் சிந்தனை கொண்டுள்ளது. இயற்கையினையும் மனிதனையும் பிரிக்கக்கூடாது என்றும் மனிதன் இயற்கை பொருட்களில் தன்னை காண வேண்டும் எனவும் இது வற்புறுத்துகிறது. எல்லா உயிர்களும் மனிதனுக்கு சமமானவையே (biospheric egalitarianism) என்ற கருத்தினை இது வலியுறுத்துகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் இயற்கையில் இருந்து வேறுபட்டவன் என்ற கருத்தினை இந்த சிந்தனை முறை மறுக்கின்றது. இத்தகைய சிந்தனை சுயநலத்தை வளர்ப்பதாகவும் இயற்கையையும் மனிதனையும் பாதிப்பதாகவும் கூறுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் இயற்கையுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளான் என்பதை இந்த சிந்தனை எடுத்துக் காட்ட முயல்கிறது. ஒருவகை வலையமைப்பாக இதனை இச்சிந்தனையாளர்கள் கருதுகின்றார். இன்னொரு வகையில் கூறினால், இவர்கள் சார்பு நிலைபட்ட இருப்புநிலையினை (relational existence) மனிதர்களுக்கு வற்புறுத்துகின்றனர். இந்த இருப்புநிலை தனிநபர்வாதத்திற்கு எதிரானதாகும்.இந்த இருப்புநிலை உயர்ந்த இருப்பு நிலையாக இருப்பதுடன் இத்தகைய இருப்பு நிலை மனிதர்களுக்கும் இயற்கைக்கும் மதிப்பளிக்கும் பாதுகாக்கும் நிலை என எடுத்துக்காட்ட முயற்சிக்கின்றது. எவ்வாறு இந்திய மெய்யியலில் அத்வைதம் ஒவ்வொரு பொருளிலும் கடவுளை காண முயல்கிறதோ அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் இயற்கை பொருட்களில் தனது ஆத்மாவை காண வேண்டும் என இக்கொள்கை வற்புறுத்துகிறது. இயற்கையினை ஓர் மனிதன் தன்னைபோல் நேசிக்க வேண்டும் என்பதே இந்த சிந்தனை முறைமையின் பிரதான நோக்கமாகும். தன்னை உணர்தல் என்பது தான் இயற்கை என்று உணர்தல் என இந்த சிந்தனை முறைமை கூறுகிறது. ஒரு தனி நபரின் நலனை காட்டிலும் சுற்றுச்சூழலில் காணப்படும் உயிர்களின் நலன் முதன்மையானதாக இருக்க வேண்டும் என்ற லியோ போடினின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களுடன் இணைந்து செல்வதாக நாஸின் கருத்துக்கள் காணப்படுவதை பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனை எல்லா உயிரினங்களின் நலன் மனித இனத்தின் நலனை காட்டிலும் உயர்வானது என்பதன் அடிப்படையில் பயன்பாட்டுவாத சிந்தனையை வெளிப்படுத்துகிறது என ஒழுக்கவியல் அறிஞர்கள் கூறுகின்றனர் (witoszek 1997). இக்கொள்கையின் நடைமுறை சாத்தியம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனை முறைமை பல்வேறு இயக்கங்களையும் குழுக்களையும் சுற்றுச் சூழல் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட தூண்டியது. நாஸின் சூழல் பற்றிய ஞானமானது மனித சுயநலம் மற்றும் இயற்கை மீதான சுரண்டல் என்பவற்றுக்கு எதிரானதாக இருந்தது. இந்த சிந்தனை முறைமை ஐக்கிய அமெரிக்காவிலும் அவுஸ்ரேலியாவிலும் செல்வாக்கு பெற்று விளங்கியது.

விஞ்ஞானத்தின் குவான்டம் கொள்கை (Quantum Theory) உடனும் இக்கொள்கை இணைந்து பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குவான்டம் கொள்கைபடி பார்ப்பவர் பார்க்கப்படும் பொருள் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு இல்லாமல் போகின்றது. அதேபோல் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான வேறு பாட்டினை இல்லாமல் செய்வதே இக்கொள்கையின் நோக்கமாகும். பரந்த ஆன்மா பற்றிய இக்கொள்கையானது காலனித்துவத்தின் மறைக்கப்பட்ட வடிவம் எனவும் உண்மையில் 'இயற்கை' உயர் வானதாக மதிக்கப்பட போவதில்லை என பெண்ணிய விமர்சன வியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (Plumwood 1993 & Warren 1999). ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனை முறைமை மூன்றாம் மண்டல நாடுகளின் நலன்களுக்கு எதிரானதாக இருப்பதாக இராமச்சந்திரகுகா வாதிடுகிறார். சில விமர்சனவியலாளர்கள் ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனை முறைமையினை கற்பனா வாத சிந்தனைகள் என விமர்சிக்கின்றனர் (Anker & Witoszek 1998).

### சுற்றுச் சூழல் ஒழுக்கவியலும் பெண்ணிய சிந்தனைகளும்

பெண்ணியச் சிந்தனையாளர்கள் எவ்வாறு ஆண்மையவாத சமூகம் பெண்களை நோக்குகின்றதோ எவ்வாறு அடிமையாக்கி போகப் பொருட்களாக கருதுகின்ற நோக்கினை கொண்டிருக்கின்றதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே மனித சிந்தனைகள் (ஆண் மைய வாதச் சிந்தனை) இயற்கையினை அடக்கி ஆள முயல்கின்றது என செய்லா கொலின்ஙஸ் சுட்டிக் காட்டுகின்றார் (Sheila Collins 1974). இயற்கைக்கும் பெண்களுக்கும் எதிரான சிந்தனை முறையாக ஆணாதிக்க சிந்தனை முறை நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பெண்களை அடிமையாக்குதலின் தொடர்ச்சி இயற்கையினை சுரண்டுதல் என பெண்ணிய சிந்தனையாளர்கள் வாதிடுகின்றனர்.

மனிதன் இரட்டை சிந்தனை முறைகளிலேயே செயற்படுகின்றான். ஆண் பெண்ணை அடக்குகின்றான் சுரண்டுகின்றான். அதேபோல் ஆண்மையவாத சிந்தனையின் அடிப்படையில் இயற்கையும் விலங்குகளும் சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் உள்ளாகினற்ன. இது ஒரே வகை கட்டமைப்பாகும் என பெண்ணிலைவாதிகளும் சுற்றுச் சூழல்வாதிகளும் கருதுகின்றனர். ஆதிக்க தர்க்கத்தின்படி (Logic of domination) ஆண் ஆளுகின்றான் பெண் ஆளப்படுகின்றாள் மனிதன் ஆள்கின்றான் இயற்கை ஆளப்படுகின்றது. இத்தகைய தர்க்கம் இயற்கைக்கும் பெண்ணிற்கும் எதிரானதாக உள்ளது.

சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் சிந்தனைகளுக்கு புதிய பலத்தினை கொடுப்பதாக பெண்ணிய சிந்தனைகள் காணப்படுகினற்ன. இயற்கையினையும் பெண்களையும் ஒடுக்குகின்ற சுரண்டுகின்ற மனித உளவியல் கட்டமைப்பினை பெண்ணியலாளர்கள் ஆய்வு செய்கின்றனர். இயற்கைச் சூழலியல் பெண்ணிய வாதம் (Eco feminism) என்ற பதமானது முதன் முதலில் பிரன்ஸ்வாஸ் டி எபோன் (francoise d Eaubonne 1974) என்பவரினால் உருவாக்கப்பட்டது. இயற்கைச் சூழலியல் பெண்ணிய வாதம் என்ற துறையானது பெண் ணியல் தொடர்பான பகுப்பாய்வின் அடிப்படையில் இயற்கையினை ஆய்வு செய்கிறது.

**மாக்ஸிசம், விஞ்ஞானம், இயற்கை**

மாக்ஸிசமும் விஞ்ஞானமும் இயற்கையினை மனித ஆதிக்கத்துக்கு உட்பட்ட உழைப்புக்கு உட்பட்ட ஒரு பண்டமாக கருதின. இதன் காரணமாக இயற்கை மதிக்கப்படாமல் கருவி சார்ந்த நோக்கில் விஞ்ஞானத்தினாலும் மாக்ஸிசத்தினாலும் அணுகப்பட்டது. விமர்சனக் கோட்பாட்டு மெய்யியலாளர்கள் இத்தகைய நோக்கினை தெளிவாக எடுத்துரைக்கின்றனர். விஞ்ஞானத்திலும் மாக் ஸிசத்திலும் நேர்காட்சிவாத நோக்கானது இயற்கையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருக்குரிய பொருள்களாக நோக்கும் நோக்கினை மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தியது. இயற்கையின் அற்புதமான புரியாத கட்டுப்படுத்த முடியாத பயங்கரமான விடயங்கள் மனித அறிவின்மூலம் தெளிவு படுத்தப்பட்டு இயற்கை மனிதனுக்கு அடிமையாக்கப்பட்ட கதையினை விமர்சனக் கோட்பாட்டு மெய்யியலாளர்கள் எடுத்துரைக்க முயல் கின்றனர். சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்களின் கருத்துப்படி மாக்ஸிசமும் விஞ்ஞானமும் இயற்கைக்கு பாதகமான நோக்கினையும் செயற்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன எனக் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக மாக்ஸிசமும் விஞ்ஞானமும் இயற்கை என்பது மனிதனால் நுகரப்படுவதற்கும் ஆதிக்கம் செய்யப்படுவதற்கும் ஒரு பொருள் என்ற கருத்து நிலையினை உருவாக்கி நடைமுறைப்படுத்து கின்றன. விமர்சனக் கோட்பாட்டாளர்களான அடோர்னோவும் ஹொர்கைமரும் இயற்கை மீது ஆதிக்கம் செய்தல் நுகர்வு செய்தல் என்ற நிலைகளை தாண்டி அழகியல் சார்ந்த, ஒழுக்கவியல் சார்ந்த மற்றும் மனிதத்துவம் சார்ந்த ஆக்கப்பூர்வமான மதிப்பீகளுடன் இயற்கை அணுகப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றனர். கலை மற்றும் அழகியல் சார்ந்த நோக்கினை இயற்கைமீது மனிதன் செலுத்த வேண்டும் என அடோர்னோ வற்புறுத்துகின்றார்.

அனைத்து உயிர்வாதம் (Animism) சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் அதிக முக்கியத்துவம் பெறும் கொள்கையாக உள்ளது. பழங்குடி மக்கள் எவ்வாறு உயிரற்ற பொருட்களையும் உயிருள்ளவை எனக் கருதினரோ அவ்வாறே புதிய அனைத்து உயிர்வாதக் கொள்கையினரும் (NewAnimists) இயற்கை பொருட்களையும் விலங்குகளையும் உயிருள்ளவை எனக் கருதி அவற்றை நாம் நோக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனர். விஞ்ஞானத்தில் இயற்கை பொருட்கள் புனிதத்தன்மையினையும் கடவுள்தன்மையினையும் இழந்தன. அதாவது விஞ்ஞானம் இயற்கையை நேசித்தல் மற்றும் மதித்தல் என்பதை எமக்கு கற்றுக்கொடுக்கவில்லை. இயற்கையினை ஒரு மனிதனுக்கு சேவை செய்யும் இயந்திரமாக விஞ்ஞான மனிதன் நோக்கினான். இத்தகைய மனப்பான்மை மாற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடும் புதிய அனைத்து உயிர்வாதக்கொள்கையினர் நாம் இயற்கை பொருட்கள் மற்றும் விலங்குகள் என அனைத்தையும் உயிருள்ளனவையாகவே கருத வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இவ்வாறான நோக்கு இயற்கையினை பாதுகாக்கும் என இவர்கள் நம்புகின்றனர். உலகம் எம்மில் ஒரு பகுதி என இக்கொள்கையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்துகின்றனர். இக்கொள்கையினரின் சிந்தனைகள் நாஸின் ஆழ இயற்கைச் சூழலியல் சிந்தனைகளோடு ஒத்துச் செல்வதை காண முடிகிறது.

பிரயா மெத்யூஸ் (Freya Mathews) ஒரு வகை உலக ஆன்மவாதத்தினை அறிமுகப்படுத்துகிறார். இதன்படி உலகில் பல உணர்வு நிலைகளும் உயிரினங்களும் காணப்பட்ட போதிலும் சடப் பொருட்களுக்கும் மனத்திற்கும் இடையே ஒரு ஒருமைத்தன்மை காணப்படுவதாகவும் உலகளாவிய ஆன்மாவுக்கும் ஏனைய ஆத்மாக்களுக்கும் இடையில் ஒரு தொடர்பாடல் இருப்பதாகவும் இவர் தனது கொள்கையினை முன்வைக்கின்றார். இக்கொள்கை ஒருவகை உலக ஆன்ம வாதமாக (Animism or Panpsychism) என கருதப்படக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது (Mathews 2003 : 45 – 60) இவர் தாவோயிச எண்ணக் கருவினால் யூவே (wuwei, Letting be) கவர்ந்திழுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மெத்யூஸ் தனது உலக ஆன்ம சிந்தனையானது முதலாளித்துவ கருத்துநிலைகளில் இருந்து எம்மை விடுவிப்பதாகவும் நுகர்வுசார்ந்த எமது ஆசைகளை குறைத்துவிடுவதாகவும் இரக்கத்துடனும் மதிப்பீடுகளுடனும் உலகம் வளர்ச்சியினை பெறுவதற்கு உதவுவதாக இருக்கும் என உறுதியாக நம்புகின்றார் (Mathews 2004).

### சமூக இயற்கை சூழலியலும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலும் (Social Ecology and Enviornmental Ethics)

சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் சிந்தனையில் புக்சின்னினால் (Bookchin) முன்வைக்கப்பட்ட சமூக இயற்கைச் சூழலியல் என்ற கருத்து மிகவும் முக்கியத்துவம் உடைய ஒன்றாகும். எமது சுற்றுச் சூழலை முதலாவது இயற்கையாகவும் அதிலிருந்து உருவாகும் எமது கலாச்சாரத்தினை இவர் இரண்டாவது இயற்கையாகவும் குறிப்பிடுகிறார். நாம் இயற்கையின் பரிணாம செயல்முறைக்கு உதவுதல், இயற்கையின் பல்லினத்தன்மை மற்றும் புரிந்துகொள்ள முடியாத தன்மை என்பவற்றை பேணுதல், இயற்கைக்கு எதிரான செயற்பாடான மாசடைதல் செயற்பாட்டினை குறைத்துக் கொள்ளுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என குறிப்பிடுகிறார். இயற்கையில் இருந்து நாம் சமூகத்தன்மை தொடர்பாடல் மற்றும் அறிவு என்பவற்றை பெற்றுள்ளோம். இவற்றை நாம் இயற்கைக்கு எதிராக உபயோகிக்க கூடாது என இவரது சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச் சூழலியல் வற்புறுத்துகிறது, அதாவது மனிதர்கள் கோடாலி பிடியாக இருக்கக்கூடாது என வற்புறுத்துகிறார். இப்போது இருக்கும் வாழ்க்கை முறையினை இயற்கையினை சுரண்டும் வாழ்க்கை முறையாக கருதும் இவர் இதற்கு மாற்றான ஒரு வாழ்க்கை முறையினை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அத்தகைய வாழ்க்கை முறையானது இயற்கையினை பாதுகாக்கும் உணர்வினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். சமூக இயற்கைச் சூழலியல் சிந்தனையாளராகிய மம்போர்ட் (Mum ford) இயந்திரத்தினை அடிப்படையாக கொண்ட முதலாளித்துவ தொழில்துறைகள் மனித சுதந்திரத்தினையும் ஆக்கத்திறனையும் கட்டுப்படுத்தி இயற்கைக்கு எதிராக செயற்படுகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

புக்சின்னும் மம்போர்ட்டும் சுற்றுச் சூழல் பிரச்சினைக்கு தீர்வாக உயிர்ப் பிரதேச வாதம் (bio regionalism) என்ற கருத்தினை முன்வைக்கின்றனர். இதன்படி, ஒரு சமூகம் தான் வாழ்கின்ற பிரதேசத்தில் இயற்கை வளங்களின் அடிப்படையில் தமது அபிவிருத்தியினை தீர்மானித்து கொள்வார்கள் என்றும் அப்பிரதேசத்தின் இயற்கை வளங்களின் அடிப்படையில் தமது சமூக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அப்பிரதேசத்தின் இயற்கை வளத்தின் எல்லைகளை தாண்டி அல்லது அவற்றை பாதிக்கும் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்றும் இத்தகைய வாழ்க்கை முறையானது அவர்களது சுற்றுச் சூழலை பேணுவதாகவும் பாதுகாப்பதாகவும் அமையும் எனவும் இவர்கள் வாதிடுகின்றனர். இத்தகைய வாழ்க்கை முறையானது பாதுகாப்பானதாகவும் திருப்தியுடையதாகவும் இருக்கும் என்று கூறுகின்றனர். மாறாக உலகளாவிய வாழ்க்கை முறையினை பின்பற்ற முயற்சிப்பார்களாயின் அது அவர்களின் சுற்றுச் சூழலுக்கு பெரிதும் தீமையினை விளைவிக்கும் என்பது இவர்களது கருத்தாகும். ஆயினும் பல்வேறு தளங்களில் உயிர் பிரதேச வாதம் பற்றிய சிந்தனைகளின் நடைமுறை சாத்தியம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாரம்பரிய ஒழுக்கவியல் கொள்கைகளும் சுற்றுச் சூழல் ஒழுக்கவியலும்**

பயன்பாட்டுவாத சிந்தனைகள் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலுடன் தொடர்புபட்டு காணப்படுவதை நாம் விலங்குரிமையினை பற்றி பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீட்டர் சிங்கரிடம் காண முடிகிறது. பயன்பாட்டு வாதத்தின்படி ஒரு செயல் தீமைகளை காட்டிலும் அதிக நன்மைகளை கொண்டுவர வேண்டும். அவ்வாறாயின் அது நல்ல செயல். ஆனால் இந்த சிந்தனை பாரம்பரியம் பயன்பாட்டு வாதத்தில் மனிதர்கள் நலனை மையமாக கொண்டிருந்தது. ஆனால் பீட்டர் சிங்கர் நல்ல செயல் என்பதை மனிதன் உள்ளிட்ட எல்லா உயிரினங்களையும் கருத்திற்கொண்டு பார்க்க வேண்டும் என குறிப்பிடுகிறார். சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் நலன் என்பதை உயிரற்ற இயற்கை பொருட்களுக்கும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக சுற்றுச் சூழல் சார்ந்த பயன்பாட்டுவாத சிந்தனை விமர்சிக்கப்படுகிறது. பயன்பாட்டு வாதத்தின்படி மனிதர்களுக்கு அதிகளவு நன்மையினை கொண்டுவரும் ஒரு செயலை நல்ல செயல் என்பதனால் மனிதர் களுக்கு நன்மையினை கொண்டுவரும் ஒரு செயல் விலங்குகளுக்கு தீமைகளை கொண்டு வந்தாலும் அதனை நல்ல செயல் என கருத இடமுண்டு. எடுத்துக்காட்டாக:- தந்தங்களுக்காக யானைகள் கொல்லப்பட்டால் அதன் மூலம் பெரும்பான்மையான மனிதர்களுக்கு நன்மை விளையும் அதேவேளை சிறுஅளவிலான யானைகளுக்கு தீமை ஏற்படும். இவ்வாறு பல்வேறு விமர்சனங்கள் பயன்பாட்டுவாத சிந்தனைகள் தொடர்பாக முன்வைக்கப்படுகிறது.

டொம் ரீகன் (Tom Regan 1980) என்பவர் ஒழுக்கவியலின் நோக்கமில்லாக் கொள்கையினை விலங்குரிமை தொடர்பாக பயன்படுத்துகிறார். இவர் கருத்துப்படி விலங்குகள் மனித நலனுக்கு கருவியாக பயன்படுத்தப்படாமல் தம்மளவில் மதிப்புடையனவாக மனிதனால் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடுகிறார். இன்னொரு வகையில் கூறினால், மனிதனை போல விலங்குகளுக்கு உரிமை உண்டு என்றும் அவற்றுக்கு துன்பங்கள் விளைவிக்காது பாதுகாத்தல் மனிதனின் கடமை என இவர் வாதிடுகிறார்.சில வகை பயன்களுக்காக மனிதன் விலங்குகளை கொடுமைப்படுத்தல், வதைத்தல், வேலை வாங்குதல் கூடாது எனக் குறிப்பிடுகிறார். மனிதனும் விலங்கும் உயிர் என்ற வகையில் சமமாக மதிக்கப்பட வேண்டும் நடத்தப்பட வேண்டும் என இவர் வாதிடுகிறார்.

போல் டெய்லரின் (Paul taylor) உயிர்மைய வாதம் (Bio Centrism) நுண்ணுயிர்களில் இருந்து மனிதன் வரை அவற்றின் பரிணாம வளர்ச்சிக்குரிய உரிமைகள் அவை கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறது. ஒவ்வொரு உயிரியும் இவ்வுலகில் ஒரு நோக்கத்தை கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகவே இவ்வுலகில் தோன்றியுள்ளது. இத்தகைய உயிர்களின் நோக்கத்தினை அழிக்கக்கூடிய உரிமையினை மனிதனுக்கு யாரும் வழங்கவில்லை.மனிதன் அவற்றில் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். மற்றும் பாதுகாக்க வேண்டும் என இவர் வற்புறுத்துகிறார். எம்மை விட தாழ்ந்த உயிரினங்களை பாதுகாத்தல் எமது கடமை ஆகும்.

ரொபின் அட்பீல்ட் (Robin Attfield 1987) என்பவர் அடுக்கமைவின் அடிப்படையில் உயர்ந்த உள்ளார்ந்த மதிப்புடைய உயிரிகள் தாழ்ந்த உள்ளர்ந்த மதிப்புடைய உயிரிகள் என்ற வகையீட்டினை உயிரினங்களில் மத்தியில் உருவாக்குகின்றார். இந்த அடிப்படையில் ஒரு எறும்பின் நலனைவிட ஒரு மனிதனில் நலன் அதிக முக்கியத்துவம் உடையதாக மாறுகிறது.

சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் உயிர்ச்சமூகம் (Biotic Community) என்ற வகையில் தனிநபர்களுக்கோ அல்லது தனி விலங்குகளுக்கோ முக்கியத்துவம் வழங்காது விலங்குச் சமூகம், மனித சமூகம் என்ற தனியன்களின் தொகுதிக்கே முக்கியத்துவம் வழங்குகின்றனர். இவ்வகையில் காண்டின் நோக்கமில்லாக் கொள்கையான பொதுமைபடுத்தப்பட்ட விதி மனித சமூகத்தின் நலன் அல்லது விலங்குகளின் நலன் அல்லது மொத்த உலகின் நலன் என்பதன் அடிப்படையில் சிந்திக்கப்படுகிறது. இவ்வகையில் பெரும்பாண்மை சமூகம் என்ற அடிப்படையில் நலன்கள் சிந்திக்கப்படுவது தனிப்பட்ட நபர்களையோ அல்லது விலங்குகளையோ பாதிப்பதாக டொம் ரீகன் தெரிவிக்கிறார் (Tom Regan 1983 : 362).

வார்விக் பொக்ஸ் (Warwick Fox) என்பவர் ஒருங்கிணைவுக் கொள்கை (Theory of responsive cohesion) என்ற கொள்கையினை முன்வைக்கிறார். இக்கொள்கை உலகளாவிய சுற்றுச்சூழல் முறைமைக்கு முன்னுரிமை வழங்குகின்றது. ஒரு செயற்பாட்டின் மூலம் சிறு அளவிலான மனிதர்கள் அல்லது விலங்குகள் பாதிக்கப்படுவதனை இக்கொள்கை அங்கீகரிக்கின்றது.குறைந்தளவு தீமைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆயினும் தனிப்பட்ட விலங்குகள் மற்றும் மனிதர்கள் என அனைத்தும் தன்னளவில் மதிப்புடையனவாக கருதப்பட வேண்டும் என எரிக் கார்ஸ் வாதிடுகிறார் (Eric Katz 1991 - 1997).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற ஒழுக்கவியல் கொள்கையின் (virtue theory) அடிப்படையில் மனித நல வாதம் முக்கியத்துவப்படுத்தப்பட்டாலும் சுற்றுச் சூழலை பாதுகாக்கின்ற நற்பண்புகளை ஒருவர் கொண்டிருக்க முடியும் என்றும் பின்பற்ற முடியும் என்றும் சுற்றுச் சூழல் ஒழுக்கவியல் வாதிகள் வாதிடுவது குறிப்பிடத்தக்கது (Barry 1999 & O'Neill 1992).

காட்டு வளங்களை பாதுகாத்தல், காட்டை நேசித்தல், காட்டினை அழகியல் உணர்வுடன் இரசித்தல் என்பன சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் முக்கியத்துவம் பெறுகின்ற விடயமாக உள்ளது. புதிய சுற்றுச் சூழலை உருவாக்குகின்றபோது அரசுகள் இயற்கைச் சூழலை ஒரு முக்கிய அங்கமாக கருதி அதற்கு மதிப்பினை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோள் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர்களினால் முன்வைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஒரு நகரத்தை அல்லது கிராமத்தை உருவாக்கும்போது இயற்கைச் சூழலின் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்க வேண்டும் என இவர்கள் வற்புறுத்துகின்றனர். காடுகளின் மதிப்பு மற்றும் அதனைப் பேணுதல் புறக்கணிக்கபட்டிருப்பதாகவும் சாதாரண மக்கள் காடுகளின் பெறுமதியினை சரியாக உணர்ந்து செயற்படவில்லை என்றும் சூழலியல் ஒழுக்கவியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். காட்டு வளங்களை அழகியல் ரீதியாக சென்று இரசிப்பதில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளை சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர்கள் இனங்கண்டு எடுத்துரைக்கின்றனர். மூன்றாம் மண்டல நாடுகள் அதிகளவு மக்களை உணவிட்டு பராமரிப்பதன் காரணமாகவும் அதிகளவு மக்களை கொண்டிருப்பதன் காரணமாகவும் இயற்கை வளங்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ரோல்ஸ்டன் போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர் (Rolston 1996) அதிக சனத்தொகை, இயற்கை வளங்களுக்கு ஆபத்தானது என்பது இவரது வாதமாகும். சாதாரண மக்களை காட்டிலும் செல்வந்தர்களினால் தான் அதிகளவு ஆபத்து இயற்கை சூழலுக்கு ஏற்படுவதாக சிலர் வாதிடுகின்றனர். (Martinez -Alier 2002).

மூன்றாம் மண்டல நாடுகளின் வறுமைக்கும் இயற்கை சூழலுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக காரசாரமான விவாதங்கள் சுற்றுப்புற ஒழுக்கவியல் அறிஞர்கள் மத்தியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மார்க் சகோவ் (Mark Sagoff) மக்கள் தங்களை மதிப்பீடுகளை பேணும் சிறந்த குடிமக்களாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர ஆடம்பரம் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வோர்களாக நடந்துகொள்ள கூடாது என வற்புறுத்துகின்றனர். நாம் இழப்பீடுகளையும் காப்புறுதிகளையும் பல்வேறு பொருட்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நமது வாழ்வில் கொண்டுள்ளோம். இதேபோல் இயற்கையின் இழப்பிற்கு சமமான இழப்பீடுகளை நாம் பண ரீதியாக ஒருபோதும் பெற முடியாது என்ற கருத்தினை சகோவ் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இயற்கை வளங்களின் இழப்பானது விலை மதிக்க முடியாதது ஈடு செய்ய முடியாதது.

### பேண்தகு அபிவிருத்தியும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலும் (Sustainable Development and Environmental Ethics)

சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் இலாப நோக்கம் கருதி செயற்படும் நிறுவனங்களை கொண்ட உலகில் பேண்தகு அபிவிருத்தி பற்றிய தமது கருத்துக்களை முன்வைக்கின்றனர். பேண்தகுஅபிவிருத்தி தொடர்பாக நோர்வே முன்னாள் பிரதமர் குரோ ஹார்லம் பிரண்ட் லேண்ட் (Gro Harlem brundt Land)இன் எமது "பொது எதிர்காலம்" என்ற அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழலுக்கும் அபிவிருத்திக்குமான உலக ஆணைக் குழுவிற்காக வெளியிடப்பட்டது இவ்வறிக்கை பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றது. இவ்வறிக்கை தொடர்பாக சுற்றுச்சூழல் ஒழுக்கவியலளர்களும் தமது கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் பேண்தகு அபிவிருத்தி பற்றிய இந்த அறிக்கையானது மனித மைய வாதத்தினை அடிப்படையாக கொண்டிருக்கிறது என்றும் இயற்கைப் பொருட்கள் மற்றும் விலங்குகள் முக்கியத்துவப்படுத்தப்படவில்லை என்றும் விமர்சிக்கின்றனர். தொழில்துறை உலகம் அதிகளவிற்கு இவ்வுலகின் சூழலியல் மூலதனத்தினை பயன்படுத்தியுள்ளது என்பதனை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. உச்சபட்ச பேண்தகு விளைவு என்பது சூழலியல் மூலதனத்தின் பல்வேறு சுரண்டல்களில் விளைவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என இந்த அறிக்கை கூறுகின்றது. சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் பேண்தகு தன்மை தொடர்பாக பிரண்ட் லேண்ட அறிக்கையுடன் ஜே.எஸ்.மில் மற்றும் தோமஸ் மல்தஸ் ஆகியோர்கள் கருத்துக்களை எடுத்து பகுப்பாய்வு செய்கின்றனர். பொருளாதார வளர்ச்சியை பெற வேண்டிய ஒரு நாடு சனத்தொகையினை கட்டுப்படுத்த வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தை மில் குறிப்பிடுகின்றார். அதிக சனத்தொகை; வறுமை, உயிர் பண்முகத் தன்மையின் இழப்பு, நல்ல குடிநீர் பற்றாக்குறை, அளவுக்கதிகமான நுகர்வு மற்றும் கால நிலை மாற்றம் என்ற முக்கிய பிரச்சினைகளுக்கு காரணமாவாதாக சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். உலக நாடுகள் சனத்தொகையினை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக மக்கள் பட்டினி சாவினை எதிர்நோக்குவர் என எர்லிச் வாதிடுகிறார் (Ehrlich 1968).

இத்தகைய சிந்தனையாளர்கள் மக்கள் தொகையினை ஒரு வெடிகுண்டாகவே பார்க்கின்றனர். மனிதர் சனத்தொகை அதிகரிப்பு காரணமாகவும் மனிதனின் நுகர்வு அதிகரிப்பு காரணமாகவும் பச்சை வீட்டு விளைவு காரணமாகவும் மிக மோசமான காலநிலை மாற்றம் ஏற்படும் என எர்லிச் எச்சரிக்கின்றார் (Ehrlich 2009: 66). வளங்களின் அருமைப்பாடும் மாசடைதலும் சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படு கின்றது. சனத்தொகையினை கட்டுப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகளை நாடுகளிடம் காண முடியவில்லை என ஹார்டின் குறிப்பிடுகிறார் (Hardin 1968).

சனத்தொகை எவ்வாறாக இருப்பினும் வரையறையுடைய வளங்களை அனைவருக்கும் சமமாக வழங்க வேண்டும் என மில்லின் கருத்தினை சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பிரண்ட் லேண்டின் அறிக்கையானது எல்லா மனிதர் களும் அவர்களது ஆரோக்கியம் மற்றும் அவர்களது நலன்கள் என்ப வற்றை பேணுவதற்காக சுற்றுச் சூழலை பயன்படுத்தும் அடிப்படை உரிமையினை கொண்டுள்ளனர் என்றும், ஒருவருக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை மற்றவர்களுக்கும் இருக்கின்றது என்றும் இதேபோல் பொறுப்புடைமை எல்லோருக்கும் இருக்கின்றது என்றும் ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகள் மற்றும் தமது குடிமக்கள்மீது பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர் என பல்வேறு விதமாக மனித உரிமைகளை எடுத்துக்கூறுவது குறிப்பிடத்தக்கது. சுற்றுச் சூழலை பாதுகாத்தல் என்பது மிக முக்கியவிடயமாக இந்த அறிக்கை கொண்டுள்ளது என்ற விடயத்தை பலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஆயினும் பேண்தகு அபிவிருத்தி என்ற கருத்தானது பொருளாதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியான எண்ணக்கருவே தவிர அது ஒழுக்க ரீதியான ஒரு எண்ணக்கரு அல்ல என சிலர் விமர்சிக்கின்றனர். (Beckrman 1994) கருவி ரீதியான மதிப்பீடுகள் அழகியல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த தீர்ப்புக்கள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிலான முரண்பாட்டினை அடிப்படையாக கொண்டதாக சுற்றுச் சூழல், அரசியல் மற்றும் நிர்வாக விதிகள் காணப்படுவதை மார்க் சகோவ் சுட்டிக்காட்ட தவறவில்லை (சகோவ் 2004 : 20).

மனிதமையவாதம் அல்லாத சுற்றுச்சூழல்சிந்தனையாளர்கள் பொருளியலின் மொழியானது இயற்கையினை கருவிரீதியாக நோக்குகின்றது என குற்றம் சாட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக:- பொருளியலறிஞர்கள் இயற்கையினை சொத்துக்கள், மூலதனம் மற்றும் வளங்கள் என்ற வகையில் நோக்குகின்றார். இத்தகைய நோக்கினை கருவி ரீதியானதும் இயற்கை வளங்களின் பாதுகாப்பிற்கும் முறையான பயன்பாட்டிற்கும் ஒரு அச்சுறுத்தலாகவும் சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் கருதுகின்றனர். இத்தகைய நோக்கானது இயற்கை சார்ந்த பொருட்களை மனித உழைப்பினை கலந்து உருவாக்கும் நுகர்வு பொருட்களாகவும் மனிதசொத்துரிமையினை உருவாக்குகின்ற ஒன்றாகவும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர்கள் விமர்சிக்கின்றனர் (Plumwood 1993).

பெரும்பான்மையான சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் இயற்கையும் இயற்கை சார்ந்த பொருட்களும் உள்ளார்ந்த மதிப்பீட்டை பெற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர். இவ்வகையில் 'பேண்தகுதன்மை' (Sustainability) என்ற எண்ணக்கரு இயற்கை தொடர்பாக கருவி ரீதியாக மதிப்பீட்டை மட்டுமல்லாமல் உள்ளார்ந்த மதிப்பீட்டை கொண்டிருக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இவர்கள் காட்டுவளங்களை பாதுகாப்பதில் ஒழுக்கம் சார்ந்த, கலாசாரம் சார்ந்த, அழகியல்சார்ந்த விஞ்ஞான ரீதியான காரணங்களை பிரண்ட்லேண்டின் அறிக்கை கொண்டிருப்பதை சுட்டிக்காட்டிய போதும், இந்த அறிக்கையானது இயற்கைச் சூழல் மற்றும் இயற்கை விலங்குகள் தொடர்பில் மனித மையவாததன்மை கொண்டதாகவும் கருவி ரீதியான மொழிப்பாவனையினை கொண்டதாகவும் பேண்தகுதன்மை என்ற எண்ணக்கரு இயற்கையுடன் தொடர்புபட்ட வகையில் குறுகிய ஒன்றாக இருப்பதாக இவர்கள் விமர்சிக்கின்றனர்.

இயற்கையினையும் விலங்குகளையும் பாதுகாக்கும் முகமாக பேண்தகு தன்மை எண்ணக்கரு தொடர்பாக இருவகை கொள்கையாளர்களை காண முடிகிறது.

1. மித வாத பேண்தகு கொள்கையாளர்கள்
   (Weak Sustainbility Theorists)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தீவிர பேண்தகு கொள்கையாளர்கள்
(Strong Sustainability Theorists)

இரு கொள்கையாளர்களும் பொருட்களின் உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பான பல கருத்துக்களை முன்வைக்கின்றனர். மிதவாத பேண்தகு கொள்கையினர் இயற்கை மூலப்பொருட்களுக்கு பதிலாக மனிதனால் உருவாக்கப்பட்ட மூலப்பொருட்களை உற்பத்தியில் பயன்படுத்த வேண்டும் என குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக :- புகையிரத தண்டவாள மரக்கட்டைகளுக்கு பதிலாக சீமேந்தினால் தயாரிக்கப்பட்ட தூண்களை பயன்படுத்தல். இவர்கள் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் இயற்கைப்பொருட்கள் மூலப்பொருட்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தினை கூறவில்லை.

தீவிர பேண்தகு கொள்கையாளர்கள் இயற்கை மூலப் பொருட்களுக்கு பதிலாக மனிதனால் உருவாக்கப்பட்ட மூலப் பொருட்களை உற்பத்தி செயல் முறையில் பயன்படுத்துவதை எதிர்க்கும் அதேவேளை மிகவும் அருமையான வளங்கள் பாது காக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் மலைகள் ஆறுகள், காடுகள் மற்றும் உயிர்ப் பன்முகத் தன்மை என்பவற்றை பாதுகாக்க முடியும் என நம்புகின்றனர். இயற்கை வளங்களை அழகியல் ரீதியாக இரசித்தல் அவற்றின் பெறுமதிகளை மதித்தல் மற்றும் அவற்றின் கிடைப்பனவுக்கு ஏற்ப வாழ்க்கை முறையினை மாற்றிக்கொள்ளுதல் போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு செயற்படுவதன் மூலம் இத்தகைய அருமையான இயற்கை வளங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லலாம் என எடுத்துரைக்கின்றனர். (Norton 2005) பிரண்ட் லேண்ட் அறிக்கையும் தீவிர பேண்தகு கொள்கையினரின் கருத்துக்களை கொண்டிருப்பதை பல சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அருகிவரும் உயிரினங்கள் மற்றும் சூழலியல் முறைமை மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அச்சுறுத்தல்களை உலக நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளில் வளங்கள் தொடர்பான பிரச்சினையில் முன்னுரிமை பெறக்கூடிய விடயங்களாக இருக்க வேண்டும் என இவ்வறிக்கை குறிப்பிடுவது சுட்டிக்காட்டத்தக்கது (பிரண்ட் லேண்ட் அறிக்கை, அத்தியாயம்-6 வரிகள் 57).

மேலும் இந்த அறிக்கை இயற்கையினை பேணிப் பாதுகாத்தல் என்னும் விடயமானது வெறுமனே அபிவிருத்தி குறிக்கோளில் மாத்திரம் தங்கியிருக்க கூடாது என்றும் இயற்கையினை பேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தல் என்பது எதிர்கால சந்ததியினருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் நாம் ஆற்ற வேண்டிய ஒரு ஒழுக்கக் கடமை என்பதை நாம் உணர வேண்டும் என இவ்வறிக்கை வலியுறுத்துகின்றது (பிரண்ட் லேண்ட் அறிக்கை 1987 அத்தியாயம் - 2 வரிகள் - 55). இதனை சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் மனித மையவாதம் அல்லாத சிந்தனையினையாகவும் தீவிர பேண்தகு கருத்தாகவும் கருதுகின்றனர். மேலும் பேண்தகு கொள்கை என்பது மனிதர்கள் மற்றும் ஏனைய உயிரினங்களின் தேவை என்பதுடன் அவர்களின் உரிமையாகவும் மாறியுள்ளது என ரெட் க்ளிவ்ட் குறிப்பிடுகிறார் (Red Clift 2004) மேலும் பேண்தகு என்ற எண்ணக்கருவானது உலகமயமாக்கல் சூழ்நிலையில் பல்வேறு பொருள் கொள்ளல்களை பெற்றுள்ளது. இதனை சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (Red Clift 2004) குறைந்தளவுக்கு இயற்கை பொருட்களை பயன்படுத்தி நுகர்வினை குறைத்து வாழும் ஒருவகை எளிமையான வாழ்க்கையினை சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

### சுற்றுச் சூழல் ஒழுக்கவியலும் காலநிலை மாற்றமும்
### (Environmental Ethics and Climate Change)

சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் பேண்தகுதன்மைக்கு அடுத்ததாக அதிக முக்கியத்துவம் வழங்கும் எண்ணக்கருவாக காலநிலை மாற்றம் என்ற விடயம் காணப்படுகிறது. பேண்தகு அபிவிருத்தியுடனும் இயற்கை வளங்களை பாதுகாப்பதுடனும் இது மிக நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ளது. அரசியல் கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் இது முக்கிய பங்கினை வகித்துவருகிறது. ஸ்டீபன்காடினர் (Stephen Gardiner) காலநிலை எண்ணக்கரு தொடர்பில் ஒழுக்கம் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கும் என கூறும் இவர், இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு எம்மிடம் சரியான திட்டங்களும் கொள்கைகளும் இருக்க வேண்டும் என வாதிடுகின்றார். இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார் (Gardiner 2006).

காற்று மண்டலத்தில் காபன் மற்றும் மீதேன் வாயுக்களின் செறிவு அதிகரிப்பினை முக்கிய பிரச்சினையாக சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீடு தொடர்பில் தனிநபர்களும் பெரும் வணிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களும் பொருத்தமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என சுற்றுப்புறச் சூழலில் மெய்யியலாளர்கள் கருதுகின்றனர். மேலும் பச்சை வீட்டு வாயுக்களை கட்டுப்படுத்தும் சரியான நிறுவனங்களும் எம்மிடம் இல்லை என குற்றம் சாட்டுகின்றனர். காலநிலை மாற்றத்தின் மிகவும் பயங்கரமான விளைவுகளை மனித குலத்தின் எதிர்கால சந்ததியினர் அனுபவிக்க போகின்றனர் என சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர்கள் தமது வேதனைகளையும் அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றனர். உலக நாடுகளின் அரசியல் பொருளாதார மற்றும் ஒழுக்கவியல் மாதிரிகள் காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை சரியான முறையில் எதிர்கொள்ள தயாராக இல்லை என்ற விடயத்தினையும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நாடுகள் காலநிலை தொடர்பான ஒரு சரியான முறையான கொள்கையினை உருவாக்க முடியாமல் இருக்கின்றன என்ற கருத்தினையும் இவர்கள் முன்வைக்கின்றனர். காடினர் உலக நாடுகள் காலநிலைப் பிரச்சினைகள் தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுக்க போவதில்லை என விரக்தியினை வெளிப்படுத்தும் அதேவேளை புவிப்பொறியியல் (Geoengineering) போன்ற தொழில்நுட்பங்களினால் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வரப்போவதில்லை என்றும் இத்தகைய தொழில்நுட்பம் மேலும் அதிகத் தீமைகளை காலநிலை தொடர்பில் ஏற்படுத்தலாம் என்ற கருத்தினையும் முன்வைக்கிறார் (Gardiner 2011 & Jamieson 1996).

சூழலியல் பிரச்சினை மற்றும் காலநிலை பிரச்சினை தொடர்பாக எமக்கு பிரச்சினையின் தன்மை என்னவென்று தெரிந்தும் அவற்றுக் கான தீர்வுகளை எடுக்காமல் இருப்பதும் எதிர்கால சந்ததியினரை சூழலியல் மற்றும் காலநிலை பிரச்சினைகளுக்குள் தள்ளுவதும் தற்போதைய மனித குலம் செய்யும் மிகப் பெரிய ஒழுக்கத் தவறுகள் என சுற்றுச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் சுட்டிக் காட்டு கின்றனர். எவ்வாறாயினும் மனித குலத்தின் இயலாமையினை காலநிலை மாற்றம் தொடர்பாக ஏற்றுக்கொண்டபோதும் மனிதர் களாக அனைவரும் இப்பிரச்சினையினை சமாளிக்க முடியும் என்ற கருத்தினை ரோல்ஸ்டன் தெரிவிக்கிறார் (Rolston 2012 : 216). எவ்வாறாயினும் காலநிலை தொடர்பாக எழும் பிரச்சினைகளை தீர்த்தல் பேண்தகு அபிவிருத்தி தொடர்பில் முக்கிய ஒரு விடயமாகும் என்பதை பலசுற்றுச்சூழல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரச்சினைக்கான தீர்வினை கண்டறிதல் என்பது இயற்கையினை பாதுகாக்கும் ஒரு வழிமட்டுமல்லாமல் மனிதத்தின் மகத்துவத்தினை வெளிப்படுத்தும் ஒரு செயலாகவும் இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

**வணிக ஒழுக்கவியல் (Business Ethics)**

வணிக ஒழுக்கவியல் அல்லது கம்பனி ஒழுக்கவியல் பிரயோக ஒழுக்கவியலில் ஒரு முக்கிய பகுதியாகும்.வர்த்தகச் சூழலில் எழும் ஒழுக்கம் சார்ந்த பிரச்சனைகள் மற்றும் ஒழுக்க விதிகள் என்பவற்றை பரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த ஒழுக்கவியல் வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றும் தனிநபர்கள் மற்றும் குழுவினரின் நடவடிக்கைகள் எவ்வாறு வர்த்தகத்தின் அடிப்படை விழுமியங்கள் மீது பாதிப்புக்களை அல்லது விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்கின்றது. வர்த்தக நிறுவனங்களின் அனைத்து நடவடிக்கைகளுடனும் இது தொடர்புபடுவது குறிப்பிடத்தக்கது. வர்த்தக ரீதியான ஒழுக்கவியல் பிரச்சினைகள் ஒரு கம்பனியின் இலாப நடவடிக்கைகளுக்கும் மனித நலன் அல்லது மனித விழுமியங்களுக்கும் இடையிலான உறவுகளை ஆய்வு செய்கின்றது. வர்த்தகக் கம்பனிகளின் இலாபம் சாராத மதிப்பீடுகளின் மீது அதிக கவனத்தை செலுத்துவதாக வணிக ஒழுக்கவியல் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

வணிக ஒழுக்கவியல் இரு வகை தளங்களை கொண்டது.

1. நியமம் சார்ந்த ஒழுக்கவியல்
2. விபரிப்பு வணிக ஒழுக்கவியல்

நியமம் சார்ந்த ஒழுக்கவியல் வர்த்தக நிறுவனங்களின் நடை முறைகள் மற்றும் தொழில்சார் சிறப்புத் தேர்ச்சி என்பவற்றுடன் தொடர்புபடுகிறது. அதேவேளை கல்வியலாளர்கள் வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளை புரிந்துகொள்வதற்காக விபரிப்பு ஆய்வு முறைகளை பயன்படுத்துகின்றனர். வரலாறு ரீதியாக வணிக ஒழுக்க வியல் மூன்று கால கட்டங்களாக வளர்ச்சி அடைந்திருப்பதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

1. அடிமை முறை காலம்
2. காலனித்துவ காலம்
3. பனிப்போர் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஒழக்கவியல் என்பதை வெளிப்படுத்தும் ஆங்கில வார்த்தையான (Business Ethics) 1970 களின் முற்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மெய்யியல் ரீதியான மற்றும் சமய ரீதியான வணிக ஒழுக்கவியல் தொடர்பான கருத்துக்களை தமிழர்களின் திருக்குறளில் காண முடிகிறது.

மில்டன் பிரைட்மேன் எனும் பொருளியலாளர் வணிக ஒழுக்கவியல் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "ஒரு வணிக நிறுவனம் எந்தளவு தூரமும் பணத்தை ஈட்டலாம் ஆனால் அதேவேளை இந்த நிறுவனத்தில் இத்தகைய செயற்பாடானது சமூகத்தின் அடிப்படைவிதிகளுடனும் அரசின் சட்டங்களுடனும் சமூகத்தின் வழக்காறுகளுடனும் முரண்படாது இணைந்து செல்ல வேண்டும்."

மேலும் இவர் 'மனிதம்' நிறைந்த தனி நபர்கள் வணிக நிறுவனங்களில் நிறைவேற்று அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

பீட்டர் டர்க்கரின் (Peter Drucker) கருத்துப்படி ஒரு கம்பனியின் நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் ஒரு ஒழுக்கமும், தனி மனிதன் என்ற வகையில் ஒரு ஒழுக்கமும் என இருவகை ஒழுக்கங்கள் இருக்க முடியாது. எல்லா சூழ்நிலைகளிலும் ஒரே ஆளுமை ஒரே வகை ஒழுக்கம் பின்பற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும் இவர் மனிதத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. சமூக பொறுப்புக்களையும் நலன்களையும் புறக்கணிக்காது அவற்றுக்கு மதிப்பு கொடுத்து நடக்க வேண்டும் என வணிக ஒழுக்கவியல் எதிர்பார்க்கின்றது. ஒரு வணிக நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகளும் முக்கிய அதிகாரிகளும் தாங்கள் ஒரு நாட்டினதும் குறிப்பிட்ட சமூகத்தினதும் பொறுப்புள்ள உறுப்பினர்கள் என்பதை மறக்க கூடாது என வணிக ஒழுக்கவியல் வற்புறுத்துகின்றது. ஒரு வணிக நிறுவனத்தின் பங்குதாரர்கள் அந்த நிறுவனம் ஒழுக்க விதிகளை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது அவர்களது உரிமையாகும். ஒழுக்கவிதிகளை பின்பற்றாத வணிக நிறுவனங்கள் சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பல்வேறு விளைவுகளை சந்திக்க நேரிடும்.

வணிக ஒழுக்கவியலுடன் தொடர்புபட்ட ஒழுக்கப் பிரச்சினைகளாக பின்வருவன அடையாளப்படுத்தப்படுகின்றன:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு நிறுவனத்துக்கும் அதன் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள்.
2. ஒரு நிறுவனத்துக்கும் அதன் பொருட்களை வழங்குவோர்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள்.
3. ஒரு நிறுவனத்துக்கும் அதன் நுகர்வோருக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள்.
4. ஒரு நிறுவனத்துக்கும் அதன் பங்குதாரருக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள்
5. ஒரு நிறுவனத்துக்கும் இன்னொரு நிறுவனத்துக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள்.

ஒரு வணிக நிறுவனம் தொடர்பாக பின்வரும் ஒழுக்கப் பிரச்சினைகள் அல்லது ஒழுக்க மீறல்கள் ஏற்படலாம்.

1. ஒரு கம்பனி தனது பங்குதாரர்களுக்கு சரியான முறையில் கடப்பாடுகளை வெளிப்படுத்தாமல் அது தொடர்பான விதிகளை மீறல்.
2. ஒரு கம்பனி இன்னொரு கம்பனியின் நடைமுறைகளை முடக்கி அதன் பங்குகளை வாங்கி குறிப்பிட்ட கம்பனியினை இல்லாமல் செய்துவிடலாம் அல்லது இதற்காக ஒழுக்கமற்ற வழிமுறைகளை கையாளலாம்.
3. ஒரு கம்பனி தன்னை காட்டிலும் வளர்ச்சி பெற்ற இன்னொரு கம்பனியில் இருந்து உற்பத்தி பொருள் இரகசியம் உள்ளிட்ட வேறுபல இரகசியங்களை உளவாளிகளை வைத்து திருடலாம்.
4. ஒரு கம்பனி தனது தொழிலாளர்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக அலட்சியமாக இருப்பதன் மூலம் அவர்களது உயிரிழப்புக்கு வழிகோலுதல்.
5. ஒரு கம்பனியின் நிறைவேற்று அதிகாரிகளாக இருப்பவர்கள் அல்லது முக்கிய அதிகாரிகள் மனநோயாளிகளாக (psychopaths) இருக்கும் பட்சத்தில் அவர்களது நடவடிக்கை மூலம் அங்குள்ள தொழிலாளர்கள், கம்பனியுடன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் வெளிச் சமூகம் என்பவற்றின் மீது பலவிதமான பாதிப்புக்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த பொருளாதார முறைமைகளும் தனியார் கம்பனிகளின் சர்வதேச ரீதியாக செயற்படும் திறனும் இலாப நோக்கினை அடிப்படையாக கொண்டதாக இருக்கின்றதே தவிர சமூக நலன்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றமை குறைவாகவே காணப்படுகின்றது என பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர்.

வணிக நிறுவனங்களில் நிதி தொடர்பான ஒழுக்கப் பிரச்சினை களாக அல்லது ஒழுக்க மீறல்களாக பின்வருவன அடையாளம் காணப்படுகின்றன.

1. நிதி செயல் முறை தொடர்பாக போலியான கணக்குகள் உருவாக்குதல். (Creative Accounting)
2. ஒரு கம்பனியின் நிதி நிலையினை பதிவுகள்மூலம் உயர்வாக காட்டல். (Earnings Management)
3. ஒரு கம்பனி சட்ட விரோதமான பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுதல் (Insider Trading)
4. ஒரு கம்பனி தவறான தகவலின் அடிப்படையில் முதலீடுகளில் ஈடுபடுதல் (Securites Fraud)
5. ஒரு கம்பனியின் உறுப்பினர்கள் லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடல் (Bribery /kick backs)
6. அரச நிர்வாக செயன்முறையினை துரிதப்படுத்துவதற்காக ஒரு கம்பனி அரச அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்குதல் (Facilitation payments)
7. வணிகத்துறையில் இடம்பெறும் சட்டவிரோத பங்கு வர்த்தக கம்பனியின் செயற்பாடுகள் (Bucket shops)
8. வணிகத்துறையில் இடம்பெறும் அன்னிய செலாவணி ஊழல் (Forex scams)
9. ஒரு கம்பனியில் இடம்பெறும் கணக்கியல் மற்றும் நிதித்துறை ஊழல் (Accounting Scandals)

மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் எல்லோருக்கும் சமமான வேலைத்தளம் மற்றும் உழைப்புக்களின் சரியான மதிப்பீடு தொடர்பாக மனிதவள கொள்கைகள் வணிக ஒழுக்கவியலில் ஆராயப்படுகின்றன. இழப்பீடு, வேலைவாய்ப்பு பிரச்சினை, பால் மற்றும வயது ரீதியாக பாரபட்சங்கள் காட்டப்படுதல் மற்றும் அந்தரங்கத்தன்மை மீறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பிரச்சினைகளும் வணிக ஒழுக்கவியலில் எழுகின்றன. இவை தொடர்பான அக்கறையினை வணிக ஒழுக்கவியல் கொண்டுள்ளது.

சூழலுக்கும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பாதிப்பில்லாத பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற விதி அல்லது சட்டம் வணிக நிறுவனங்களுக்கு உரியதாக இருக்கிறது. ஆயினும் இவ்விதிகள் முழுமையாக பின்பற்றப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியே. மனிதர்களுக்கும் இயற்கை விலங்குகளுக்கும் ஆபத்து விளைவிக்கும் பொருட்களை சில கம்பனிகள் உற்பத்தி செய்கின்றன. இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்வது ஒழுக்க ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் தவறானது. இவை தொடர்பாக வணிக ஒழுக்கவியல் தனது கவனத்தை செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அதிக இலாப நோக்கத்தை கொண்ட மிகப்பெரிய கம்பனிகள் மனித மற்றும் இயற்கை நலன்களுக்கு எந்த விலையையும் கொடுக்க தயராக இருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக:- புகையிலை உற்பத்திகள், மரபு மாற்றம் செய்யப்பட்ட உணவு பொருட்கள் மற்றும் விவசாய மூலப் பொருட்கள்.

ஒரு சில பெரிய கம்பனிகள் இலாபத்தினை முதன்மை நோக்கமாகக் கொண்டு மனிதர்கள் இயற்கை மற்றும் விலங்குகள் என்பவற்றுக்கு தீமைகளை குறுங்காலத்திலோ அல்லது நீண்ட காலத்திலோ ஏற்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யலாம். இத்தகைய விடயங்களை தெரிந்துகொள்ளும் நபர் ஒருவர் இத்தகவலை அரசாங்கத்துக்கோ அல்லது பொதுமக்களுக்கோ தெரிவிப்பாரேயானால் அவருக்கு உயிராபத்து ஏற்படலாம். சில வேளைகளில் கம்பனியின் இரகசியத்தை வெளிப்படுத்திய குற்றத் திற்காக வேலை நீக்கம் செய்யப்படலாம் அல்லது சில வேளைகளில் சிறை தண்டனை விதிக்க கூடிய சூழ்நிலைகளும் ஏற்படலாம்.இத்தகைய நபர்களை கம்பனி சூழ்நிலையில் உண்மைகளை வெளிப்படுத்துவோர் (whistleblower) என அழைப்பர்.

சில கம்பனிகள் அதிகளாவன இலாபத்தினை பெற வேண்டும் என்ற நோக்குடன் தொழிலாளிக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு வதில்லை என்பதுடன் தொழிலாளிக்கு நியாயமாக சேர வேண்டிய இலாபத்தின் பங்கினையும் வழங்குவதில்லை. இது ஒருவகை சுரண்டலாகும். தொடர்ச்சியாக கம்பனியின் இலாபத்தினை கம்பனியின் நிறைவேற்று அதிகாரிகளும் முதலாளியும் பெற்றுக்கொள்வதற்கு தொழிலாளர்களின் தலைவன்/தலைவர்களுக்கு அதிக வசதிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமற்ற பணத்தையும் சலுகைகளையும் வழங்குவதன மூலம் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சம்பள உயர்வு உள்ளிட்ட சலுகைகள் மற்றும் நலன்களை பிற்போடுதல் அல்லது கைவிடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவர். இதன் பொருட்டு தொழிலாளர் மற்றும் முதலாளி கலந்துகொள்ளும் கூட்டு பேரம் (Collective Bargaining) தவிர்க்கப்படும் அல்லது பல்வேறு வகைகளில் பலவீனப்படுத்தப்படும். இத்தகைய சூழலில் தொழிலாளர்களின் உரிமைகளும் நலன்களும் காற்றில் பறக்க விடப்படும்.

சில கம்பனிகள் தங்களது சேவை தொடர்பில் நுகர்வோர்களின் அந்தரங்க தன்மையினை (Consumer Privacy) பேணுவது அவர்களது கடமையாகும். ஆயினும் முழுமையாக அந்தரங்கத் தன்மை பேணப்ப டுகின்றதா? என்பது கேள்விக்குறியாகும். குறிப்பாக தொலைத் தொடர்பு துறையில் தனி நபர் அந்தரங்கத்தன்மை பேணப்படாமை தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. இவை தொடர்பாடல் சார்ந்த ஒரு வகை ஒழுக்க மீறலாகும்.

கம்பனிகள் பொருட்களை விற்பனை செய்வதில் விளம்பரங்கள் முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. இவை தொடர்பாக நிறைய ஒழுக்கவிதிகளும் ஒழுக்க மீறல்களும் கம்பனிச் சூழலில் காணப்படுகின்றன.ஒரு பொருளை நுகர்வோருக்கு விற்பனை செய்யும்போது கம்பனிகள் பல்வேறு விதமான ஒழுக்க விதிகளை மீறுகின்றன. இன்னொரு வகையில் கூறினால் நுகர்வோர்களை அவை ஏமாற்றுகின்றன. அவையாவன:-

1. குறிப்பிட்ட ஒரு பொருளை உற்பத்தி செய்யும் பல கம்பனிகள் தங்களுக்கு இடையே கூடிப்பேசி ஒரு குறிப்பிட்ட பொருளை அதிக விலையிலோ அல்லது குறைந்த விலையிலோ நுகர் வோருக்கு விற்றல் (Price Fixing)

2. நியாயமான விலையினை விட அதிக விலையில் பொருட்களை விற்றல் (Price Discrimination)

3. ஒரு கம்பனி ஒரு பொருளை முதன் முதலாக உற்பத்தி செய்யும்போது அதனை நியாயமான விலையினை விட அதிக விலைக்கு விற்றல் (Price Diskimming)

4. சுற்றுச் சூழலுக்கு உகந்தது என்று கூறி பல பொருட்களை கம்ப னிகள் பொதுமக்களுக்கு விற்றல். உண்மையில் இப்பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவதாக இருக்கும். (Green Washing)

5. சில கம்பனிகள் குறைந்த விலையுடைய பொருட்களை அதிக விலைக்கு விற்றல் (Bait and Switch)

6. சில கம்பனிகள் இரகசிய தரகர்களை நியமித்து அவர்களுடாக பெறுமதி குறைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் கொண்ட வியாபாரத்தை பெறுமதி கூடிய பொருட்கள் அல்லது சேவைகள் என மக்களை நம்பவைத்து அவர்களை தமது வியாபார நடவடிக்கைகளில் பங்குதாரர்களாக இணைத்துக்கொள்ளல். (Shilling Business) இங்கு உண்மை மறைக்கப்பட்டு பொய் உண்மை போல் கூறப்படும்.

இணையத்தளத்தின் ஊடாக சில கம்பனிகள் தனது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இந்நடவடிக்கைகளினால் பல நுகர்வோர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதிகாரபூர்வமற்ற செய்திகள் (Spams) இணையத்தளங்களின் ஊடாக அனுப்பப்பட்டு நுகர்வோர்கள் ஏமாற்றப்படுகின்ற சூழ்நிலைகள் காணப்படுகின்றது. இதேபோல் பிரமிட் முறை வர்த்தக நடவடிக்கை (Pyramid Schemes), ஒரு கம்பனி தனது பொருளை இன்னொரு கம்பனியின் பொருளுடன் ஒப்பிட்டு வியாபாரம் செய்தல் (Attack Ads), பாலியல் நிலையினை அடிப்படையாக கொண்டு பொருட்களை வியாபாரம் செய்தல் போன்ற பல்வேறு விதமான ஒழுக்க மீறல்களை கம்பனிகளின் வணிக செயற்பாடுகளில் காண முடிகின்றது.

ஒரு கம்பனியின் வணிக நடவடிக்கையுடன் தொடர்புபட்ட வகையில் அறிவு சொத்துடைமை உரிமைகள் (Intellectual Property Rights) முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு பொருளுடன் அல்லது ஒரு படைப்புடன் சம்பந்தப்பட்ட கருத்துக்கள், சிந்தனைகள், தகவல் கள் என்பவற்றை அதனை உருவாக்கிய நபருக்கு சட்ட ரீதியாக உரிமையாக்குதலை இது குறிக்கின்றது. கம்பனிகளில் பணி புரியும் விஞ்ஞானிகள் கம்பனிகளின் உற்பத்திகள் தொடர்பாக பல்வேறு கண்டுபிடிப்புகளை நிகழ்த்துகின்றபோது அந்த கம்பனி அந்த கண்டுபிடிப்புக்களின் உரிமையினை சட்ட ரீதியாக தனதாக்கிக் கொள்கின்றது. ஒரு கம்பனி தனது இலாபத்தினை முதன்மைப்படுத்துவதன் காரணமாக குறிப்பிட்ட பொருளை அதிக விலைக்கு விற்க முயல்கின்றது. இவ்வகையில் அறிவு சொத்துடைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் சாதாரண மக்களுக்கு எதிராக திரும்புகின்றன. எடுத்துக் காட்டாக:-புற்று நோய்க்குரிய மருந்தினை ஒரு குறிப்பிட்ட கம்பனி கண்டு பிடித்து அதனை சட்ட ரீதியாக அந்த கம்பனி தனது உடைமையாக்குமாயினால் (Patent Rights) அந்த கம்பனியை தவிர வேறு எந்த கம்பனியும் அந்த மருந்தினை விற்க முடியாது. அந்த கம்பனி மிகவும் அதிக விலைக்கு இந்த மருந்தை விற்கலாம். இத்தகைய சூழ்நிலையில் மூன்றாம் மண்டல நாடுகளில் வாழும் புற்றுநோய் நோயாளிகள் பாதிக்கப்படுவர்.

ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் கருணை, இரக்கம், நேர்மை, ஒருங்கிணைந்ததன்மை, சிறப்பானதொடர்பாடல், அர்ப்பணிப்பு உணர்வு, ஏனையோரை மதித்தல், இன்னும் பல என பலநற்பண்புகளின் உறைவிடமாக இருக்க வேண்டும்.ஒரு கம்பனியின் பணியாளர்கள் அந்த கம்பனியில் சொத்துக்களையும் நேரத்தையும் தங்களுடைய சொந்த தேவைகளுக்கு பயன்படுத்துவது கம்பனிச் சூழலில் பெரும் குற்றச் சாட்டாக முன்வைக்கப்படுகின்றது. சிறந்த அரசியல் நிர்வாகம் உள்ள நாட்டிலே சிறந்த கம்பனிகள் உருவாக முடியும் என பல அறிஞர்கள் கருதுகின்றனர். சமூக ஊடகங்கள் வணிக ஒழுக்கவியல் செயற்பாடுகளை நிர்ணய்ப்பதில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. தனியார் கம்பனிகளை சட்டரீதியாகக் கட்டுப்படுத்துவதும் முறைபாடுகள் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்துவதும் மிகவும் கடினமான பணி என பலர் வாதிடுகின்றனர்.

சொத்துரிமை (Property Rights) என்பது தனியார் கம்பனிகளை பொறுத்த வகையில் முக்கியத்துவம் உடைய விடயமாகும். ஒருவருக்கு இருக்கக் கூடிய சொத்துரிமை என்பது அவரது இயற்கை உரிமை என புதிய தராண்மை வாதிகள் வாதிடுகின்றனர் சிலர் சொத்தினை அதிகாரத்தின் வடிவமாக பார்க்கின்றனர்.

கம்பனிகளில் காணப்படுகின்ற தொழில் சார்ந்த நடைமுறைகளை ஆய்வு செய்வதாகவும் வணிக ஒழுக்கவியல் காணப்படுகின்றது. ஒரு கம்பனியின் ஒழுக்க கோவைகள், வளர்ச்சி, நிர்வாகம், வினைத்திறன், இன்னும் பல என்பவற்றை வணிக ஒழுக்கவியல் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது. ஒரு கம்பனியினை ஒரு ஒழுக்கச் செயலை செய்யும் மனிதனாக கருதும் நோக்கு வணிக ஒழுக்க வியலில் காணப்படுகிறது. வணிக ஒழுக்கவியலில் காண்டின் ஒழுக்கவியல் நோக்கான ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் பெறுமதி உடையவர்களாக கருதப்பட வேண்டும் என்ற நோக்கும் அரிஸ்டோட்டிலின் அற ஒழுக்கவியலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த பொருட்களை அல்லது சேவைகளை விற்பனை செய்ய வேண்டும்? என்ற கேள்வி வணிக ஒழுக்கவியலில் எழுப்பப்படுகின்றது. பாலியல் சார்ந்த சேவைகள். மனித உறுப்புக்களை விற்பனை செய்தல், பிள்ளைகளை வாடகைக்காக பெற்றுக்கொடுத்தல் போன்றன ஒழுக்க ரீதியாக தவறான செயல்களாக கருதப்படுகின்றன. இத்தகைய வணிகம் மனித உரிமைகளை மீறுவதாக பார்க்கப்படுகின்றது. ஆயினும் இது தொடர்பான பகுத்தறிவு ரீதியான வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சிறுநீரக தொல்லையினால் இறக்கப்போகும் பல நோயாளிகள் சிறுநீரக வியாபாரத்தினால் உயிர் பிழைக்கின்றனர்.

பொருட்களை விற்பனைச் செய்வோர் இயற்கை அனர்த்தம் அல்லது மனிதனால் உண்டாக்கப்படும் அனர்த்தம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு பொருட்களின் விலையினை அதிகரித்தலில் (price gorging) ஈடுபடக்கூடாது. புனிதர் அக்குவினாஸ் நீதியான விலை பற்றி பேசுவது குறிப்பிடத்தக்கது.

கம்பனிகள் தமது ஊழியர்களை வேலையில் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் வேலையில் இருந்து வெளியேற்றுவதற்கும் சரியான நெறிமுறைகளை கையாளுகின்றனவா? என்பதை வணிக ஒழுக்கவியல் ஆய்வு செய்கின்றது. இதே போல் கம்பனி தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கப்படுகின்றதா? என்பதும் வணிக ஒழுக்கவியல் பரப்புக்குள் வருகின்ற விடயமாகும். தனியார் கம்பனிகளில் ஊழியர்களின் ஊதியத்தினை தீர்மானிப்பது யார்? எப்படி தீர்மானிப்பது? போன்ற விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன நிறைய கம்பனிகள் குறைந்தளவு வேதனத்தினை அவற்றின் ஊழியர்களுக்கு கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக:-இலங்கை தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நியாயமான ஊதியத்தினை விட குறைந்தளவு ஊதியத்தினையே பெறுகின்றனர்.

'அர்த்தமுள்ள வேலை' (Meaningful Work) என்ற எண்ணக்கருவானது வணிக ஒழுக்கவியலில் முக்கியத்துவம் பெறும் எண்ணக்கருவாகும். இதன்படி ஒரு ஊழியர் அவர் செய்யும் வேலை அவருக்கு ஆர்வ முடையாதாக இருக்கும், அவரது திறமையினை வெளிப்படுத்துவதாக இருக்கும். மேலும் இவர் வேலை தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்ளக்கூடிய அதிகாரத்தினை கொண்டவராக இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு வணிக நிறுவனங்களில் சமூக பொறுப்பும் அக்கறையும் பற்றி உடன்பாடான மற்றும் எதிர்மாறான கருத்துக்கள் காணப்படுகின்றன. சில கம்பனிகள் சமூக அக்கறையுடனும் பொறுப்புடனும் தமது பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கின்றன. சில நிறுவனங்கள் சமூக பொறுப்பினை உதாசீனம் செய்து இலாபத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்படுவதை பல அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எடுத்துக் காட்டாக:- 1970களில் மெர்க் (merck) என்ற கம்பனி உற்பத்தி செய்த மருந்து பொருட்களினால் கால் நடைகளின் கண்கள் குருடானது.

அதிக வறுமை மற்றும் சூழலியல் பிரச்சினைகள் என்பன உலகில் காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் இவற்றினை நீக்கும் முகமாக பொருட்களையும் சேவைகளையும் பெரும் கம்பனிகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் பல தரப்பினரிடம் இருந்து முன்வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இலாப நோக்கை மட்டுமே குறிக்கோளாக கொண்டு உற்பத்தி செய்யக்கூடாது என பலர் அறிவுறுத்தி வருகின்றனர். சில கம்பனிகள் சில நாடுகளில் அரசு செய்ய வேண்டிய பணிகளை அவை செய்கின்றபோது உடன்பாடான மற்றும் எதிர்றையான விளைவுகள் ஏற்படுகின்றன என பலர் சுட்டிக்காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக:- சில தனியார் கம்பனிகள் விவசாயகளின் நலன்கருதி விவசாய நடவடிக்கைகளை அரசுக்கு பதிலாக செய்கின்றபோது அவற்றிலிருந்து அவை அதிக இலாபத்தினை எதிர்பார்க்கின்றன.

சர்வதேச கம்பனிகள் நிறைய நாடுகளில் தமது தொழிற்சாலைகளை நிறுவி செயற்பட்டு வருகின்றன. இவ்வாறு செயற்படும்போது இந்த கம்பனிகள் குறிப்பிட்ட நாட்டு மக்களுக்கும் குறிப்பாக நாட்டின் இயற்கை சூழலிற்கும் அநீதி இழைக்கக் கூடாது என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பாக சர்வதேச கம்பனிகளிற்கு என்று சட்ட விதிகள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விதிகள் மனித உரிமைகள், உழைப்பு, இயற்கைச் சூழல் மற்றும் ஊழல் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு கம்பனியின் விற்பனை பிரதிநிதிகள் பின்வரும் ஒழுக்க விதிகளை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக பாதுகாப்பான அறிவுறுத்தல்களையும் எச்சரிக்கைகளையும் நுகர்வோர்களுக்கு வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக ஏமாற்றவோ பொய் சொல்லவோ கூடாது.
3. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக நுகர்வோர்களுக்கு இருக்கும் அனைத்து சந்தேகங்களையும் விற்பனை பிரதிநிதிகள் தீர்க்க வேண்டும்.
4. நுகர்வோர்கள் விரும்பாத பொருட்களை அவர்கள் வாங்க தூண்டக் கூடாது.
5. தம்மை போல் மற்றவரையும் நினைத்து விற்பனை செயல்முறையில் ஈடுபட வேண்டும்.
6. தரம் குறைந்த பொருட்களையும் சேவைகளையும் வழங்க முயலக்கூடாது.

ஒரு கம்பனியை பொறுத்தவரையில் விளம்பரம் முக்கியமானது. இது பொருட்களையும் சேவைகளையும் நுகர்வோருக்கு விற்பனை செய்வதில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. ஒரு கம்பனியின் விளம்பரம் குறிப்பிட்ட ஒழுக்க விதிகளை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் நடைமுறையில் விளம்பரங்களில் ஒழுக்க மீறல்களை நாம் காண முடிகின்றது. விளம்பரம் இரண்டு பண்புகளை கொண்டதாக உள்ளது.

1. ஒரு பொருள் பற்றிய தகவலை நுகர்வோருக்கு வழங்குகிறது.
2. ஒரு பொருளை வாங்குகின்ற நுகர்வோரை குறிப்பிட்ட பொருளை வாங்க தூண்டுகிறது.

ஒரு கம்பனி விளம்பர செயன்முறையில் ஈடுபடும்போது பின்வரும் ஒழுக்க விதிகளை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக உண்மையினை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.
2. ஒழுக்கமான வழியில் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் விளம்பரங்களை மேற்கொள்ள வேண்டும்.
3. ஒரு நிறுவனம் தனது பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக தெளிவான முறையில் நுகர்வோருக்கு எடுத்துரைக்க வேண்டும்.
4. பொருட்களின் விலை, தரம், அதன் விபரம் என்ற பல விடயங் களை தெளிவாக விளம்பரங்களில் வெளிப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருட்கள் சேவையுடன் தொடர்புபட்ட நுகர்வோருக்கு சரியாக சென்றடையக்கூடியதாக விளம்பரங்கள் இருக்கும் அதேவேளை விளம்பரங்களை பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டும்.

6. கம்பனிகள் அரசினாலும் ஏனைய நிறுவனங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு தமது விளம்பரங்ளை மேற்கொள்ள வேண்டும்.

7. கம்பனிகள் தங்களது விளம்பரத்திற்கு பொறுப்பானவர்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான உண்மைகளை நுகர்வோர்களுக்கு தெரிவிக்க கூடிய சுதந்திரத்தினை வழங்க வேண்டும்.

8. கம்பனிகள் தமது விளம்பரங்களை மேற்கொள்ளும்போது பலவீனமான குழுக்களை பாதிக்காத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதாவது வயதான நுகர்வோர்கள், சிறுவர்கள் மற்றும் பொருளாதார ரீதியில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள்.

9. மனிதர்கள் மற்றும் இயற்கை என்பவற்றுக்கு கேடுவிளைவிக்கும் பொருட்கள் தொடர்பான விளம்பரங்களைச் செய்யக் கூடாது.

10. பெண்களையும் சிறுவர்களையும் அங்கீகரிக்கப்பட்ட முறைக்கு அப்பாற்பட்ட வகையில் விளம்பரங்களில் பயன்படுத்தக்கூடாது,

11. புகை பிடித்தல் மற்றும் மது தொடர்பான விளம்பரங்களைச் செய்யக்கூடாது.

12. விஞ்ஞான ரீதியான ஆதாரங்களுடன் சில பொருட்கள் சில பலன்களை தருவதாக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இத்தகைய விளம்பரங்கள் தவிர்க்கப்படட வேண்டும்.

இவ்வகையில் பெருங் கம்பனிகள் இலாபத்தினை மட்டும் கருத்திற் கொள்ளாமல் தமது பணிகளை சமூக நலன் கொண்டும் செய்ய வேண்டும் என்பதே வணிக ஒழுக்கவியலின் முக்கிய நோக்கமாகும். காண்ட் கருதுவது போல் ஒவ்வொரு மனிதனும் மனிதனாக கருதப்படுவது போல ஒவ்வொரு நுகர்வோனும் மனிதனாக கருதப்பட்டு அவன் நியாயமான முறையில் ஒரு கம்பனியால் அணுகப்பட வேண்டும். ஒரு கம்பனி தனக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க விதிகளை கம்பனிக்குள்ளும் பேண வேண்டும். கம்பனிகள் அரசாங்க சட்டதிட்டங்களை உண்மையாக மதித்து நடப்பதுடன் சமூக நலனை பாதுகாக்கும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஒரு கம்பனியில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியனும் தான் ஒரு கம்பனியின் ஊழியன் என்ற உணர்வோடு மட்டும் அல்லாமல் தான் ஒரு சிறந்த மனிதன், தான் ஒரு நாட்டின் சிறந்த குடிமகன் என்ற உணர்வுடன் செயற்படும்போது வணிக ஒழுக்கவியலை சிறந்த முறையில் பேணப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது எனலாம்.

**ஊடக ஒழுக்கவியல் (Media Ethics)**

பிரயோக ஒழுக்கவியலின் ஒரு பகுதியாக ஊடக ஒழுக்கவியல் கருத்துக்களை மக்களுக்கு தெரிவிப்பதில் பல விதமான ஒழுக்க விதிகளை பின்பற்ற வற்புறுத்துகின்றது. அவையாவன.

1. சரியான மற்றும் துல்லியமான தகவலை மக்களுக்கு வெளியிட வேண்டும். (Accuracy)

2. ஊடகத்தினால் வெளியிடப்படும் தகவல்கள் புறவயத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். (Objectivity)

3. உண்மையான தகவல்களை மட்டுமே ஊடகங்கள் வெளியிட வேண்டும். (Truth)

4. நடுவுநிலைமையான தகவல்களை ஊடகங்கள் வெளியிட வேண்டும். (Impartiality)

ஊடக ஒழுக்கவியல் பௌதீக அதீத ஒழுக்கவியலின் கருத்துக்களையும் நியம ஒழுக்கவியலின் கருத்துக்களையும் பயன்படுத்தி ஊடக துறையில் காணப்படும் ஒழுக்க விதிகளையும் ஒழுக்க மீறல்களையும் ஆய்வு செய்கிறது.

ஊடகம் எனும்போது அச்சுஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் இணையதள ஊடகம் என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கி யிருக்கின்றது. இத்தகைய ஊடக பிரிவுகளில் காணப்படும் ஒழுக்க விதிகள் மற்றும் ஒழுக்க மீறல்கள் என்பவை ஊடக ஒழுக்க வியலின் ஆய்வு விடயங்களாக இருக்கின்றன.

ஊடக வரலாற்றில் அச்சு ஊடகப் பிரிவு வரலாற்று ரீதியாக முதலில் வளர்ச்சி அடைந்த பிரிவாக காணப்படுகினற்து. அச்சு ஊடகங்கள் தொடர்பான அதிக விதிகளையும் தகவல்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காண முடிகின்றது. 1880 களில் அச்சு ஊடகம் தொடர்பான ஒழுக்க விதிகள் எழத் தொடங்குகின்றன. சர்வதேச அளவில் இதழியல் தொடர்பான விதிகள் 1890 அளவில் உருவாக்கப்பட்டது. ஊடகத் துறையின் வர்த்தக மயமாக்க செயல் முறையும் அதனை ஒரு தொழிற்துறையாக மாற்றும் செயல் முறையும் 1890 களில் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் இதழியல் துறையினை ஆரம்பிக்க உதவியது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் இதழியல் கல்வித்துறை ஊடக ஒழுக்கவியல் தொடர் பான ஆர்வத்தினை ஏற்படுத்தியது. 1920 களில் இதழியல் தொடர்பான சில புத்தகங்கள் எழுதப்பட்டன. 1924ல் நெல்சன் குரோபோடினால் (Nelson Crow Ford) எழுதப்பட்ட இதழியல் ஒழுக்கவியல் (Ethics of Journalism) என்ற புத்தகம் அச்சு ஊடகம் தொடர்பாக எழுதப்பட்ட முதலாவது புத்தகமாக கருதப்படுகின்றது. இவர் பத்திரிகையினை ஒரு பண்டமாக கருதியதுடன் பத்திரிகை கருத்து வெளியீட்டு சுதந்திரத்தை கொண்டிருக்கும் அதேவேளை அது மக்கள் மத்தியில் தனது பொறுப்பினையும் கொண்டுள்ளது என்ற கருத்தினையும் முன் வைத்தார்.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புறவயத்தன்மையின் அறிமுகம் மற்றும் விஞ்ஞான இயற்கைவாதத்தின் முக்கியத்துவம் காரணமாக இதழியல் ஒழுக்கவியல் தொடர்பாக ஆர்வம் பத்திரிகை துறை சார்ந்தவர்கள் மத்தியில் ஏற்பட ஆரம்பித்தது. அதன் பின்னர் மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் வழங்காத ஒரு முறையும் புறவயத் தன்மையும் பத்திரிகை துறையில் செல்வாக்கு பெற ஆரம்பித்தது.

அச்சு ஊடக வரலாற்றில் யுனெஸ்கோவின் அமைப்பான பல குரல்கள் ஒரு உலகம் என்ற அறிக்கை (Many voices one world,Mac Bride Report) முக்கியத்துவம் உடையதாகும். இந்த அறிக்கை உலகம் முழுவதும் இதழியல் ஒழுக்கவியல் முழுமையாக வளர்ச்சி பெறுவதற்கு பெரிதும் உதவியது எனலாம். 1980களின் பின்னர் அமெரிக்காவின் பல கல்லூரிகளில் இதழியல் தொடர்பான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊடக ஒழுக்கவியலாளர்கள் பின்வரும் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை ஊடகத்துறையில் அடையாளம் காண்கின்றனர்.

1. ஒருவரின் அந்தரங்கத் தன்மை தொடர்பாக ஏற்படும் பிரச்சி னைகள் (Privacy)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விரும்பிய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு தடை தொடர்பான பிரச்சினைகள் (Censorship)
3. பாலியல் திரைபடங்கள் தொடர்பான ஒழுக்கப் பிரச்சினைகள்
4. ஊடக வன்முறை தொடர்பான பிரச்சினைகள்
5. இரகசிய தன்மையினை பேணுதல் தொடர்பாக இடம்பெறும் பிரச்சினைகள் (Confidentiality)
6. புறவயத் தன்மை தொடர்பான பிரச்சினைகள் (Objectivity)
7. தொலைக்காட்சி மற்றும் சிறுவர்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகள்
8. விளம்பரங்கள் தொடர்பாக ஏற்படும் ஒழுக்கப் பிரச்சினைகள்
9. பிரச்சாரம் தொடர்பாக எழும் ஒழுக்க பிரச்சினைகள்

அரசும் ஒரு சில நிறுவனங்களும் தங்களுக்கு ஏற்றாற்போல் செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுதல். ஊடகத் துறையில் இடம் பெறும் முக்கிய ஒழுக்க மீறலாகும். (News Manipulation) நாட்டின் நலன் அல்லது பாதுகாப்பு கருதியோ அல்லது வேறு காரணிகளாலோ ஒரு ஊடகம் உண்மைச் செய்திகளை வெளியிட முடியாத சூழ்நிலை ஏற்படலாம். உண்மை என்பதற்காக எல்லாவற்றையும் வெளியிடும் உரிமை ஊடகங்களுக்கு கிடையாது. தனி நபர்களின் அந்தரங்க விடயங்களை வெளியிடுவதில் ஊடகங்கள் முன்னிற்கின்றன. ஆயினும் இது தனிநபர் தொடர்பான உரிமை மீறலாகும். உண்மையினையும் கற்பனையினையும் கலந்து கூறும் பண்பு ஊடகங்களுக்கு உண்டு. இத்தகையச் சூழ்நிலையில் ஊடகங்கள் ஒழுக்கத்தை மீறுகின்றன. பொது மக்களுக்கு அதிர்ச்சி தரக்கூடிய தகவல்களை வழங்கும்போது எந்தளவு தூரம் வழங்கலாம்? அதன் விளைவு என்பவற்றை சிந்தித்து மிகக் கவனத்துடனும் அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. இத்தகைய தகவல்கள் வெளியிடும்போது சமூக பொறுப்பு மிக முக்கியமானதாகும். ஊடகங்கள் அரசின் இரகசிய நடவடிக்கைகள் தொடர்பான கருத்துக்களை மக்களுக்கு தெரியப்படுத்துகின்றபோது அல்லது சமூகத்தில் செல்வாக்குள்ள மனிதர்கள் தொடர்பாக செய்திகளை வெளியிடுகின்றபோது அவதானமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சட்ட ரீதியாக சிக்கல்களை ஊடகங்கள் சந்திக்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள்**

பாரம்பரிய அச்சு ஊடக ஒழுக்கவியல் விதிகள் இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடக ஒழுக்க விதிகளுடன் பெரும்பாலும் இணைந்து செல்வனவாக இருக்கின்றன. அச்சு ஊடகங்களை காட்டிலும் மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கு பெற்ற ஊடகங்களாக இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள் இருக்கின்றன. பின்வரும் ஒழுக்க மீறல்களை நாம் இலத்திரனியல் நாம் இணையதள ஊடகங்களில் நாம் காண முடிகின்றது.

- வன்முறை மற்றும் பாலியல் சார்ந்த உணர்வின் வெளிப்பாடு: அதிகமான திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் வன்முறையும் பாலியல் சார்ந்த உணர்வும் முக்கிய இடத்தை பிடித்திருப்பதை நாம் காணலாம்.
- சமூகத்தில் புகழ்பெற்ற மனிதர்கள் தொடர்பாக அந்தரங்க தகவல்களை வெளிப்படுத்துதல் ஊடகங்களின் முக்கிய செயற்பாடாக உள்ளது. உண்மையில் இத்தகைய செய்திகளில் உண்மை இருப்பதில்லை. அறிவுடையவர்கள் இதனை உணர் வார்கள். பாமர மக்கள் இதனை நம்பி ஏமாறுவார்கள். இது ஊடகத்தின் ஒரு முக்கிய ஒழுக்க மீறலாகும். மேலும் இத்தகைய தகவல்களை வெளியிடுவதன் மூலம் ஊடகங்கள் ஒரு நபரின் உரிமைகளையும் மீறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.
- ஒரு உற்பத்தி பொருள் தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்களை இணையதள ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன. பொருட்களை விற்பனை செய்வதற்காக இணையதளங்களில் விளம்பரம் செய்யப்படுகின்றன. இத்தகைய தகவல்கள் சரியானவையா? என்பது கேள்விக்குறியே.
- சிறுவர்கள் மற்றும் பெண்களை பயன்படுத்தி சில கம்பனிகள் தமது பொருட்களின் விளம்பரங்களை இலத்திரனியல் ஊடகங்களிலும் இணையதளங்களிலும் மேற்கொண்டு வருகின்றன. இது மிகவும் தவறான விளம்பர முறையாகும். இந்த விளம்பரங்களில் பெண்கள் போகப் பொருட்களாக காடசிப்படுத்தப்படுகின்றனர்.
- நியம ரிதியான ஒழுக்கவியல் வழக்காறுகளையும் ஒழுக்க விதிகளையும் மீறுகின்ற வகையில் நிகழ்ச்சிகளையும் விளம்ப ரங்களையும் இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்து மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றன. இதன் காரணமாக பாரம்பரிய மதிப்பீடுகள் கேள்விக் குறியாக்கப் படுகின்றன. கலை நிகழ்ச்சிகள் என்ற பெயரில் அப்பட்டமான ஒழுக்க மீறல்களை இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள் அரங்கேற்றுகின்றன.

ஜனநாயக நாடுகளில் ஊடகச் சுதந்திரம் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மக்களின் கருத்துச் சுதந்திரம் ஊடக சுதந்திரத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றது. அரசின் பெரும்பான்மையான நடவடிக்கைகளை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவது அரசின் கடமையாகும். இத்தகைய ஊடக சுதந்திரம் காணப்பட்ட போதிலும் சில வேளைகளில் இந்தச் சுதந்திரம் பின்வரும் சவால்களை எதிர்நோக்குகின்றது.

1. அரசின் அழுத்தங்கள் உட்பட பல்வேறு அழுத்தங்களின் காரணமாக ஊடகங்களின் சுதந்திரமும் நடுவுநிலைமைத் தன்மையும் கேள்விக்குறியாக்கப்படுகிறது.
2. தற்கால தகவல் அறியும் சட்டம் முக்கியமாக காணப்பட்டாலும் சிக்கலான சூழ்நிலையில் இவற்றின் நடைமுறை சாத்தியம் கேள்விக்குறியே.

**உயர்ந்த ஊடகத்தன்மை (Media Integrity)**

எந்தவொரு ஊடகமும் ஜனநாயக நெறிமுறைகளை கடைபிடித்து மக்களின் நலன் கருதி செயற்படுமாயின் அதனை உயர்ந்த ஊடகம் என அழைக்கலாம். இத்தகைய ஊடகம் இலஞ்சம் மற்றும் ஊழலை அனுமதிக்காது. எந்த அரசியல் கட்சிக்கும் எந்த கருத்து நிலைக்கும் ஆதரவாக செயற்படாது. நடுவுநிலைமையுடன் செயற்படுவதாக இது காணப்படும். ஒரு உயர்ந்த ஊடகம் பின்வரும் பண்புகளை வெளிப்படுத்தி நிற்கும்.

1. தனிப்பட்ட மற்றும் அரசியல் சார்ந்த நலன்களில் இருந்து சுதந்திரமானதாக இருத்தல்.
2. தனது நிதி சார்ந்த நலன்களில் வெளிப்படையாக இருத்தல்
3. ஊடக ஒழுக்கவியல் விதிகள் மற்றும் தராதரங்களை முழுமை யாக ஏற்றுக்கொண்டு நடத்தல்.
4. தனது நாட்டு குடிமக்களுக்கு அதிக பொறுப்புடையதாக இருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்ந்த ரக கைப்பேசியும் ஊடக ஒழுக்கவியலும்**

**(Smart Phones and Media Ethics)**

தொடர்பாடல் தொழில்நுட்பபுரட்சி காரணமாக உயர்ந்தரக கைப்பேசிகள் உருவாக்கப்பட்டு அவற்றின் ஊடாக விம்பங்களும் படங்களும் எடுக்கப்படுதல், வேறு கைப்பேசிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுதல், வேறு கைப்பேசிகளுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் அனுப்புதல் தற்போது இடம்பெற்று வருகின்றது. சமூக ஊடகங்கள் இத்தொலைபேசியின் ஊடாக சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சமூக ஊடகங்களின் செயற்பாடு ஓரளவுக்கு அதிக சுதந்திரத்தைக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். சில வேளைகளில் அரசுகள் சமூக ஊடக செயற்பாடுகளை தடைசெய்யும் சந்தர்ப்பங்களையும் காண்கிறோம். செய்திகள் அரசின் நோக்கத்திற்கு எதிராக இருக்கும் பட்சத்தில் அச்செய்தியினை அனுப்புவோர் அரசினால் தண்டிக்கப்படுவார்கள். ஒரு நபர் தனது கருத்துக்களை இன்னொருவருடன் ஒரு நாட்டிற்குள் மட்டுமல்ல, ஒரு நாட்டினை கடந்து பரிமாறிக்கொள்வதற்கு இது உதவுகின்றது. மேலும் தனது கருத்துக்களை தன்னைப்போல பலருடனும் பகிர்ந்து கொள்ளவும் இது உதவுகின்றது. ஒரு சம்பவம் நிகழ்கின்றபோது அந்த சம்பவம் தொடர்பாக புகைப்படம் அல்லது காணொளி எடுத்து அதனை சமூக ஊடகங்களுக்கு அனுப்பக்கூடிய வசதியினை இத்தகைய கைபேசிகள் கொண்டுள்ளன. இதன் காரண மாக ஒரு பிரச்சினை தொடர்பாக ஒருவர் தனது கருத்துக்களை தன்னை போன்ற நபர்கள் மற்றும் தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகையச் சூழலில் ஒரு பிரச்சினை தொடர்பாக தனது கருத்துக்களை தன்னைப்போன்ற நபர்களும் அவரது நண்பர்களும் அல்லது பெரும் சமூகமும் ஒரு தீர்மானத்தினை எடுத்து செயற்பட இது உதவுகிறது. இத்தகைய செயற்பாடானது அரசிற்கு எதிரானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக:- தமிழ் நாட்டில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டு தடைக்கு எதிரான போராட்டம் இத்தகைய கைப்பேசியினை அடிப்படையாக கொண்டே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகைய கைப்பேசிகளை பயன்படுத்தி சமூக விரோதிகள் ஆபாச படங்களை எடுத்து பெண்களை மிரட்டுதல் மற்றும் பல்வேறு சமூக விரோத செயல்களை இக்கைப்பேசியின் துணையுடன் சமூக ஊடகங்கள் வழியாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குற்றங்களுக்கான தண்டனைகள் வழங்கப்பட்டபோதும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்வது குறிப்பிடத்தக்கது.

இக்கைப்பேசிகள் மூலம் தகவல்களை மட்டும் இதனை பயன்படுத்துவோர் அனுப்புவதில்லை. அத்துடன் தனது நோக்குக்கு ஏற்ற வகையில் படங்களையும் காணொளிகளையும் தொகுப்பு செய்து செய்திகளை உருவாக்கி அனுப்பக்கூடிய வசதியினை இக்கைப்பேசிகள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய செய்திகள் மூலம் செய்தியினை பெறுவோர் சரியான தகவல்களை பெறுகின்றனரா? என்பது கேள்விக்குறியே. எல்லா விதமான தகவல் பரிமாற்றங்களும் கணப்பொழுதில் இடம்பெறுகின்றன. பாரம்பரிய தகவல் பரிமாற்றத்தை விட மிகக் கூடுதலான வேகம் கொண்டதாக உயர்தர கைப்பேசி ஊடக பொறிமுறைகள் காணப்படுகின்றன. இம்முறையில் வழங்கப்படும் தகவல்களின் உறுதித் தன்மை மற்றும் அதிகாரத் தன்மை உயர்வானது என கூற முடியாது. அதிகாரப் பூர்வமற்ற தகவல்கள், உண்மைக்கு புறம்பான போலியான தகவல்கள் மற்றும் செய்திகள் பரிமாற்றம் செய்யப்படலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யுனெஸ்கோ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட உலக தகவல் அமைப்பு தகவல் ஒழுக்க காங்கிரஸ் கருத்தரங்கினை *1998* மற்றும் *2000* ஆண்டுகளில் நடத்தியது. இதன் நோக்கம் உலக தகவல் அமைப்பின் ஒழுக்க ரீதியான த்ளம் பற்றிய விவாதமாகும்.

ஊடகங்கள் தகவல்களை எங்களுக்கு வழங்குகிறது என்பதை காட்டிலும் அவை குறிப்பிட்ட முறையில் தகவல்களை வழங்கியும் நாம் இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டும் நடந்துகொள்ள வேண்டும் என்று வழிநடத்தும் முறையில் செயற்படுத்துவதாக பலர் சுட்டிக் காட்டுகின்றனர். சட்ட ரீதியான நடவடிக்கைகள், அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அநீதிகள் தொடர்பாக ஊடகங்கள் கருத்துக்களை எமக்கு வழங்குகின்றன. ஊடகங்களின் வார்த்தைகளை முழுமையாக நம்புவர்களாக பெரும்பான்மையான மக்கள் இருக் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சு ஊடகமாயினும் இலத்திரனியல் ஊடகமாயினும் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு முக்கிய பங்கினை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. ஊடகங்கள் ஒரு நாட்டின் கலாச்சார பண்பாட்டு வழக்காறுகள் அல்லது மதிப்பீடுகளை கருத்திற்கொண்டு தமது செய்திகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மத்தியில் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காத பட்சத்தில் அவை விரும்பத்தகாத விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்.

ஊடகவியலாளர்கள் மனிதத்துவத்திற்கு மதிப்பு கொடுப்பவராகவும் சமூகத்திற்கு பொறுப்புடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் தமது நலனை கருத்திற்கொள்வதுடன் தம்மை சார்ந்துள்ள சமூகத்தின் நலனையும் கருத்திற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமூகத்தின் பல்வேறு நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து அவற்றை மக்களுக்கு தெரிவிக்கும் முக்கிய பங்கினை ஊடகங்கள ஆற்றி வருகின்றன. ஊடக ஒழுக்க வியல் என்பது ஒருவகை தொழினுட்பம் சார்ந்த விடயமல்ல. உண்மையில் மனித இயல்புகளுடன் தொடர்புபட்டது என பேகம் கூறுவது குறிப்பிடத்தக்கது. (பேகம், என்.2014) ஊடகங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான நோக்கங்களை கொண்ட ஒரு துறையாக இருப்பதை பலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஒருபுறம் மக்களுக்கு தகவல்களை வழங்குவது, மக்களின் பொழுது போக்கு சாதனமாக செயற்படுதல் மற்றும் பொருளாதார ரீதியாக இலாபத்தினை அதகிரிக்கும் துறையாக இருத்தல்; மறுபுறம்; சமூக நலன் மற்றும் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் துறையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆயினும் சிலர் இத்தகைய நோக்கங்கள் தம்முள் முரண்பாடுகள் அற்றவை என்ற கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். எவ்வாறாயினும் குறிப்பிட்ட நாட்டின் அரசியல் சூழ்நிலைக்கு அடிபணிந்து செல்ல வேண்டிய நிலையில் ஊடகங்கள் இருந்துவருவதை பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். ஒவ்வொரு ஊடக நிறுவனமும் தனக்கென தனியான ஒழுக்கவிதிகளை உருவாக்கி செயற்பட்டு வருவதை நாம் காண முடிகின்றது. உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் காணப்படும் நாடுகளின் அரசியல் யாப்புகளில் ஊடக சுதந்திரம் பேசப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் சட்டங்களில் ஊடகம் சுதந்திரம் சில விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்ட வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும் எனற் நிலை பொதுவாக எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. ஒரு நாட்டின் சட்டதிட்டங்கள் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளின் மீது அதிக பொறுப்பினை சுமத்துவதாக இருக்கும்.

பின்வருவன நான்கும் ஊடகவியலின் பிரதான தத்துவங்களாகும்.

1. புறவயத்தன்மை (Objectivity) (தகுந்த ஆதாரங்களுடன் செய்திகளை வெளியிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நடுவு நிலைமை தன்மை (Impartiality) பாகுபாடு இன்றி பக்கச் சார்புகள் இன்றி செய்திகளை வழங்குதல்.

3. உண்மைத்தன்மை (Truthfullness) உண்மையான செய்திகளை வெளியிடுதல்.

4. தகவலை வெளிப்படுத்தக்கூடிய சுதந்திரம் (Freedom of Information) (தான் அறிந்த தகவலை வெளிப்படுத்தக்கூடிய உரிமை)

சர்வதேச ஊடகவியல் சங்கத்தின்படி ஒரு ஊடகவியலாளர் பின்வரும் பண்புகளை கொண்டு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தகவலை சேகரித்தல், அறிக்கையினை தயார் செய்தல் மற்றும் அதனை பொருள் கொள்ளல் போன்ற செயற்பாடுகளின் நேர்மையாகவும் நடுவுநிலைமையுடனும் செயற்பட வேண்டும்.

2. ஊடகவியலின் அறிக்கை குறைந்தளவிலான தீங்கினை விளை விப்பதாக இருக்க வேண்டும். தகவல் வழங்குபவரை பாது காப்பவராக ஊடகவியலாளர் இருக்க வேண்டும்.

3. ஊடகவியலாளர்கள் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவம் சிந்தித்து செயற்படுபவராக இருக்க வேண்டும்.

4. வாசகர்கள், கேட்போர்கள் மற்றும் நோக்கர்கள் என அனைத்து தரப்பினருக்கும் பொறுப்புடையவர்களாக ஊடகவியலாளர்கள் இருக்க வேண்டும். (white 2008)

ஊழல் தொடர்பான தகவல்கள் அல்லது அறிக்கையினை தயார் செய்யும்போது தனது உண்மை அடையாளத்தினை ஒரு சில ஊடகவியலாளர்கள் மறைக்கின்றனர். இது சரியா? அல்லது பிழையா? என்ற விவாதம் ஊடக ஒழுக்கவியலாளாகள் மத்தியில் இடம்பெற்று வருகின்றமை குறிபிடத்தக்கது. சுதந்திரமாக தகவல்களை தேடுதல் செயல்பாட்டில் ஊடகவியலாளர்கள் பொருளாதார ரீதியாக தடை களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் சில தகவல்களுக்காக அரசாங்கத்தை நம்பியுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் உண்மை எந்தளவுதூரம் வெளிப்படும் என்பது கேள்விக்குறியே. ஆயினும் அரச பொறிமுறைகளை உன்னிப்பாக கவனித்து தகவல்களையும் அறிக்கைகளையும் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் நிறைய ஊடகவியலாளர்களுக்கு இருப்பதாக பலரும் ஏற்றுக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

நீண்ட வரலாற்றினைக் கொண்ட மெய்யியலின் ஒரு துறையாக விளங்கி வருகின்ற ஒழுக்கவியல், ஒழுக்கவியல் மெய்யியலாளர்களின் பகுத்தறிவு சிந்தனைகள் மற்றும் வாத பிரதிவாதங்களின் விளைவாக பல கொள்கைகளாக பரிணமித்துள்ளது. ஒழுக்கவியலின் ஒவ்வொரு கொள்கையும் தனது நிலைப்பாட்டினை நியாயப்படுத்த கூடிய வாதங்களையும் கருத்துக்களையும் கொண்டிருப்பதை நாம் காணலாம். மேலும் ஒவ்வொரு ஒழுக்கவியல் கொள்கையின் வளர்ச்சியும் ஏனைய ஒழுக்கவியல் கொள்கைகளை விமர்சிப்பதன் மூலமும் வெவ்வேறுப்பட்ட மனித அனுபவங்கள் மூலமும் தோற்றம் பெறுவதை காணமுடிகின்றது. மேலைதேசத்தின் தர்க்கரீதியான மற்றும் பகுத்தறிவுரீதியான சிந்தனைகளின் விளைவே ஒழுக்கவியல் கொள்கைகளின் வளர்ச்சியாகும். இக்கொள்கைகளில் நுட்பமான வாத பிரதிவாதங்களும் மேலைதேச அறிஞர்களின் விமர்சன மனப் பான்மையும் விரவிக் கிடப்பதைக் காணலாம். எனது அறிவுக்கெட்டிய வகையில் ஒழுக்கவியலின் பெரும்பாலானக் கொள்கைகளை இந்நூல் மூலம் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க முயற்சித்திருக்கின்றேன். ஆயினும் ஆய்வு மூலங்களின் கிடைப்பனவு மற்றும் வரையறையுடையதன்மை காரணமாக சில ஒழுக்கக் கொள்கைகள் விரிவாகவும் சில கொள்கைகள் சுருக்கமாகவும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. ஒழுக்கவியல் கொள்கைகளை விளக்குவதற்கு இதிகாசப் புராணங்களின் உதாரணங்களையும் சாதாரண நடைமுறைச் சார்ந்த உதாரணங்களையும் நான் இக் கட்டுரையில் பயன்படுத்தியுள்ளேன். இதன் மூலம் வாசகர்கள் ஒழுக்கவியல் கொள்கைகள் தொடர்பாக அதிக விளக்கத்தை பெறுவார்கள் என நான் நம்புகின்றேன்.

ஒழுக்கக் கொள்கைகளை முதன்மைப்படுத்தியதாக இக்கட்டுரை அமைந்திருந்த போதிலும், இன்று அதிகம் ஒழுக்கவியலில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் பிரதான பகுதியாகிய பிரயோக ஒழுக்கவியலின் முக்கிய பிரிவுகளான: சுற்றுச்சூழல் ஒழுக்கவியல், வணிக ஒழுக்கவியல் மற்றும் ஊடக ஒழுக்கவியல் தொடர்பான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டிருப்பது இக்கட்டுரையின் சிறப்பம்சமாகும். சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் தொடர்பான சிந்தனைகள் மெய்யியலிலும் ஒழுக்கவியலிலும் நிகழ் காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கி வருகின்றது. இதேபோல் தற்காலச் சூழலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெற்று வரும் வணிக ஒழுக்கவியல் மற்றும் ஊடக ஒழுக்கவியல் தொடர்பான பிரச்சினைகளையும் இக்கட்டுரை விவாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெய்யியலில் காணப்படும் சொற்கள், வாதங்கள் மற்றும் கருத்துக்கள் அதிக சிக்கலானவை தெளிவற்றவை என்ற கருத்து அறிஞர்கள் மத்தியில் காணப்பட்டாலும், மேலைதேச ஒழுக்கவியலின் அடிப்படைகளை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு கொண்டு வரும் ஒரு முயற்சியாக இந்த ஆய்வு கட்டுரையினை கருதலாம். இக்கட்டுரை தொடர்பான விமர்சனங்களும் ஆக்கபூர்வமான கருத்துக்களும் இந்த ஆய்வு கட்டுரையின் வெற்றிகரமான புரிதலுக்கு பெரிதும் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**உசாத்துணைகள்**


கோதண்டம், கொ.மா., (2012), *திருக்குறள்,* இளைஞர்களுக்கான எளிய உரை, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.

சிவானந்தமூர்த்தி, கனகசபை., (2012), *ஒழுக்கநியமங்களும் அதன் நடைமுறைகளும்,* கொழும்பு : லங்கா புத்தகசாலை.

லில்லி, வில்லியம்., (1968), *அறிவியல் ஓர் அறிமுகம்* (மொழிபெயர்ப்பு), கோ.மோ காந்தி, சென்னை : தமிழ்நாட்டு பாடல் நூல் நிறுவனம்.

Aristotle., (1948), *Politics,* (trans.) E. Barker, Oxford: Oxford University Press,

Attfield, R., (1987), *A Theory of Value and Obligation,* London: Croom Helm.

Barry, J., (1999), *Rethinking Green Politics,* London: Sage.

Bookchin, M., (1990), *The Philosophy of Social Ecology,* Montreal: Black Rose Books

Bookchin, , M., (1980), *Toward an Ecological Society,* Montreal: Black Rose Books.

…………, M., (1982), *The Ecology of Freedom: The Emergence and Dissolution of Hierarchy,* Palo Alto, CA: Cheshire Books.

Carson, R., (1963), *Silent Spring,* London: Hamish Hamilton.

Collins, S., (1974), *A Different Heaven and Earth,* Valley Forge: Judson Press

Degeorge, R.T., (2009), *Business Ethics,* Upper Saddle River, NJ: Pearson.

Ehrlich, P.R., (1968), *The Population Bomb,* New York: Ballantine Books.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Frankena,W.K.,(1989), *Ethics,* New Delhi: Prentice-Hall of India.

Gardiner, S., (2011), *A Perfect Moral Storm: The Ethical Tragedy of Climate Change,* Oxford; Oxford University Press.

Graham, Gordon.,(2004), Eight Theories of Ethics , London, Routledge.

Kant, I., (1959), *Foundations of Metaphysics of Morals (translated, with an introduction,* Lewis White Beck), Indianapolis: Bobbs-Merrill Educational Publishing.

Kant, Immanuel., (2002), *Groundwork for the Metaphysics of Morals,* Arnulf Zweig (trans.), Oxford: Oxford University Press,.

Katz, E., (1997), *Nature as Subject,* New York: Rowman and Littlefield.

Leopold, A., (1949), *A Sand County Almanac,* Oxford: Oxford University Press.

Lillie, William.,(1967), *An Introduction to Ethics,* New Delhi: Allied Publishers Ltd.

Martinez-Alier, J., (2002), *The Environmentalism of the Poor: A Study of Ecological Conflicts and Valuation,* Cheltenham: Edward Elgar.

Mathews, F., (2005), *Reinhabiting Reality: Towards a Recovery of Culture,* Sydney: UNSW Press.

.................., (2003), *For Love of Matter.* Albany: State University of New York Press.

Mill, J.S.,(1998), *Utilitarianism(edited by Roger Crisp),* New York: Oxford University Press.

Mumford, L., L., (1961), *The City in History,* New York: Harcourt, Brace, Jovanovich.

................. (1944), *The Condition of Man,* New York: Harcourt, Brace, Jovanovich.

................. ., L., (1934), *Technics and Civilization,* London: Secker and Warburg.

Næss, A., (1989), *Ecology, Community, Lifestyle, trans. and ed. D. Rothenberg,* Cambridge: Cambridge University Press.

Nagel ,Thomas., (1986), *The View From Nowhere,* New York: Oxford University Press.

.................., (1970), *The Possibility of Altruism,* Oxford: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Norton, B.G.,(2005), *Sustainability: a Philosophy of Adaptive ecosystem Management,* Chicago: University of Chicago Press.

Passmore, J., (1974), *Man's Responsibility for Nature,* London: Duckworth.

Plumwood, V., (1993), *Feminism and the Mastery of Nature,* London: Routledge.

Regan, T., (1983), *The Case for Animal Rights,* London: Routledge and Kegan Paul.

Rolston ,H., (2012), *A New Environmental Ethics: The Next Millenium for Life on Earth,* London: Routledge

.........., H., (1989), *Philosophy Gone Wild,* New York: Prometheus Books.

.........., H., (1988), *Environmental Ethics: Duties to and Values in the Natural World,* Indiana: Temple University Press.

Sartre, J.P., (1943), *Being and Nothingness (translated by Hazel Barnes),* London: Methuen

Sartre, J.P., (1973), *Existentialism and Humanism (translated by Philip Mariat),* London: Methuen Warren, K.J., (1994ed.), Ecological Feminism, London: Routledge.

சஞ்சிகைகள்

பிரேம்குமார், இரத்தினசபாபதி., (2016), *"பிளேட்டோவும் பின் நவீனத்துவ அழகியல் சிந்தனைகளும் - ஒரு மெய்யியல் நோக்கு",* மொழிதல், தொகுதி 3 எண் 2, மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம்.

Anker, P. and Witoszek, N., (1998), *"The Dream of the Biocentric Community and the Structure of Utopias",* Worldviews, 2: 239–56.

Beckerman, W., (1994), *"Sustainable Development: Is It a Useful Concept?",* Environmental Values, 3: 191–209.

Bookchin, M., (1987), *"Social Ecology Versus Deep Ecology",* Green Perspectives: Newsletter of the Green Program Project, numbers 4, 5 reprinted in Witoszek and Brennan 1999, pp. 281–301.

Donaldson, T., & J.P. Walsh, (2015), *"Toward a Theory of Business",* Research in Organizational Behavior, 35: 181–207.

Gardiner, S., (2006), *"A Perfect Moral Storm: Climate Change, Intergenerational Ethics and the Problem of Moral Corruption",* Environmental Values, 15: 397–413.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hardin, G., (1968), *"The Tragedy of the Commons"*, Science, 162: 1243–48.

Jamieson, D., (1996), *'Intentional Climate Change'*, Climatic Change, 33: 326–36.

Katz, E., (1991), *"Restoration and Redesign: The Ethical Significance of Human Intervention in Nature"*, Restoration and Management Notes, 9: 90–6.

Næss, A., (1973), *"The Shallow and the Deep, Long-Range Ecology Movement"*, Inquiry, 16, reprinted in Sessions 1995, pp. 151–5.

O'Neill, J., (1992), *"The Varieties of Intrinsic Value"*, Monist, 75: 119–37.

Redclift, M., (2005), *"Sustainable Development (1987–2005): An Oxymoron Comes of Age."*, Sustainable Development, 13: 212–27.

Rolston ,H., (1996), *"Feeding People versus Savng Nature?"*, in W. Aiken and H. LaFollette (eds.) World Hunger and Morality, Englewood Cliffs: Prentice Hall, pp. 248–67

Rolston , H., (1975), *"Is There an Ecological Ethic?"*, Ethics, 85: 93–109.

Sagoff, M., (1984), *"Animal Liberation and Environmental Ethics: Bad Marriage, Quick Divorce"*, Osgood Hall Law Journal, 22: 297–307.

Stone, A., (2006), *"Adorno and the Disenchantment of Nature"*, Philosophy and Social Criticism, 32: 231–253.

Stone, C.D., (1972), *"Should Trees Have Standing?"*, Southern California Law Review, 45: 450–501 ; later published with a descriptive introduction as Should Trees Have Standing?, Los Angeles: Kaufmann, 1974, and reprinted in Schmidtz and Willott 2002.

White, L., (1967), *"The Historical Roots of Our Ecological Crisis"*, Science, 155: 1203–7; reprinted in Schmidtz and Willott 2002.

Witoszek, N., (1997), *"Arne Næss and the Norwegian Nature Tradition"*, Worldviews, 1: 57–73.

## இணையதளக் கட்டுரைகள்

- Altruism: https://en.wikipedia.org/wiki/Altruism , 30/04/2020

- Begum, N. (2014). Media Ethics: Different Perspectives. Department of Political Science, Bangalore University. Retrieved from www.isca.in-1,21/04/2020

- Brennan, Andrew and Lo, Yeuk-Sze, (2016)"Environmental Ethics", The Stanford Encyclopedia of Philosophy (Winter 2016 Edition), Edward N. Zalta (ed.), URL = https://plato.stanford.edu/archives/win2016/entries/ethics-environmental/, 23/04/2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Business Ethics: https://en.wikipedia.org/wiki/Business_ethics , 17/04/2020.
- Environmental Ethics: https://en.wikipedia.org/wiki/Environmental_ethics , 15/04/2020.
- Kraut, Richard, "Altruism", (2020)The Stanford Encyclopedia of Philosophy (Spring 2020 Edition), Edward N. Zalta (ed.), URL =,05/05/2020
- https://plato.stanford.edu/archives/spr2020/entries/altruism/, 28/04/2020
- Media and Ethics: https://shodhganga.inflibnet.ac.in/bitstream/10603/70234/3/chapter1.pdf, 26/04/2020
- Media Ethics : https://en.wikipedia.org/wiki/Media_ethics , 20/04/2020
- Media Ethics: A Contentious Issue in covering conflicts,chapter IV https://shodhganga.inflibnet.ac.in/bitstream/10603/150216/7/07_chapter%204.pdf, 24/04/2020
- Moriarty, Jeffrey., (2017),"Business Ethics",)The Stanford Encyclopedia of Philosophy (Fall 2017 Edition), Edward N. Zalta (ed.),URL = https://plato.stanford.edu/archives/fall2017/entries/ethics-business/, 24/04/2020
- WCED (1987), Our Common Future, United Nations General Assembly, Report of the World Commission on Environment and Development,15/04/2020
- White, A., (2008), The Ethical Journalism Initiative. Retrieved from International Federation of Journalists, Belgium website: http://ethicaljournalisminitiative.org/pdfs/EJI_book_en.pdf,18/04/2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டி


அக்குவினாஸ் 137, 164, 191
அக அடையாளம் 42
அச்சு ஊடகம் 96
அடையாளக் குழுக்கள் 14
அடோர்னோ 171
அரசிலி ஒழுக்கவியல் 101
அரசியல் அதிகாரம் 29
அரிஸ்டோட்டில் 99, 134, 142, 158
அல்பர்ட் கமு 148
அழகியல் 12, 15, 19, 29, 35, 37, 51-53, 57, 59, 60, 61, 71, 72, 79, 81, 83, 84, 85, 92, 97, 171, 176, 178, 180, 207
அழகியல் கூறுகள் 84
அழகியல் நோக்கு 19
அளிக்கை வெளி 57
அறிவொளி மனிதமையவாதம் 166
அனஸ்கொம்ப் 135
அஸ்மன் விச் துருவங்கள் 35, 47
ஆண்கள் அங்கதம் 77, 83
ஆண்மையவாத சமூகம் 169
ஆபிரிக்க முகமூடிகள் 29
ஆர்.எம். ஹெயார் 106
ஆர்ன் நாஸ் 167
ஆழ இயற்கைச் சூழலியல் 162, 167, 169, 172
ஆன்மாவின் மொழி 71, 80
ஆன்மீக இயக்கம் 81
இதழியல் ஒழுக்கவியல் 195
இமானுவெல் காண்ட் 111
இயற்கை அல்லாத வாதம் 140
இயற்கை 3, 4, 20, 24, 33, 63, 64, 65, 73, 80, 99, 112, 140, 144, 145, 146, 153, 156, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 171, 173, 174, 176, 177, 179, 180, 181, 187, 190, 191, 192, 194
இயற்கைச் சாயங்கள் 32
இயற்கைச் சூழல் 165, 166, 179, 192
இயற்கைச் சூழலியல் பெண்ணியம் 162
இயற்கை வாத ஒழுக்கவியல் 144, 145
இதழியல் ஒழுக்கவியல் 196
இலத்திரனியல் ஊடகம் 195
இலக்கியம் 52, 54, 55, 59, 61, 84, 86, 90, 91, 93
இன்பவாதம் 136, 138, 139, 140
இனக்கலப்பு 53
இறைமை 6
இன்டிக்கோ வர்ணச் சாயம் 32
இனக்குழுக்கள் 6
இனத்துவ அடையாளம் 33
இணைப்பாக்கக் கலை 38
இயக்கம்சார் வாய்மொழி 81
உயிர்ப் பிரதேச வாதம் 173



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்மைய வாதம் 174
உரையாடல் ஒழுக்கவியல் 101
உல்லாசப் பயணிகள் 41
உள்ளுணர்வு வாதம் 141
ஊக்கிகள் 130, 141
ஊடக ஒழுக்கவியல் 162, 195, 196, 198, 199, 204, 205
எக்சிமோக்கள் 21, 32
எபிகூரஸ் 130, 136, 137
எர்லிச் 178
ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2, 3
ஐரோப்பிய சமூகம் 33
ஒருங்கிணைவுக் கொள்கை 175
ஒழுக்கவியல் அகவயவாதம் 142
ஒழுக்கவியல் தன்னலவாதம்
ஒறேச்சர் 50-54, 56-59, 60-72, 74-90, 92, 93
கடுவ 36
கண்டிய நடனம் 41
கதை சொல்லிகள் 82
கப்புகன் 41
கப்றியல் ஒகாரா 51, 52
கலப்பாக்கம் 22, 49
கலை 2, 10, 12-22, 29, 31, 33, 34, 37-41, 45, 46, 49, 53, 59, 60, 61, 63, 73, 79, 80, 81, 91, 100, 122, 171, 199
கருத்தியல் 9, 51, 52, 70, 71, 86
கவோர் ஆந்ரே 53, 54, 56, 84, 85
காலநிலை மாற்றம் 178, 181, 182
காலனித்துவம் 5
கிராமியப் புலவர்கள் 88
கிமோயா 70
கிராமியக் கலைகள் 14, 17
கிறேன்பல் (Grenfull) ஆடைகள் 22
கீர்ககார்ட் 148
குலக்குறி 22, 23
குணா இந்தியர்கள் 31
குரோ ஹார்லம் பிரண்ட் லேண்ட் 177
குலமரபுத் துருவம் 24
குவான்டம் கொள்கை 169
குற்றப்பரம்பரைச் சட்டம் 11
கைப்பணித் திறன் 13
கைப்பணிப் பொருட்கள் 41
கூகி வா தியாங்கோ 51, 57, 79, 84, 85, 90, 95
சடங்கு இல்லம் 20
சடங்குக் கட்டடக்கலை 20
சடங்குப் பொருட்கள் 41, 42
சடங்கு நடனம் 32
சடங்கு வழிபாடு 39
சடங்கு வாத்தியம் 41
சடங்கு விருந்து 24
சபையோர் 57, 58, 60, 61, 62. 66, 75, 79, 82
சமூக இயற்கைச் சூழலியல் 172, 173
சமூக ஊடகங்கள் 190, 200
சாட்டையடிக்காரர் 8, 11, 48
சாயவேர் 32
சார்த்தர் 149-152
சுதேச குடிகள் 5
சுய காதல் 128
சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் 98, 99, 162, 163, 170, 172, 204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாக் கலை 37
செயல்நிலை பயன்பாட்டு வாதம் 124
செயல் நோக்கமில்லாக் கொள்கை 103, 105, 106, 107
செய்லா கொலின்ங்ஸ் 170
செயற்பாட்டு நுண்கலைகள் 34
சேர்பா 168
செவ்விந்தியர்கள் 20
சேனைப் பயிர்ச் செய்கை 40
டொம் ரீகன் 174, 175
தம் - தம் 54
தலித்துக்கள் 8
தற்புல ஆதாரங்கள் 110
தன்னலவாதம் 102, 122
துருவங்கள் 23, 24, 29, 35, 47
தெய்வீகக் குழுமங்கள் 67, 70
தேசம் 8, 9, 142
தேசிய அரசுகள் 5, 7
தேசியம் 7
தேசியவாதம் 5, 48
தொடர்பாடல் 53, 56, 65, 72, 74, 86, 87, 172, 188, 200
தொடர்பாடல் பண்பு 87
தோமஸ் மல்தஸ் 177
நரம்பியல் விஞ்ஞான ஆய்வாளர்கள் 153
நற்சித்தம் 113, 114, 118
நாகரிக சமூகங்கள் 13
நாகரிகமற்ற சமூகம் 14
நான்காம் உலகு 1, 2, 7, 9
நிகழ்த்துகை 53, 57, 60, 61, 62, 69, 75, 80, 83, 84, 92
நிபந்தனை இல்லா ஒழுக்கக் கொள்கை 112
நினைவுச் சின்னங்கள் 20, 37
நீட்சே 130, 137
நொம்மோ 67, 68, 70, 71, 86
நோக்கமில்லாக்கொள்கைகள் 102
நோக்குக்கொள்கைகள் 102
நோள்ஸ் வொறிஷேட 66, 73, 76
பங்கு ஒழுக்கவியல் 101
பங்குதாரர்கள் 184, 185
பச்சை குத்துதல் 40
பசியர் 54, 55, 56, 84
பட்லர் 128, 140
பத்தவத்சல பாரதி 3
பதிலிறுப்போர 67, 69, 70
பண்பாடு 1, 3, 4, 5, 18, 22, 39, 44, 49, 74, 75, 95
பண்பாட்டுக் கலப்பு 34
பண்பாட்டு நிறுவனங்கள் 6
பயன்பாட்டுவாதம் 102, 121, 122, 125
பழங்குடி மக்கள் 2, 6, 9, 45, 171
பழங்குடியினர் சபை 9
பழகு பொருட்கள் 18
பாம்பாட்டுதல் 40
பாரம்பரிய அறிவு 32
பாரம்பரிய உணவு 18
பிரயா மெத்யூஸ் 172
பிரயோக ஒழுக்கவியல் 161, 162
பிற்ரிகா 62,63
பிறர்நலவாதம் 102, 154, 155, 157, 159
பீட்டர் சிங்கர் 156, 174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த சிலைகள் 41
புவிப்பொறியியல் 182
பெண்கள் அங்கதம் 77, 83
பேசும் பறை 70, 71
பேச்சு நுட்பங்கள் 69
பேண்தகு அபிவிருத்தி 177, 178, 182
பொதுமைப்படுத்தல் செயல்முறை 115
பொதுவிதி நோக்கமில்லாக் கொள்கை 104
மக்களின் ஆசிரியர்கள் 78
மகிழ்வூட்டல் 79, 81, 85, 92
மம்போர்ட் 173
மனித மைய வாதம் 98
மரச்செதுக்குக் கலை 20
மலை வேடர் 42
மவோரி (Maori) பழங்குடிகள் 31
மார்க் சகோவ் 176, 179
மியூட்டியர் 70, 80, 81, 84
முகமூடிகள் 29, 41, 71
முகமூடி நடனம் 70
மெய்யியல் 35, 61, 105, 121, 147, 161, 168, 184, 207
மொஆகா 54
மொழி 3, 5, 9, 22, 24, 30, 40, 50-61, 66, 69, 70-73, 79, 80-82, 84, 85, 88, 89, 90, 91, 93, 95, 100, 145, 153
ரொபின் அட்பீல்ட் 175
லியோ போல்ட் 165
வகைமாதிரி அங்கதம் 77, 83
வணிக ஒழுக்கவியல் 162, 183, 184, 187, 190, 191, 204, 205
வணிகக் கலைகள் 35
வம்சாவழி 9
வரலாறு 9, 24, 48, 61, 86, 99, 101, 183
வழித்தோன்றல் 9
வள்ளுவர் 125, 126
வாய்மொழி இலக்கியம் 52, 54, 55, 61, 91
வாய்மூல நிகழ்ச்சிச் சூழ்நிலை 57
வாய்மொழி மரபுகள் 51, 93
வார் ஓவியம் 35
விசுவாச பாய்ச்சல் 148
விபரிப்பு ஒழுக்கவியல் 101
விமர்சனக் கோட்பாட்டு மெய்யியலாளர்கள் 170, 171
விமானநிலையக் கலைகள் 34
விளிம்புநிலை மக்கள் 8
வெண்டர் 54, 55, 56
வேடர்கள் 36, 39, 40
வைத்தியம் 14, 18, 40
வெளரா பன்டூ 62, 81, 84, 85
வொறிஷேட் 67
றிச்சாட் ஷெஸ்னர் 61
ஜனநாயகம் 7
ஜீ.ஈ.மூவர் 137
ஜே.மாகுவேட் 15, 16
ஜெரமி பென்தம் 120
ஜே.எஸ்.மில் 121, 126, 127, 136, 177
ஹார்டின் 178
ஹொப்ஸ் 130
ஹோம்ஸ் ரோல்ஸ்டன் 167
ஸ்டீபன்காடினர் 181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No.
Acc No 1644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1644

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்

வடிவேல் இன்பமோகன், சின்னத்தம்பி சந்திரசேகரம், இரத்தினசபாபதி பிரேம்குமார்

இந்நூலில் இடம்பெற்றுள்ள மூன்று கட்டுரைகளும் இன்றியமையாதப் பொருண்மைகள் தொடர்பானவை. பழங்குடிகள் பற்றிய ஆய்வில் தவிர்க்க முடியாத கொள்கையாக நான்காம் உலகம் அமைந்துள்ளது. ஒறேச்சர் புதிய சமூகச் சூழலை வாய்மொழி மரபு எவ்வாறு தன்வயப்படுத்திக் கொள்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளத் துணை செய்கின்றது. ஒழுக்கக் கொள்கைகளை அறிந்து கொள்ளும் வகையில் மூன்றாவது கட்டுரை அமைந்துள்ளது. புதிய தளங்களில் காத்திரமான ஆய்வுகள் நிகழ்த்த இந்நூல் அடிக்கல்லாக அமையும் என நம்பலாம். ஆய்வுக்கானப் புதியத் தளங்களையும் புதிய பார்வைகளையும் இந்நூலை வாசிப்பவர்களுக்குக் காட்டும் என்று உறுதிபட சொல்ல இயலும்.

பேரா.ஞா.ஸ்டிபன்



**வடிவேல் இன்பமோகன்**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி (M.Phi.l), கலாநிதிப் (Ph.D.) பட்டங்களைப் பூர்த்தி செய்தவர். இவரால் எழுதப்பட்ட நூல்களில் ''கிழக்கிலங்கைச் சடங்குகள்'', ''கூத்துப் பண்பாடு'' என்பன குறிப்பிடத்தக்கவை.



**சின்னத்தம்பி சந்திரசேகரம்**

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவராகப் பணியாற்றி வரும் இவர் முதுதத்துவமாணி (M.Phi.l), கலாநிதிப் (Ph.D.) பட்டங்களைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தவர். ''மட்டக்களப்பு வாய்மொழிப் பாடல்கள்'', ''கிழக்கிலங்கை மரபுவழித் தமிழ் இலக்கியங்கள்'' என்பன இவரின் நூல்களில் குறிப்பிடத்தக்கன.



**இரத்தினசபாபதி பிரேம்குமார்**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருபவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் (M.A), கலாநிதிப் பட்டத்தினை (Ph.D.) சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்தவர். ''மேலை நாட்டு அழகியல்'' இவரால் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க நூலாகும்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: கலை/இலக்கியம்/மெய்யியல்

ISBN 955659668-2

9 789556 596687

விலை ரூபா 700.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#856